335

335

MANAVAR

TAMIL SELECTIONS

IN

PROSE & POETRY

FOR HIGHER FORMS

BOOK II

A. KANDASWAMI PILLAI
Lecturer in Tamil
Government College, Kumbakonam

335

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
21 NOV 1942
MADRAS

V. S. VENKATARAMAN & CO.
PUBLISHERS : : KUMBAKONAM

Copyright] [Price As. 14

மாணவர்

தமிழ் இலக்கியத் திரட்டு

இரண்டாம் புத்தகம்

25

பதிப்பாசிரியர் :
திருவாளர் அ. கந்தசாமிப் பிள்ளை
தமிழ் விரிவுரையாளர்
துரைத்தனக் கல்லூரி, கும்பகோணம்

494.81186

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் :: கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை அணா 14

Revised : November 1942

P3119

PRINTED AT
THE ROYAL PRINTING WORKS
MOUNT ROAD : : MADRAS

மதிப்புரை

கும்பகோணம், துரைத்தனக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர், திருவாளர், அ. **கந்தசாமிப் பிள்ளையவர்களைப்** பல நாளாக அறிவோம். அவரது புலமையின் இன்பத்தைப் பல முறை பெற்றிருக்கின்றேம். அவர்கள் அண்மையில் பதிப்பித்த "**மாணவர் தமிழ் இலக்கியத் திரட்டு**" முதற் புத்தகம், இரண்டாம் புத்தகம் ஆகிய நூல்களின் ஒவ்வொரு பகுதியையும் ஊன்றிப் படித்தோம்.

பழைய புலவர்களின் செய்யுளும், புதிய புலவர்களின் செய்யுளும், உரை நடையும் மிக மகிழ்விக்கின்றன. இவைகள் வகுப்பின் நிலைமைக்குத் தக இருக்கின்றன; தமிழ்ச் சுவையை மாணவர்க்கு ஊட்டுவன; இருகாலத் தறிவையும் புகட்டுவன; படிப்பவர்களைச் செந்தமிழிற் பிழையின்றிப் பேசவும், எழுதவும் வல்லவர்களாக்கும் இயல்பின; மதிப்புரை யில்லார் மதிப்புரை பெறும் இயல்பின; ஆசிரியர் பலர்க்கும் உவகையை யூட்டுந் தகுதியின; படிப்பின் நோக்கத்தை நிறைவேற்றற் குரியன. தக்க தமிழாசிரியர் தேர்ந்தெடுத்தவைகளைப்பற்றி நாம் மேலே கூறியவையன்றிப் பல நலங்களும் அமைந்துள்ளன.

இத்தகைய நூல் ஒவ்வொரு கலாசாலையிலும் பாடமாகப் பயிற்றல் மிகவும் பொருத்த முடையதாகும். செந்தமிழுலகம் போற்றல் வெண்டும்.

ஞானியார் மடாலயம்
திருப்பாதிரிப்புலியூர்
26—1—1937

இங்ஙனம்
சிவ சண்முக மெய்ஞ்ஞான சிவாசாரியார்

முன்னுரை

தாய் மொழிப் போதனையின் நோக்கங்கள்

உயர்தர வகுப்புக்களில் தாய்மொழிப் பயிற்சியின் முக்கியநோக்கம்—சாதாரணமாகப் படிக்கப் பழகுவதாயிராமல்—அறிவு வளரவும், இலக்கியங்களிற் காணும் சொற்சுவை பொருட்சுவைகளை யுணர்ந்து மகிழவும், ஒழுக்கங்களில் திருத்தம் பெறவும் செய்வதேயாம். அன்றியும், தாய் மொழிப்பற்றை யுண்டாக்குதலும், மேன் மேலும் தமிழ் நூல்களைக் கற்க அவா வெழுப்புதலும், பிற்காலத்தில் தாய் மொழி வளர்ச்சிக்காம் ஆக்கந் தேடும் எண்ணத்தைக் கருக்கட்டி வைத்தலும் தமிழ்ப் போதனையின் இன்றியமையா நோக்கங்களாகும்.

புது முறைகள்

மாணவர்களைச் சுய முயற்சியால் எப்பாடங்களையும் பயில ஊக்கும் நெறியே சாலச் சிறந்ததாம். இலக்கியங்களைக் கற்பிக்குங்கால், அவைகளை மாணவர்கள் தாமகவே படித்து முதற்கண் கருத்தைத் தெளிவுற உணரச்செய்தல் வேண்டும். ஆசிரியரின் விளக்கவுரை ஓர் சிறிதளவே தேவையாம். பிறகு அருஞ்சொற் பொருள்களையும், நடை நயத்தையும் ஆராயச் செய்தல் வேண்டும். தெரிந்த சொற்களுக்குக் கூடப்பொருள் கூறுவதும் இலகுவான பாடல்களுக்கும் பதவுரை பொழிப்புரை பகர்வதும் மிகையாம். பாடப் பகுதியில் காணும் உதாரணங்களைக் கொண்டு ஆங்காங்கு முக்கிய இலக்கண விதிகளைப் போதிக்கலாம். இறுதியில், நூலாசிரியர் வரலாறு, மேற்கோள் இவை பற்றிய பிற நூல்களைப் படிக்கத் தூண்டுதலும் தேவையாகும்.

பயிற்சி

சீரிய இம் முறைகளைப் பின்பற்றியே ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் கருத்துணர்தல், மொழிப்பயிற்சி, இலக்கணக்குறிப்புக்கள், கட்டுரைப்பயிற்சி, பிறநூலாராய்ச்சி முதலிய தலைப்புக்களின் கீழ், மாதிரிப் பயிற்சிகள் இணைக்கப்பட்டுள்ளன. இப்பயிற்சிகள் முற்ற முடிந்தவையல்ல. இவைபோல் மேலும் பில வினாக்களை ஆசிரியர்கள் தொடுக்க இடமுண்டு.

செய்யுட் பகுதி

பழையனவும் புதியனவுமான பலவகை நூல்களி னின்றும் ஆய்ந்தெடுக்கப்பட்டுள்ள ஒவ் வொரு செய்யுளும் ஒவ்வோர் வகையில் இனிமை பயந்து, செந்தமிழ்ச் சுவை ஊட்டவல்லது. துதிப் பகுதியில் காணும் பாடல்கள் இலக்கியச் செறிவும் பலவித நயங்களும் பொருந்தியன வாதலால், அவற்றைவெறும் சமய இலக்கியமாக அறிஞர் கருதார். கற்பவருக்கு மனவெழுச்சி தோன்றும்பொருட்டு, பாடப் பகுதியின் நயங்கள் பற்றிய குறிப்புக்களும் ஆங் காங்கு சேர்க்கப்பட்டுள.

உரை நடைப் பகுதி

உரை நடைப்பகுதியில் கட்டுரை, வரலாறு, புனைகதை, சொற் பொழிவு, கடிதம் உரையாடல், சுய சரிதை, நாடகம், மொழிபெயர்ப்பு முதலிய வகைகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள. இதில் அமைந்துள்ள பல பெரியாரின் கட்டுரைகள், பல் வித இலக்கிய நடைகளுக்கு எடுத்துக் காட்டாகும். மாண வர் அவைகளைக் கற்பதால், செவ்விய நடையில் எழுதவும் பேசவும் திறன் பெறுவார்களென்பது திண்ணம்.

துரைத்தனத்தார் அண்மையில் விடுத்துள்ள புதிய பாடத்திட்டப்படியே அதிகமான செய்யுட் பாகங்களும், உரை நடைப் பாகங்களும் இதிற் சேர்க்கப் பெற் றுள்ளன.

நன்றி பாராட்டல்

தங்கள் நூற் பகுதிகளைச் சேர்த்துக் கொள்ளுமாறு மனங்கனிந்து உடன்பாடு வழங்கிய பெரியா ரனைவர்க்கும் எமது நன்றி செலுத்துங் கடப்பாட்டினேம்.

தமிழ்மாணவ உலகுக்கு இந்நூல் பெரிதும் பயனுதவி விளங்கும் வண்ணம் தமிழ்த் தாய் இன்னருள் புரிக!

துரைத்தனக் கல்லூரி
கும்பகோணம்
9—12—1936

அ. கந்தசாமிப் பிள்ளை,
தமிழ் விரிவுரையாளர்

நன்றி கூறல்

கீழே காணப்பெறும் பாடப் பகுதிகளை அச்சிட அனுமதி அளித்தருளிய உரிமையாளர்க்கு எமது நன்றி உரியதாகுக.

பகுதி	உரிமையாளர்
1. எனது நோக்கம்	மகாமகோபாத்தியாய, டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள்
2. புத்தக நிலையம்	திரு. K. சம்பந்தம் பிள்ளையவர்கள் B.A., L.T.
3. தருமிக்குப் பொற்கிழியளித்த படலம் 4. கீரனைக் கரையேற்றிய படலம்	நாவலர் கழகம், சிதம்பரம்
5. பயிர் வண்டும், படர் கொடியும்	திரு. R. P. சேதுப் பிள்ளையவர்கள் B.A., B.L.
6. இராஜா தோடர்மால்	திரு. K. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் M.A., M.L.
7. சொற்பொழிவு தமிழ்நாடு (செய்யுள்)	திரு. V. கலியாணசுந்தர முதலியாரவர்கள்
8. பண்டைத் தமிழர் விளையாட்டுக்கள்	திரு. C. K. சுப்பிரமணிய முதலியாரவர்கள் B. A.
9. கடற்கரை	பாரதி பிரசுராலயம், சென்னை
10. திருவிழா	திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டாரவர்கள்
11. கைத்தொழில்	கல்வி இலாகா டிரெக்டர், சென்னை
12. நட்சத்திரசாலை	திருமதி. E. T. இராஜேசுவரியம்மையார் M.A., L.T.
13. பூதப்பாண்டியன் தேவியார் புவியெழுபது (செய்யுள்)	மகாவித்வான் ரா. இராகவையங்காரவர்கள்
14. சென்னையிலிருந்து இங்கிலாந்துக்கு ஒரு பிரயாணம்	திரு. P. N. அப்புஸ்வாமி ஐயரவர்கள் B.A., B.L.
15. நமது தாய்மொழி	மகாமகோபாத்தியாய, பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்கள்

பகுதி	உரிமையாளர்
16. கல்லாக்கலே	திரு. P. S. ஆசாரியா அவர்கள்
17. பாரதியாரின் தமிழ்ப் புலமை	திரு. S. சோமசுந்தர பாரதியாரவர்கள் M.A., B.L.
18. கதிரி கண்ட காரிகை	திரு. காழி சிவ. கண்ணுசாமி அவர்கள் B.A.
19. கல்வி	திரு. V. நாராயணையர் அவர்கள் M.A., M.L.
20. அரிதாசர்	S. சோமசுந்தர தேசிகர்

'கலேமகள்' பத்திரிகையில் வெளிவந்த 1. எனது நோக்கம், 2. சென்னேயிலிருந்து இங்கிலாந்துக்கு ஒரு பிரயாணம், 3. கல்லாக்கலே, இக்கட்டுரைகளே இப்பாடப் பகுதியில் சேர்த்துக்கொள்ள அநுமதி வழங்கிய மேற்படி பத்திரிகாசிரியருக்கும், 'பாரதியார் தமிழ்ப் புலமை' என்னும் கட்டுரையைச் சேர்த்துக்கொள்ள உடன்பாடு அளித்த ஸ்ரீ M. அனந்த நாராயணன், M.A., I.C.S. அவர்களுக்கும் எமது நன்றி உரியதாகும்.

V. S. வெங்கடராமன் கம்பெனி,

பப்ளிஷர்ஸ், கும்பகோணம்.

உள்ளுறை

செய்யுட் பகுதி

பக்கம்

I. துதி :

i.	கடவுள் வாழ்த்து	...	1
ii.	திருவாசகம்	...	3
iii.	தேவாரம்	...	4
iv.	திவ்வியப் பிரபந்தம் : பெருமாள் திருமொழி.		5
v.	தாயுமானவர் பாடல்	...	7
vi.	சமரசம்	...	8
vii.	தமிழன்னை	...	8

II. நீதி:

i.	திருக்குறள்	...	9
ii.	பன்னூல் திரட்டு	...	10
iii.	அறநெறிச்சாரம்	...	13
iv.	ஏலாதி	...	15
v.	சிறு பஞ்ச மூலம்	...	16
vi.	சிலப்பதிகாரம்	...	17
vii.	புறநானூறு	...	18

III. காதை :

1.	அரிச்சந்திர புராணம்	...	19
2.	வில்லிபுத்தூரார் பாரதம்	...	23
3.	கம்பராமாயணம்	...	28
4.	பெரிய புராணம்	...	35
5.	சிலப்பதிகாரம்	...	39

IV. பல்சுவை :

i.	வருணனை	...	42
ii.	பிரபந்தம்	...	46
iii.	பிற வகை	...	50

உரை நடைப் பகுதி

பாடம்	விஷயம்		பக்கம்
1.	எனது நோக்கம்	...	55
2.	புத்தக நிலையம்	...	58
3.	தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்	...	63
4.	கீரனைக் கரையேற்றிய படலம்	...	67
5.	பயிர் வண்டும், படர் கொடியும்	...	69
6.	இராஜா தோடர்மால்	...	75
7.	சொற் பொழிவு	...	88
8.	பண்டைத் தமிழர் விளையாட்டுக்கள்	...	97
9.	கடற் கரை	...	101
10.	திருவிழா	...	104
11.	சந்தி விக்கிரகம் : அடுத்துக் கெடுத்தல்	...	108
12.	கைத்தொழில்	...	113
13.	ராஸலிண்டும் ஸீலியாவும்	...	120
14.	நட்சத்திரசாலை	...	133
15.	பூதப்பாண்டியன் தேவியார்	...	142
16.	சென்னையிலிருந்து இங்கிலாந்துக்கு ஒரு பிரயாணம்	...	146
17.	நமது தாய் மொழி	...	155
18.	கல்லாக்கலை	...	158
19.	பாரதியார் தமிழ்ப் புலமை	...	164
20.	கதிரி கண்ட காரிகை	...	169
21.	கல்வி	...	175
22.	அரிதாசர்	...	177

கம்பர்

மாணவர்

தமிழ் இலக்கியத் திரட்டு

இரண்டாம் புத்தகம்

செய்யுட் பகுதி

I. துதி :

[பக்திச் சுவை ததும்பும் இத் துதிப்பாக்களின் விழுமிய கருத்தும், சொல் அமைதியும், ஓசையினிமையும் ஓர்தற்பாலன.]

i. கடவுள் வாழ்த்து

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம். 1

—சேக்கிழார் சுவாமிகள்

மாநிலம் சேவடி யாகத் தூநீர்
வளைநரல் பௌவம் உடுக்கை யாக,
விசும்புமெய் யாகத் திசைகை யாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ணாக
இயன்ற எல்லாம் பயின்(று) அகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப,
தீ தற விளங்கிய திகிரி யோனே. 2

—பாரதம் பாடிய பெருந்தேவனார்

கலைபயின்ற வுளத்தினிக்குங் கரும்பினைமுக் கனியையருட்
கடலை யோங்கு

நிலைபயின்ற முனிவரருந் தொழுதேத்த நான்முகனார்
நீண்ட நாவின்

தலைபயின்ற மறைபயின்று மூவுலகுங் காக்கின்ற
தாயை வாகைச்

சிலைபயின்ற நுதலாளைக் கலைவாணி யம்மையை நாம்
சிந்திப் போமே. 3

—இராமலிங்க சுவாமிகள்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. முதற் செய்யுள் சிவபிரானையும், இரண்டாவது செய்யுள் திருமாலையும் குறிக்கின்றன வென்று எவ்வெவ்வடை மொழிகளால் அறியலாம்?

2. இரண்டாவது பாட்டில் கடவுளது விசுவரூபம் எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?

3. சரசுவதி தேவியை எவ்வெவ்வகையால் உருவகப்படுத்துகிறார்? சரசுவதிக்குரிய பிற பெயர்களில் நான்கு கூறுக.

(ii) மொழிப் பயிற்சி

அகராதியை உபயோகித்துப் பொருள் கூறுக:—வேணி, பலம், சிலம்பு, வளை, நரல், திகிரி, விசும்பு, உய்தல்.

(iii) பிற நூல் ஆராய்ச்சி

விளக்கக் குறிப்பு எழுதுக:—சேக்கிழார், பெரிய புராணம், பாரதம் பாடிய பெருந்தேவனார், நற்றிணை.

ii. திரு வாசகம்

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் றிருப்பாதப் போதுக் காக்கி

வந்தனையும் அம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கி ஐம்புலன்கள் ஆர

வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்

தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனிய னேற்கே.

—மாணிக்கவாசக சுவாமிகள்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. இப் பாசுரத்தில் கடவுள் அடியாரை ஆட்கொண்ட தன்மை எவ்வாறு விவரிக்கப்படுகிறது ?

2. அடியார் தம்மை எந்த இருசொற்களால்குறிப்பிட்டுளார்?

3. சிவபெருமானது திருமேனியை வருணிக்கும் உபமானம் யாது ?

(ii) மொழிப் பயிற்சி

1. அகராதியில் பொருள் காண்க:—இணை, போது, விச்சை.

2. மாணிக்கவாசகர், திருவாசகம்,-பெயர்க்காரணம் அறிக.

(iii) பிற நூல் ஆராய்ச்சி

மாணிக்கவாசகர் வரலாற்றைப் படித்து, அவரது காலம், வேறு பெயர்கள், இயற்றிய வேறு நூல்கள் இவைகளைக் குறிக்க.

iii. தேவாரம்

பற்றிநின்ற பாவங்கள் பாற்ற வேண்டில்,
பரகதிக்குச் செல்வதொரு பரிசு வேண்டில்,
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்க்க வேண்டில்,
சொல்லுகேன் கேள்நெஞ்சே! துஞ்சா வண்ணம்
உற்றவரும் உறுதுணையும் நீயே யென்றும்,
உன்னையல்லால் ஒருதெய்வம் உள்கே னென்றும்,
புற்றரவக் கச்சார்த்த புனிதா வென்றும்,
பொழிலாரூரா வென்றே போற்றா நில்லே.

—திரு நாவுக்கரசர்

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை
இன்ன தன்மைய னென்றறி வொண்ணா
வெம்மா னையெளி வந்த பிரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே.

—சுந்தரமூர்த்தி சுவாமிகள்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. இப்பாடல் ஒவ்வொன்றும் எந்த ஊரில் பாடப்பட்டது ?
2. அவ்வூர் எவ்வாறு வருணிக்கப்பட்டுளது ?
3. கடவுள் எவ்விதங்களில் அடியார்க்கு அருள் செய்வதாகக் கூறப்படுகிறது ?
4. கடவுளை வழிபடுவதால் எய்தும் பயன்கள் யாவை யென்று நாவுக்கரசர் கூறுகின்றனர் ?
5. திருநாவுக்கரசர் நெஞ்சுக்குரைக்கும் உபதேசம் யாது ?
6. திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள்,—இவர்களது பிற பெயர்கள் யாவை? எந்தெந்தக் காரணத்தினால் அப்பெயர்கள் வழங்கும் ?

(i) மொழிப் பயிற்சி

1. திரு என்னும் சொல்லுக்கு மூன்று பொருள்கள் கூறுக.
2. தேவாரம்,— பொருள் கேட்டறிக.
3. பணித்தல், வைகும், பழனம், ஆர்த்தல், பாற்ற, பரிசு, பொழில், துஞ்சுதல்,—அகராதியில் பொருள் காண்க.
4. பற்றி, நின்ற, போற்றாநில், உள்கேன்,—உறுப்பிலக்கண மெழுதுக.

iv. திவ்வியப் பிரபந்தம்: பெருமாள் திருமொழி

[இப்பகுதியில் ஆழ்வார், கடவுளைத் தவிரத் தமக்கு வேறு கதி யில்லை யென்பதை ஒவ்வொரு பாசுரத்திலும் உரிய உவமை முகத் தால் விளக்கி யிருக்கும் நயம் ஓர்ந்து இன்புறத்தக்கது.]

தருதுயரம் தடாயேல் உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில் சூழ்வித்துவக் கோட்டம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும் மற்றவள்தன்
அருள்நினைந்தேயழும்குழவியதுவேபோன் றிருந்தேனே.

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்
மாளாத காதல்நோ யாளன்போல் மாயத்தால்
மீளாத் துயர்தரினும் வித்துவக்கோட் டம்மா! நீ
ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே. 2

வெங்கண் திண்களிறடர்த்தாய்! வித்துவக்கோட்டம்மானே!
எங்குப்போய் உய்கேன்? உன் இணையடியே அடைய லல்லால்
எங்கும்போய்க் கரைகாணு(து) எறிகடல்வாய் மீண்டேயும்
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. 3

செந்தழலே வந்(து) அழலைச் செய்திடினும் செங்கமலம்
அந்தரம்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்;
வெந்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! உன்
அந்தமில்சீர்க் கல்லால் அகங்குழைய மாட்டேனே. 4

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்
மைத்தெழுந்த மாமுகிலே பார்த்திருக்கும்; மற்றவைபோல்
மெய்த்துயர்வீட் டாவிடினும் வித்துவக்கோட் டம்மா! என்
சித்த(ம்) மிக உன்பாலே வைப்பன் அடியேனே. 5

வித்துவக்கோட் டம்மாநீ வேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலே னென்(று) அவனைத் தாள்நயந்த
கொற்றவேல் தானைக் குலசேகரன் சொன்ன
நற்றமிழ்பத் தும்வல்லார் நண்ணார் நரகமே. 6

—குலசேகராழ்வார்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. என்ன செய்தாலும், கடவுளைத் தவிரத் தமக்கு வேறு கதியில்லையெனலை இவ்வாசிரியர் எங்ஙனம் விளக்குகிறார்?

2. கடவுள் மருத்துவனுக்கு ஒப்பிடப்பட்டிருப்பது எங்ஙனம் பொருந்தும்?

3. கடல், கப்பல், பறவை-இவ்வுவமைகள் குறிக்கும் உவமேயங்கள் எவை?

4. நான்காவது செய்யுளில் முதலிரண்டடிகளின் கருத்தைக் கொண்டு இவ்வாசிரியர் தெளிவுறுத்தும் பொருள் யாது?

5. துயர் வீட்டா விடினும் உன்பாலே சித்தம் வைப்பேன் என்னும் கருத்து எங்ஙனம் தெருட்டப்படுகிறது?

6. இப்பாசுரங்களைப் பாடியஆழ்வார் யாவர்? வித்துவக்கோடு எங்குளது?

(ii) மொழிப் பயிற்சி

1. பொருள் காண்க:—வெங்கண், அடர்த்தல், வங்கம், கூம்பு அந்தரம், பைங்கூழ், மைத்து, நயந்த, கொற்றம். 2. சரண், அந்தம், தானை, வான், தாள், அகம்,—இரு பொருள் கூறுக.

(iii) இலக்கணம்

1. அரிசினம், தருதுயரம், எறிகடல்,-இவை என்ன தொகைகள்? எங்ஙனம் விரியும்?

2. செங்கமலம், வெங்கதிர், திண்களிறு,-இப்பண்புத்தொகைகளைப் பிரித்து, நிலைமொழிகளைக் குறிப்பிடுக. அவையடைந்த விகாரத்தையும் அறிக.

(iv) பிற நூல் ஆராய்ச்சி

1. திவ்வியப் பிரபந்தம் பாடிய ஆழ்வார்கள் யார், யார்?

2. குலசேகராழ்வார் சரித்திரத்தை நூல்களிற் படித்தறிக. இவரிடத்திருந்த சிறந்த இராம பத்தியைக் காட்ட ஓர் உதாரணம் 10 வரியில் எழுதுக.

3. ஆழ்வார், திவ்வியப் பிரபந்தம், வித்துவக்கோடு, குலசேகரன்படி,—விளக்கக் குறிப்புக்கள் தெரிக்க.

V. தாயுமானவர் பாடல்

ஆழாழி கரையின்றி நிற்கவிலையோ ? கொடிய
ஆலம்அமு தாக விலையோ ?
அக்கடலின் மீதுவட அனல்நிற்க வில்லையோ ?
அந்தரக் தகில கோடி
தாழாமல் நிலைநிற்க வில்லையோ ? மேருவும்
தனுவாக வளைய விலையோ ?
சப்தமே கங்களும் வச்ரதரன் ஆணையிற்
சஞ்சரித் திட வில்லையோ ?
வாழாது வாழவே இராமனடி யாற்சிலையும்
மடமங்கை யாக விலையோ ?
மணிமந்த்ரம் ஆதியால் வேண்டுசித் திகள்உலக
மார்க்கத்தில் வைக்க விலையோ ?
பாழான என்மனம் குவிய வொரு தந்திரம்
பண்ணுவ துனக் கருமையோ ?
பார்க்கும்இடம் எங்கும்ஒரு நீக்கம்அற நிறைகின்ற
பரிபூர ணானந்தமே.

—தாயுமானவர்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. கடவுள் எத்தகையரெனக் கூறப்படுகிறது ?

2. இறைவன் எண்ணினால் எவையும் செய்யவல்லான் என்பதை விளக்கும் எட்டுச் செயல்கள் எவை ?

3. வடவனல், வச்ரதரன், மணி, மந்திரம், ஆதி,—இவற்றிற்கு விளக்கக் குறிப்பெழுதுக.

(ii) மொழிப் பயிற்சி

1. தனு, பூரணம், சஞ்சரித்தல், மார்க்கம்,—இவ் வட மொழிகளுக்கு ஏற்ற தமிழ்மொழி கூறுக.

2. ஆழி, அமிர்தம், இராமன்,—இவை காரணப் பெயரா மாற்றைப் புலப்படுத்துக.

3. மணி, சிலை, அடி—இச்சொற்களுக்கு ஒன்றின்மேற்பட்ட பொருள் கூறுக.

(iii) பிற நூல் ஆராய்ச்சி

ஆலம் அமுதானது, மேரு வளைந்தது, சிலை மடமங்கையானது —இக்கதைகளை அறிக.

vi. சமரசம்

ஒன்றே குலமு மொருவனே தேவனும்
நன்றே நினைமி னமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி யில்லை; நுஞ் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

—திருமூலர்

பயிற்சி

இதனுள் கூறப்படும் சமரசக் கொள்கைகள் யாவை? அவைகளைப் பின்பற்றுவதால் உண்டாகும் பயன் யாது?

vii. தமிழன்னை

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ் பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

—சுந்தரம் பிள்ளை

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. பூமிதேவியின் உடை, முகம், நெற்றி, திலகம் இவையாக உருவகிக்கப்பட்டுள்ளவை எவை?

தமிழ்மொழி, யாதாக உருவகிக்கப்படுகிறது?

(ii) மொழிப் பயிற்சி

1. அகராதியிற் பொருள் காண்க:—

மடந்தை, எழில், வதனம், நுதல், அணங்கு.

2. வதனம், தெக்கணம், திராவிடம், திலகம்—இவ் வட சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள் யாவை?

(iii) பிற நூல் ஆராய்ச்சி

இப்பாடற் பகுதி எந்நூலில் உள்ளது? அதன் ஆசிரியரது பெயர், ஊர், காலம், சிறப்பு—இவற்றைக் கேட்டறிக.

II. நீதி :

[இந்நீதிச் செய்யுட்கள் எச்சமயத்துக்கும் பொதுவானவை; மக்களுக்கு நன்னெறி போதிப்பன; ஏற்ற உவமைகளால் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பன.]

i. திருக்குறள்

கேள்வி

செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வம்; அச்செல்வம்
செல்வத்து ளெல்லாந் தலை. 1

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும். 2

செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவின்
ஆன்றாரோ டொப்பர் நிலத்து. 3

கற்றில னாயினுங் கேட்க; அஃதொருவற்(கு)
ஒற்கத்தி னூற்றாந் துணை. 4

இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல். 5

எனைத்தானு நல்லவை கேட்க; வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும். 6

பிழைத் துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர். 7

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியால்
தோட்கப் படாத செவி. 8

நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது. 9

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென். 10

—திருவள்ளுவர்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. கேள்வியாவது யாது? அதை எதனால் செல்வமெனலாம்?

2. கேள்வியினால் எய்தும் பயனை 3, 4, 5, 6, 7 குறட் பாக்களைக் கொண்டு எழுதுக.

3. 8, 9, 10 குறட் பாக்களால்—அஃதின்மையாலாம் தீமையை எழுதுக.

4. செவிச்சுவை எத்தனை வகை? வாய்ச்சுவை எத்தனை வகை?

(ii) மொழிப் பயிற்சி

1. பொருள் தேர்க: அவி, ஆன்றோர், ஒற்கம், ஈண்டிய, தகைமை.

2. பிரித் தெழுதுக: ஊன்றுன் றுணை, ஊற்றுக்கோல்.

3. சொல் வளங்களை நோக்குக: மாக்கள், ஈயப்படும், வாய்ச் சொல், கேள்வியாற் றோட்கப்படுதல்.

(iii) பிற நூல் ஆராய்ச்சி

திருக்குறளின் பெருமை, திருவள்ளுவ நாயனாரின் காலம்—படித்தறிக.

---

ii. பன்னூல் திரட்டு

பொறை

வெகுளியே யுயிர்க்கெலாம் விளக்குந் தீவினை
வெகுளியே குணந்தவம் விரதமாய்க்குமால்
வெகுளியே யறிவினைச் சிதைக்கும் வெம்மைசால்
வெகுளியிற் கொடும்பகை வேறொன் றில்லையால். 1

—காஞ்சிப் புராணம்

வலியவனிடத்து மொத்தான் மாட்டினும் வெகுளி காத்தல்
பொலிவுசெய் அறமதென்னப் பொருந்தாது தனையர்தம்பால்
நலிவுறு வெகுளி செல்லா தாதலா னலிய லாற்று
மெலியவனிடத்துக் காக்கும் வெகுளியே யறமதென்பர். 2

—பிரபு லிங்க லீலை

உள்ளங் கவர்ந்தெழுந்(து) ஓங்கு சினங்காத்துக்
கொள்ளுங் குணமே குணமென்க—வெள்ளந்
தடுத்த லரிதோ தடங்கரைதான் பேர்த்து
விடுத்த லரிதோ விளம்பு. 3

—நன்னெறி

வன்மைச் சுயோதனற்கும் வானோர் சிறைமீட்டான்
தொன்மை நெறித்தருமன் சோமேசா!—பன்முறையும்
இன்னுசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு. 4

--சோமேசர் முதுமொழி வெண்பா

கூர்த்துநாய் கௌவிக்கொளக் கண்டுந் தம்வாயாற்
பேர்த்துநாய் கௌவினு ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு.

—நாலடியார்

எள்ளிப் பிறருரைக்கும் இன்னுச் சொல் தன்னெஞ்சில்
கொள்ளி வைத்தாற்போற் கொடிதெனினும்—மெள்ள
வறிவென்னு நீரால் அவித்(து)ஒழுக லாற்றில்
பிறிதெனினும் வேண்டா தவம்.

—அறநெறிச்சாரம்

சாந்தனையுந் தீயனவே செய்திடினுந் தாமவரை
யாந்தனையுங் காப்பர் அறிவுடையோர்—மாந்தர்
குறைக்குந் தனையுங் குளிர்நிழலைத் தந்து
மறைக்குமாங் கண்டீர் மரம்.

—மூதுரை

அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
யிகழ்வார்ப் பொறுத்தல் தலை. 1

ஒறுத்தார்க்கொருநாளை யின்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ். 2

மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல். 3

—திருக்குறள்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. பொறையாவது யாது?

2. வெகுளியால் விளையும் தீமைகள் யாவை? 'மெலிய வனிடத்துக் காக்கும் வெகுளியே அறமதென்பர்'—எதனால்? விளக்குக.

3. மூன்றும் செய்யுளில் வரும் உவமையையும், அதனால் அறியலாகும் நீதியையும் விளக்குக.

4. நான்காம் செய்யுளில் உள்ள குறட்பாவின் கருத்து யாது? அதை விளக்கும் கதை யாது?

5. ஐந்தாம் செய்யுளின் உபமானம், உபமேயம், பொதுத் தன்மை இவைகளை நேர் நேராக எடுத்தெழுதுக.

6. பொறுமையினும் சிறந்த தவம் வேறில்லை யென்பது ஆறுவது செய்யுளில் எங்ஙனம் விளக்கப்படுகிறது?

7. மரம், நிலம் இவற்றின் இயல்பு யாது? அவற்றை உவமை யாக்கியதால் அறியலாகும் நீதிகள் எவை?

8. உறுத்தலினினும் பொறுத்தலே சிறந்தது என்பது எவ் வெவ்வாற்றால் தெருட்டப்படுகிறது?

(ii) மொழிப் பயிற்சி

1. அகராதியிற் பொருள் காண்க: விளக்கும், நலியுறும், தடம், சால்பு, நீர்த்து, ஒறுத்தல், பொன்றுதல்.

2. பொருள் விளக்குக: 1. நலியலாற்று 2. ஒழுகலாற்றில்.

3. எதிர்ப்பதங்கள் எழுதுக: தீவினை, வெம்மை, பகை, வலி யவன், அறிது, வன்மை, தொன்மை, இன்னுச் சொல், இகழ்வார்.

(iii) இலக்கணம்

1. இலக்கணக் குறிப்பெழுதுக:—அறமது (என்பவர்), செய் யாக்கால், சொல்லியக்கால், வென்றவிடல், 2. வெகுளியே, காத்து கொள்ளுங் குணமே, வெள்ளம் தடுத்தலரிதோ, என்ன பயத்ததோ, சாந்தனையும், தீயனவே, செய்திடினும்,—ஏகார, ஓகாரங்கள் எவ் வெப்பொருள்களில் வந்தன?

(iv) பிற நூற் பயிற்சி

1. காஞ்சிப் புராணம், பிரபுலிங்கலீலை இந்நூல்கள் எதைப் பற்றியன? ஆசிரியர்களின் வரலாறும் காலமும் கேட்டறிக.

2. சோமேசர் முதுமொழி வெண்பா - இதன் சிறப்பியல்பு யாது? இதையொத்த வேறு இருநூல்கள் கூறுக.

iii. அறநெறிச்சாரம்

இல்வாழ்க்கை

மருவிய காதன் மனையாளுந் தானும்
இருவரும் பூண்டீர்ப்பி னல்லால்—ஒருவரால்
இல்வாழ்க்கை யென்னு மியல்புடைய வான்சகடஞ்
செல்லாது தெற்றிற்று நின்று. 1

கல்விச் செருக்கு

பலகற்றேம் யாம்என்று தற்புகழ வேண்டா
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையும் காக்கும்
சிலகற்றார் கண்ணும் உளவாம் பலகற்றார்க்
கச்சாணி அன்னதோர் சொல். 2

இன்னா செய்யாமை

பிறர்க்கின்னா செய்தலின் பேதைமை இல்லை
பிறர்க்கின்னா தென்றுபேர் இட்டுத்—தனக்கின்னா
வித்தி விளைத்து வினைவிளைப்பக் காண்டலின்
பித்தும் உளவோ பிற. 3

பிறர்க் குதவி

காலொடு கையமுக்கிப் பிள்ளையை வாய்நெரித்துப்
பாலொடு நெய்பெய்யும் தாயனையர்—சால
அடக்கத்தை வேண்டி அறன் வலித்து நாளும்
கொடுத்துமேற் கொண்டொழுகு வார். 4

நன்றியில் செல்வம்

உப்புக் குவட்டின் மிசையிருந் துண்ணினும்
இட்டுண்ணாக் காலது கூராதாம்—தொக்க
உடம்பும் பொருளும் உடையானோர் நன்மை
தொடங்காக்கால் என்ன பயன்? 5

அறிவு

பாம்புண்ட பால்எல்லாம் நஞ்சாம் பசுவுண்ட
தேம்படு தெண்ணீர் அமுதமாம்—ஓம்பற்
கொளியாம் உயர்ந்தார்கண் ஞானம் அதுபோல்
களியாம் கடையாயார் மாட்டு. 6

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. இல்வாழ்க்கையை இரட்டைமாட்டு வண்டியாகக் கூறியிருப்பதின் பொருத்தத்தை விவரிக்க.

2. கல்விச்செருக்கு கூடாது என்பது எங்ஙனம் விளக்கப் படுகிறது ?

3. 'முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்' என்னும் நீதி எங்ஙனம் தெரிவிக்கப்படுகிறது ?

4. பெரியோர் எவ்விதத்தில் தாயனையர் ?

5. தொக்க உடம்பும் பொருளும் உடையான் யாது செயல் வேண்டும் ? இதை விளக்க வந்த உபமானம் யாது ?

6. பாம்பு உண்ட பால் நஞ்சாகித் தீப்பயன் விளைக்கிறது இவ்வுவமை குறிக்கும் உபமேயம் யாது?

7. 'மேலோர் தாம் பெற்ற அறிவை நல்வழியில் உய்த்து நன்மை விளைப்பர்.' இந்நீதியை விளக்கும் உபமானம் யாது ?

(ii) மொழிப் பயிற்சி

1. பொருள் தெரிக:-சகடம், தெற்றிற்று, அலர்சதிர், குவடு தேம்படு, ஓம்புதல்.

2. 3, 5 செயுட்களுக்குப் பதவுரையும், நான்காவது செய்யுளுக்குப் பொழிப்புரையும்,இரண்டாவது செய்யுளுக்குக் கருத்துரையும் எழுதுக.

(iii) இலக்கணம்

1, 6 பாட்டுக்களுக்கு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் கூறுக.

(iv) பிற நூல் ஆராய்ச்சி

1. அறநெறிச்சாரம் : பொருளும், இலக்கணமும் கூறுக.

2. ஆசிரியர் வரலாறு அறிக.

iv. ஏலாதி

நிறை யுடைமை நீர்மை யுடைமை கொடையே
பொறை யுடைமை பொய்ம்மை புலாற்கண்-மறையுடைமை
வேயன்ன தோளி! யிவையுடையான் பல்லுயிர்க்குந்
தாயன்ன னென்னத் தகும். 1

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருண்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—பல்லார் [மேல்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற பெரியார்க் கிறை. 2

குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால் பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான்—இறுகானாய்
ஈடற் றவர்க்கீவா னாயி னெறிநூல்கள்
பாடற்ற பன்னு மிடத்து. 3

காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார்—சாலவும்
ஆழப் படும்ஊ ணமைத்தார் இமையவரால்
வீழப் படுவார் விரைந்து. 4

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. முதற் செய்யுளில் கூறப்படும் ஆறு உயர் குணங்கள் யாவை?
2. எவ்வாறு குணங்கள்மேலோரினும் மேலோராகச்செய்யும்?
3. எவர்க்கு நெறி நூற்கள் பாடற்ற?
4. உணவு கொடுத்துக் காக்கத் தக்கவர் யார், யார்?

(ii) மொழிப் பயிற்சி

1. பொருள் காண்க:—வேய், மூங்கை, பாடற்ற, பன்னுதல், ஈடு, பாலில்லார்.

2. வேறுபாடு காண்க:—இறை - இரை; மறை - மரை; எண் - என்; ஆழப்படும் - ஆளப்படும்; ஊன் - ஊண்.

(iii) இலக்கணம்

1, 2, 3 செய்யுட்களுக்கு எழுவாய், பயனிலை யெழுதுக.

(iv) பிற நூல் ஆராய்ச்சி

1. ஏலாதி பெயர்க் காரணம் யாது?
2. ஆசிரியர் வரலாறு அறிக.

V. சிறுபஞ்ச மூலம்

பிழைத்தல் பொறுத்தல் பெருமை ; சிறுமை
யிழைத்ததீங் கெண்ணி யிருத்தல் ;—பிழைத்த
பகைகெட வாழ்வதும் பல்பொருளார் நல்லார்
நகைகெட வாழ்வதும் நன்று. 1

பூத்தாலுங் காயா மரமுமுள நன்றறியார்
மூத்தாலு மூவார்நூ றேற்றாதார்—பாத்திப்
புதைத்தாலு நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலுஞ் செல்லா துணர்வு. 2

ஒருவ னறிவானு மெல்லாம்யா தொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமில் லானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில். 3

வார்சான்ற கூந்தல்! வரம்புயர, வைகலும்
நீர்சான் றுயரவே, நெல்லுயரும்—சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல்
ஓவா துரைக்கும் உலகு. 4

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. ஒவ்வொரு பாட்டிலும் ஐயைந்து நீதிகள் சொல்லப் படுவதை எண்ணி யறிக.

2. மூன்றாம் செய்யுள் நினைப்பூட்டும் பழமொழி யாது?

3. நான்காம் செய்யுளில் மகடூஉ முன்னிலை யாது? 'வரம்புயர', 'கோவுயர்தல்' எங்ஙனம்?

(ii) மொழிப் பயிற்சி

1. குணன், கணன்—என்ன போலி? வேறு நான்கு உதாரணங் கள் கூறுக. மொழிமுதற்போலி, இடைப்போலி, கடைப்போலி என்பவற்றின் இலக்கணம் தேர்க.

(iii) பிற நூல் ஆராய்ச்சி

1. சிறுபஞ்ச மூலம்.—பெயர்க் காரணம் கூறுக.

2. எவை கீழ்க் கணக்கு நூல்கள் எனத்தகும்?

3. ஒவ்வொரு செய்யுளிலும் முறையே 3, 4, 5, 6 நீதிகளை யுணர்த்தும் கீழ்க் கணக்கு நூல்களின் பெயர் கூறுக.

vi. சிலப்பதிகாரம்

அறவுரை

தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்! தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை யஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன் றி கொல்லன்மின்; தீ நட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலா தணுகுமின்;
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
கள்ளுங் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினி லொழிமின்;
இளமையுஞ் செல்வமும் யாக்கையு நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவ தொழியாது;
செல்லுந் தேயத்துக் குறுதுணை தேடுமின்;
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்! ஈங்கென.

— இளங்கோவடிகள்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. விதிமுகத்தாற் கூறும் அறங்களில் மூன்றையும், மறைமுகத்தாற் கூறும் அறங்களில் மூன்றையும் குறிப்பிடுக.

2. செல்லுந் தேயத்துக் குறுதுணையாவது யாது?

(ii) மொழிப் பயிற்சி

பொருள் காண்க: பரிவு, இடுக்கண், தெளிதல், பேணுதல், வரையாது, தேயம், மல்லல், ஞாலம்.

(iii) இலக்கணம்

நீங்குமின், நீங்கன்மின், இவ்வுதாரணங்களைக் கொண்டு உடன்பாட்டுப் பன்மை ஏவலுக்கும், எதிர் மறைப் பன்மை ஏவலுக்கும் விதி குறிப்பிடுக.

vii. புறநானூறு

கடமை

ஈன்றுபுறந் தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறு வாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே. 1

வேந்தரின் கடமை

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்
அதனால், யானுயிர் என்ப தறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே. 2

நாட்டின் சிறப்பு

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவ ராடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே. 3

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. தன் மகனுக்குத் தானும், அவன் தந்தையும், அரசனும் பிறரும் செய்யத்தகும் கடமைகள் எவை யென்று ஈன்ற தாய் கூறுகிறாள்? அதற்குப் பிரதியாக மகன் செய்யுங் கடமைகள் யாவை?

2. நெல்லினும், நீரினும் மன்னனே உலகத்திற்கு உயிர் என்பதை ஐந்து வரியில் விளக்குக. வேந்தனுக்கு எதை அறிந்தொழுகுவது கடனாகும்?

(ii) பிற நூல் ஆராய்ச்சி

1. அகப்பொருள், புறப்பொருள்-என்பனவற்றை அறிக.

2. புறநானூறு—பெயர்க்காரணத்தையும், எந்நூல் வரிசையிற் சேர்ந்ததென்பதையுந் தெளிக.

III. காதை:

1. அரிச்சந்திர புராணம்

வாய்மையின் வெற்றி

[காசி வேந்தனது குழந்தையைக் கொன்றதாகப் பொய்க் குற்றஞ் சாட்டப்பட்ட சந்திரமதியைக் கொலைக்களத்திற்குக் கொண்டு செல்லக் கண்ட நகர மாந்தர் கூறுதல்]

'கையோ செழுங்கமலம், முகமோ நிறைந்தமதி,
காலோ இளஞ்சினை வரால்,
மெய்யோ கலாபமயில், இடையோ நுடங்குகொடி,
விழியோ கடைந்த வடிவேல்,
மையோ சுருண்ட குழல், இதழோ செழும்பவழம்,
வனிதைக்' கெனப் புகலுவார்!
'அய்யோ! இவட்குவிதி கொலையோ!' எனக் கதறி
அழுவார்; அறைந்து விழுவார். 1

'தவளத் திருத்தரள நகையும், சிறந்தவிரு
தனுவைப் பழித்த நுதலும்,
பவளத்தை யொத்ததனி இதழும் படைத்தவிதி
பதறிப் படைத்த துளதோ!
கவளக் களிற்றரசன் உலகத் துயர்க்குதவு
கபடற் றிரக்க முடையோன்
இவளைக் கொலக்கருதி இவர்கைக் கொடுத்ததிறம்
யா'தென் றிரங்கி அழுவார். 2

'அழியாத காசிபதி மகனுவி யுண்ட இவள்
அனியாய காரி; அசடி;
பழிபூணி; இங்ககலின் எளிதாய் விடாது நமர்
பலராவி யும்ப ருகுவாள்;
விழியால் எறிந்துமுயிர் கவர்வாள்; முகத்திலெதிர்
விழியாது நில்லும்' எனவே
மொழிவார்; 'வதைத்திடுதல் பொருளாக அற்பமனம்
முசியாள்' எனப்ப கருவார். 3

'தப்பாது மன்மகனை உயிர் கொண்டு திரமுண்ட
தறுகண் அரக்கி நமர்தம்
கைப்பாச முற்றுவர வலளோ ? விசும்பினிடைக்
கரவாதிருத்தல் இலளே ?
அப்பால னைக்கறுவி இவள் கொன்ற தோ; அலதி
யார்கொன் றதோ தெய்வமே!
இப்பாவி தன் றலையில் வைத்தாய் உனக்கு நடு
இலையோ' எனப்பு கலுவார். 4

'தனியாய பாவிகுறை எவர்போய் உரைத்திடுவர்?
தருமா லயப்பு ரவலன்
அனியாயம் என்றுசிறி துணராதோர் பெண்பழியை
அவமே கொளக்க ருதினன்;
இனியார் இரங்குபவர்' எனவே அலைந்துவயி
றெறியா உலைந்து சுழல்வார்;
கனிவாய் புலர்ந்துநிலை தளர்வார்; கலங்கியுடல்
கரைவார் ; புலம்பி அழுவார். 5

'அங்கே அடித்தவடி இங்கே அலைக்குமலை
வல்லாமல் எய்து கொலையும்
பங்கே ருகத்தினறு மலர்போல் விளங்குமுகம்
அறியாத பாவை அனையாள்
எங்கே பிறந்தனள் கொல் ! எங்கே வளர்ந்தனள் கொல்
எங்கே இருந்த னள்கொலோ!
இங்கே இறந்தவிய வந்தாள்' எனப் பலரும்
இடைகின்ற எல்லை தனிலே. 6

[அரிச்சந்திரன், சந்திரமதியைக் கொண்டு நகர்ப்புறம் அடைதல்]

என்ன பாதகம் செய்தனம் என இறை நகைத்துக்
கன்னி கைகளைக் கட்டிய கயிறுதான் பிடித்துத்
துன்னு மாமாணித் தோரண வாயிலைக் கடந்து
பொன்னின் மாநகர்ப்புரிசையின் புறத்துவந் திறுத்தான்.

[கௌசிகன், அரிச்சந்திரனைப் பொய்யுரைக்கத் தூண்டுதல்]

அந்த வேளையில் கவுசிகன் விரைந்து வந் 'தரசே,
இந்தநோ தகக வெய்தல்என்? எனக்கு நீ முன்னம்
தந்த நா "டியான் தந்திலேன்" எனுமொழி சாற்றி
உந்தம் நாடும்இவ் வுயிர்களும் பெறு'கென உரைத்தான். 8

[அரிச்சந்திரனும் சந்திரமதியும் கௌசிகனுக்கு எதிருரைத்தல்]

'செய்மை அண்மையில் உயிர்க்கொரு துணை எனச்சிறந்த
வாய்மை யாலகம் தூய்மையாம்; மற்றிலை புறத்தைத்
தூய்மை செய்வது நீரலால் சொல்லின்வே றுளதோ?
நோய்மை செய்யினும் வாய்மையே நோன் பெமக்கறிதி. 9

'புலைய னும் விரும் பாத இப் புன்புலால் யாக்கை
நிலையெ னுமருண் டுயிரினும் நெடிதுறச் சிறந்தே
தலைமை சேர்தரு சத்தியம் பிறழ்வது தரியேம்.
கலையு ணர்ந்த நீ எமக்கிது கழறுவ தழகோ? 10

'பதியி ழந்தனம்; பாலனை இழந்தனம்; படைத்த
நிதியி ழந்தனம்; "இனி நமக்குள" தென நினைக்குங்
கதியி ழக்கினும் கட்டுரை இழக்கிலேம்' என்றார்.
மதியி ழந்து தன் வாயிழந் தருந்தவன் மறைந்தான். 11

[அரிச்சந்திரன், சந்திரமதியைக் கொண்டு மயானத்தைச் சார்தல்]

வாசத் தார்புனை வாசவ னுடன்முனி வைகப்
பாசத் தாள்கரம் பிணித்ததோர் பாசங்கை பற்றிப்
பேசத் தான்பெருன் பிணஞ்சுடு கோவினுல் தள்ளி
நேசத்தார்மகன் கிடந்ததோர் நெடுநிலஞ் சேர்ந்தான். 12

'வழக்கின் என்றும் நீ வழிபடு கடவுளை வணங்கிக்
கிழக்கு நோக்கி யீண் டிரு' எனக் கிளிமொழி மடந்தை
பழக்க மானவக் கணவனைப் பரவி, 'என் ஆவி
இழக்கற் கஞ்சிநீ அறம் வழூவேல்' என இயம்பும். 13

‘பொருந்தும் நீத்தத்தில் புற்புத வாழ்வை நீ மெய்யென்
றருந்த வத்தையும் அறத்தையும் மெய்யையும் விடுத்து
வருந்தல் மன்னவ, வழிவழி சிறக்’ கென வாழ்த்தி
இருந்த பின்,சுடர் வாட்படை வலக்கையின் எடுத்தான்.14

[சத்தியம் வெல்லுதல்]

‘உலகு யிர்க்கெலாம் பசுபதி ஒருமுதல் ஆயின்,
அலகில்சீருடை அவன் மொழி மறையெனின், அதன்கண்
இலக றம்பல வற்றினும் வாய்மை யீ டிலதேல்,
விலகு ருமலவ் வாய்ம்மையை விரதமாக் கொளின்யான்.

‘நெறியின் அன்னஎன் றனைவிடா நிறை இவட்குளதேல்,
இறுதி யின்மையைப் பெறுக; அன்றெனின் இவள்இறுதி
பெறுக’ என்றுவாள் வீசினன் பேதைதன் கழுத்தில்
மறும ணத்திடு மாலையாய் வீழ்ந்ததவ் வடிவாள். 16

[உடனே மும்மூர்த்திகளும், மற்றைத் தேவர்களும், விசுவாமித்திரரும் தோன்றினர். மலர் மாரி பெய்தது. முருகவேள், லோகிதாசனை உயிர்த்தெழச் செய்தனர். விசுவாமித்திரர் தமது தோல்வியைக் ஒப்புக்கொண்டு, தமது தவத்தினில் பாதியையும், திரும்ப நாடாளும் உரிமையையும் அரிச்சந்திரனுக்கு அளித்தனர்.]

—வீரன் ஆசு கவிராயர்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. சந்திரமதியின் சார்பாகப் பேசிய மாதர்கள் யாது கூறினர்? அவளுக்கு மாறாகப் பேசியவை யாவை?

2. விசுவாமித்திரரின் சோதனை யாது? அச்சோதனையைத் தக்க சமயத்தில் உபயோகித்திருப்பதை விளக்குக.

3. அரிச்சந்திரன் வாய்மையின் பெருமையை எங்ஙனம் எடுத்துரைக்கிறான்?

4. சந்திரமதி இறுதியில் கூறிய தைரியம் யாது.

5. ‘சத்தியமே ஜயம்’ என்பது எவ்வாறு நாட்டப்பட்டது?

(ii) மொழிப் பயிற்சி

1. கை, முகம், கால், மெய், இடை, விழி, குழல், நுதல், நகை, இதழ்—இவற்றிற்கு ஏற்ற உவமானங் கூறுக,

2. கவளக் களிற்றரசன், மன்மகனை உயிர்கொண்டு,கனிவாய் புலர்ந்து,—தொடரிலக்கணம் கூறுக.

3. இந்நூலாசிரியரின் பெயர், ஊர், காலம் அறிக.

2. வில்லிபுத்தூரர் பாரதம்

பாரத வீரரின் கலைத் தேர்ச்சி

[இப் பகுதி வீரச்சுவை மலிந்தது ; பண்டைக்காலப் போர்க் கலைப் பயிற்சியை விளக்குவது ; வீரச் சுவைக்கேற்றதான சந்தமும் பொருந்தியது.]

[துரோணர் செய்கை]

சிலைக்குரு விறற்குரு குலக்குமர ருக்குவரு
        சிரமநிலை காண்மினெனவே
யலைத்தலை நிலாவெழு சரிற்புதல்வ னுக்கும்நல்
        அறக்கடவுளுக்கும் உரையா
நிலைப்படுவி சாலமணியணிதி கழ ரங்கின்மிசை
        நிகழ்பலி கொடுத்தரியுடன்
கலைப்புரவி யூர்திருவை யுந்தொழுது புக்கனன்
        அகத்துணர்வு மிக்க கலையோன். 1

[சபையின் தோற்றம்]

புரியிலறிவோர் சனபதத்திலறிவோர் புவி
        புரக்குமவர் தம்மிலறிவோர்
வரிபடவயங்குகொடி மஞ்சவிதமெங்கணும்
        வனப்புறவிருந்த பொழுதில்
தெரிவுறு விமான மனை தோறுமுறைதேவர் பலர்
        சித்தர் முதலோர் பரனொடும்
கரிய நெடுமால் பிரமன் இந்திரன் முதற்பலர்
        கலந்த அகல்வான் நிகருமே. 2

[வீரர் ஆயுதப் பயிற்சி காட்டல்]

ஆயுத மநேகவித மானவை யெனைப்பலவும்
அழகுற வியற்றியும் மதம்
பாயு மிபம்மா விரதம் வாசி யொருவர்க்கொருவர்
பலகதி வரக்கடவியும்
சேயுயரும் மாடநிலை தெற்றியி னிருந்தவர்
தெளிந்துளமகிழ்ந்து நவைதீர்
வாயுகதி யல்லது மனித்தர்கதி யல்லவென
வல்லன புரிந்தன ரரோ. 3

[வீமனும் துரியோதனனும் மலைதல்]

ஒத்தவலி யோர்வலியு மொத்ததிற லோர்திறலு
மொத்தவினை யோர் வினையும் வன்
சித்தமனன் மூளுமுக வம்புயம லர்ந்தரசன்
மகனுமனி லன்சிறுவனுங்
கைத்தலம மர்ந்தகதை கொண்டெதிர்ந டந்தனர்
களிப்புடனிரண்டு தறுகண்
மத்தகயம் வேரொடுமராமர மெடுத்தமர்
மலைந்தனைய கோலமறவோர். 4

[அசுவத்தாமன் சமாதானம் செய்தல்]

தண்டின்முனை யொன்றினுட னொன்றுரு மெறிந்தனைய
தன்மையோ டடற்றவிலகு
மண்டல விதங்களும் வியப்புற நடந்தபின்
மரத்தொடு செயிர்த்து வயிரங்
கொண்டிருவரும் பொருதலுன்னு பொழுதத்தவர் மெய்
குறிப்பினை யிமைப்பளவையிற்
கண்டு குருவின்சிறுவன் அன்பொடு விலக்கினன்
கல்விகரை கண்ட பெரியோன். 5

[அர்ச்சுனன் தன் திறமையைக் காட்டல்]

மீனமக வான்மதலை யாயுதபு ரோகிதன்
விலோசன முணர்ந்தவன் மலர்த்
தாளின்முடி வைத்தெதிர்த ரித்தன னிடங்கை வரி
சாபகவ சத்தின னிபம்
யாளியர வங்கருடன் வன்னிசலி லந்திமிர
மிரவியிவை யே கடவுளாம்
வாளியின் விநோதமுற வெய்தனனி ருந்தமுடி
மன்னவர் மதிக்கும் வகையே. 6

[கர்ணன் தன் திறமையைக் காட்டல்]

மங்கல்சூழ்வி மானமுன்றின் மஞ்சகோடி திகழவே
அங்கண்வான மீனமென்ன வவையிருந்த வரசர்முன்
சிங்கமென்னு மாறெழுந்து சிங்கநாத முஞ்செய்தான்
பங்கசாத பரிமளங்கொள் பானுராச சூனுவே. 7

சிந்தையன்பு டன்பணிந்து தேசிகேச னருளினால்
வந்துவெஞ்ச ராசனம்வ ணக்கிவீர வாளியால்
இந்திரன்கு மாரன்முன்னி யாதியாதி யற்றினான்
அந்தவந்த நிலையுமேவு மவனின்விஞ்ச லாயினான். 8

[சபையின் தன்மை]

கணைகள்போ யிலக்கடைந்த வுறுதிகண்டு கண்களித்(து)
இணையில்வீர னென்றதன்றி ருந்தராச மண்டலம்
பிணையன்மாலை விசயனண்ணல் பெற்றிபற்றி நாணினான்
துணைவரோடு வரிகழற்சு யோதனன்க ளிக்கவே. 9

[கர்ணன் தன்னுடன் எதிர்க்க அர்ச்சுனனை அழைத்தல்]

மருவநின் றருக்கன்மைந்தன் வானநாடன் மகனைநாம்
இருவருந் தனுக்கொள்போரி யற்றவம்மி னென்றலுங்
குருகுலந் தழைக்கவந்த குமரனன்பு கூரவே
யுருகிநன் றெனத்தழீஇ யுகந்தளந்த ருக்கினான். 10

[அர்ச்சுனனும் கர்ணனனும் கலாய்த்தல்]

அனந்தரம் பொரற்குநீகொ லந்தரம்மெ னக்கெனத்
தனஞ்சயன் செயிர்த்தல்கண்டு தபனன்மைந்தன் மீளவும்
முனைந்த போரின் முடிதுணித்துன் முகசரோரு கத்தினாற்
சினந்தணிந் தரங்கபூசை செய்வனென்று சீறினான். 11

[கிருபாசாரியர் வார்த்தையும் துரியோதனன் மறுப்பும்]

சூதன்மைந்தன் வேலையேழு சூழுமேதி னிக்கெலா
நாதன்மைந்த னுடன்வெகுண்டு நவிலுதற்கு நண்ணுமோ
ஏதமுண்டு சாலவென்ன ராசராச னிகலியக்
கோதமன்ற னக்குளங்கொ திக்குமாறு கூறுவான். 12

[துரியோதனன் வார்த்தை]

அரிபிறந்த(து) அன்றுதூணி லரனும்வேயி லாயினான்
பரவையுண்ட முனியுமிப்ப ரத்துவாசன் மைந்தனும்
ஒருவயின்கண் முன்பிறந்த(து) ஒண்சரத்தி னல்லவோ
அரியவென்றி முருகவேளு மடிகளும்பி றந்ததே. 13

[துரியோதனன் கர்ணனுக்கு முடிசூட்டுதல்]

என்றுநல்ல வுரையெடுத்தி யம்பியேனை யிழிவினோ(டு)
ஒன்றிநின்ற வாடகத்தை யோடவைக்கு மாறுபோல்
அன்றுசூதன் மதலைதன்னை யங்கராச னாக்கினான்
மின்றயங்கு முடிகவித்து வேந்தெலாம் வியக்கவே. 14

[கர்ணனை அரசனாக்குதல்]

தானிருந்த வரிமுகஞ்செய் தாள்சுமந்த தவசின்மேல்
ஊனிருந்த படையினானை யுடனிருத்தி வண்டுசூழ்
தேனிருந்த மாலைவாகு சிகரமீது தெண்டிரைக்
கானிருந்த மண்டலங் கருத்தினா லிருத்தினான். 15

—வில்லிபுத்தூரர்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. விளையாட்டு அரங்கத்தில் எவரெவர் வந்திருந்தனர்? அச் சபையின் தோற்றம் எதுபோன்றிருந்தது? 4-வது செய்யுளில் வீமனையும் துரியோதனனையும் குறிக்கும் சொற்களெவை? அவர்கள் மலைந்தது எதை யொத்திருந்தது?

2 அர்ச்சுனன் எய்த அஸ்திரங்கள் எவையெவை? அவற்றை விநோதமுற எய்தது எவ்வாறு?

3. விசயன் நாணிய காரணம் யாது?

4. 11-வது செய்யுளில் கர்ணன் கூறியது யாது? அப்பொழுது கிருபாசாரியர் என்ன உரைத்தார்?

5. அரி, அரன், அகஸ்தியர், துரோணர், முருகவேள், கிருபாசாரியர்—இவர்கள் எங்ஙனங்குப் பிறந்தனர்? வரலாறு யாது?

6. கர்ணனுக்குச் சமத்துவம் அளிக்கும்பொருட்டுத் துரியோதனன் யாது செய்தனன்? அதற்குக் கவி கூறும் உவமானம் யாது?

(ii) மொழிப் பயிற்சி

1. சிரம நிலை, சரித் குரு, சனபதம், மராமரம், இபம், வாசி, தெற்றி, நவை, அநிலன், மறவோர், மலைதல், உரும், உடற்றல், செயிர்த்து, மீளி, வன்னி, சலிலம், மங்குல், பிணையல், அருக்கன், அநந்தரம், அந்தரம், சூதன், வேலை, மேதினி, ஏதம், இகலி, வேய், பாவை, சரம், ஆடகம்—பொருள் காண்க.

2. சிலைக்குரு, குருகுல குமரர், சரிற் புதல்வன், அறக்கடவுள், கோதமன், சூதன் மைந்தன், பரத்துவாசன் மைந்தன், கலைப் புரவி யூர்திரு,—இவை யாரைக் குறிப்பன? எதனால்?

3. மஞ்சவிதம், முக அம்புயம், மத்தகயம், விலோசனம், சாப கவசத்தினன், பங்கசாத பரிமளம், பானுராச சூனு, தேசிகேசன், சராசனன், தபனன், முக சரோருகம், வாகு சிகரம்—இவ் வட சொற்களுக்கேற்ற தமிழ்ச் சொற்கள் கூறுக.

(iii) வில்லிபுத்தூரார் வரலாற்றைப் படித்து, அவரது காலம் முதலிய குறிப்புக்களை எழுதிக்கொள்ளவும். இவர் வட சொற்களைத் தாராளமாக உபயோகித்திருப்பதைக் காண்க.

3. கம்பராமாயணம்

இராமரும் தாயரும்

[இப்பகுதியில் ததும்பும் சோக ரசமும், வீர ரசமும் உய்த்துணர்ந்து அனுபவிக்கற் பாலன. கம்பரது கவித்திறனும் கவி நயமும் பாடல் தோறும் ஆய்ந்து இன்புறத் தக்கவை. இவை உள்ளத்திற்கு விருந் தாம் தன்மைய.]

[இராமர் கைகேசியிடஞ் செல்லுதல்]

ஆயன நிகழும் வேலை
அண்ணலும் அயர்ந்து தேருத்
தூயவன் இருந்த சூழல்
துருவினன் வருதல் நோக்கி,
'நாயகன் உரையான் வாயால்
நானிது பகர்வேன்' என்னுத்
தாயென நினைவான் முன்னே
கூற்றெனத் தமியள் வந்தாள். 1

[இராமர் கைகேசியை வணங்கி நிற்றல்]

வந்தவள் தன்னைச் சென்னி
மண்ணுற வணங்கி, வாய்த்த
சிந்துரப் பவளச் செவ்வாய்
செங்கையிற் புதைத்து, மற்றைச்
சுந்தரத் தடக்கை தானை
மடக்குறத் துவண்டு நின்றான்;
அந்திவந் தடைந்த தாயைக்
கண்ட ஆன் கன்றின் அன்னான். 2

[கைகேசி இராமருக்குக் கூறுதல்]

நின்றவன் றன்னை நோக்கி,
இரும்பினுன் இயைந்த நெஞ்சின்
கொன்றுழல் கூற்றம் என்னும்
பெயரினிற் கொடுமை பூண்டாள்

'இன்றெனக் குணர்த்த லாவ
 தேயதே என்னின் ஆகும்
ஒன்றுனக் குந்தை, மைந்த!
 உரைப்பதோர் உரையுண்' டென்றாள். 3

[இராமர் பணியிட வேண்டுதல்]

'எந்தையே ஏவ, நீரே
 உரைசெய இயைவ துண்டேல்,
உய்ந்தனன் அடியேன்; என்னிற்
 பிறந்தவர் உளரோ! வாழி
வந்ததென் தவத்தின் ஆய
 வருபயன் மற்றொன் றுண்டோ?
தந்தையும் தாயும் நீரே;
 தலைநின்றேன், பணிமின்' என்றான். 4

[கைகேசி, தசரதரிட்ட கட்டளையாக இராமருக்குக் கூறுதல்]

' "ஆழிசூழ் உலகம் எல்லாம்
 பரதனே ஆள நீபோய்த்
தாழிருஞ் சடைகள் தாங்கித்
 தாங்கருந் தவமேற் கொண்டு
பூழிவெங் கானம் நண்ணிப்
 புண்ணியத் துறைகள் ஆடி
ஏழிரண் டாண்டில் வா" என்
 றியம்பினன் அரசன்', என்றாள். 5

[இராமர் கொண்ட முகமலர்ச்சி]

இப்பொழு தெம்ம னோரால் இயம்புதற் கெளிதே? யாரும்
செப்பருங் குணத்தி ராமன் திருமுகச் செவ்வி நோக்கின்,
ஒப்பதே முன்பு பின்பவ் வாசகம் உணரக் கேட்ட
அப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா! 6

[இராமர் கைகேசியிடம் விடை கொள்ளுதல்]

"மன்னவன் பணியன் றாகில்
நும்பணி மறுப்பனோ? என்
பின்னவன் பெற்ற செல்வம்
அடியனேன் பெற்ற தன்றோ?
என்னினி உறுதி அப்பால்?
இப்பணி தலைமேற் கொண்டேன்;
மின்னொளிர் கானகம் இன்றே
போகின்றேன்; விடையுங் கொண்டேன்." 7

[இராமர் தம் தாயிடஞ் செல்லுதல்]

என்று கொண் டினைய கூறி அடியிணை இறைஞ்சி மீட்டும்
தன்றுணைத் தாதை பாதம் அத்திசை நோக்கித் தாழ்ந்து
பொன்றிணி போதினாளும் பூமியும் புலம்பி நையக்
குன்றினும் உயர்ந்த தோளான் கோசலை கோயில் புக்கான். 8

[கோசலை இராமரை வினவுதல்]

'புனைந்திலன் மவுலி குஞ்சி
மஞ்சனப் புனித நீரால்
நனைந்திலன் என்கொல்!' என்னும்
ஐயத்தாள், நளின பாதம்
வனைந்தபொற் கழற்கால் வீரன்
வணங்கலும் குழைந்து வாழ்த்தி,
'நினைந்ததென் இடையூ றுண்டோ
நெடுமுடி புனைதற்' கென்றாள். 9

[இராமர், கோசலைக்கு அறிவித்தல்]

மங்கை அம்மொழி கூறலும், மானவன்
செங்கை கூப்பி, 'நின் காதல் திருமகன்
பங்கம் இல்குணத் தெம்பி பரதனே
துங்க மாமுடி சூடுகின் றான்' என்றான். 10

[கோசலை கூறுதல்]

'முறைமை அன்றென்ப தொன்றுண்டு; மும்மையின்
நிறைகு ணத்தவன் நின்னினும் நல்லனால்;
குறைவி லென்' எனக் கூறினள் நால்வர்க்கும்
மறுவில் அன்பினில் வேற்றுமை மாற்றினாள். 11

என்று பின்னரும், 'மன்னவன் ஏவிய
தன்றெ னாமை மகனே, உனக் கறன்;
நன்று நும்பிக்கு நானிலம் நீ கொடுத்
தொன்றி வாழுதி ஊழி பல' என்றாள். 12

[இராமர், தந்தை கட்டளையைத் தாய்க்குத் தெரிவித்தல்]

தாயுரைத்த சொல் கேட்டுத் தழைக்கின்ற
தூய சிந்தை யத் தோமில் குணத்தினான்
'நாயகன் எனை நன்னெறி உய்ப்பதற்
கேய துண்டோர் பணி' என்றியம்பினான். 13

'ஈண்டு ரைத்த பணியென்னை?' என்றவட்
''காண்டோ ரேழினோ டேழ் அகன் கானிடை
மாண்ட மாதவ ரோடுடன் வைகிப்பின்
மீண்டு நீவரல் வேண்டும்'' என்றாள்' என்றான். 14

[அரசன் கட்டளையைக் கேட்ட கோசலை வருந்துதல்]

ஆங்கவ் வாசகம் என்னும் அனல் குழை
தூங்கு தன்செவி யில்தொட ராமுனம்
ஏங்கி னாள் ; இளைத் தாள் ; திகைத் தாள்மனம்
வீங்கி னாள்; விம்மி னாள் ; விழுந் தாளரோ. 15

'நன்று மன்னன் கருணை!' எனா நகும்;
நின்ற மைந்தனை நோக்கி, 'நெடுஞ்சுரத்
தென்று போவ?' தெனவெழும்; இன்னுயிர்
பொன்றும் போதுற்ற துற்றது போலுமே. 16

‘அறமெனக்கிலை யோ!’ எனும்; ‘ஆவிநைந்
திறவி டுத்ததென்? தெய்வதங் காள்!’ எனும்;
பிறவு ரைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினள். 17

[இராமர், கோசலையைத் தேற்றுதல்]

இத்தி றத்தின் இடருறு வாள்தனைக்
கைத்த லத்தின் எடுத் ‘தருங் கற்பினோய்!
பொய்த்தி றத்தினன் ஆக்குதி யோ, புகல்
மெய்த்தி றத்து நம் வேந்தனை நீ’ என்றான் 18

‘சிறந்த தம்பி திருவுற, எந்தையை
மறந்தும் பொய்யிலன் ஆக்கி, வனத்திடை
உறைந்து தீரும் உறுதிபெற் றேன்; இதின்
பிறந்தி யான்பெறும் பேறென்ப தியாவதே ! 19

‘விண்ணும் மண்ணும் இவ்வேலையும் மற்றும்வே
றெண்ணும் பூதம் எலாமிறந் தேகினும்,
அண்ணல் ஏவல் மறுக்க அடியனேற்
கொண்ணு மோ ? இதற் குள்ளழி யேல்’ என்றான். 20

[கோசலை தன்னையும் அழைத்துச் செல்ல வேண்டுதல்]

‘ஆகின் ஐய, அரசன்றன் ஆணையால்
ஏகல் என்ப தியானும் உரைக்கிலேன்;
சாக லாவுயிர் தாங்கவல் லேனையும்
போகின் நின்னொடுங் கொண்டனைபோ’ கென்றாள். 21

[இராமர் கோசலைக்கு மேலும் தேறுதல் கூறல்]

‘என்னை நீங்கி, இடர்க்கடல் வைகுறும்
மன்னர் மன்னனை வற்புறுத் தாதுடன்
துன்னு கானம் தொடரத் துணிவதோ !
அன்னையே! அறம் பார்க்கிலை யாம்’ என்றான். 22

'சித்தம் நீ திகைக் கின்றதென் ? தேவரும்
ஒத்த மாதவஞ் செய்துயர்ந் தாரன்றே ?
எத்த னைக்குள யாண்டுகள் ? ஈண்டவை
பத்தும் நாலும் பகலலவோ?' என்றான். 23

[இராமர் கூறியவற்றைக் கேட்ட கோசலை தன்னுள் எண்ணுதல்]

இத்தி றத்த எனைப்பல வாசகம்
உய்த்து ரைத்த மகனுரை யுட்கொளா,
'எத்தி றத்தும் இறக்கும் இந் நா'ளென
மெய்த்தி றத்து விளங்கிழை உன்னுவாள். 24

[கானகஞ் செல்லுவாராய் வந்த இராமனையும் இலக்குவனையும் கண்ட சுமித்திரை வருந்தி இலக்குவனுக்குக் கூறும் அறிவுரை]

'ஆகாத தன்றால் உனக் கவ்வனம் இவ்வ யோத்தி,
மாகாதல் இராமன் அம் மன்னவன், வையம் ஈந்தும்
போகாவுயிர்த் தாயர்நம் பூங்குழற் சீதை என்றே
ஏகாய் ; இனி இவ்வயின் நிற்றலும் ஏதம்' என்றாள். 25

பின்னும் பகர்வாள் 'மகனே, இவன் பின்செல் ; தம்பி
என்னும் படியன் றடியாரினின் ஏவல் செய்தி ;
மன்னும் நகர்க் கே இவன் வந்திடின் வா ; அ தன்றேல்
முன்னம் முடி' என்றனள் வார் விழி சோர நின்றாள். 26

[இராமனும் இலக்குவனும், சுமித்திரையினிடம் விடை பெற்றுப் புறப்படுதல்]

இருவரும் தொழுதனர் இரண்டு கன்றொரீஇ
வெருவரும் ஆவினில் தாயும் விம்மினள் ;
பொருவருங் குமரரும் போயி னார், புறம்
திருவரைத் துகிலொரீஇ இச் சீரை சாத்தியே. 27

—கம்பர்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. இராமர், தாயர்பால் தமது (i) பணிவையும் (ii) அன்பையும் எம்முறைகளில் காட்டுகிறார் ?

2. பரதனது உயர் குணத்தை இராமன் எவ்வாறு நவில்கின்றான் ? கோசலை எவ்வாறு புகழ்கின்றாள் ?

3. இராமன் கானகம் புகும் செய்தி கோசலையின் செவிப்பட்டதும் அவள் எய்திய நிலையைச் செய்யுள் தழுவி விவரிக்க.

4. இராமனுடன் கோசலை வருவதாக வற்புறுத்தியபோது அவட்கு இராமன் எவ்வாறு தேறுதல் கூறுகின்றான் ?

5. சுமத்திரை இலக்குவனுக்குக் கூறும் அறிவுரை யாது ?

(ii) மொழிப் பயிற்சி

சந்தர்ப்பம்பற்றி, பின்வரும் சொற்றொடரின் நயத்தை எடுத்துரைக்க : 1. கூற்றென வந்தாள். 2. அந்தி வந்தடைந்த....... ஆன் கன்றின் அன்னான். 3. இரும்பினான் இயைந்தநெஞ்சின். 4. என்னிற் பிறந்தவர் உளரோ. 5. அப்போதலர்ந்த செந்தாமரை யினை வென்றதம்மா? 6. பூமியின் புலம்பி நைப. 7. "நன்று மன்னன் கருணை!" எனாநகும். 8. "பத்தும் நாலும் பகலலவோ" என்றான். 9. அதன் மேல் முன்னம் முடி. 10. இனி இவ்வயின் நிற்றலும் ஏதம். 11. இரண்டு கன்றொரீஇ வெருவரும் ஆவின் தாயும் விம்மினள்.

(iii) பிற நூல் ஆராய்ச்சி

1. கம்பர்—இவரது காலம், இயற்றிய வேறு நூல்கள், பெயர்க் காரணம் அறிக. இவரது பெருமையைக் கூறும் இரு பழமொழிகள் எழுதுக.

2. கம்ப ராமாயணத்துக்கு முதனூல் யாது? கம்பரது இந்நூல் எவ்விதப் பாக்களால் அமைந்தது? வழிநூல், சார்புநூல் உதாரணங்களால் விளக்குக.

(iv) இலக்கணம்

27-வது பாட்டில் இருவ, வெருவ, பொருவ, திருவ என்பவற்றுள், ஒவ்வொரு அடியிலும் முதலெழுத்துக்கு அடுத்த எழுத்துக்கள் சில, ஒன்றிவருவது எதுகை எனப்படும். இவ்வாறே பிற செய்யுட்களிலும் எதுகை நோக்குக.

4. பெரிய புராணம்

மெய்ப்பொருள் நாயனர்

சேதிநன் ஞட்டு நீடு திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாக ரன்பின் வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை விளங்கிட மேன்மை பூண்டு
காதலா லீசர்க் கன்பர் கருத்தறிந் தேவல் செய்வார். 1

மங்கையைப் பாக மாக வைத்தவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி யேழிசைப் பாட லாடல்
பொங்கிய சிறப்பின் மல்கப் போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கணு யகருக் கன்பர் தாளலாற் சார்பொன் றில்லார். 2

இன்னவா ருெழுகு நாளில்
இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையா லமர்மேற் கொண்டு
பொன்னணி யோடை யானை
பொருபரி காலாள் மற்றும்
பன்முறை யிழந்து தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனன். 3

இப்படி யிழந்த மாற்ருன்
இகலினுல் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தன் சீலம்
அறிந்து வெண்ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே
யற்றத்தில் வெல்வா ஞகச்
செப்பரு நிலைமை யெண்ணித்
திருக்கோவ லூரிற் சேர்வான்.

மெய்யெலா நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த
புத்தகக் கவளி யேந்தி
மைபொதி விளக்கே யென்ன
மனத்தினுட் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு
புகுந்தனன் முத்தி நாதன். 5

கண்டுசென் றணையும் போது
கதுமென விழுந்து தேவி
வண்டலர் மாலை யானை யெழுப்பிட
வுணர்ந்து மன்னன்
அண்டர்நா யகனார் தொண்ட
ராமெனக் குவித்த செங்கை
கொண்டிழிந் தெதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று. 6

மங்கலம் பெருக மற்றென்
வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற
தென்கொலோ வென்று கூற
உங்கணா யகனார் முன்னம்
உரைத்தவா கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தே னியம்ப வென்றான். 7

பேறெனக் கிதன்மே லுண்டோ பிரானருள் செய்த விந்த
மாறிலா கமத்தை வாசித் தருள்செய வேண்டு மென்ன
நாறுபூங் கோதை மாதுந் தவிரவே நானு நீயும் 8
வேறிடத் திருக்க வேண்டு மென்றவன் விளம்ப வேந்தன்.

திருமக ளென்ன நின்ற தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப் புரத்திடைப் போக வேவித்
தருதவ வேடத் தானை தவிசின் மேலிருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி யினியருள்செய்யு மென்ருர். 9

கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணக்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்தவப் பரிசே செய்ய
மெய்த்தவ வேடமே மெய்ப்
பொருளெனத் தொழுது வென்ருர். 10

மறைத்தவன் புகுந்த போதே மனமங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட்கூடி வாளினை லெறிய லுற்ருன்
நிறைத்தசெங் குருதி சோர வீழ்கின்ருர் நீண்ட கையால்
தறைப்படு மளவில் தத்தா நமரெனத் தடுத்துவீழ்ந்தார். 11

வேதனை யெய்தி வீழ்ந்த வேந்தரால் விலக்கப் பட்ட
தாதனுந் தத்தன் ருனுந் தலையினல் வணங்கித் தாங்கி
யாதுநான் செய்கே னென்ன வெம்பிரா னடியார் போக
மீதிடை விலக்கா வண்ணங் கொண்டுபோய்விடுநீ யென்ருர்.

அத்திற மறிந்தா ரெல்லாம்
அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் றன்னைக் கொல்வோ
மெனப்புடை சூழ்ந்த போது
தத்தனு மவரை யெல்லாந்
தடுத்துடன் கொண்டு போவான்
இத்தவன் போகப் பெற்ற
திறைவன தாணை யென்ருன். 13

5. சிலப்பதிகாரம்

வழக்குரை காதை

[இப் பழங்காப்பியப் பகுதியில் கண்ணகியின் வீர உரையும், அஞ்சாது தன் வழக்கை எடுத்துரைத்த திறனும், அரசனது செங்கோல் முறையும், அரசியின் கற்பின் மாண்பும், அழகுபெற அமைத்திருப்பது போற்றத் தக்கதே. இது நாடக முறையில் இயன்றிருப்பது நோக்கத் தகும்.]

[பாண்டியன் அரியாசனத்திருத்தல்]

கோப்பெருந் தேவிசென்று, தன்
தீக்கனாத் திறம் உரைப்ப,
அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்
திருவீழ் மார்பின் தென்னவர் கோவே; இப்பால்

[கண்ணகி வந்து வாயிற் காவலனை நோக்கிக் கூறுதல்]

கண்ணகி :

வாயி லோயே! வாயி லோயே!
அறி(வு) அறை போகிய பொறிஅறு நெஞ்சத்(து)
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
"இணை அரிச் சிலம்(பு) ஒன்(று) ஏந்திய கையள்
கணவனை இழந்தாள் கடைஅகத் தாள்" என்(று)
அறிவிப் பாயே! அறிவிப் பாயே! என,

[வாயிலோன் அரசனை அடைந்து கூறல்]

வாயிலோன் :

வாழி! எம் கொற்கை வேந்தே வாழி!
தென் அம் பொருப்பில் தலைவ வாழி!
செழிய வாழி! தென்னவ வாழி!
பழியொடு படராப் பஞ்சவ வாழி!

* * *

வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்;
* * தாருகன்
பேர்உரம் கிழித்த பெண்ணும் அல்லள்;

மற்றவன் கொண்டு போன
வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித்
தீதிலா நெறியில் விட்ட
சொற்றிறங் கேட்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவன் முன்பு சென்றான்
கோமகன் குறிப்பில் நின்றான். 14

சென்றடி வணங்கி நின்று செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி விட்டன னென்று கூற
இன்றெனக் கையன் செய்த தியார் செய்யவல்லாரென்று
நின்றவன் றன்னை நோக்கி நிறைபெருங் கருணை கூர்ந்தார்.

அரசிய லாயத் தார்க்கும் அழிவுறுங் காத லார்க்கும்
விரவிய செய்கை யெல்லாம் விளம்புவார் விதியி னாலே
பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீ ரென்று
புரவலர் மன்றுளாடும் பூங்கழல் சிந்தை செய்தார். 16

தொண்டனார்க் கிமயப் பாவை துணைவனா ரவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா அருட்கழ னீழல் சேரக்
கொண்டவா றிடைய றாமற் கும்பிடுங் கொள்கை யீந்தார். 17

—சேக்கிழார் சுவாமிகள்

பயிற்சி

1. நாயனாரின் நாடு, ஊர், பதவி யாவை?
2. அவரது நற்குணங்கள் யாவை?
3. இவருக்கு மெய்ப்பொருள் நாயனார் என்று பெயர் வழங்கியது எதனால்? இதை யுணர்த்தும் பாடல் யாது?
4. முத்திநாதன் புனைந்த பொய்த் தவ வேடத்தை விவரிக்க. அரசனை வெல்ல அவன் செய்த வஞ்சகச் செயல் யாது?
5. இன்னாசெய்தவனுக்கும் நாயனார் யாது உதவிசெய்வித்தனர்?
6. தத்தனின் எசமான விசுவாசம் எவ்விதம் புலப்படுகிறது?
7. நாயனார் சோர்கின்ற ஆவி தாங்கியது எதற்காக? அவர் அருகிலிருந்தவர்க்குக் கூறிய அறவுரை யாது.
8. 'வென்றார்', அருட்கழல் நீழல் சேர்ந்தார், பெரிய புராணம்,—விளக்குக.
9. மெய்ப்பொருள் நாயனார் வரலாற்றை முத்திநாதன் கூறியதுபோல் ஒரு பக்கத்தில் எழுதுக.

செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொற்றொழில் சிலம்பொன்(று) ஏந்திய கையள்,
கணவனை யிழந்தாள் கடை அகத்தாளே;
கணவனை யிழந்தாள் கடை அகத்தாளே; என,

அரசன் :

வருக! மற்றவள் தருக ஈங்(கு); என,
[வாயில் வந்து கோயில் காட்டக்,
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி.]
நீர்வார் கண்ணை எம்முன் வந்தோய்!
யாரை யோ? நீமடக்கொடி யோய்! என,

கண்ணகி :

தேரா மன்னா! செப்புவது உடையேன்;
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்உறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே; அவ்வூர்
மாசாத்து வாணிகன் மகனை ஆகி,
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா! நின்னகர்ப் புகுந்திங்கு,
என்காற் சிலம்பு பகர்தல்வேண்டி, நின்பால்,
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்ப தென் பெயரே; என,

அரசன் :

பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங்கோல் அன்று;
வெள்வேல் கொற்றங் காண்! என ஒள்ளிழை

கண்ணகி :

நற்றிறம் படராக் கொற்கை வேந்தே!
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே; என,

அரசன் :

தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி;
யாம்உடைச் சிலம்பு முத்துடை அரியே;

[தருகெனத் தந்து தான்முன் வைப்பக்,
கண்ணகி அணிமணிக் காற்சிலம்(பு) உடைப்ப
மன்னவன்வாய்முதல்தெறித்ததுமணியே.மணிகண்டு
தாழ்ந்தகுடையன், தளர்ந்த செங்கோலன்]
"பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென்புலம் காவல்
என்முதற் பிழைத்தது; கெடுகவென் ஆயுள்" என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே; தென்னவன்
கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கிக்
"கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில்" என்(று)
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

வெண்பா

மெய்யிற் பொடியும், விரித்த கருங்குழலும்,
கையில் தனிச்சிலம்பும், கண்ணீரும்,—வையைக்கோன்
கண்டளவே தோற்றான்; அக்காரிகைதன் சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்.

—இளங்கோவடிகள்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. நீயார் என்று கேட்ட அரசனுக்குக் கண்ணகி தன் ஊரின் பெருமையை எங்ஙனம் கூறுகிறாள்? அவ்வாறு கூறியதின் உட்கருத்தை நன்கு விளக்குக. கண்ணகி தன்னை யாரென்று கூறினாள்?

2. கோவலன் கள்வன் அல்லனென்பது எவ்வாறு தெளிவிக்கப்பட்டது?

3. அரசன் தனது செங்கோன்மையை எவ்வாறு நாட்டினான்?

4. கோப்பெருந்தேவியின் கற்புடைமை எங்ஙனம் விளக்கப்படுகிறது?

(ii) பிற நூல் ஆராய்ச்சி

1. அரிமான், அமளி, அறைபோகிய, இறைமுறை பிழைத்தல், இணையரிச் சிலம்பு, பொருப்பு, கோப்பெருந்தேவி, செயிர்த்தனள், ஆழி, வெள்வேல், கொற்றம், மன்பதை—பொருள் காண்க.

2. 'புள்உறு புண்கண் தீர்த்தோன்'
'புதல்வனை ஆழியின் மடித்தோன்'-கதைகளை யறிக.

3 ஐம்பெருங் காப்பியங்கள் யாவை?
சிலப்பதிகாரம்,—பெயர்க்காரணம் அறிக.

4. இளங்கோவடிகளின் வரலாற்றை ஒருபக்கத்தில் எழுதுக.

IV. பல் சுவை:

i. வருணனை

மருதம்

சேலுண்ட ஒண்கணாரின் திரிகின்ற செங்காலன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய மழலைப் பிள்ளை
காலுண்ட சேற்றுமேதி கன்றுள்ளிக் கனைப்பச் சோர்ந்து
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதா ராட்டும் பண்ணை.

—கம்பர்

தென்றல்

மங்கல மங்கையராய் மன்னவர் கன்னியராய்
மைந்தர் வயிற்றினராய் வாழ்வினராயதிலே
திங்கள் நிறைந்து வரும் சேயிழையார் நடைபோல்
தென்றலசைந்து வரும் தென்றமிழ் நாடுடையாய்!

*   *   *

—தனிச்செய்யுள்

சந்திரோதயம்

கானெலா மலர்ந்த முல்லை ககனமீ தெழுந்த தென்ன
வானெலாம் வயங்கு தாரை நிரை நிரை மலர்ந்து தோன்ற
வேனிலான் விழவின் வைத்தவெள்ளி வெண்கும்பமென்னத்
தூநிலா மதியம் வந்து குணதிசைத் தோன்றிற் றம்மா.

—வில்லிபுத்தூரார்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. மருத நிலமாவது யாது? அன்னப் பறவைக் குஞ்சுகளின் ஆகாரம், தொட்டில் யாவை?

தென்றலின் நடை எவர் நடைக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது? பாட்டில் கூறியுள்ள மாதர் மெதுவாக நடத்தற்கு ஆறு காரணங்கள் யாவை?

3. நட்சத்திரங்கள் தோன்றியது எதுபோன்றிருந்தது? சந்திரோதயம் எது போன்றிருந்தது? உவமையின் பொருத்தத்தை விவரிக்க இவ்வருணனைகளில் கவியின் கற்பனை சக்தியை ஓர்க.

(ii) மொழிப் பயிற்சி

1. அகராதியிற் பொருள் காண்க: சேல், நளினம், பள்ளி, மேதி, உள்ளி, பண்ணை, ககனம், குணதிசை, வேனிலான்.

2. தென்றமிழ் நாடுடையாய், யாரைக்குறிக்கும்? காலுண்ட சேற்று மேதி,—இதில் சொற்களை எவ்விதம் மாற்றினால் நேரிய பொருள் கிடைக்கும்?

இளவேனிற் காலம்

கள்ளுயிர்த் தலரு முல்லைக் கடிமுகை முறுவல் தோன்ற,
வள்ளிதழ்க் குவளை யுண்கண் மலர்ந்துமாந்தளிர்மென்கையாக்
கிள்ளை மென் குதலை சாற்றிக் கிளரொளி வண்டு பாணத்
தெள்விளி பாட வேனிற் றிருமகள் சிறந்தா ளன்றே.

—அதிவீரராம பாண்டியன்

ஆற்று வரி

உழவர்ஓதை,மதகோதை, உடைநீர்ஓதை,தண்பதங்கொள்
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்தாய் வாழி காவேரி!
விழவர் ஓதை சிறந்தார்ப்ப நடந்த தெல்லாம் வாய் காவா
மழவர் ஓதை வளவன் தன் வளனே வாழி காவேரி! 1

பூவார் சோலை மயில் ஆடப் புரிந்து குயில்க ளிசை பாடக்
காமர் மாலை அருகு அசைய நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகுஅசைய நடந்தவெல்லாம்நின்கணவன்
நாம வேலின் திறம்கண்டே அறிந்தேன் வாழி காவேரி! 2

இளங்கோவடிகள்

பந்து விளையாட்டு

வைத்த பந் தெடுத்தலும், மாலையுட் கரத்தலும்,
கைத்தலத்தின் ஓட்டலும், கண்ணி நெற்றி தீட்டலும்,
பத்தியிற் புடைத்தலும், பையரவ் விடைலும்,
இத்திறத்த பந்தினோடு இன்பம் எல்லை இல்லையே.

— திருத்தக்க தேவர்

பயிற்சி

1. வேனில் திருமகளின் பல், கண், கை, சொல்,—இவைகளாகக் கூறப்படும் பொருள்கள் யாவை? இங்குப் பாடகர் யார்?

2. வரிப் பாடல் என்பது யாது? ஆற்றுவரி என்பது யாது? இவ்வாற்று வரியில் கூறப்படும் நான்கு வகை ஓசைகள் யாவை? காவிரி செல்லுஞ் சிறப்பு எங்ஙனம் வர்ணிக்கப்படுகிறது? காவிரிக்கும் சோழனுக்கும் கூறப்படும் இயைபு யாது?

3. பந்து விளையாடுவோரது செய்கைகள் எவையெவை பாட்டில் விவரிக்கப்படுகின்றன?

4. பொருள் விளக்குக—ஓதை; தண்பதம், மழவர்,வளவன், காமர், நாமவேல், கண்ணி, கடிமுகை, வள்ளிதழ், உண்கண், தெள்விளி.

5. 'பந்து விளையாட்டு' பாட்டில் வந்துள்ள தொழிற் பெயர்கள் எவை? உம்மைகள் எப்பொருளின?

திருக்குற்றால மலை வளம்

முழங்குதிரைப் புனலருவி கழங்கெனமுத் தாடும்
முற்றமெங்கும் பரந்துபெண்கள் சிற்றிலைக்கொண் டோடும் [டும்
கிழங்குகிள்ளித் தேனெடுத்து வளம்பாடி நடிப்போம்
கிம்புரியின் கொம்பொடித்து வெம்புதினை யிடிப்போம்
செழுங்குரங்கு தேமாவின் பழங்களைப் பந்தடிக்கும்
தேனலர்சண் பகவாசம் வானுலகில் வெடிக்கும்
வழங்குகொடை மகராசர் குறும்பலவி லீசர்
வளம்பெருகுந் திரிகூட மலையெங்கள் மலையே. 1

ஆடுமர வீனுமணி கோடிவெயி லெறிக்கும்
அம்புலியைக் கவளமென்று தும்பிவழி மறிக்கும்
வேடுவர்கள் தினைவிரைக்கச் சாடுபுனந் தோறும்
விந்தையகில் குங்குமமும் சந்தனமும் நாறும்
காடுதொறு மோடிவரை யாடுகுதி பாயுங்
காகமணு காமலையில் மேகநிரை சாயும்
நீடுபல வீசர்கயி லாசகிரி வாசர்
நிலைதங்குந் திரிகூட மலையெங்கள் மலையே 2

—திரிகூட ராசப்பக் கவிராயர்

பயிற்சி

1. திருக்குற்றால அருவி யாது செய்யும்? குறவர் யாது செய்வர்? குறமாதர் யாது செய்வர்? குரங்கு, யானை, வரையாடு, இவற்றின் விளையாட்டுச்செயல்கள் யாவை? வேடுவர்களது உணவு யாது? தினை இடிக்க எதை உபயோகிக்கிறார்கள்? மலையில் கிடைக்கும் வாசனைப் பொருள்கள் யாவை?

2. பொருள் காண்க:—சிற்றில், கிம்புரி, குறும்பலா, தும்பி.

3. திருக்குற்றால மலைவளத்தை விவரித்து ஒரு பத்திஎழுதுக

4. திரிகூடராசப்பக் கவிராயர் ஊர், காலம், இயற்றிய வேறு நூல்கள் அறிக.

தமிழ் நாடு

வேங்கடமே தென்குமரி வேலையெல்லை நாடு
மென்மைகன்னி இனிமைகனி மேன்மைமொழி நாடு
தேங்கமழும் பொதிகைமலை தென்றலுமிழ் நாடு
திருமலைகள் தொடர்மலைகள் தெய்வமலை நாடு
பாங்குபெறு பாலிபெண்ணை பாவைபொன்னி நாடு
பாவளர்ந்த வைகையொடு பழம்பொருநை நாடு
தேங்குசுனை பளிங்கருவி தெளிசாரல் நாடு
சிற்றோடை கால்பரந்த செய்யதமிழ் நாடே. 1

பொங்குபசுங் காடணிந்து பொழிலுடுத்த நாடு
பூங்கொடியின் செடிவனங்கள் பூண்டுபொலி நாடு
தெங்குபனை கன்னலொடு கமுகுசெறி நாடு
செவ்வாழை மாபலவின் தேன் சொரியு நாடு
தங்கமெனு மூலிகைகள் தாங்கிநிற்கு நாடு
தாயனைய கீரைவகை தாதுவளர் நாடு
செங்கதிர்நெல் வரகுதினைச் செல்வம்விளை நாடு
சீர்பருத்தி நார்மரங்கள் சிறந்ததமிழ் நாடே. 2

—திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை? அதிலுள்ள மலைகள், ஆறுகள் எவை? விளைபொருள்கள் யாவை? பாட்டிலிருந்து எடுத்தெழுதுக. 2. தமிழ் நாட்டின் நிலவளத்தை வருணித்து ஓர் பத்தி யெழுதுக.

(ii) இலக்கணம்

'பாங்கு பெறு பாலி பெண்ணை பாவை பொன்னி நாடு,'—இந்த அடியில் முதற் சீரின் முதல் எழுத்து, ஏனைய சீர் முதலெழுத்தோடு ஒன்றிவருவது மோனை எனப்படும். பிற செய்யுட்களிலும் மோனை காண்க.

ii பிரபந்தம்

புவி யெழுபது

பெற்ற தாயரும் பெறுவித்த தந்தையுஞ் சேயும்
மற்ற யாவரு மக்களென் றெருபெயர் வகிப்பர்?
சொற்ற மக்களுக் கொருதிருத் தாயினைச் சொல்லின்
உற்ற பூமக ளன்றியும் வேறெவ ருண்டால்? 1

வருணன் மஞ்சன மாட்டவும் வானிடை யிரவி
இருணை யாதொளிர் திருவிளக் கேந்தவும் இளங்கால்
தருண மோர்ந்துமுன் விசிறவுந் தழல்புகை தாவும்
கருணை கூர்பவள் காசினி எனமுயர் கன்னி. 2

துயின்று நெஞ்சிடைக் கவலைகள் யாவையுந் துறந்து
முயன்ற பல்லுயிர்க்(கு)இளைப்பினை ஆற்றவும்முளைத்தற்(கு)
இயன்ற ஓரறி வுயிர்களன் கெழவுமிங் கெண்ணிப்
பயின்றபேரிருட்போர்வையைப்போர்ப்பளிப்பார்மான். 3

பழுத்த பேரருள் பார்மகள் பயந்தபல் லுயிருள்
ஒழுக்க மல்லது விழுப்பம்வே றில்லென வுணர்த்தி
அழுக்கு வேடுவர் குரக்கின மரக்கரென் பவரோ
டிழுக்கி லாதுடன் பிறப்பெனக் கலந்தன னியவுள். 4

பெற்ற தாய்திரு மார்பிடை மிதிக்குறிற் பிள்ளை
குற்ற மாய்கிலள் குதுகலிப் புறுவளக் குணம்போற்
சுற்ற மானபல் சீவரு மடிகொடு துவைக்க
நற்ற மாகவுண் மகிழ்ந்தவர்த் தாங்குவ ணம்மோய். 5

—மகா வித்வான் ரா. இராகவையங்கார்

பயிற்சி

1. பூமிதேவியே உண்மையான தாய் என்பது எங்ஙனம் விளக்கப்படுகிறது?

2. பூமியாகிய தெய்வத்திற்கு மஞ்சன மாட்டுதல், தூபதீபம் ஏந்தல், விசிறுதல் முதலிய உபசாரங்கள் எங்ஙனம் நிகழ்கின்றன?

3. இருட் போர்வையைப் பூமி போர்ப்பது எவ்வெந் நன்மைகளைக் கருதி?

4. 'ஒழுக்கமே ஏனையவற்றினும் சிறந்தது' என்னும் நீதி எங்ஙனம் விளக்கப்படுகிறது? இராமர் உடன்பிறப்பாகக் கொண்ட வேடுவர், குரங்கினம், அரக்கர் யாவர்?

5. இந்நூல் போன்ற பழைய நூல்களில் இரண்டு கூறுக.

சேக்கிழார் பிள்ளைத் தமிழ்

[அம்புலிப் பருவம்]

எம்மையினி தாள்பவன் செம்மைமதி யோனீ
    யியற்கையே வெண்மை மதியோன்
எற்றைக்கும் மிகுதண்மை யுடையரோ டுறவு கொளும்
    இயல்பின னெங்களையன்
வெம்மை யுடையவர்களொடு மதிதொறு மதிதொறும்
    விராயுறவு கொள்ளுவோனீ.
வியக்குமொரு தன்மையோ னெங்கள் கிருபாமூர்த்தி
    மெய்ம்மை யொருகால் வளருவாய்
மும்மையுல கறியவொரு காற்றேய்குவாயிவை
    முயங்காதொர் காலொழிகுவாய்
மொழியுநீ யிவை யோர்ந்து மாடவா வென்றது
    முழுக்கருணை காணெஞ் ஞான்றும்
அம்மை யனையார் மருவு குன்றை நகராளியுடன்
    அம்புலீ யாடவாவே
அருளுருத் தேசுபொலி அருண்மொழித் தேவனுடன்
    அம்புலீ யாடவாவே.

—மகா வித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை

பயிற்சி

1. பிள்ளைத் தமிழின் இலக்கணம் யாது? அம்புலிப் பருவத்தில் கூறப்படுவது யாது? சந்திரன் சேக்கிழாரின் தன்மையினின்று எம்மூன்று விதங்களில் மாறுபட்டவனென்று கவி கற்பனையாகக் கூறுகிறார்? சேக்கிழாரின் வேறு பெயர், ஊர்,—பாட்டினின்றும் எழுதுக.

2. சொல் நயம் ஓர்க :—செம்மை மதியோன், வெண்மை மதியோன்; அம்மை யனையார், மருவு.

3. மகா வித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை வரலாற்றைப் படித்தறிக.

சம்பிரதம்

அட்டவரை களையுண்டனந்தனை விழுங்கியே
முண்டத்தையுங் குலுக்கி,
அஞ்சாம லிடியைப் பிடித்துப் பொடித்துமரு
வலர் தமையெலாங் கசக்கி
வட்டமிடு கனலைப் பிழிந்து சாருக்கியே
வயிறுகொள வாய்மடுத்து
வன வேங்கையைச் சிமிழில் வைத்தடைத்துக்கொடு
மகிழ்ந்து விளையாடல் செய்வோம்
துட்ட வெங்கலிதனை வெருட்டவொருவித்தை நீ
சொல்லிக் கொடுத்தல் வேண்டும்
துங்கவக ளங்க சது ரங்க தள விங்கித
சுமங்கள வலங்கிர்தகுணை
வட்டுடை பகட்டு மெழிலுற்றுளமருட்டு மெழில்
மட்டமுகையிட்ட மடவார்
மதன வன்னப் பூமி துதிசெய் பொன்னுச்சாமி
மகராஜ சுக போஜனே !

—மாம்பழக் கவிராயார்

மறம்

விற்றதார் ? கலை பாதியோடு
வனத்திலே யழவிட்டதார் ?
வெஞ்சிறைப் புகவிட்டதார் ?
துகிலுரிய விட்டு விழித்ததார் ?
உற்ற தாரமும் வேண்டுமென்றினி
மன்னர் பெண்கொள வொண்ணுமோ ?
உமியடா மணமென்ற வாய்கிழித்
தோலை காற்றிலுருட்டடா
வெற்றியாகிய முத்தி தந்தருள்
வெங்கைமாநகர் வேடர்யாம் !
விமலரானவர் எமை யடுத்தினி
தெங்கள் மிச்சில் மிசைந்தபின்
பெற்ற வேலர் தமக்கு யாமொரு
பெண் வளர்ப்பினில் ஈந்தனம் ;
பெற்றபிள்ளை கொடுப்பரோவிதென்
பேய் பிடித்திடு தூதரே !

—சிவப்பிரகாச சுவாமிகள்

கையறம்

முன்னாட்டுத் தவமுனியும் சேடனும் வான்
மீகனும் உன் முன்னில்லாமல்
தென்னாட்டு மலையிடத்தும் பாரிடத்தும்
புற்றிடத்தும் சென்று சேர்ந்தார்.
இந்நாட்டுப் புலவர்உனக் கெதிரிலையே
கவிவீர ராகவா! நீ
பொன்னாட்டுப் புலவருடன் வாதுசெய்யப்
போயினையோ புகலுவாயே.

—தனிச் செய்யுள்

பயிற்சி

(i) கருத்துணர்தல்

1. சம்பிரதம், மறம், கையறம,—விளக்கக் குறிப்பு அறிக.

2. அட்டவரையுண்டல், அனந்தனை விழுங்கல், ஏழண்டத்தையுங் குலுக்கல், இடியைப் பிடித்துப் பொடித்தல், மருவலர் தமைக் கசக்கல், கனலைப் பிழிந்து வாய் மடுத்தல், வேங்கையைச் சிமிழில் அடைத்தல்,—ஒவ்வொன்றும், பிரிந்து அரிய செயலாகவும், எளிய செயலாகவும் பொருள் தருவதை விளக்குக.

3. 'எல்லா வித்தையும் எனக்குத் தெரியும்; ஒரு வித்தை மாத்திரம் நீ சொல்லித் தரவேண்டும்' என்பதிலுள்ள நயத்தை எடுத்தெழுதுக.

4. 'பெண்கொள மன்னர் எண்ணுவது தகாது' என்பதற்குக் காட்டும் உதாரணங்கள் நான்கை விவரிக்க.

5 வள்ளியம்மையை முருகவேளுக்குக் கொடுத்தமைக்குக் கூறும் காரணங்கள் யாவை?

6. 'இந் நாட்டுப் புலவர் உனக்கு எதிரிலை'—எனற்குக் கூறும் உதாரணங்கள் மூன்றையும் விவரிக்க. இம்மூன்று பாக்களிலும் கவிகளின் கற்பனைத்திறனை ஓர்க.

(ii) மொழிப் பயிற்சி

1. 'ஓலை காற்றிலுருட்டடா.' 2. 'பெண் வளர்ப்பினில் ஈந்தனம்'—நயத்தை விளக்குக.

(iii) பிற நூல் ஆராய்ச்சி

1. 'மறத்தில் 1, 2, 3, 4, 12, 14, இவ்வரிகளில் குறிப்பிடும் வரலாறுகளை முறையே எந்தெந்த நூல்களால் அறியலாகும்.

2. அபிதானக் குறிப்புக்கள் கேட்டு எழுதிக்கொள்க. மாம் பழக் கவிராயர், பொன்னுச்சாமித்தேவர், கவி வீரராகவ முதலியார்.

iii. பிற வகை

1. அந்தாதி

பிறந்துமொழி பயின்றபின் னெல்லாங் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தே—னிறந்திகழு
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
யெஞ்ஞான்று தீர்ப்ப(து) இடர்.

இடர்களை யாரேனு மெமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனுஞ்—சுடருருவி
லென்பருக் கோலத் தெரியாடு மெம்மானர்க்
கன்பரு தென் னெஞ்சவர்க்கு.

—காரைக்காலம்மையார்

2. விநோதம்

அச்சுதன் அளிப்பன் நிலம், உமதுநே யன்வித்தை
அருளுவன், பலபத்திரன்
அலம் உதவுவன், சமன் பகடீவன், நந்தமக்
கானதோர் எருது முண்டே,
முச்சிர அயிற்படை யினைக் கொழுவ தாக்குவோம்,
மொய்ம்புட னிழுத் திறுக்க
மூந்திய வடக்கயிற் றுடன்மற்றும் நமதன்பர்
மூன்போய் இரந்து கொள்வோம்,
இச்சையுட நமதிளைய தனயனு கியகந்தன்
இனிமையொடு மாடு மேய்ப்பன்
இனியுழுது பயிரிடுதல் நன்று; நன்று; நன்று;
இதைவிட் டிரந்துண்ப தீன மெனவே,
கச்சுமகிழ் மாதுமை யுரைத்திடும் புத்தியைக்
கைக்கொண் டுளத்தில் இதுநற்
காரிய மெனக்கருதி மெத்தக் களித்திடுங்
கண்ணுதல் உமைக் காக்கவே.

—சிவப்பிரகாச சுவாமிகள்

பயிற்சி

1. பொருள் காண்க:—அந்தாதி, மைஞ்ஞான்ற கண்டன், சுடருரு, எரியாடும் எம்மான்.
2. விநோதப் பாவிலுள்ள நயங்களை உய்த்துணர்க.
3. இப்பாட்டு இயற்றப்பட்ட சந்தர்ப்பத்தைக் கேட்டறிக. இதன் கருத்தை வசன நடையில் வரைக.

3. ஒட்டக்கூத்தரும் புகழேந்தியும்

கோரத்துக் கொப்போ கனவட்டம் அம்மானே!
கூறுவதும் காவிரிக்கு வையையோ அம்மானே!
ஆருக்கு வேம்புநிக ராகுமோ அம்மானே!
ஆதித்த னுக்குநிகர் அம்புலியோ அம்மானே!
வீரர்க்குள் வீரனொரு மீனவனோ அம்மானே!
வெற்றிப் புலிக்கொடிக்கு மீன்கொடியோ அம்மானே!
ஊருக் குறந்தைநிகர் கொற்கையோ அம்மானே!
ஒக்குமோ சோணாட்டைப் பாண்டிநா டம்மானே! 1

—ஒட்டக்கூத்தர்

ஒருமுனிவன் நேரியிலோ உரைதெளித்த தம்மானே!
ஒப்பரிய திருவிளையாட் டுறந்தையிலோ அம்மானே!
திருநெடுமா லவதாரஞ் சிறுபுலியோ அம்மானே!
சிவன் முடியி லேறுவதுஞ் செங்கதிரோ அம்மானே!
கரையெதிரே டேறியது காவிரியோ அம்மானே!
கடிப்பகைக்குத் தாதகியங் கண்ணியோ அம்மானே!
பரவைபணிந் ததுஞ்சோழன் பதந்தனையோ அம்மானே!
பாண்டியனார் பராக்கிரமம் பகர்வெளிதோ அம்மானே! 2

—புகழேந்திப் புலவர்

பயிற்சி

(i) **கருத்துணர்தல்**

குலம், குதிரை, ஆறு, மாலை, கொடி, தலைநகர்,—இவை பாண்டியனுக்கு யாவை? சோழனுக்கு யாவை?

பாண்டிய நாட்டு மலை, மதுரை, மீன் கொடி, சந்திர குலம், வைகை, கடல், வேம்பு,—இவை ஒவ்வொன்றும் எவ்வாறு சிறப்புடைத்தென்று கூறப்படுகிறது?

(ii) **பிற நூல் ஆராய்ச்சி**

அருஞ் சொற்களை எடுத்தெழுதிப் பொருள் காண்க. இச்செய்யுள் இயற்றப்பட்ட சந்தர்ப்பத்தைக் கேட்டறிக.

4. பத்து அழகு

சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க்கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்குதா ரணத்த
தாகுதல் நூலிற்கு அழகெனும் பத்தே.

5. பத்துக் குற்றம்

குன்றக் கூறல் மிகைபடக் கூறல்
கூறியது கூறல் மாறுகொளக் கூறல்
வழூஉச்சொற் புணர்த்தல் மயங்க வைத்தல்
வெற்றெனத் தொடுத்தல் மற்றொன்று விரித்தல்
சென்றுதேய்ந் திறுதல் நின்றுபய னின்மை
என்றிவை யீரைங் குற்ற நூற்கே.

—பவணந்தி முனிவர்

பயிற்சி

1. பத்து அழகு, பத்துக் குற்றம்,—ஒவ்வொன்றின் விளக்க வுரை கேட்டறிக.

2. இச் சூத்திரங்கள் எந்த நூலிலுள்ளன?

வாழ்த்து

உலகம் மன்னுக ஓங்குக தண்டமிழ்
கலைகள் நீடுக கைத்தொழில் வெல்லுக
நிலவு நல்லொழுக்கங்கள் நிரம்புக
குலவு வெண்குடைக் கொற்றவன் வாழ்கவே!

—பதிப்பாசிரியர்

உரை நடை

உரை நடைப் பகுதி

1. எனது நோக்கம்

மகாமகோபாத்தியாய டாக்டர். உ. வே. சாமிநாதையரவர்கள்

'உங்களுடைய நோக்கம் என்ன?' என்று கேட்பது எளிது; அதற்கு உண்மையாக விடையளிப்பது அரிது. 'உங்களுடைய நோக்கத்தைப் பற்றிச் சில வரிகள் எழுதுங்கள்' என்று **கலைமகள்** ஆசிரியர் விரும்பினர். 'என்னுடைய நோக்கத்தை அறிந்து உண்டாகும் பயன் என்ன ? பெரியோர்களுடைய நோக்கத்தை யறிந்து அதன்படி நடக்க முயன்ருல் பயன்படும்' என்று எண்ணினேன்; ஆனாலும் அன்பினால் அவர் கேட்பதற்கு ஒருவகையாக விடையளிக்கத் துணிந்து சிலவற்றை எழுதலானேன்.

என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழ்த்தொடர்புடையதுதான். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயிலவேண்டும். பல முறை பயின்ருல்தான் உண்மைபுலப்படும் முதலிலே கடினமாகத்தோற்றினாலும் பலகால் பயின்ருல் வரவரத் தெளிவுண்டாகும். ஒரு நூலிலுள்ள சொற்சுவை பொருட்சுவைகளை அனுபவித்துப் படிக்கவேண்டும். அவற்றைப் பிறரும் அறியும் வண்ணம் எளிய நடையிற் சொல்லவும் எழுதவும் வேண்டும்.

பழைய நூல்களையும், உரைகளையும் தெளிவாக ஆராய்ந்து உண்மைக் கருத்தை அறியவேண்டும். தெரியாதவற்றைத் தெரிந்தனவாகக் காட்டலாகாது. அவற்றைப் பாதுகாக்கவேண்டும்.புதிய கருத்துக்களை அவற்றில் ஏற்றி விடலாகாது. அவசியமல்லாத கருத்துக்களை மேற்கொண்டு, நூலையோ உரையையோ எழுதிப் பிறரை வற்புறுத்தி மகிழச் செய்தல் நலமன்று. பழைய நூல்களிற் சொற்பொருட் குற்றம் இருப்பதாகத் தோற்றினால் அங்

னம் அமைத்ததற்குக் காரணம் என்னவென்று ஆராய வேண்டும். நமக்கு விளங்காததனால் ஒன்றைக் குற்றமென்று துணிந்துவிடுவதால் பயனில்லை. நாமே நன்றாக அறிந்துவிட்டோமென்று மதித்து, அயலாரைத் தாழ்வாக நினைத்தலும் பேசுதலுங் கூடா. பிறர் எழுதியுள்ளவற்றை அவமதியாமல் குணமான பாகங்களை அறிந்து உபயோகித்துக் கொள்ளவேண்டும்.

கற்றவர்களிடத்தில் முறையாகப் பாடங்கேட்கவேண்டும். கேட்டவற்றைச் சிந்தித்து முறையாகப்பாடஞ்சொல்ல வேண்டும். அதைவிடப் பெரிய உபகாரம் வேறு இல்லை. எப்பொழுதும் படித்துக்கொண்டிருக்கவேண்டும்.

முன்னோர் ஒழுகிவந்த முறையைப் பெரும்பாலும்பின் பற்றுதலே மன ஒருமைக்கு வழியாகும். புதுக்கொள்கைகள், புதிய மதங்கள், புதிய தெய்வ வழிபாடு முதலியவற்றை ஆராய்ச்சியின்றி மேற்கொண்டால், அவை நம் மன இயல்போடு பொருந்துவதற்குப் பலகாலம் செல்லும்; ஜனங்களிடையே ஒற்றுமையும் கடைப்பிடியும் தவறிவிடும். பிற மதங்களையும் தெய்வங்களையும் தூஷித்தல் கூடாது. அயல் மதக் கொள்கைகளையும் வேறுபாஷையிலுள்ள அரிய செய்திகளையும் அறிந்து வைத்தல் அறிவை விரிவுறச் செய்யும்.

எந்த சமயத்தாரோடும் எந்த தேசத்தாரோடும் சகோதர பாவத்துடன் ஒற்றுமையாயிருந்து காலங் கழிக்க வேண்டும்.

மேற்கொண்ட காரியத்தைச் சிறிது சிறிதாகப் பல நாள் ஆய்ந்து ஆய்ந்து திருத்தமாக நிறைவேற்றவேண்டும். முயற்சியிடையே யாரேனும் அவமதிக்க நேர்ந்தால் அதனைப் பொருட்படுத்தாமல், காரியத்தைச் செய்து வர வேண்டும். நம்முடைய நெஞ்சறிய நற்காரியத்தை மேற்கொண்டு கடமையைச் செய்து வந்தால், இறைவனருளால் முடிவில் நன்மையே கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. செய்யும் காரியத்தைப் பயனால் தெரிவிக்க வேண்டுமேயன்றித்

தொடங்கியதுமுதல், 'இப்படிச் செய்தேன், அப்படிச்செய்தேன்' என்று தாமே பாராட்டிப் பேசுதல் உயர்வன்று.

பிறர் செய்த குற்றத்தை மறந்து விடுதலும், பலரிடையே எடுத்துக்கூறுமையும் நன்மை பயக்கும். சிற்றுதவி செய்தாரையும் மறவாமல் என்றும் நன்றி பாராட்டுதலின்றும் தவறலாகாது. மனிதனை மனிதனுகச் செய்வது நன்றியறிவே யாகும்.

முதியவர்கள் படியாதவர்களாயினும் அவர்களுடைய பழக்கம் நன்மைகளை உண்டாக்கும். திருவாவடுதுறை யாதீன கர்த்தராக விளங்கிய மேலகரம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகரவர்கள் இதனை அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார்கள்.

நன்மையும் தீமையும் கடவுள் நம் வினைக்கேற்ப அமைப்பன வென்று எண்ணவேண்டும். ஆதலின் தீமை செய்தாரென்று நெஞ்சிற் பகையுற்று யாரையும் கடிதல் ஆகாது. தெய்வம் நன்மையையேஉண்டாக்கும் என்ற நம்பிக்கையை உறுதிப்படுத்தவேண்டும். அது பலவிதமான இடையூறுகளை எளிதில் வெல்லும் வன்மையை அளிக்கும்.

பெரியோர் வாயிலாகவும், அநுபவத்திலுலும் அமைந்த நோக்கங்கள் பலவற்றுள் இவை சில. இவற்றின்படி நடக்கவே நான் முயன்றுகொண்டு வருகிறேன்.

> ''இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
> துன்பந் துடைத்தூன்றுந் தூண்.''

பயிற்சி

[புகழ் வாய்ந்த இப் பெரியாரது பொருண் மொழிகள் பொன்னே போற் போற்றத்தக்கன.]

1. தமிழ் நூல்களைப்பயிலுதல், பிறருடன் பழகுதல்,பொது நோக்கம உடைமை,—இவைபற்றி இக்கட்டுரையிற் காணும் அறிவுரையைத் தனித்தனி ஒரு பத்தியில் எழுதுக.

2. 'என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழ்த் தொடர்புடையதுதான்'—இதன் விவரத்தை ஆசிரியர்பால் கேட்டறிந்து குறித்துக் கொள்க.

2. புத்தக நிலையம்

திரு. க. சம்பந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி.

1. மக்கள் வளமுற வாழ்தற்கு உதவுவது கல்விப்பெருக்கம். பெரியருஞ் சிறியரும், செல்வரும் வறியரும், நகரத்தாரும் நாட்டாரும் சிறிதளவேனுங் கல்வி பயிலுதற்கு ஆவன புரிதல் தற்கால இயல்பு. இக்கல்விப் பெருக்கத்திற்குற்ற துணையாவது புத்தக நிலையம்.

2. நமது நாட்டில் நிறுவப் பட்டுள்ள புத்தக நிலையங்கள் பல. இவை எண்ணிறந்த நூல்களைப் படைத்தவை. இந்நூல்களைத் தாங்கி நிற்கும் கண்ணுடிப் பேழைகளின் பேரழகு பார்ப்போர் மனத்தைப் பற்றி ஈர்ப்பனவாகும். என்றாலும், இப்புத்தகங்கள் தத்தம் நிலையத்தில் நிலைத்திருப்பனவே யன்றி மக்கள் கைத்தலங்கள் காண்பதரிது. இவ்வண்ணம் இடம் பெயராதிருந்து பேழைகளைச் சிதைக்கும் புத்தகங்கள் பலவும், நாடெங்கும் உலாவி மக்களோடு உறைந்து அன்னார் அக இருளைச் சிதைத்தலன்றோ விரும்பத்தக்க தாகும்! இவ்வுண்மையினை யோர்ந்த மேனுட்டார் புத்தக நிலையம் பயனுறுத்தற்குரிய பல செவ்விய முறைகளை ஆய்ந்தறிந்து ஆண்டு வருகின்றனர்.

3. புத்தகங்களைப் பேழைகளிற்பொதிந்துகாக்கும் பழக்கம் அங்குஇல்லை; விலைமிகுந்தபதிப்புக்களும், அங்கு திறந்த பெட்டகங்களிலேயே அடுக்கப்பெற்றிருக்கும்; அவைகளை யெடுத்துக் கண்ணுற எண்ணுவோர் நிலையத்தின் பணியாளரின் அனுமதி தானும் பெறவேண்டுவதில்லை; அவரவர் மனம் நாடும் நூலை யெடுத்துப் பார்க்கலாம்; விருப்பமுண்டேல் நிலையத்தின் ஓரிடத்தில் அமர்ந்து படிக்கலாம். இவ்வண்ணம் கட்டுக் காப்புஇல்லாவிடின், புத்தகத்தொகுதிக்குப் பாடுவிளையாதோ என்றஐயப்பாடுஎழக்கூடும். ஆனல், இத்தகைய பொது நிலையப் பொருளைக் களவாடிச் செல்ல

எண்ணும் கயவர் மிகச் சிலரே என்பது ஒருதலை. மற்றும் இத்தீச் செயலைத் தடுத்தற் கேற்ற பாதுகாவல்களுடன் நிலையம் அமைக்கப்படலாம். பலகணிக்குக் கம்பி வலை யிட்டும், நிலையம் முழுவதிற்கும் ஒரு புறத்தே வாயில் அமைத்தும், புத்தகங்கள் களவு போகாத வண்ணம் காக்க லாகும்.

4. நிலயத்திற் பணியாற்றுவோர் தக்கோராயிருப்பர். புத்தகம் படிக்க விருப்ப மற்ரேரையும் தம் வழிப்படுத்து தற்குரிய பொறுமையும் நயப்பாடும் கல்வித் திறனும் இப் பணியாளர்பாற் காணலாம். வேண்டுவோர் வேண்டும் நூல்களை யெடுத்துக் கொடுத்தற்குரிய நூற் பழக்கமும் பெற்றிருப்பர். பிறர் வைதிடினும், வாழ்த்திடினும், அவற் றைப் பொருட் படுத்தாது தமது கருமமே கண்ணயி ருப்பர். ஆகவே, திட்டமான நோக்கம் எதுவுமின்றி நிலை யத்தில் நுழைவோர் எவரும் ஏதேனும் ஒரு புத்தகம் பெற்றே திரும்புவர். இவ்வழியே அவர்கள் நிலயத்தின் உறுப்பினராகி, அதன் புத்தகங்களைப் பயன்படுத்த முற் படுவர்.

5. நிலயத்தையே யெட்டிப் பாராதும், அதனாற்பெறும் பயனைக் கருதாதும் இருப்பவர் பலர். இவர்களை உறுப்பின ராக்குதற் குரிய சில முறைகளும் உண்டு. மேனாட்டவர் செய்தித் தாள் படிப்பதிற் பேரவா பூண்டவர். ஊணும் உறக்கமுந் துறப்பினும், அன்றாடம் வெளிவரும் செய்தித் தாள் படிக்காதிருக்க ஒருப்பட்டார். எளிய வருவாயுள்ளோ ரும் இவ்வொழுக்கத்தில் ஈடுபட்டிருப்பர். புத்தக நிலையக் காவலர் இதனை நன்குணர்ந்தவராதலின், நிலயத்தில் செய்தித் தாள்கட் கெனத் தனியிடம் அமைத்துளர். ஆண்பாலரும் பெண்பாலரும் அங்குவந்து, பொருட்செலவு சிறிது மின்றிச் செய்தித்தாள் படித்துப் போகலாம். செய்தியறிய வருவோருடன் நிலயக் காவலர் நெருங்கித் தோழமை கொண்டு பழகுவர்; நயமொழி பல பகர்ந்து

நிலையத்திலுள்ள புத்தகங்களைக் கண்ணுறச்செய்வர்; நாள டைவில் அவர்களை நிலையத்தின் உறுப்பினராக்கிவிடுவர்.

6. மற்றொரு முறையுமுண்டு. ஆங்காங்குள்ள நிலையங்களில் மக்கள் உள்ளத்தைத் தமது மொழித்திறனாற் கவர வல்ல பேச்சாளர்கள் அடிக்கடி சொற்பொழிவுகள் நிகழ்த்துவர். சொற்பொழிவூடு நிலையத்திலுள்ள சிறந்த நூல்களைப் பற்றிச் சிற்சில குறிப்புரைகளும் இணைத்துக் கூறுவர். இதனால் அந் நூல்களைக் காண வேண்டுமென்ற அவா சிலரிடத்தாவது பிறக்கும். சொற்பொழிவு முடிந்ததும் அவையினர் வெளியேறும் வழியில் அந்நூல்கள் யாவருக்கும் நன்கு புலனாகும் வகையில் வைக்கப்பட்டிருக்கும். எவரேனும் அவைகளை நோக்குவதாகத் தோன்றின், அக்கணமே பணியாளர் ஒருவர் அவர் முன் வந்து பரிவுடன் பேசி, அவர் விரும்பிய நூலையெடுத்துச் செல்ல உதவுவார்; நிலையத்தின் அமைப்பை விளக்கும் துண்டு வெளியீடுகளையும் அந்நூலிற் செருகிவிடுவர். நூலைப் படிக்குங்கால் இவ்வெளியீடுகளைப் படித்து, அவர் நிலையத்தின் உறுப்பினராகவேண்டுமென்பதே நோக்கம்.

7. நிலையத்தின் அமைப்பைப் பொதுமக்கள் தெரிந்து கொள்ளுமாறு பெரிய எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட அறிக்கைகள் நகரத்தின் பல பகுதிகளிலுமுள்ள பொதுவிடங்களில் ஒட்டி வைக்கப்படும்.

8. நகர மக்களிற் சிலர் அவரவர் தொழிலின்நெருக்கடியால் நிலையத்திற்குச் சென்று புத்தகம் பெற இயலாதவராய் இருப்பர். இத்தகையோருக்கும் உதவிபுரிதற்குகந்த வழிகள் கையாளப்படுகின்றன. நிலையத்தின் பணியாளர் தெருத்தெருவாய்ச் சென்று, புத்தகம் படிக்கவல்லவரைக் கணக்கிடுவர். அந்தந்தத் தெருவில் பலரும் அடிக்கடி கூடும் பெரியோர் மாளிகைகளையும் அறிந்து கொள்வர். அப்பால், நிலையத்தின் புத்தகங்களிற் சிலவற்றை ஒரு பெட்டகத்திற் கொண்டுபோய், மாளிகையின் ஒருபுறத்திற்

பெட்டகத்தை வைத்து, மாளிகைத் தலைவர் பொறுப்பில் விட்டு வருவர்.

9. மேற்கூறிய முறைகள் நகரத்தினருக்கு உதவுவன. புத்தக நிலையம் நாட்டினருக்குப் பயன்படுவதெவ்வாறு? நகரத்திற்குப் புறம்பே வாழ்ந்து வருவோர் நிலையத்திற்கு வந்து போக முடியாதன்றோ? அதனால் பணியாளர், நாட்டினர் விரும்பத்தகும் நூல்களைத் திரட்டி, வண்டியிலேற்றிக்கொண்டு ஊரூராய்ச் செல்வர்; ஆங்காங்குப் புத்தகங்களைக் கொடுத்துப் படிக்கச் செய்வர். சின்னாட் கழித்துத் திரும்பி வந்து, தாம் முன்னே கொடுத்த புத்தகங்களைப் பெற்றுக்கொண்டு, வேறுபுத்தகங்களைக்கொடுப்பர்.

10. இவ்வாறு பல மக்கட்கும் புத்தகங்களைக் கொடுத்து வாங்குங்கால், அவற்றிற் புழுதிபடிந்திருப்பவை சில; எண்ணெய் தோய்ந்திருப்பவை சில; முதலேடு இழந்திருப்பவை சில; இடையேடு இழந்திருப்பவை சில; கடையேடு இழந்திருப்பவை சில; படம் பறிகொடுத்திருப்பவை சில; மேலுறை நீத்துக் காகிதச் சுருளாய்த் திரிவுற்றிருப்பவை சில; விலையேறிய நூல்களும் இவ்வாறு உருமாறி இழி நிலை யெய்துவன வாகும். இதனைத் தடுக்கும் வகை யாது?

11. இந்த இடர்ப்பாட்டைக் களைதற்கு உருஷியா தேசத்தில் வழங்கும் முறை குறிக்கத் தக்கது. நிலையத்தின் அதிகாரிகள் ஒரு நாளைத் தேர்ந்து உறுப்பின ரனைவரையும் அழைத்து, ஒரு பொதுக் கூட்டம் கூட்டுவார். மேற்கூறியாங்கு பாழடைந்த புத்தகமொன்றை அவையினர் முன்னிலையிற் கொணர்வர். பிறருக்குப் பயன் படாத நிலைமையை யடைந்துள்ள அப்புத்தகத்தை ஒரு சவமாய்க் கருதி, சவத்திற்குரிய ஈமக்கடன்களைச் செய்வர்.

12. புத்தகங்களைக் காக்குங் கடமையை உறுப்பினருக்கு அறிவுறுத்தற்பொருட்டு வேறொரு முறையும் வழங்கி வருகின்றது. புத்தகம் சிதைவுறும் வரலாறு நாடக உருவமாக்கப்படும். இந் நாடகம் சோக ரசம் செறிந்துள தாயி

ருக்கும். புத்தகமே நாடகத்தலைவன்; புழுதி, எண்ணெய், எழுதுகோல் முதலியன அத்தலைவனைச் சிதைத் தொழிக்கச் சதியோசனை செய்பவை. மக்கள் அறிவைப் பெருக்கும் பெரு நெறி பிடித்து நிற்கும் தலைவன், தன் பகைவர் சதியோசனையை மதியாதிருப்பதால், அவர்களுடைய சூழ்ச்சிகட்கு இலக்காகி, இறுதியில் அழிவுறுகின்றான். இந்நாடகம் முறைப்படி நடித்துக் காட்டப்படும்.

13. புத்தக நிலையம் பெரும் பயனுறுத்தற்குத் துணை செயும் மற்றொரு முறையுமுண்டு. அது, சிறுவர்கட்கென்று தனி நிலையங்களை நிறுவலேயாம். நிலையத்தின் நூல்களை நன்முறையில் உபயோகிக்கும் வழிகளைச் சிறுவருக்குக் கற்பித்து விட்டால், அச்சிறுவர் பெரியராகுங்கால் புத்தகங்களை முறைப்படி பயன்படுத்துவர்; முறையுணராப் பிறருக்கும் முறையினை விளக்கிக் காட்டுவர்.

14. சிறுவர்க்கென்றுள்ள நிலையங்களிலும் அவரவர் விரும்பிய புத்தகங்களை யெடுத்துப் படிக்கும் உரிமையுண்டு. சிறுவர் பிறருதவியின்றித் தாமே எடுத்துக்கொள்ளும் வகையில் புத்தகங்கள் தாழ்வான பேழைகளில் வைக்கப் பட்டிருக்கும். புத்தகங்கள் யாவும் சிறுவர் நாடும் பொருள் கொண்டனவாகவே யுள்ளவை; சிறு கதைகளைக் கவினுற ஓதுவன ஒரு சில; களியாட்டக் குறிப்புடையன ஒருசில; உள்ளங் கவரும் உருவங்கள் கொண்டவை ஒரு சில; கைத் தொழில் விளக்குவன ஒரு சில. இந்நிலையங்களிற் பணிபுரிவோர் பெரும்பாலும் பெண்பாலரே. சிறுவர் இந்நிலையங்களை நாடி வரச் செய்வதற்குக் கதைசொல்லல், சிறுநாடகம் படித்தல், படக் காட்சி யளித்தல் முதலிய மகிழ்ச்சி விளைவிக்கும் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

15. புத்தகநிலையம் செழித்தோங்குவதற்காக மேனாட்டார்பற்றியுள்ள பேரூக்கம் நம்மவரிடத்தும் நன்கு ஊன்ற வேண்டும். நமது புத்தக நிலையங்கள் தம்பாலுள்ள புத்தகங்களைப் பேரா அன்புடன் புல்லி நிற்காமல், மக்கள் பல

ருக்கும் அவைகளை வரையின்றி வழங்கி, அன்னார் அறிவாம் பெரும்பேறு பெற்று இன்பந் துய்த்து இறையருள் நாடக நற்றுணை நல்கி நெடும் புகழ் நாடுக!

பயிற்சி

1. புத்தக நிலையக் கட்டடம் எவ்வாறு அமைந்திருப்பது நலம்? (பாரா 3, 5 பார்க்க)

2. புத்தக நிலையத்தில் பணியாற்றுவோருக்கு எச்சிறப்பான குணங்களிருக்க வேண்டும்? (பாரா 4)

3. புததக நிலையத்தில் சொற்பொழிவு அடிக்கடி நிகழ்த்துவதன் நன்மைகள் யாவை? (பாரா 6)

4. புத்தக நிலயத்திற்கு நேரில்வரமுடியாதவர்க்கு எவ்வாறு உதவி செய்தல் கூடும்? (பாரா 8, 9)

5. புத்தகங்களைக் காக்கும் கடமையை அறிவுறுத்தற்கு மேனாடுகளில் கையாளப்படும் முறைகள் யாவை? (பாரா 11, 12)

6. சிறிவர்க்கான தனிப் புத்தக நிலையங்களின் அமைப்பு எவ்விதம் இருப்பது நலம்? (பாரா 13, 14)

7. வாக்கியங்களில் அமைத்தெழுதுக:—பேச்சாளர், சொற்பொழிவு, நிறவுதல், கயவர், பலகணி, இழிநிலை.

---

3. தருமிக்குப் பொற்கிழி யளித்த படலம்

ஆறுமுக நாவலர்

வம்மிச சூடாமணி பாண்டியன், சோமசுந்தரக் கடவுள் பொருட்டுத் திரு நந்தவனம் உண்டாக்கிச் சம்பக வனமுந் தனியே வைத்தான். அதிலே மலர்ந்த சம்பகப் பூக்களைக் கொய்து, இண்டை முதலிய பலவிதமாலைகளைத் தொடுத்துச் சோமசுந்தரக்கடவுளுக்குச் சாத்துவித்தான். சம்பகமாலை யணிந்த சோமசுந்தரக் கடவு ளுடைய திருக் கோலத்லைதத் தரிசித்து வியந்து “இவர் சம்பக சுந்தரர்” என்று சொல்லி வணங்கினன். இன்றைக்கும் அக் கடவு

ளுக்கு அத் திருநாமம் வழங்குகின்றது. அவருக்குச் சம்பக மாலை சாத்து வித்த காரணத்தினாலே, வம்மிச சூடாமணி பாண்டியனுஞ் சம்பகபாண்டியன் எனப்பெயர் பெற்றான். சம்பக பாண்டியன், சம்பக சுந்தரருக்குப் பணிசெய்து கொண்டு வரு நாளிலே இளவேனிற் காலம் வந்தது.

அவ்விளவேனிற்காலத்திலே ஒரு நாள் சம்பக பாண்டியன், தன்னுடைய தேவியோடும், வெப்ப நீக்கத்தின் பொருட்டு அச்சம்பகவனத்தில்ஒருசந்திரகாந்தக்குன்றில் இருந்தான். அவனுக்குநேரே,ஒரு நறு மணந்தோன்றும் படி தென்றற்காற்று வீசிற்று. பாண்டியன் அவ்வாசத்தை மோந்து, "இது ஒரு திவ்விய வாசம். தென்றற் காற்றானது சோலையில் வெளவிய வாசமன்று. காற்றுக்கும் வாசமில்லை. இது எவ்வாசமோ!" என்று நினைந்து, தன்னுடைய தேவியைத் திரும்பிப் பார்த்தான்; அவளுடைய கூந்தலின் வாசமாயிருந்ததைக் கண்டு, "இவ்வாசம் வண்டுக்குந் தெரியாது" என்று நினைந்து மகிழ்ந்து, "இவ்வாசங் கூந்தலுக்கு இயற்கையோ செயற்கையோ" என்றையங்கொண்டான். "நான் ஐயுற்ற கருத்தை யாவராயினும் அறிந்து பாடல் செய்வாராயின், அவரே இவ்வாயிரம் பொன்னுக்கும் உரியர்" என்று சொல்லி, ஒரு பொற்கிழியை ஏவலாளர் கைக் கொடுத்தான். அவர்கள், அதைக் கொண்டுபோய்ச் சங்க மண்டபத்தின் முன்னே தூக்கினார்கள். சங்கப் புலவர்களெல்லாரும் தனித்தனியே ஆராய்ந்தாராய்ந்து, பாண்டியனுடைய மனக் கருத்தை அறியாது வருந்தினார்கள்.

அப்பொழுது ஆதிசைவருள் ஒருவனும், தந்தைதாயில்லாதவனும், பிரமசாரியும், விவாகத்தில் விருப்புடையனுமாகிய தருமி யென்பவன், சோமசுந்தரக் கடவுள் சந்நிதியை யடைந்து வணங்கி, 'எம்பெருமானே! அடியேனுக்குத் தந்தையுந்தாயுமில்லை. விவாகத்தில் விருப்பமுற்றிருக்கின்றேன். அதற்கும் பொருள் சிறிதுமில்லை. அடியேன் வேதசிவாகமங்களெல்லாம்ஓதினேனாயினும்இல்வாழ்க்கை

யின்றி உமது பூசைக்கு அருகனுவேனே! ஆகேன். நீர் சர்வஞ்ஞர். பாண்டியனுடைய மனக்கருத்தை யறிந்து ஒரு செய்யுள் செய்து தந்தருளும்'' என்று விண்ணப்பஞ் செய்தான். உடனே சோமசுந்தரக் கடவுள் ஒரு தமிழ்ச் செய்யுளைச் செய்து கொடுத்தருளினுர். அது இது :—

கொங்குதேர் வாழ்க்கை யஞ்சிறைத் தும்பி
காமஞ்செப் பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின்
மயிலியற் செறி யெயிற் றரிவை கூந்தலின்
நறியவு முளவோநீ யறியும் பூவே.

தருமி வணங்கி அச்செய்யுளை வாங்கிக் கொண்டு போய்ச் சங்கமண்டபத்தை அடைந்து, அங்குள்ள புலவர்கள் கையிலே நீட்டினன். அவர்கள் யாவரும், வாங்கி வாசித்துச் சொற்சுவையையும் பொருட்சுவையையுந் தூக்கி ''நன்று, நன்று'' என்று மகிழ்ச்சியடைந்து, பாண்டியனெதிரேபோய் அப்பாட்டைச் சொன்னுர்கள். பாண்டியன், தன் மனக்கருத்தொத்தலினுலே முடியசைத்து, மனமகிழ்ந்து, ''இச் செய்யுள் கொண்டுவந்த பிராமணன் இப்புலவர்களோடு போய் ஆயிரம் பொன்னையுங் கிரகித்துக் கொள்ளக்கடவன்'' என்ருன்.

அரச னேவலினுலே தருமி புலவர்களோடு போய்ச் சங்கமண்டபத்தின் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுக்கும்பொழுது நக்கீரர், அவனை விரைந்தணுகி ''நில், நில்'' என்று தடுத்து, ''இச்செய்யுளிலே குற்றமிருக்கின்றது'' என்ருர். உடனே தருமி ஏங்கி மெல்லச் சென்று, அச்செய்யுளைச் சோமசுந்தரக் கடவுள் திருமுன் வைத்து, 'எம்பெருமானே! ஏழையேனுக்கு நீர் இப்பிழைப் பாட்டைத் தந்தது என்னே? வறுமை நோயினுல் வருந்திப் பல நாள் உம்மை வழிபடும் அடியேன் உம்மால் இப்பொழுது பெற்ற பொருளை இழந்தேன் என்று தமியேன் பேசிலேன். எவ்வெவர்க்கும் மேலாகிய உமது செய்யுளுக்குச்சில்

வாழ்நாட் சிற்றறிவினையுடைய புலவர் குற்றஞ்சொன்னராயின், யார் உம்மை மதிப்பார்? இகழ்ச்சி உமக்கல்லாது எனக்கேது?' என்று சொல்லி நின் றிரங்கினன்.

அப்பொழுது சோமசுந்தரக் கடவுள் ஒரு புலவர் வடிவங்கொண்டு சங்க மண்டபத்தை யடைந்து நேர்நின்று அங்கிருந்த புலவர்களை நோக்கி, "நமது செய்யுளுக்குக் குற்றஞ் சொன்னவர் யாவர்" என்றார். என்னு முன்னர், நக்கீரர் அஞ்சாது, "நானே சொன்னேன்" என்றார். புலவர், "யாது குற்றம்" என, நக்கீரர் "சொற் குற்றமின்று; பொருட் குற்றம்" என்றார். புலவர் "பொருட் குற்றம் என்னை?" என நக்கீரர் "கூந்தலுக்கு வாசம் பூவின் சார்பாகிய செயற்கையாலன்றி, இயற்கையாலில்லையே" என்றார். புலவர், "பதுமினியுடைய கூந்தலோ" என, நக்கீரர் "அதுவும் அத்தன்மையதே" என்றார். புலவர் "தெய்வப்பெண்களுடைய கூந்தலோ" என, நக்கீரர் "அதுவும் மந்தார நறுமலர் அளைந்து மணத்தலாற் செயற்கையதே" என்றார். புலவர், "நீ வழிபடுகின்ற திருக்காளத்தியப்பருடைய சத்தியாகிய ஞானப்பூங்கோதையம்மையாருடைய கூந்தலும் அத்தன்மையதோ?" என, நக்கீரர் "அதுவும் அத்தன்மையதே" என்றார். உடனே புலவர் நெற்றிக் கண்ணைச் சிறிது காட்ட, நக்கீரர் அதற்கு மஞ்சாது, "உமது பாடல் குற்றமே குற்றம்" என்றார். நக்கீரர், சிவபெருமானது நெற்றிக் கண்ணினுடைய அக்கினி வெப்பத்தினாலே பொறுக்கலாற்றாது, பொற்றாமரை வாவியிலே போய் விழுந்து அழுந்தினர். அவரை வென்ற புலவர் திருவுருக் கரந்தருளினர்.

---

4. கீரனைக் கரையேற்றிய படலம்

ஆறுமுக நாவலர்

நக்கீரர் சிவபிரானது நெற்றிக் கண்ணின் அக்கினி யினாலே பொற்றாமரை வாவியில் விழுந்து துயருழப்ப, மற்றைப் புலவர்களெல்லாருங் கண்டு பொருது நடுங்கினர்கள். நக்கீரர் இல்லாத சங்கம், அரசனில்லாத குடியும், நாயக மணி யில்லாத கண்டிகையும், ஞானமில்லாதவர் கல்வியும் போன்றது "ஐயையோ! சொற் பொருள் வடிவாகிய சிவ பெருமானோடு வாது செய்த இப் பிழையோ பெரிது. இது தீர்வதெப்படி? உய்வது அரிதரிது" என்று யாவருஞ் சிந்தித்தார்கள். "சிவபிரான் திருக்கைலாச மலையை எடுத்த இராவணனும் கையில் வீணைகொண் டிசைபாடத் திருவுள மகிழ்ந்து அவன் செய்த தீங்கைப் பொறுத்ததுமன்றி அவனுக்குத் தேரும் வாளும் கொடுத்தருளினாரன்றோ! இப் பிழையாவரானும்நீக்கரிது. சிவபிரானே திருவுளந்திரும்பினால், இது நீங்கிவிடும். இதுவே துணிவு" என்று தங்களுள்ளே சொல்லிக்கொண்டுபோய்ச் சங்கப் புலவர்கள் சோமசுந்தரக் கடவுளை வணங்கித் துதித்து "எம்பெருமானே! புண்ணியஞ் செய்தவருக்கு இன்பத்தையும் பாவஞ்செய்தவருக்குத்துன்பத்தையுங் கொடுப்பது உமது திரு வருளியற்கை. அதனால் அது, உயிர்களுக்கெல்லாந் தாயுந் தந்தையுமாகும். நக்கீரர் கல்விச் செருக்கினால் அறிவழிந்து உமது செய்யுளைப் பிழை யென்றமையால் நீர் அவரை நெற்றிக் கண்ணால் விழித்து, அவ்வெப்பத்தினால் அவர் பொற்றாமரை வாவியில் விழும்படி செய்தீர். இனிப் பெருங் கருணை கூர்ந்து இப்பிழையைப் பொறுத் தருளும்" என்று விண்ணப்பஞ் செய்தார்கள்.

அப்பொழுது சோமசுந்தரக் கடவுள், மீனாட்சியம்மையாரோடு எழுந்துபோய்ப் பொற்றாமரை வாவிக்கரையை

யடைந்து, புலவர் கூட்டத்துள்ளே நின்றுகொண்டு அருட் கண்ணினாலே பார்க்க, நக்கீரர் தம்முடைய பொறி, புலன், கரணமெல்லாஞ் சிவபெருமானுடையனவேயாக, அவரது பெருங்கருணைக் கடலின் ஆழ்ந்து, அன்புருவமாயினர். "உலக மாதாவாகிய ஞானப்பூங்கோதை யம்மையாருடைய கூந்தலுக்குத் தீங்கு சொல்லிய கொடிய நாவின் குற்றத்தை அவரேயன்றி யாவர் பொறுப்பார்?" என்று திருக்காளத்தியப்பர்மீது நேரிசை வெண்பாவினாலே கைலை பாதி காளத்தி பாதி யந்தாதி பாடினர். சிவபெருமான் "அதைத் திருச்செவி மடுத்து நேர் வந்து, அவருடைய கையைப் பிடித்துக் கரையி லேற்றியருளினர்.

நக்கீரரும்மற்றையப் புலவர்களும் சங்கமண்டபத்தின் முன்னே தூங்கிய பொற்கிழியை அறுத்துத் தருமிக்குக் கொடுத்துப் பாண்டியனைக் கொண்டுஞ் சில வரிசைகள் கொடுப்பித்துக் கல்விச் செல்வர்களாய் வாழ்ந்திருந்தார்கள்.

பயிற்சி

1. சண்பக பாண்டியனுக்குத் தோன்றிய ஐயம் யாது? கொங்குதேர் வாழ்க்கை என்னும் கவியால் அரசனது ஐயம் நீங்கியது எவ்வாறு?

2. புலவராக வந்த சிவபிரானுக்கும் நக்கீரருக்கும் நடந்த வாதத்தைச் சம்பாஷணை முறையில் அமைத்து எழுதுக.

3. பண்டைக் காலத்தில் நடைபெற்ற முச் சங்கங்களின் வரலாற்றையும், சில சங்கப் புலவர்களின் பெயர்களையும், சங்கநூல்களின்பெயர்களையும் கேட்டறிக.

5. பயிர் வண்டும், படர் கொடியும்

திரு. ரா. பி. சேதுப்பிள்ளை, பி. ஏ., பி.எல்.

"வம்பார்குன்றம் நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண்டு யாழ்செய் குற்றாலம்".

என்று பிள்ளைப்பெருமான் போற்றும் பெருமை வாய்ந்த திருகூட மலையின் ஒரு சார் ஓங்கிவளர்ந்த ஓர் வேங்கை மரம் விண்ணளாவி விளங்கிற்று. அதன் மருங்கே முளைத்தெழுந்த ஓர் மெல்லிய பூங்கொடி அவ்வேங்கையின் அழகிய கொம்புகளில் பின்னிப்படர்ந்து செழித்து வளர்வதாயிற்று. மஞ்சுதோய வளர்ந்து மாண்புற்று இலங்கிய வேங்கையின்மீது அவ்விளங்கொடி வரிவரியாய்ச்சுற்றி விளங்கிய கோலம் கண்டோர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் தன்மை வாய்ந்து விளங்கிற்று. அவ்வேங்கையின் பூங்கொம்புகளில் தீங்குயில்கள் மணந்து மகிழ்ந்தன. வண்டினங்கள் பண்ணமைந்த இசை பாடி மலர்களின் மதுவை மாந்திக் களித்தன.

"தீங்குயில் மணந்து தேன் துஞ்ச வண்டு பாண்செய
வேங்கைநின்ற பொன் உகுக்கும்"

என்று சிந்தாமணி ஆசிரியர் வியந்துரைத்த இயற்கை அழகு அளவிலா உவகையளித்தது.

அவ்வேங்கை மரத்தின் அடிப்புறத்தில் ஆழ்ந்து அகன்ற ஓர் ஆறு அணிபெறச் சென்றது. மலையிடைப் பிறந்து சவியுறத்தெளிந்து ஆழ்ந்து அமைந்து ஆன்றோர் மனம்போல் அவ்வாறு அழகுற நடந்துசென்றது. அம் மலையில் வீசிய மெல்லிய இளங்காற்றில் வேங்கையின் பூங் கொம்புகள் அசைந்து பொன்மலர் சொரிந்தன. இளங் கொடி, வேங்கையின் கிளைகளில் இனிதாய்த் துவண்டது. இளந்திரைகள் ஆற்றில் அலைந்து இன்புற்று இலங்கின. அப்போது செய்மையில் ஒல்லென ஓர் ஒலி கிளம்பியது.

அதன் தன்மையை மனத்தாற் கருது முன்னமே கடுங் காற்று வேகமாய்ச் சுழன்று வீசத் தலைப்பட்டது. விண்ணுக் கடங்காமல் வெற்புக் கடங்காமல் வீசிய புயல் காற்றின் வெம்மையால் மலைப் பொருள்கள் எல்லாம்மயங் கிச் சுழன்றன. அக்கடும் புயலின் வேகத்திற்கு ஆற்ருது மலையே நிலைகுலைந்தது. வெறி கொண்ட புயலில் அகப் பட்ட வேங்கை மரம் வேரோடு அற்று அருகே சென்ற ஆற்றில் விழுந்தது. வானுற ஓங்கி வளம்பெற வளர்ந்து பூத்துச் செழுத்து விளங்கிய வேங்கை விழுவதைக்கண்ட எமது உள்ளம் வெதும்பியது. உலகப் பொருள்களின் நிலையாமையை நினைந்து நெஞ்சம் குழைந்தது.

இவ்வாறு வேங்கை சாய்ந்து வேகமாய்ச் செல்லும் ஆற்றில் விழுந்தபோது, அதனைச் சுற்றிப் படர்ந்திருந்த மெல்லிய கொடியும் வேரற்று அம்மரத்தோடு ஆற்றில் மயங்கி விழுந்தது. ஆயினும் அவ்வேங்கையில் தீந்தே னுண்டு திளைத்த வண்டுகள் மரத்தோடு பூவும் மாளக்கண்டு நிலையழிந்த வேங்கையை நீத்து ஆர்த்தெழுந்து அயல் நின்ற மற்ருேர் மலரில் சென்று சேர்ந்தன. இதனை நோக் கியபோது மதுவுண்டு மயக்கும் வண்டின் இழி குணம் மனத்தை வாட்டி வருத்தியது.

"காலாடு போழ்தில் கழிகிளைஞர் வானத்து
மேலாடுமீனில் பலராவர்__ஏலா
இடர் ஒருவர் உற்றக்கால், ஈர்ங்குன்ற நாட
தொடர்புடையேம் என்பர் சிலர்"

என்னும் பெரியாரது மொழிகளின் பொருளைத் தெள்ளி தில் தெரிந்தேம். கெடுமிடத்துக் கைவிடும் கருவண்டு போலாது பெருந்துயர் நேர்ந்தபோதும் பிரியாத பெருந் தன்மை வாய்ந்து திகழ்ந்த பூங்கொடி, அருங்குல மங்கையர் போல் அமைந்து விளங்கிற்று. வேரூன்றி முளைத்த இடத்தினின்றும் படர்ந்துபோந்து வேங்கையைப்பற்றித் தளிர்த்து வளர்ந்த கொடியின் தன்மை, மணப்பருவம்

வாய்ந்த மங்கை பிறந்த மனையினின்றும் போந்து தலைமகனைச் சேர்ந்துவாழும் தகைமையில் அமைந்திருந்தது. பூங்கொடி படர்வதற்கு ஏற்ற கொழுகொம்பாய் அமைந்த பெருமை சான்ற வேங்கையின் தோற்றம், ஆண்மையும் பெருமையும் பொருந்தித் திகழும் தலைமகனது விழுமிய கோலம்போல் விளங்கிற்று. அவ்வேங்கையில் நன்றாய்ப் படர்ந்து அதன் கிளைகளுக்குப் புதியதோர் அழகளித்த கொடியின் கோலம், தலை மகனுடன் ஒன்றி வாழ்ந்து இல்வாழ்க்கைக்கு அழகளிக்கும் குலமங்கையின் குணத்தை விளக்கி நின்றது. இன்னும் வேங்கை துயர் உற்று ஆற்றில் வீழும் நிலையில் அதனோடு தானும் வீழ்ந்து துயர் உற்ற கொடியின் தன்மை, தலைவன் துயருறும் போது தானும் துயருறும் நிறை அமைந்த மங்கையின் மனப்பான்மையை விளக்கி நின்றது. இத்தகைய பெருமை, கற்பமைந்த மாதர் வாழ்க்கையில் கவின்பெற விளங்கக் காணலாம்.

தேனடைந்த சோலைத் திருநாடு துறந்து கானகம் செல்ல இசைந்த கமலக் கண்ணன், தலைமகளாய சீதையிடம் விடைபெறுமாறு அவள் மாளிகை சென்றான். அங்கு அறமே உருவாயமைந்த திருமகளைக்கண்டு "மாதே! இணையற்ற என் தம்பி இந்நாட்டை அரசாள்வான். நான் தாய் தந்தையரது ஆணையைத் தலைமேற்கொண்டு வெளியே போந்து மலைவளங் கண்டு வருவேன். நான் வரும் அளவும் நீ வருந்தாதிரு" என்று மொழிந்தான். அம்மாற்றம் கேட்ட மங்கை நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றேனும், நாடாளும் நற்பதத்தை இழந்தான் என்றேனும் வருந்திலள் அல்லள். ஆயினும் "நீ வருந்தாதே; நான் உன்னைவிட்டுப்பிரிவேன்" என்றுநாயகன் உரைத்தசொல் நஞ்சுபோல் மங்கையின் நெஞ்சை நலிந்தது.

"நாயகன் வனம் நண்ணலுற்றான் என்றும்
மேயமண் ணிழந்தான் என்றும் விம்மலள்
நீ வருந்தலை நீங்குவன் யான் என்ற
தீயவெஞ்சொல் செவிசுடத் தேம்புவாள்."

என்று கவி அரசராய கம்பர் மங்கையின் மறப்பான்மையை மாண்புற விளக்கிப்போந்தார். இவ்வாறுமயங்கித் தளர்ந்த மங்கையை நோக்கி, மன்னவன் "மாதே பஞ்சினும் மெல்லிய உன் கமலபாதம் வெம்மைநிறைந்த கானகத்தில் தோய்ந்து வருந்தும்; கதிரவன் கொடுமையால் கானகக் கற்களெல்லாம் கனல் உமிழும்; அக்கொடிய சூடு உன்னல் தாங்குதற்கரிதாகும்" என்று வனத்தின் வெம்மையை மங்கை அறியுமாறு எடுத்துரைத்தான். அப்போது மையறு மனத்தளாய மங்கை "ஐய, நின் பிரிவினும் சுடுமோ அப்பெருங்காடு" என்று வினவினுள். தலைவனைப் பிரிவதே பெருந்துன்பம் என்றும், அத்துன்பத்திற்கு இணையாய துன்பம் வேறில்லை என்றும் நிறை அமைந்த மாதர் கருதுவர் என்பதற்குச் சீதை ஓர் சிறந்த சான்ருய் அமைகின்ருள்.

இவ்வாறே கலியின் கொடுமையால் நாடும் பீடும் இழந்து கல்லும் முள்ளும் நிறைந்த கானகம் நோக்கிச் சென்ற நளன், தன்னேடு போந்த தமயந்தியின் மென்மை நோக்கி மனம் நொந்து விதர்ப்ப நாட்டிற்குச் செல்லும் வழியைக்கண்டபோது, "மாதே உன் தந்தையின் ஊருக்குச் செல்லும் வழி இதுவே" என்று எடுத்துரைத்தான். அது கேட்ட மங்கை மனம் பொருது அழுது,

"அங்கது கேட்டலும் அழுது மாழ்கிநொந்து,
ஈங்குநின் அடியனேன் பிழைத்தது யாதுகொல்!
பூங்கழற் குரிசிலோய்! பொறிபிலேன் தனை
நீங்கவோ இவ்வுரை நிகழ்த்திஞய் என்ருள்."

என்று கவி கூறுமாறு தயங்கித்தலைவனைப்பிரியாது பின் தொடர்ந்து சென்ருள்என்றுஇனிது அறியப்படுகின்றது.

இன்னும் பெற்ரோர் சேர்த்துவைத்த பெருஞ்செல்வம் எல்லாம் பொது மாதிடம் இழந்துவறியனுய், மாடமதுரையில் மனையாளது மணிச்சிலம்பை விற்று வாணிகம் செய்யுமாறு புகார் நகரினின்றும் போந்த கோவலனைப் பிரியாது

பின்னே சென்று, கடுமையார் கானகத்தில் கமல பாதமும் மெல்லிய மேனியும் தளர்ந்து வருந்த, அத்துயரைப் பொறுத்து, தலைவனது துயரைக் கண்டு தளர்ந்த கண்ணகியின் பெருமையை,

"கடுங்கதிர் வெம்மையில் காதலன் தனக்கு
நடுங்குதுயர் எய்தி நாப்புலரவாடித்
தன்துயர் காணுத் தகைசால் பூங்கொடி"

என்று சிலப்பதிகாரம் இனிதெடுத்துரைக்கின்றது. இவ்வாறு மணமகளும் அறியாத வண்ணச் சீறடிகள் வருந்தக் கானகத்தில் நடந்து கணவன் துயர் களைந்த கண்ணகியின் பெருமையைக் கோவலன் கண்டு மனங்குழைந்தான்.

"நாணமும் மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணையாக
என்னெடு போந்து ஈங்கு என் துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங்கோதாய்!"

என்று புகழ்ந்து போற்றினுன்.

இவ்வாறு கணவனைப் பிரியாத பெருவாழ்வு வேண்டி இறைவனை வாழ்த்துவதே நிறை அமைந்த மாதர் நெறியாகும். இத்தகைய மாதர் கணவரோடு இன்பமும் துன்பமும் ஒருங்கே நுகர்ந்து அவர் ஆவி துறப்பின் அங்நிலையே உயிர் நீப்பர் என்பதும் அறியப்படுகின்றது. நீரில் அமைந்து வாழும் நீலமலர் அந்நீர் வற்றியபோது அவ்விடத்தே வற்றி உலரும் தன்மைபோல, கற்பமைந்த மங்கையர் கணவன் வாழுங்காலத்து அவனுடன் இனிது வாழ்ந்து அவன் அழியும் காலத்துத் தாமும் அகமகிழ்ந்து அழிவர். இத்தன்மை வாய்ந்த குலமாதர் நெறியைக் கொடியின் தன்மையோடு ஒப்புநோக்கிக் கம்பர் அமைத்துள்ள கற்பனை, தேன் எனத் தித்திக்கும் தகையதாகும்.

"நிலமரங்கிய வேரொடு நேர்பறித்து
அலமரும் துயர்எய்திய ஆயினும்
வலமரங்களை விட்டில மாசிலாக்
குலமடந்தையர் என்னக்கொடிகளே."

என்னும் கம்பர் கவியில் அமைந்துள்ள சொல் நயமும் பொருள் நயமும் ஆயுந்தோறும் அளவிறந்த இன்பம் பயப்பதாகும்.

* * * *

ஆகவே அற்ற குளத்து அறுநீர்ப் பறவைபோல், இடருற்றபோது நீங்கும் வண்டனையாரோ டிணங்காது இணைபிரியா இயல் அமைந்த கொடியனுரைத் துணையாகக் கோடலே இருமையும் இன்பம் தருவதாகும் என்னும் உண்மை இனிதறியப்படும்.

பயிற்சி

[இப்பகுதியிற் காணும் இயற்கை வருணனை அழகுகளைச் சுவைத்தறிக. செய்யுள் நடைபோல் மோனை எதுகைகள் ஆங்காங்கு அமைந்திருப்பதைக் காண்க.]

1. பாடத்தின் பெயர்ப் பொருத்தத்தை விளக்குக.

2. பயிர் வண்டும், படர் கொடியும்,—இவ்வுவமானங்களால் விளக்கப்படும் நீதி யாது ?

3. செய்யுள் மேற்கோள்களுக்கு விளக்கவுரை யறிக.

6. இராஜா தோடர்மால்

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை, எம். ஏ., எம். எல்.

வில்லேருழவன்

வங்க தேசத்தைக் கைப்பற்றிய அக்பர்ஷா மொகலாயச் சேனாதிபதிகளை யங்கங்கு நியமித்திருந்தனர். இச்சேனாதிபதிகளில் பிரதானமான ஹுமாயூன், தர்க்கூன், மாசுமி என்போர் தாங்களே வங்காளத்தின் மன்னராகும் பேராசையினால், அக்பர் சக்கரவர்த்திக்கு விரோதமாய்ச் சேனைகளைத் திரட்டிக்கொண்டு பல கலகங்கள் நிகழ்த்தினர். இக்கலகங்களை யடக்கி, அவர்களை வென்று வருவதற்கென்றே இராஜா தோடர்மாலை டில்லி மன்னர் மூன்றும் முறையாக வங்காளத்துக்கு அனுப்பியிருந்தனர். தோடர்மால் முங்கேரிக் கோட்டையில் வந்து தங்கியிருந்தார்.

பாகல்புரத்தில் மொகலாயக் கொள்ளைக்கூட்டத்தார் மாசுமி என்பவனது தலைமையின்கீழ் வசித்துவந்தனர். இவர்கள் முங்கேரியைப் பிடித்துத் தோடர்மாலைச் சிறை செய்ய முயன்றுவந்தனர்.

ஒரு நாள் பகலவன் உதித்ததுமுதல் அத்தமிக்கும்வரையில் தோடர்மாலுடைய துர்க்கத்திற் பிரவேசிக்க அக்கொள்ளைக்காரர்கள் முயன்றனர். அவரது முன்னெச்சரிக்கையினால் அவர்களுடைய முயற்சி யொன்றும் பலிக்கவில்லை. தமது உற்சாகம், புத்திவன்மை, போர்த்திறம் இவற்றால் ஒவ்வொரு தடவையிலும் அவர் ஒன்னலரைப் புறங்கண்டனர். இன்று நடந்த போரில் இந்திரநாதன் காட்டிய நிகரற்ற திறமை, நண்ணலரை நடுங்கச் செய்த வீரம், உழைப்பு இவற்றைக் கண்டு இராஜா தோடர்மாலுக்குண்டான மகிழ்விற்கோர் வரையறை யில்லை. சூரியன் மறைந்து இருள் மூடியதும், விரவலர் வீரியமிழந்து வெருண்டோடினர்.

இவ்வாருகப் போர் முடிந்த பிறகு இந்திரநாதன் சேனைத்தலைவரைப் பார்க்கவந்தான். அப்பொழுது சிரம பரிகாரம் செய்துகொண்டிருந்த தோடர்மால், அவனை யழைத்துத் தம்மருகில் உட்காருவித்து மிகப் பிரியமாய்ப் பேசிக்கொண்டிருந்தார். அவ்விருவர்களைத் தவிர வேருெரு வரும் அங்கிருக்கவில்லை. தோடர்மால் மலர்ந்த முகத் துடன், "இந்திரநாத்! உமது முழுப் பராக்கிரமத்தையும் காணும் சமயம் இன்று வாய்த்தது. சார்வபௌமனுக்கு உமது உயிரையே யர்ப்பணம் செய்து இன்று நீர் போர் புரிந்தீர்" என்ருர்.

இந்திரநாதன் :—மகராஜ்! என்று சைனியத்திற் புகுந் தேனே, அன்றே இவ்வுயிரை இராஜ காரியத்திற்கு அர்ப்பித் திருக்கிறேன். இன்றைப் போரில் உயிர்தப்பி வந்தது தங்கள் ஆசீர்வாதத்தினுலும் எந்தையின் புண்ணிய வசத்தினுலுந் தான்.

தோடர்மால் :—இந்திரநாத்! இராஜ காரியத்தில் மரிப் பதைவிட அதிகக் கண்ணியமான பேறு வேறு யாதுளது? நெடுமுடிமன்னரான அக்பர் பாதுஷாவின் சேவையை நாம் கடைப்பிடித்திருக்கிருேம்; அதில் நமது உடல் பொருள் ஆவி மூன்றையும் பொருட்படுத்தலாகாது.

இந்திரநாதன்:—மகராஜ்! தாங்கள் நீடூழி வாழ்ந்து, டில்லீ சுவரருடைய எண்ணங்கள் சித்தி பெறுமாறு செய்ய வேண்டும். தங்களுக்கு மேலான கௌரவமும், உலக மெங்கும் பரவும் பெரும் புகழும் உண்டாகவேண்டும்.

தோடர்மால் :—இந்திரநாத்! இன்றைத்தினம் எவ்வளவு இன்பமானது! இன்று நாம் அடையலரை அபஜெய மடையச்செய்த செய்தியைக் கேட்டு டில்லீசுவரர் அளவற்ற மகிழ்ச்சியுறுவர்.

'இன்றைக்கு அதிக நேரமாகிவிட்டது. போய்வருக' வென்று விடைகொடுத்துவிட்டுத் தோடர்மால் உள்ளே சென்ருர். தோடர்மாலின் விடுதியிலிருந்து புறப்பட்ட இந்திர நாதனும் தன் கூடாரத்திற்கு வந்து கண்ணயரலாயினன்,

படை வகுப்பு

கலகக்காரர்கள் இப்பொழுது முங்கேரிக்கருகிலுள்ள பாகல்பூரில் பாசறை வகுத்துத் தங்கியிருந்தனர். தோடர் மால் தமது நிகரற்ற யுத்த சாமர்த்தியத்தால் அவர்களை வென்று, துர்க்கத்தைக் காத்துக்கொண்டிருந்தனர். இந்திர நாதனும் நாளுக்கு நாள் கியாதிபெற்றுவந்தான். சமயம் வாய்த்தபோது அவன் தன்னுடைய சேனைகளுடன் துர்க்கத் திற்கு வெளியில் வந்து வெகு ஆவேசத்துடன் ஏதிலரை யெதிர்ப்பான். இன்ன விடத்திற் பகைஞர் குழாம் இருக் கின்றதென்னும் செய்தி எட்டியதும், தோடர்மாலுடைய அநுமதிபெற்று வெளியில் வந்து, அதை வெகு தூரம் வெருட்டியடித்து வெரிங் கண்டு மீள்வான். இந்திரநாத னுடைய அரிய வீரம் முதலியவற்றைக் கண்டு கோட்டையி லிருக்கும் படைஞர் அவனைப் புகழ்வர். நாளுக்கு நாள் அவ னுடைய சௌரியத்தின் புகழெங்கும் ப்ரவலாயிற்று.

ஒரு நாள் ஆதவன் அத்தமிக்கும் அமயம், ஏதிலரின் இருக்கையை யறிந்துவரும்பொருட்டு இராஜா தோடர் மால் துர்க்கத்தின் வெளியில் வந்து சுமார் அரை மைல் தூரஞ் சென்றனர். விரவலர் தங்கிய பாடி வெகு தூரத்தி லிருந்தது ; அன்று அவர் மாறுவேடம் பூண்டு புறப்பட்டார். கூட ஐம்பது குதிரைவீரர்களு மிருந்தனர். சிப்பாய்கள் குதிரைகளை யிங்குமங்குஞ் சிதறவிட்டுக்கொண்டே பின் தொடர்ந்தனர். ஆயினும், ஒரே முகமான பார்வையுடன் அவர்கள் கருதலர் பாசறையைக் கவனித்துக்கொண்டிருந் தனர்.

இதற்குள் தொலையிலிருந்து ஏதோ சத்தம் கேட்டது. எல்லோரும் திகைப்புற்றுப் பார்க்கலானுர்கள். அப்பொழுது வெகு தூரத்தில் புழுதி கிளம்புவதைக் கண்டனர். சிறிது நேரத்தில் குதிரைச் சிப்பாய் ஒருவன் வாயுவேகத்துடன் இராஜா தோடர்மாலுக் கெதிரில் வருவது தோன்றியது. குதிரை வரும் வேகத்தால் அதன் கால்கள் நிலத்திற் படுகின் றனவோ என்பது கூடத் தெரியவில்லை. ஒரு கணப்பொழு தில் அந்தச் சிப்பாய் அருகில் வந்து சேர்ந்தான். அவன

எல்லோரும் துர்க்கத்தி னருகில் வந்து சேர்ந்தனர். துர்க்கத்தைச் சுற்றியிருக்கும் அகழைத் தாண்டுவது தான் குறை. அகழியினருகில் வந்து பார்க்க அதன் மரப் பாலத்தை யாரோ சிதைத்துவிட்டிருக்கக் கண்டனர். இப் பொழுது என்ன செய்வது ? எல்லோரும் பயந்துவிட்டனர். எந்த ஒற்றன் பகைஞருக்கு இச்செய்தியை யறிவித்தானோ அவனுடைய செயலே யிதுவும். உட்புக முற்றிலும் வழி யில்லாமற்போயிற்று. அகழில் நீந்திப்போகவேண்டு மென அவர்கள் ஆலோசித்துத் தீர்மானித்தனர். பின் தொடர்ந்துவரும் பகைவர் படையைச் சுட்டிக்காட்டித் தோடர்மால், "நீங்கள் பாதி அகழ் கடந்து போவதற்குள் அடையலர் அண்முவர். பிறகு நீங்கள் தண்ணீரில் மூழ்கிச் சாவீர்களென்பதை யுறுதியாய் நம்புங்கள். இதைவிட வீரனுடைய செயலைச் செய்யுங்கள். சத்துருவுக்கு முகத் தைக் கொடுங்கள். சிலர் இவ்விடத்திற் புதிய பாலம் கட் டத் தொடங்குங்கள். பாலம் கட்டி முடிகிற வரையில் சத்துருவுடன் ஊக்கமாய்ப் போர்புரிந்துகொண்டிருப் போம். தண்ணீரில் மூழ்கி யிறப்பதினும் போர்க்களத்தில் வீழ்ந்திறப்பது மேல். இந்திரநாத் ! இன்றைக்குப் போர் புரியுந் துணிவு உம்மைச் சார்ந்தது" என்று சொன்னார்.

"இவ்வெளியோருக்கோ நான் பின்வாங்குவேன்" என்று சொல்லி, நூறு நூறு வீரர் ஒவ்வொரு வரிசை யாகத் தன் சைனியத்தை ஐந்து வரிசைகளாக்கி, அவை களை யொன்றன்பின்னொன்றாக அர்த்த சந்திரன் உருவம் போல் நிற்க வைத்தான். "முதல் வரிசையிலிருப்பவர்கள் முதலிற் போர் தொடங்கவேண்டும். அவர்கள் களைத்துப் போனால் பின்னுக்கு ஒதுங்கவேண்டியது. பிறகு இரண் டாவது வரிசையிலிருப்பவர்கள் முற்பட்டுப் போர்புரிய வேண்டியது ; அதன்பிறகு மூன்றாவது வரிசையிலுள்ளவர் கள் ; அவர்களுக்குப் பிறகு நான்காவது ; இவ்வாறாக ஒவ்வொரு வரிசையிலுள்ளவர்களும் முன்னணியிலுள்ளவர் களுக்கு இளைப்பாற இடங்கொடுக்கவேண்டும்" என்றிவ் விதமாய்ச் சைனியத்தை யொழுங்குபடுத்தி இந்திரநாதன்

தமது படையைச் சார்ந்தவ னென்று அவர்களறிந்தனர். அருகில் வந்ததும் அந்தச் சிப்பாய் கீழே குதித்தான். அவன் யிறங்கிய தட்சணமே, ஓடிவந்த கடும் வேகத்தினுல் பரிமா தொப்பென்று விழுந்து, இரண்டொரு முறை கனைத்துக் கால்களை யுதறிக்கொண் டுயிரைத் துறந்தது. வாயில்லாத அந்தப் பிராணியின் பரிதாபகரமான நிலைமையைக் கவனிக்க ஒருவருக்கும் அவகாசமிருக்கவில்லை. அந்தச் சிப்பாய் இராஜா தோடர்மாலுக்கு வணக்கஞ் செய்து பயத்தைக் காட்டும் குரலுடன், "மகராஜ்! மோசம், மோசம்! தாங்கள் இன்று இச்சமயத்தில் வெளிவரப்போகிறீர்களென்பது எப்படியோ பகைவருக்குத் தெரிந்தது. அவர்களுடைய இரண்டாயிரம் சைனியமும் அதோ—பாருங்கள்—அவர்கள் நம்மீது படை யெடுத்துவருவதை—." இதனைச் சொல்லியதும் அவனும் மூர்ச்சையுற்றுக் கீழே விழுந்தான்.

தோடர்மாலுடனிருந்த சிப்பாய்களெல்லோரும் பயந்துவிட்டனர். அவர் படைஞர்களுக்குத் தைரியம் உண்டாக்கி, "இப்படி யேன் பயப்படுகிறீர்கள்? துர்க்கத்தை நோக்கிச் செல்லுங்கள். தெரியலர் வந்து சேருவதற்கு முன்பே நாம் துர்க்கம் புகமுடியும்" என்றனர். இவ் வுத்தரவைக் கேட்டதும் எல்லோருடைய குதிரைகளும் துர்க்கத்தை நாடிப் பறக்கலாயின. பேரறிவாளனுகிய இந்திரநாதன் தூரத்தில் எழும் தூசியைக் கண்டு போர்ப் பறை முழக்கலானுன். அவனுடைய முக்கியமான ஐந்நூறு வீரர்கள் தயாராய்த் துர்க்கத்திற்கு வெளியிலிருக்கும் மாந்தோப்பில் வந்து நின்றுகொண்டிருந்தனர். அவர்களை யழைத்துக் கொண்டு அவன் தோடர்மாலை வந்தடைந்து, "மகராஜ்! உத்தரவானுல் என்னுடைய இந்தச் சேனையைக்கொண்டு முன்னணியில் நின்று சற்றுநேரம் சத்துருக்களை மறைத்துக் கொண்டிருப்பேன். அதற்குள் தாங்கள் சுலபமாய்த் துர்க் கத்தில் பிரவேசித்துவிடலாம்" என்று சொன்னுன்.

அவர் கம்பீரமான தொனியுடன், "இந்திரநாத்! போரில் இந்தத் தோடர்மால் ஒருபோதும் புறங்காட்டி யோடமாட்டான். ஆனுல், காரணமின்றி யுயிரை யிழப்பது யுத்தமன்று ; நரஹத்தி" என்று அவனுக்குச் சொன்னுர்.

பின் சத்துருக்களை யெதிர்த்தான். புறத்தில் அகழ் இருந்தமை யால் அங்கிருந்து யாரேனும் வருவார்களெனப் பயப்பட வேண்டிய காரணமிருக்கவில்லை. அகழியி னருகிலிருந்த சில மரங்களைத் தறித்துச் சிலர் புதிய பாலம் கட்டிக் கொண்டிருந்தனர். இதற்குள் நேரலர் வந்து நெருங்கினர். இந்திரநாதனுடைய உள்ளத்தில் உற்சாகம் நிறைந்தது.

கடந்த மூன்று நான்கு மாத காலமாய்ச் சத்துருக்கள் முங்கேரியைச் சூழ்ந்துகொண்டிருந்தனர். இன்றுவரை யில் பன்முறை சமர் நடந்தது; இன்று இருபக்கத்தாரும் காட்டிய திறமையைப்போல இதற்குமுன் ஒரு நாளும் நேர வில்லை வியூஹத்தைக் கலைத்துக்கொண்டு அப்புறம் போனால் இராஜா தோடர்மாலைச் சிறைப்படுத்திவிடலா மென்னும் எண்ணத்துடன், கடல் அலைகளைப் போலப் பகைவர் ஒருவர்பின் னொருவராக வந்து போர்புரியலானார் கள்; ஆயினும் வியூஹம் ஒன்றும் கலையவில்லை. கடற்கரையில் வந்து மோதும் அலைகள் மீண்டும் எவ்வாறு பின் செல் கின்றனவோ அவ்வாறே தாக்கிய பகைவர்கள் பின்னுக்குச் சென்றுகொண்டிருந்தனர்.

பகைவர்களுடைய தொகை மிகப் பெரியதா யிருந்த போதிலும், அது அவர்களுக்கொன்றும் பயன்படவில்லை. காரணம் இந்திரநாதன் வெகு நுட்ப புத்தியுடன் அமைத் திருந்த வியூஹத்தின் அமைப்பே யாகும். அவன் தன் சைனியத்தை நிற்கவைத்திருந்த இடமும் மிகவும் குறுகலா யிருந்தபடியால், சத்துருக்களுடைய இரண்டாயிரம் வீரர் களும் அங்கு வந்து போர்புரிய இயலவில்லை. ஆயினும் பகைவர்கள் இன்று மிகவும் உறுதியுடன் போர் செய்தனர். இடியேறுபோற் கர்ஜித்துத் தமது வீர மதத்தால்அடிக்கடி வியூஹத்தைக் கலக்க முயன்றுகொண்டிருந்தனர். இந்திர நாதனுடைய மறவரும் திறமையிற் குறைந்தவர்களல்லர். அதிலும் இன்று இராஜா தோடர்மாலுடைய பார்வையின் கீழிருந்தனர்; அதனால் அவர்களின் உற்சாகமும் அதிக மாகவே யிருந்தது. இந்திரநாதனுடைய குதிரை, வியூஹத் தின் ஒரு முனையிலிருந்து மறு முனைக்கு ஓய்வின்றி யோடிக்

கொண்டிருந்தது. எங்கெங்குப் பகைவர்கள் அதிக வலிமையைக் காட்டினரோ, அங்கங்கு இந்திரநாதன் தான் நேரே போய்ப் போர்புரிந்தான். இடையிடையே, "சுபேதார் நேராக வந்து உங்களுடைய வீரத்தைக் கவனித்துக்கொண்டிருக்கிறார். அவரைப் பாதுகாக்கும் பொறுப்பு உங்கள் தலையிலிருக்கிறது. டில்லீசுவரனுடைய பேரும் புகழும் இன்று உங்கள் கையிலிருக்கின்றன" என்று உரக்கப் பேசித் தன் படைஞரை உற்சாகப்படுத்திக்கொண்டிருந்தான். இச்செயலால் அவனுடைய படைவீரர்களுக்குக் கிளர்ச்சி மிகுந்து பெரு முழக்கம் விளைந்தது. பகைவர்களுடைய உள்ளம் நடுக்கமுற்றது.

ஆயினும், வீரர் இரண்டாயிரவரை ஓர் ஐந்நூற்றுவர் எம்மட்டும் எதிர்ப்பர்? இந்திரநாதனுடைய மறவர் ஒவ்வொருவராய்க் கீழே விழலாயினர். பகைவர் பக்கத்திலும் பலர் மாண்டனர்; இரண்டாயிரவரில் ஓர் இருநூற்றுவர் காயம் பட்டு வீழ்ந்தபோதிலும் அதில் ஒரு குறைவும் தோன்றுது. தங்கள் படையின் நிலைமையோ மிகக் குறைந்து காணப்பட்டது. இதைக் கண்டு இராஜா தோடர்மால் மிகக் கவலையிலாழ்ந்தனர். இந்திரநாதனை யருகிலழைத்து, "இந்திரநாத்! சைனியத்திலுள்ள வீரர்களைப் பார்! எப்படி விழுந்துகொண்டிருக்கின்றனர்! எப்படிக் காயப்படுகின்றனர்! இனி யிவர்கள் பின் வாங்கிப் பெயர்வதுறுதி" என்று சொன்னர்.

இதைக் கேட்டு இந்திரநாதனுடைய முகம் சிவந்தது. அவன் "மகராஜ்! நான் என் படைஞர்களுக்குப் பகைவர்பால் முகங்கொடுத்துப் போர்புரியக் கற்பித்திருக்கிறேன். அவர்கள் புறங்காட்டியோடும் பயங்காளிகளுமல்லர். இதில் ஒரு வீரன் எஞ்சியிருப்பினும் அவனும் பகைவனுக்குப் புறங்கொடான்" என்றுன்.

மெல்ல மெல்ல ரணரங்கத்தின்மீது மாலை நிழல் பரவலாயிற்று; இந்திரநாதன் நிர்ணயித்திருந்த அரிய அணிவகுப்பு அப்படியே கலையாமலிருந்தது. இரண்டாவது வரிசை அயர்ந்துபோனல், அடுத்தது முந்தும். இவ்வாறு

நெடிது போர் நடந்தது. வரிசைகள் குறுகக் குறுக, அதிலிருக்கும் மறவர்களின் வீரமும் உற்சாகமும் அதிகரித்துக் கொண்டேவந்தது. பகைவர் பக்கத்தார் மிகவும் பயங்கரமான முழக்கம் செய்துகொண்டு கடைசியாய் ஒருமுறை வெகு வேகத்துடன் தாக்கத் தொடங்கினர். நான்கு திசைகளும் நடுக்கமுற்றன. குதிரைகளின் காலடிச் சத்தத்தால் பூமி யதிர்ந்தது. புழுதிப் படலம் வானை மறைத்தது. இந்திரநாதனுடைய சேனை வியூஹம் அப்பொழுதும் அசையாமல் நின்றது.

இதற்குள் பாலத்தின் வேலையும் முடிந்தது. இராஜா தோடர்மால் அகழைக் கடந்து அக்கரையை அடைந்தனர். அவர் க்ஷேமமாய்த் துர்க்கத்தில் சென்றனரெனக் கேட்டு இந்திரநாதனுடைய சைனியங்கள் ஆனந்தப் பரவசமாய்ப் பேரிடிமுழக்கம் முழக்கின. அம் முழக்கம் பகைவரின் கூடாரத்திலும் எட்டியது. அதைக் கேட்டு அங்குள்ளார் எந்த உத்தேசத்துடன் இரண்டாயிரம் சிப்பாய்களை அனுப்பினரோ அவ்வுத்தேசம் பயனற்றதாயிற்றென்று கருதினர்.

இராஜா தோடர்மால் பாலத்தைக் கடந்து செல்லும் வரையில் இந்திரநாதன் ஏகாக்கிர திருஷ்டியுடன் அவரைப் பார்த்துக்கொண்டிருந்தான். அத்தருணத்தில் அவன் மார்பில் சத்துருக்களின் அம்பு ஒன்று பாயவே, அவன் திடீரெனக் கீழே விழுந்தனன். வீரர்கள் அவனருகில் ஓடிவந்து கணையைப் பிடுங்கியெடுத்தனர். உதிரத்தால் அவன் உடம்பெல்லாம் நனைந்து, மூர்ச்சை யடைந்திருந்தான்.

இந்திரநாதனுடைய சைனியத்திற் பெரும்பாலோர் வாராவதியைக் கடந்துட்புகுந்தனர். பகைவர்களுட் சிலர் இந்திரநாதன் கீழே விழுந்ததைக் கண்டு அவன் பக்கல் ஓடிவந்தனர்; அங்கிருந்த வீரர்களை யெளிதிற் கண்டதுண்டமாக்கித் தமது கூடாரத்திற்கு அவனைத் தூக்கிச் சென்றனர். காவிரி கடந்தும் கைவாய்க்காலில் நழுவினதுபோல் வெற்றிபெறுந்தறுவாயில் ஊழ்வலி வசத்தால் ஒன்னலர் கைப்பட்டுக் கைதியானுன் இந்திரநாதன்.

பாசறைச் சிறை

பிரக்ஞையற்ற நிலைமையில் பகைவர்கள் இந்திர நாதனைச் சிறைபிடித்துத் தங்கள் பாசறைக்குக் கொண்டுவந்தனர். வெகுநேரம் பொறுத்து இந்திரநாதனுக்குப் பிரக்ஞை வந்தது. அவன் கண்களைத் திறந்து சுற்றுமுற்றும் பார்த்தான். பகையினத்தார் அங்குப் புடை சூழ உட்கார்ந்திருந்தனர். எதிரில் உயரிய தவிசொன்றில் மாசுமி வீற்றிருந்தான். அவனைச் சுற்றிலும் பெரிய பெரிய அமீர்களும், மற்ற உத்தியோகஸ்தர்களும் தத்தம் தகுதிக்கேற்றபடி யுட்கார்ந்திருந்தனர். இராஜா தோடர்மாலின் சேனையிலிருந்து வந்த ஒற்றர் இருவரும் அக் கூட்டத்திற் காணப்பட்டனர். இந்திரநாதனுடைய பின்புறத்தில் ஒரு கொலையாளி கையில் ஒரு பெரிய கோடரி வைத்துக்கொண்டு ஒரே முகமான பார்வையுடன் தன் யஜமானன் முகத்தை இமை கொட்டாமற் பார்த்துக்கொண்டிருந்தான். கட்டளை அல்லது சூசனை யெப்பொழுது பிறக்கும், இந்தப் பகைவனின் தலையை யெப்பொழுது வெட்டுவோமென்று அவன் கவனித்துக்கொண்டு நின்றான். இந்தப் பயங்கரமான காட்சியைக் கண்டு இந்திரநாதன் ஒரு சிறிதும் அஞ்சவில்லை. தீவிரமான பார்வையுடன் அவன் மாசுமியைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

இந்திரநாதனுக்குப் பிரக்ஞை வந்ததைக் கண்டு மாசுமி கம்பீரமான குரலுடன், "இந்திரநாத்! நீ தீர புருஷனாயிருக்கிறாய்; இருந்தும் நீ இராஜத்துரோகம் செய்திருக்கிறாய். இராஜத்துரோகம் செய்பவனுக்குச் சிரச்சேதத்தைத் தவிர வேறு தண்டனை யில்லை யென்பது உனக்குத் தெரிந்தே யிருக்கும்" என்றான்.

இந்திரநாதன் :—வீரர்கள் ஒரு நாளும் மரணத்துக்கு அஞ்சார். உன் இஷ்டப்படி எது வேண்டினும் செய்; நான் இராஜத்துரோகியல்லன்.

மாசுமி :—தோடர்மாலுடன் சேர்ந்து வங்க தேசத்திய ஜாகீர்தார்களுக்கு விரோதமாய் உடைவாளைக் கையிலெடுப்பது இராஜத்துரோகமல்லவா?

இந்திரநாதன் :—வங்கதேசத்துப் பாதுஷா, பரதகண்டத்தின் தனிச்சக்கரவர்த்தி. அவர் பக்கமாய் இராஜத்துரோகிகளான ஜாகீர்தார்களுடன் நான் யுத்தம் புரிந்தேன்.

"இந்திரநாதன் தானாகவே யமனுக்கு அழைப்புப் பத்திரிகை யனுப்புகிறான். மாசுமி இப்பொழுது அவனைச் சிரச்சேதம் செய்ய உத்தரவு கொடுப்பான்" என அங்கிருந்தோரனைவருங் கருதினர். அந்த உதார குணவானான மாசுமி இந்திரநாதனது நேர்மையைக் கண்டு கொஞ்சமுங் கோபித்துக்கொள்ளவில்லை. அதற்கு மாறாக மகிழ்ச்சியுடனும், பொறுமையுடனும், "போர்வீர! உன்னுடைய துணிவுக்காக நான் உன்னை மன்னிக்கிறேன். உன்னுடைய வீரத்தைக் கண்டு எனக்கு மிதமிஞ்சின களிப் புண்டாயிருக்கிறது; வங்கதேசத்திலுள்ள ஜாகீர்தார்களை நீ மறுபடியும் இராஜத் துரோகிகள் என்னாதே. நாங்கள் மொகலாய வமிசத்தில் ஜனித்தவர்கள்; வங்கதேசத்தை ஜெயித்தவர்கள்; எங்களுடைய புயபலத்தால் இந்தத் தேசத்தை ஜெயித்திருக்கிறோம். இந்தத் தேசத்தின் உண்மையான அரசர்கள் நாங்களே" என்று பதிலுரைத்தான்.

இந்திரநாதன் :—நீங்கள் வங்கதேசத்தை ஜெயித்தீர்களென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்; மன்னாதிமன்னரான அக்பர் பாதுஷாவின் பிரதாபத்தால் உங்களுக்கு அந்த வெற்றி கிடைத்ததென்பதை நீங்கள் மறந்துவிடாதீர்கள். அந்தச் சார்வபௌமனுக்கு விரோதமாய்க் கலகம் செய்துகொண்டு நீங்கள் இராஜத்துரோகஞ் செய்கிறீர்கள். கடவுளுடைய திருவுள்ளத்துக்கு மாறாக நடந்து இந்த அழகிய வங்கதேசத்தை நீங்கள் ஏன் உதிரத்தால் நனையச்செய்கிறீர்கள்?

மாசுமி :—வாயை மூடு! உன்னுடைய பிழைப்பும் இறப்பும் என் கையிலிருக்கிறது. எனக்கெதிரில் இப்படித் தடித்த வார்த்தை பேசுகிறாயா? உனக்கு உயிரிற் கருத்தில்லை போலும்!

இந்திரநாதன் :—எனக்கு உயிரின் இலக்ஷியமிருக்கிறது. எனினும், தற்போது உங்கள் கையில் அகப்பட்டுக்கொண்

டிருக்கிறேன். ஆதலால் உயிரிடத்து நான் ஆசைவைப்பதிற் பயனில்லை.

வெகுநேரம் பேசியதால் இந்திரநாதனுக்குக் களைப்புண்டாயிற்று. அவனுடைய மார்பிலிருக்கும் காயத்திலிருந்து மறுபடியும் உதிரம் பெருக, உடல் தளர்வடைந்துகொண்டிருந்தது. அவன் மீண்டும் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான்.

மாசுமி சுபாவத்திற் கெட்டவனல்லன். காயம்பட்டுப் பலவீனமாய் அசைவற்றுக் கிடக்கும் அந்தப் போர்வீரனைச் சிரச்சேதஞ் செய்விக்க அவனுக்கு மனம் வராமையால், "இவனைத் தற்போது சிறைச்சாலைக்குக் கொண்டுபோ" வென உத்தரவிட்டனன். உடனே இந்திரநாதன் சிறைக் கோட்டம் சேர்ப்பிக்கப்பட்டான்.

ஒரு சிறு இருட்டறைக்குள் ஒரு சூரன் பாயின்மேற் படுத்திருந்தான். சிறைச்சாலையிலிருக்கும் ஒரு சிறு பலகணி வழியாய் இளங்கதிரவனின் அழகிய கிரணங்கள் உள்ளே சென்றன மிகவும் நுட்பமான கணக்கற்ற பரமாணுக்கள் அக்கிரணங்களில் விளையாடிக்கொண்டும், மேலும் கீழும் பறந்துகொண்டு மிருந்தன. அதே சமயத்தில் இடையிடையே ஒரு பறவை அப்பலகணியில் வந்துட்காரும்; ஒரு கணத்தில் பறந்துபோய்விடும். அப்பறவை சிறைவாசிகளைப் போலல்லாமல், இரு சிறைகளையும் விரித்து, மரத்தின் ஒரு கிளையிலிருந்து மறு கிளைக்குத் தாவும். அங்கிருந்து வேகமாய்ப் பலகணிக்குப் பறந்து வந்து தங்கும். பாயிற் கிடந்த அந்தச் சூரன் பலகணியினருகில் எதையோ பார்த்துக்கொண்டிருந்தான். எதனைப் பார்த்துக்கொண்டிருந்தனன் ? கிரணத்தில் விளையாடும் பரமாணுக்களின் வேடிக்கையைப் பார்த்துக்கொண்டிருந்தானு? பலகணியின் அருகில் வந்து உட்கார்ந்து, உடனே சிறைகளை விரித்துப் பறந்துபோய்க் கொண்டிருக்கும் அப்புள்ளினைத் தொடர்ந்து தன் மனமென்னும் சிறகை விரித்து அங்குமிங்கும் பறந்து

கொண்டிருந்தானு? இல்லை, இல்லை. அவன் வேறு கவலையி லாழ்ந்திருந்தான். என்ன கவலை? எதிரிகள் தன்னைக் கொன்றுவிடுவார்கள்; தான் இறந்துபோக நேரும் என்ருே?

இந்திரநாதன் வெகு தீரபுருஷன். தன் மரணத்திற்குப் பயப்படும் பேதையல்லன். அவனுடைய மரணத்தால் வேறு சிலருக்கு ஆற்ருெணுக் கிலேசம் உண்டாகுமே யென் கிற சிந்தையால் அவனுடைய உள்ளம் மிகவும் அல்லற்பட் டுக்கொண்டிருந்தது. தளர்ந்த முதுமைப் பருவத்தில் தனது தனிப் புதல்வனின் முடிவைக் கேட்டால், பிதாவாகிய நகேந்திரநாத் அக்கணமே உயிர்துறப்பார். நகேந்திர நாதருக்கு வேருெருவருமிலர்: மனைவி இல்லை; மகளில்லை; வேறு புத்திரனுமில்லை. இந்த ஒரு கான்முளையின் முகத் தைப் பார்த் துயிர்த்திருக்கு மவர் இறந்துபடின் இச்சா புரத்து அரண்மனை பாழடையும். அன்றியும் அந்தப் பேதைப் பெண்மணி—தூய அன்பின் பிழம்பு—குடிசையில் வசிக்கும் அநாதையாகிய ஸாரலாவின் கதி யென்னவாகும்? ஏழாவது பௌர்ணமிக்குள் திரும்பிப் போய் அவளைப் பார்ப் பதாகத் தான் வாக்குக் கொடுத்திருந்தான். பௌர்ணமி கடந்துபோய்விடும்; ஆவலுடன் எதிர்பார்த்துப் பார்த்துப் பிறகு அப்பெண்மணி கண்களை மூடிவிடுவாள்; தண்ணீ ரின்றி யுலர்ந்துவிடும் தாமரையின் மொட்டைப்போல அவளுடைய இதயமும் உலர்ந்துபோய்விடும்! இத்தகைய எண்ணங்களால் இந்திரநாதனுடைய தலை சுற்றலாயிற்று. அவன் கண்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லை. தலையிற் கையை வைத்துக்கொண்டு துக்கம் மேலிட, "எய்ப்பினில் வைப்பாம் இறைவ! விச்சின்றியே விளைவுசெய்யும் வித்தக! உன் இச்சையின்படி செய். இன்பமோ, துன்பமோ எதை நீ யருளுகிருயோ, அதை அமைதியாகப் பெற்றுக்கொள்ளும் அத்தகுதியைத் தவிர வேறு சுதந்திரம் ஆன்ம வர்க்கங் களுக்கு ஏது?" என்று இறைவனை இறைஞ்சினுன்.

பயிற்சி

[ஆசிரியர் திரு. ராமேச சந்திரதத்தர், ஐ. ஸி. எஸ்., ஸி. ஐ. இ. எழுதிய பல நூல்களுள் வங்க விஜேதா என்பது ஒன்று. வங்காளியில் எழுதப்பட்ட அந்நூலைத் தழுவி இயற்றப்பட்டதாகும் இராஜா தோடர்மால் என்னும் ஓர் அரிய வரலாற்றுப் புனைகதை. இப்பாடம் அக்கதையினின்று தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதியாகும்.]

i. கருத்துணர்தல் :

1. மாசுமியின் பெருந்தன்மை வெளிப்படும் வாக்கியங்களைக் கண்டறிந்தெழுதுக.

2. இந்திரநாதன் இயற்றிய வீரச்செயல் யாது ?

3. சிறையில் இந்திரநாதன் எதனைப்பற்றிக் கவலைகொண்டிருந்தான் ?

ii. மொழிப் பயிற்சி :

1. அகராதியில் பொருள் கண்டறிக :— வில்லேருழவன் ; பாசறை, பலகணி, ஆதவன், வெரிந்.

2. 'பகைவர்' - இதே பொருள் உள்ள வேறு 5 சொற்கள் இப்பாடத்திலிருந்து கண்டறிந்து எழுதுக.

iii. பிற நூல் ஆராய்ச்சி :

இராஜா தோடர்மால் என்னும் முழுநூலையும் படித்தறிக.

7. சொற்பொழிவு*

திரு. வி. கலியாணசுந்தர முதலியார்

அன்பார்ந்த சகோதரிகளே, சகோதரர்களே !

தஞ்சையும்-திருச்சியும் ஒன்றிக் கூட்டிய தமிழர் மகா நாட்டுச் சார்பில், இன்று இவண் ஈண்டியுள்ள தமிழ் மாணுக்கர் மகாநாட்டில் தலைமை வகிக்கும் பேற்றை எனக்கு வழங்கிய உங்கள் அனைவர்க்கும் எனது நன்றி யறிதலான வணக்கத்தைச் செலுத்துகிறேன்.........உடல் உரமும் உள்ளக் கிளர்ச்சியுங் குன்றி ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடக்கும் எனது தலைமையை நீங்கள் விழைந்தது எற்றுக்கு என்பது விளங்கவில்லை. உங்கள் துணைகொண்டு நீங்கள் குறித்த கடனுற்ற ஒல்லும் வகை முயல்கிறேன். குற்றங் குறைகள் நிகழுமேல் மன்னிப்பீர்களாக.

* * * * *

வருங்கால உலகுக்குரிய ஆக்கங்களைத் தம்மாட்டு மாணுற ஆக்கும் முயற்சியில் தலைப்பட்டுள்ளோர் மாணுக்கராவர் என்று சுருங்கச் சொல்லலாம். இப்பருவ முடைய நீங்களல்லவோ நாட்டின் செல்வம் ?

வருங்கால உலகை ஆக்கும் வாய்ப்பு உங்களிடமிருக் கிறதெனில், உங்கள் பொறுப்பு எத்தகைத்து என்பதை உன்னுங்கள். உங்கள் பொறுப்பு, பெரிது ! பெரிது ! கட லினும் பெரிது ! இப்பொறுப்புவாய்ந்த மாணுக்கர்கட்குரிய கடமைகள் பலப்பல. அவைகளை இம்மகாநாட்டுத் தலைமை யுரையில் எங்ஙனம் விரித்துரைப்பது ? இன்றியமையாத மிகச் சிலவற்றைமட்டும் ஈண்டுச் சுருங்கச்சொல்ல முயல் கிறேன்.

---

* துறையூரில் கூடிய தஞ்சை—திருச்சி ஜில்லா தமிழ் மாணுக்கர் மகாநாட்டில் நிகழ்த்திய சொற்பொழிவின் பகுதி.

[உடலோம்பல்]

'சுவரை வைத்தே சித்திரம் எழுதல் வேண்டும்,' என்பது பழமொழி. எதற்கும் உடல் நலம் வேண்டற்பாலது. பெரும் பொறுப்பை ஏற்கப்போகும் நீங்கள் உடல்நலனைப் பேணுதல் வேண்டுமா, வேண்டாமா என்பதை உன்னுங்கள். கிளர் ஈரலும், தடைபடாக் குருதியோட்டமும், எஃகு நரம்பும், ஏக்கழுத்தும், பீடு நடையும் உடையவர்களாக நீங்கள் திகழ்தல் வேண்டும்.

சில மாணுக்கர்கள் உடலை ஓம்பாது, இரவும் பகலும் ஏடுகளைக் கட்டியழுவதைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் வாழ்வு இரங்கத்தக்கதாக முடியும். சில விடங்களில் அவ்வாறு முடிந்ததும் எனக்குத் தெரியும். ஆண்டவன் அளித்த அரிய உடலை நல்வழியில் ஓம்பாதாரை இயற்கையன்னை ஒறுத்தே தீர்வாள். அவ்வொறுத்தலுக்கு ஆளாகாத வழியில் உடலை ஓம்ப வேண்டுவது உங்கள் கடன்; தலையாய கடன் என்றுங் கூறுவேன்.

மாணுக்கர்கள் பார்வைக்கினியரா யிருத்தல் வேண்டும். இளமை அழகுள்ள இடத்தில் இனிமையுண்டு. மாணுக்கர் உடலில் இளமை மணங் கமழின் அதன் கண் அழகொளி வீசும். "கண்கொளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர் விரிப்ப - விண்கொள்ளாப் பேரொளியான்" என வருஉஞ் சேக்கிழார் மொழியின் பொருளாக மாணுக்கர்கள் இலங்க விரும்புவார்கள் என்றே நினைக்கிறேன். கம்பனும் "கந்தனை யனையவர் கலைதெரி கழகம்" என்று கூறியதும் ஈண்டுக் கருதற்பாற்று.

இளமை அழகுக்கு இயற்கைவாழ்வு வேண்டற்பாலது. அதற்கு முதலாவது ஒழுங்கு வேண்டும். இயற்கை நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஒழுங்கு என்னுங் கோட்டின் வழியே இயங்குகிறது. ஆகவே, இயற்கையோடியைந்தவாழ்விற்கு ஒழுங்கு இன்றியமையாதது.

நம்மிடத்தில் ஒழுங்கில்லை என்று உலகமே நம்மீது பழி சுமத்துகிறது. லார்ட் நார்த்கிளிப் என்பார் "கண்டவிடங்களில் எச்சில் துப்புதலும், வாழ்வில் ஒழுங்கீனமும் இந்தியரை விட்டகலாத குற்றங்கள்" என்னும் கருத்துப்பட ஒருபோது சொற்றனர். இக்குற்றங்கள் நம்பால் ஊடுருவிக் குருதியிற் கலந்து நிற்றல் உண்மையே. "ஒழுங்கு ஊராளும்" என்பது பழமொழி. ஐரோப்பியர் வாழ்வில் ஒழுங்கு என்பது ஊடுருவிப் பாய்ந்து நிற்கிறது. அவர் தம் ஒழுங்கு, ஊரையும் ஆளுகிறது; உலகத்தையும் ஆளுகிறது. அவர்களிடத்திலிருந்து நாம் கற்கத்தக்கனவற்றுள் ஒழுங்கும் ஒன்று.

ஒழுங்கை மாணுக்கர்கள் உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகுவார்களானல், வருங்காலத்தில் நாடே நன்னிலை எய்தும். படுக்கை விட்டெழுதல், உலவல், உண்ணல், படித்தல், ஆடல், உறங்கல் முதலியன குறித்த காலத்தில் நிகழுமாறு பயிற்சி செய்யின், அவைகளினின்றும் வாழ்வு நிகழ்ச்சிகளெல்லாம ஒழுங்கிற்கு வரும்.

காலையிலும் மாலையிலும் உலவுதல் நல்லது. உலா வரவில் கதிரொளியில் மூழ்கலும், காற்றில் தோய்தலும் நிகழ்கின்றன. உலவ இயலாதவர் ஏதாயினும் வேறுவிதப் பயிற்சி செய்யலாம். அன்னர் குதிரை ஏற்றம், நீச்சு, சிலம்பம், ஆசனம் முதலியவற்றில் ஏதாவதொன்றைக் கொள்ளலாம். பயிற்சியின் பின்னை நீராடுதல் சிறப்பு.

தீட்டிய அரிசியைத் தள்க; கொழியல் குத்தரிசியைக் கொள்க. கீரை, காய் கனிகளை உண்க. காப்பி, தீ கொக்கோ' முதலிய பானங்கட்குப் பதிலாக நீர், மோர் இளநீர் முதலிய அருந்துக. வாதுமை, நிலக்கடலை, தேங்காய் இவைகளில் கொழுமையுண்டு. எதையும் அளவறிந்து உண்பது சால்பு. மட்பாண்டச் சமையல் நல்லது. பசியெழுந்த பின்னை உண்ணும் பயிற்சி உடலோம்புவதாகும். வேளைக்கு

வேளை பசியெழும்புவது உடலோம்பு முறையைப் பொறுத்திருக்கிறது. சுருட்டு, பீடி, சிகரெட் முதலியவற்றைக் கனவிலுங் கருதாதேயுங்கள். தரைச்செலவு, கடற்செலவு முதலியனவும் உடலோம்பலுக்குத் துணை செய்வன.

உடற்பயிற்சியை ஒழுங்காகச் செய்தும், பொருந்திய உணவைத் திருந்த உண்டும், நல்லெண்ணங்களை நெஞ்சில் உலவச்செய்யப் பயிலவேண்டும். இல்லையேல், உடல் நலனுருது. தீய எண்ணங்கள் நரப்புக்கட்டைக் குலைத்து, நரப்புக் குழாய்களில் நஞ்சூட்டி உறுப்புக்களை அரிக்கும்.

[கல்வி]

உடலோம்பலுடன், அறிவோம்பலும் நிகழ்ந்துவரல் வேண்டும். இல்லையேல் வாழ்வில் அறிவியற் கூறுகள் இடர்ப்பட நேரும். அறிவோம்பலுக்குக் கல்வி வேண்டற்பாலது. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். அக் கல்விப்பயிற்சிக்குரிய பருவம் இளமைப்பருவம் என்பதை விளக்க வேண்டுவதில்லை. இதுபற்றியே "இளமையிற் கல்" என்னும் முதுமொழி பிறந்தது.

இந்நாளில் பெரிதும் ஏட்டுக் கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை யாண்டும் நிலவி வருகிறது. ஏட்டுக் கல்வி மட்டும் கல்வியாகாது. தொழிற் கல்வி முதலியனவுங் கல்வியின் பாற்பட்டனவே.

கல்வித் துறைகள் பல திறத்தன. அவைகளில் ஒவ்வொன்று ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும், பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும்.

இக்காலத்தில் கல்லூரியில் படிப்போர் தொகை நாளுக்கு நாள் பெருகுதல் கண்கூடு. கல்விப் பெருக்கு போற்றற் குரியதே. ஆனல் பெரும் பான்மையோர் அக் கல்வியை எந்நோக்கத்துடன் பயில்கிருர் ? உத்தியோக

நோக்குடன் என்று சொல்ல வேண்டுவதில்லை. அந்நோக்குடன் கல்வி பயின்றோர் நிலை எவ்வாறிருக்கிறது? அவர் தம் நிலை இரங்கத்தக்கதாயிருக்கிறது. வேலையின் பொருட்டு இளங்கொழுந்துகள் படுந்துன்பம் அளவிடற் பாலதன்று. இவ்வேளையில், உத்தியோக நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டாமென்றும், அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயலுதல் வேண்டுமென்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்த வண்ணமா யிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணுக்கர்கள் செவிசாய்த்து நடப்பார்களாக; செவிசாய்த்து அறிவு விளக்கத்துக்கென கல்வி பயின்று அவ்வறிவை நாட்டுத் தொழிற்றுறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவார்களாக.

* * * * *

தாய் மொழியில் கல்வி பெறுவது இயற்கை. தாய் மொழிப்புலமை நிரம்பப்பெற்ற பின்னை வேறு பல மொழிகளைப் பயிலலாம்; ஆராயலாம். முதல் முதல் தாய் மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். "தாய் நாடு" என்னும் பெயர், தாய்மொழியைக்கொண்டே பிறப்பது. அத்தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ?

* * *

"தமிழ் மொழியில் அறிவுக்கலைகள் இல்லை" என்னும் பழம்பாட்டை நிறுத்தி "அக்கலைகளைத் தமிழில் பெயர்த்து எழுதித் தாய்மொழிக்கு ஆக்கந்தேடுவோம்" என்னும் புதுப்பாட்டைப் பாடுமாறு சகோதரர்களைக் கேட்டுக் கொள்கிறேன்........பலதுறைக் கலைகள் தாய்மொழிவாயிலாகப் போதிக்கப் பட்டால் மாணுக்கர் பலர் விரைவில் எளிதில் அவ்வக்கலைகளில் வல்லவராவர். இப்பொழுதுகலைகளைப் பயிலுதற்கு வேறு மொழிப் புலமையும் தேவையாயிருக்கிறது. அதனால் கலைகளின் அறிவு, தமிழ் மக்களிடைப் பரவாமற் போகிறது. மாணுக்கர்கள் அறிவுக் கலை

களைப் பயிலுவதில் பேரூக்கஞ் செலுத்துவார்களாக. அவைகளால் வாழ்வுக்கும், நாட்டுக்கும் பல வழியிலும் நலன் உண்டு.

* * * *

மனத்துக்கு இயற்கை இன்பமூட்டி ஆறுதலும் அமைதியும் அளிக்கவல்ல முறையில் பழம் பெருந் தமிழ்க் காவியங்கள் அமைந்திருக்கின்றன. பரபரப்பு மிகுந்த இக்கால உலகில் அத்தகைக் காவியங்கள் அமைதல் அரிது. இளமைக் காவியப் பயிற்சி பின்னே வாழ்வில் பெருந்துணை செய்யும் என்பதில் ஐயமில்லை.

ஓவியத் துறையிலும் மாணக்கர்கள் பயிற்சிபெற முயல்வார்களாக. ஓவியத்துக்கும் காவியத்துக்கும் வேற்றுமை பெரிதும் இல்லை. இயற்கை நுட்பங்கள் ஓவியமாக வரையப் படுகின்றன. காவியங்களில் அவைகள் எழுத்தால் எழுதப் படுகின்றன. இரண்டும் இயற்கைப் படங்களே யாகும். இவைகள் நம்மையும் இயற்கையையும் ஒன்று படுத்தப் பாலம் போலத் துணைசெய்யும்.

ஏடுகளைப் பயில்வதுடன் நில்லாது ஓய்ந்த நேரங்களில் இயற்கை நிலையங்களிற் புகுந்து இயற்கைக் கழகத்தில் நின்று இயற்கைக் கல்வி பயில்வீர்களானல் இயற்கையோடியைந்த வாழ்வு நடத்த வல்லவர்களாவீர்கள். காடு செறிந்த ஒரு மலைமீதிவர்ந்து ஒரு மரத்தடியில் நின்று மண்ணையும் விண்ணையும் நோக்குங்கள். ஆண்டவன் இயற்கை ஓவியத்தைக்கண்டுகண்டு மகிழுங்கள்; மணவழங்கும் பரந்த பசுமையிலும், வெண்மையிலும், நீலத்திலும் விண் வழங்கும் நீலத்திலும் தோய்ந்து திளையுங்கள். காலையில் நீலக்கடலில் இள ஞாயிறு வானிலும், கடலிலும் செக்கர்உமிழ்ந்து எழுங்காட்சியைநெஞ்சில் எழுதுங்கள். அருவி முழவும், குயில் குரலும், வண்டிசையும், மயில் ஆலலும் மலர் மணமும், தேனினிமையும், தென்றல் வீசலும்

புலன்களுக்கு விருந்தாக இயற்கை அன்னையைப் பாருங்கள். இங்கே சூழ்ந்துள்ள செடி கொடி மரங்களையும், பறவைகளையும், விலங்குகளையும் உற்றுநோக்கிச் "சில செடிகள் பூமியில் பரந்தும், சில செடிகள் எழுந்து நின்றும், சில கொடிகள் நீண்டு நீண்டு படிந்தும், சில கொடிகள் சுருண்டு சுருண்டு படர்ந்தும் இருப்பதற்கும், சிலமரங்கட்கு நீள்கிளையும், சில மரங்கட்கு வீழும், கிளிக்கு வளைந்த மூக்கும், யானைக்குத் துதிக்கையும், மானிற்குக் கொம்பும் அமைந்திருப்பதற்கும் என்ன காரணம்" என்று உன்னுங்கள். அந்தியில் ஞாயிறு அமரும் கோலத்தையும், பறவைகள் பறந்து செல்வதையும், கால்நடைகளின் மணியோசையையுங் காணுங்கள்; கேளுங்கள். நீலவானில் வெண்திங்கள் தோன்றித் தண்ணிலவு பொழிவதை நோக்குங்கள். அந்நிலவு பசுமைக்கானிலும் பைங்கூழிலும் வெண்மணலிலும் நீலக்கடலிலும் படிந்து வழங்கும் அழகுக் காட்சியில் மூழ்குங்கள். மூழ்கி இன்புற்று, மலையினின்றும் இழிந்து, வென்றி அடல் விடைபோல் நடந்து வீடு சேருங்கள். இவ்வாறு இயற்கைக் கழகத்தில் பயின்று பயின்று, சங்கப்புலவர்கள், இளங்கோ, திருத்தக்கதேவர், திருஞான சம்பந்தர், ஆண்டாள், சேக்கிழார், கம்பன், பரஞ்சோதி முதலியோர் இயற்கைக் கோலத்தை எவ்வாறு எழுத்தோவியத்தில் இறக்கியிருக்கிறார்கள் என்று ஆராயுங்கள். பழைய கோவில்களிலும், மன்றங்களிலும் நுழைந்து, சிற்பர்கள் இயற்கைத்திருக் கோலத்தை எவ்வாறு ஓவியங்களில் வடித்திருக்கிறார்களென்பதையும், வரைந்திருக்கிறார்களென்பதையும் உணர ஓவியங்களை ஊன்றி நோக்குங்கள். நந்தமிழ்க் காவியங்களும் ஓவியங்களும் இயற்கை அமிழ்தாய் உயிரையும் உடலையும் ஓம்புவதை உணர்வீர்கள்.

இசைப் பயிற்சியும் இன்றியமையாதது. இசைபாட, இயற்கை சிலர்க்குத் துணை செய்யும்; சிலர்க்குத் துணை

செய்வதில்லை. அத்துணை பெருதார் இசை இன்பத்தை யாதல் நுகரப் பயில்வாராக. இரண்டு மில்லா வாழ்வு கொலை வாழ்வாகும்.

பழைய தமிழர்கள் இசைத்துறையின் நிலை கண்டவர்கள் என்று ஈண்டு இறுமாந்து கூறுகிறேன். தமிழ் யாழையும், குழலையும் என்னென்று சொல்வது? அந்த "ழ" கரங்களை நினைக்கும்போதே அமிழ்தூறுகிறது. கொடிய காட்டு வேழங்களையும் பாணர்தம் யாழ் மயக்குறச் செய்யுமாம். அவ்யாழ்எங்கே? இறந்துபட்டதுஎன்றுசொல்லவிரைந்து நிற்கிறோம். பழந்தமிழர்கள் நமக்கு வழங்கிய உயிர்ச் செல்வங்களை அழிக்கவோ பிற்காலத் தமிழர்களாகிய நாம் பிறந்தோம்? போனகலைகள் போக. உள்ள கலைகளை யாதல் காக்கும் எண்ணமாவது தற்காலத் தமிழர்களிடை எழுகிறதா? ஆவேசத்துக்கும் பரபரப்புக்கும் தீக்கிளர்ச்சிக்கும் இரையாகும் பாழ்நெஞ்சம்கலைகள்மீதுசெல்லுமா? தமிழ்த்தாயின் யாழுங் குழலும் சிறுமையுற்றுக் கிடக்கின்றன. 'ஹார்மோனிய' ஒலிகேட்குங் காது, குழலிசை கேட்க விரும்புங்கொல்!

இசைப்புலவர் தொகை நாட்டிற் பெருகப்பெருகநாடு பலவழியிலும் ஒழுங்கு பெறுதல் ஒருதலை. ஆகவே அத் துறைமீதும் மாணக்கர்கள்கருத்துச்செலுத்துவார்களாக.

நாடகக் கல்வி, வாழ்விற்கு வேண்டாம் என்று யான் கூறேன். இடைக்காலத்தில் நாடகக் கல்வியால் தீமை விளைந்தபோது அதைச் சிலர் அழிக்க முயன்றதுண்டு. தற்போது நாடகம் நன்னிலையிலில்லை என்பதை ஈண்டு விளக்கவேண்டுவதில்லை. நாடகத்துக்கு நல்வழியில் புத்துயிர் வழங்க மேல்நாட்டு நாடகக் கல்வியின் கூட்டுறவும் வேண்டற்பாலது. நாடகத்தை நல்வழிப்படுத்தி மாணக்கர்களை அதன்கண் தலைப்படுமாறு செய்யத் தமிழ்ப் பெரியோர்கள் முயல்வார்களாக.

"மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென் றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே."

— அப்பர்

* * *

சகோதரிகளே! சகோதரர்களே! இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளையிடுதற்கு என் மனம் எழவில்லை. இதுகாறும் பொறுமையுடன் என் புன்மொழிகளைச் செவிமடுத்த உங்கட்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரியதாகுக! வருங்கால உலகம் உங்களை எதிர்நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கஞ் செலுத்துங்கள்; நாட்டுக் காவியங்களுடன் உறவுகொண்டு, அவைகளின் இயற்கை அமிழ்தை யுண்ணுங்கள்; உங்களை நன்முறையில் பண்படுத்தித் தமிழ்த் தாய்க்குச் சேவைபுரிய விரைந்து நில்லுங்கள்; தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமாயிருக்கிறாள். இளம்பரிதிகளே! தமிழ்க் கதிர் பரப்பி எழுங்கள்.

"எவ்வுயிர்க்கும் அன்பாயிரு."

பயிற்சி

[தூய தமிழ்ச் சொற்கள் இன்னோசைபட இயைந்து, பொருட் செறிவுடன், ஆற்று நீர்ப் பெருக்கேன ஒரே நிகரான நடையில் இச் சொற் பொழிவு இயன்றிருத்தலை ஓர்க. இஃது புத்துயிரளிக்கும் ஆற்றல் வாய்ந்தது.]

1. சொற்பொழிவின் தொடக்கம், மேற்கொண்ட விஷயங்களைத் தொடர்புற முறைப் படுத்தி அமைத்தல், முடிப்புரை,—இப் பகுதிகளை ஆய்க.

2. உடலோம்பலைப் பற்றிக் கூறப்படுவனவற்றை நால்வகைத் தலைப்பில் பிரித்தமைக்க.

3. அறிவோம்பலைப் பற்றிய பகுதியில் ஒவ்வொரு பத்திக்கும் ஏற்ற தலைப்பிடுக.

8. பண்டைத் தமிழர் விளையாட்டுக்கள்

திரு. ஸி. கே. சுப்பிரமணிய முதலியார், பி. ஏ.

இனி அந்நாள் பொழுது போக்குக்காக அரசரும், பிறரும் மேற்கொண்ட விளையாட்டு முதலிய அனுபோகங்கள் யாவை என்று பார்த்தால் கழறிற்றறிவார் நயனாராகிய சேர அரசரும் சுந்தர மூர்த்திகளும் சேர்ந்த கூட்டத்திலே இவைகாணலாம். நிலைச்செண்டு ஆடுதல், பரிச்செண்டு வீசுதல், தகர்ப் பாய்ச்சல் நண்டருளல், வாரணப் போரும் பிறபுட்களின் அமர்த் தொழிலுங் காணல் முதலியவை மேம்பட்ட பொழுதுபோக்கு விளையாட்டுக்களாயின.

"பாடலாடல் இன்னியங்கள் பயிறல் முதலாம் பண்ணையினில்
நீடு மினிய விநோதங்கள்............................

நிகழ்விக்கக் கண்டு மகிழ்தல் ஒருவகைப் பொழுது போக்கு ஆகும்.

மேலே கண்டபடி செண்டாடும் மகிழ்வு ஒரு வகைப் பொழுது போக்கான விளையாட்டாக நமது பண்டைத் தமிழர் கொண்டு மகிழ்ந்தமை இந்நாட் பந்தாட்ட விளையாட்டுக்களோடு ஒப்பிட்டுக் காணத்தக்கதாம்.

நிலைச்செண்டு என்பது நின்ற நிலையிலிருந்தே பந்துகளை வீசி விளையாடுவது போலும் [தற்காலம் டென்னிஸ் முதலியன போல]. பரிச்செண்டு வீசுதல் குதிரைகளின் மீதிலிருந்து குறித்த விதிப்படி பந்தாடி மகிழ்தல் போலும். இதனை இந்நாள் இவ்வகை ஆட்டங்களுடன் ஒப்பிட்டுக்காணின், தமிழர்களது பண்டைக்கால நாகரிகம் தெற்றெனவிளங்கும்.

பாடல், ஆடல், பல இன்னியங்கள் பயிலுதல், மற்றும் நீடும் இனிய விநோதங்கள் என்பன இக்காலத்து அவ்வகையிலே உள்ள நாடகக் காட்சிகளையும், சினிமா முதலிய படக்காட்சிகளையும் நினைவூட்டுகின்றன.

ஆராமங்கள் அதாவது சோலைகளிலே உல்லாசமாகக் காலங் கழித்தலும், சிறு சோற்றுப் பெருஞ்சிறப்பும், நீர் விளையாட்டு, பொழில் விளையாட்டு வகைகளும், நமது முன்னோர்களின் மனங்களை மகிழ்வித்த பொழுது போக்கு விளையாட்டுக்களா யிருந்தன.

சிறுமியாராகிய பெண் மக்களின் விளையாட்டு வகைகளைத் தனியே பிரித்தும் அறிகின்றோம். பெண் மக்கள் வளர்ச்சிப் பருவத்திற் கேற்றவாறு பற்பல வெவ்வேறு விளையாட்டுக்களை மேற் கொள்வர்.

> தருந்தடக்கை முத்தொழிலோர் மனைகள்தொறும்
> இறைவனது தன்மை பாடிக்
> கருந்தடங்கண் ணார்கழல்பந்து அம்மானைப் பாட்டயரும்
> கழுமலமே''

என்ற திருஞான சம்பந்த சுவாமிகள் தேவாரம் இங்கே குறிக்கற்பாலதாம். இவ்விதம் கழலும், பந்தும், அம்மானையும் ஊசலும்பிறவும்ஆடும்போது, இறைவன் தன்மைகளை வாயினால் இசையப்பாடிக் கொண்டு விளையாடுவது வழக்கம்.

தெள்ளேணம், தோணோக்கம், பூவல்லி, உந்தி, ஊசல், அம்மானை முதலிய மகளிர்விளையாட்டுக்களையே பொருளாக வைத்து மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகப் பகுதிகளிலே, இவற்றில் இறைவன் புகழைப் பாடி ஆடுவதாகக் கூறியருளிய கருத்தும் இங்கே காணத் தக்கதாம். பெண்பாற் பிள்ளைத் தமிழ்ப் பகுதிகளிலே அம்மானை, நீராடல், பொன்னூசல் என்ற பகுதிகள் வைக்கப்படுவதும் சிறு மகளிரின் இவ்விளையாட்டு வகைகளைக் குறிப்பதேயாம். இவ்வாறு பெண்கள் ஆடிய பந்தாட்டம் முற்றும் இக்காலத்து ஆண்மக்கள் ''ஆடவர் பெண்மையை அவாவுந் தோளினாய்'' என்றபடி கவர்ந்து கொண்டனர் போலும்.

இப்போது அழகுக் கலைகள் என்று சிறப்பிக்கப் பெறும் சிற்ப, சித்திர, கீத, நாட்டியங்கள் என்றவை

அந்நாளிலே மிக மேலான நிலையிலே விளங்கின. ஆனயர் குழலோசையினல் அண்டத்திலே நிறைந்த அனைத்துயிர் களும் மகிழ்ச்சியடைந்து மனமுருகித் தத்தம் முன்னைப் பகை முதலிய உணர்ச்சிகளையும் மறந்து வந்து சேர்ந்து அணைந்தன. இது சங்கீத முதலிய மனங்கவரும் மாட்சிமை யுடைய கலைஞ் ஞானங்களுக் குரிய விசேட இலக்கணமாம். இதனையே சேக்கிழார் சுவாமிகள்,

நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்ற நயத்தலினல்
மலிவாய் வெள்ளெயிற்றரவ மயில்மீது மருண்டு விழும்;
சலியாத நிலையரியுந் தடங்கரியுமுடன் சாரும்;
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்.

என்றுகூறித் தத்துவ விளக்கம் செய்கின்றார். குழற் கருவியின் அமைப்பும் இலக்கணங்களும், குழற்கீதத்தின் இலக் கணமும், முறைகளும் விரிவாக ஆனய நாயனர் புராணத் திலே பேசப் பெற்றுள்ளன. அவ்விதமே யாழின் இலக் கணமும் யாழிசையின் தன்மையும் திருநீலகண்ட யாழ்ப் பாணரும் அவர் மனைவியராகிய மதங்க சூளாமணியாரும் செய்த யாழ்த்திறத்திலேயும், அவர்கள் திருஞானசம்பந்த மூர்த்திகளுடைய திருப்பதிகங்களை யாழிலிட்டு வாசித்தும், கண்டப் பாட்டும் கலந்து பாடியும் வந்த வரலாற்றிலேயும் பேசப் பெற்றுள்ளன.

யாழும் குழலுமே, தீஞ்சுவை தரும் இன்னியங்களிலே மிகச் சிறந்தனவென்பதை நமது தமிழ்முன்னோர் உணர்ந் திருந்தனர். "குழலினிது யாழினிது என்ப" என்பது நாயனர் திருவாக்கு. "குழலொலி யாழொலி கூத்தொலி...." என்ற திருவிசைப்பாவும் இங்கே குறிப்பிடத் தக்கது. இவ்வுண்மையை, இக்காலத்து நாம் கேட்டு மகிழும் உள் நாட்டு, பிற நாட்டுக் கோர அசுர வாத்திய விசேடங் களுடன் ஒத்துப் பார்ப்போமானல், நமது முன்னோர் களது உயர் நிலையிலிருந்து நாம் எவ்வளவு தூரம் கீழே

இறங்கி யிருக்கின்றோ மென்பதும், கீழ்க்கீழ்த் தாழ்ந்து கொண்டே போகும் நாம் அதை உணராமல் நாகரிகத்தில் மேன்மேல் உயர்ந்து போவதாய் மயங்கி யிருக்கின்றோ மென்பதும் நன்கு விளங்கும்.

காலத்துக்குத் தக்க பண் பாடலும், வாசித்தலும், பண்ணிற்கு உள்ளுறையாக உயர்பொருள் ஒன்று விளங்கு தலும் வேண்டுவதாயின. இனி இவ்வாறு இன்னிசைக் கருவிகளின் ஓசையுடன் மிடற்றின் ஒலியும் இசையப் பாடு வதே யன்றித் தனியாகக் கண்டப் பாடல் பாடுவதும் மர பாகும். அது அவ்வத் தானங்களின் சுதி பிழையாமல் அழகு பொருந்தும் கான இசையமுதம் பரப்பும்படி அசை வின்றிச் சித்திரப் பதுமைபோலிருந்து பாடுவதாம்.

நாட்டிய மென்பது கூத்து எனப்பெற்ற தமிழ் வழக் காம். இதற்கு அடிபிழையாது பெயர்க்கு முறையே அடி நிலையாகும். அதற்குத் தக்கவாறு விரல்கள் வட்டணை யாகப் பெயரவும், கைகள் காட்டும் வழியே கண்கள் புடை பெயரவும், உட்குறித்த பொருளை விளக்குவதாய் ஆடு வதே கூத்தாகும். பாட்டும் கூத்தும் ஒருங்கே நிகழ்வதும் மரபாகும்.

பயிற்சி

1. பண்டைக் காலத்து ஆண் மக்களின் விளையாட்டுக்கள் யாவை? அவை தற்காலத்து எவ் விளையாட்டுக்களுடன் ஒப்பிடத் தகும்?

2. அக்காலத்து மகளிர் விளையாட்டுக்கள் யாவை?

3. அழகுக் கலைகள் எவை? இசைக்கலையின் சிறப்பை ஒரு பத்தியில் விவரிக்க.

3. ஏள்ளேணம், தோணுக்கம், பூவல்லி, உந்தி, பரிச் செண்டு, தகர்ப்பாய்ச்சல் இவற்றின் விளக்கத்தை ஆசிரியர்பாற் கேட்டறிக.

9. கடற்கரை

கவி சி. சுப்பிரமணிய பாரதியார்

பறந்து பறந்து கடலுக்கருகே வந்து சேர்ந்தோம். நெருங்கி வரவே, உள்ளுயிரிலே புகுந்து இனிய சலனங்கள் தருவதும், காரமில்லாத தழதழத்த இயற்கையுடையதுமான மனோகரத் தன்மை கொண்டதோர் சுகந்தம் புலப்பட்டது. குமாரி சொல்லியிருந்த சுகந்த மாளிகை சமீபித்துவிட்டதென்பதை அறிந்துகொண்டேன். "இம் மாளிகைக்கு இத்தனை இனிய கந்தம் எப்படி ஏற்பட்டது?" என்று நான் கேட்க வாயெடுக்கு முன்பாகவே அவள் எனது உள்ளக்கருத்தைத் தெரிந்துகொண்டு பின்வருமாறு கூறலாயினள் :

'கஸ்தூரிக் கற்களாலும், தேவ சந்தன மரத்தாலும் இம்மாளிகை ஆக்கப்பட்டிருக்கின்றது. அன்றியும், இதைச் சூழ்ந்துள்ள பூங்காவனத்திலே உங்கள் உலகத்தில் கண்டறியாத அதிசுகந்தமுடைய பலவித மலர்ச் செடிகள் இருக்கின்றன' என்றாள்.

இங்ஙனம் பேசிக் கொண்டே, சுகந்த மாளிகையின் உச்சி மேடையில் போயிறங்கினோம். எங்களைப்போலவே இணையிணையாகப் பலர் அங்கே வந்திருந்து கடற்காட்சியை நோக்கிக் களித்துக் கொண்டிருப்பது கண்டேன். ஓர் ஓரத்திலே போடப்பட்டிருந்த இரண்டு ஆதனங்களில் போய் சிரம பரிகாரமாகச் சாய்ந்துகொண்டோம். அவ் வாதனங்கள் இலவம் பஞ்சுபோன்ற யாதோ ஒரு பொருள் பொதிந்தனவாய், வெண்பட்டால் மறைக்கப் பட்டிருந்தன. அவற்றில் சாய்ந்தவுடனே தாயின் மடியிலே சாய்ந்தது போல உள்ளத்திற்கு ஆறுதல் உண்டாயிற்று.

எதிரே கடல். சந்திர கிரணங்களால் ஜோதியுயிர் கொடுக்கப்பெற்ற அலைகள். வெள்ளை மலர்கள் புனைந்து

புஷ்பக் குன்றுகள் கிடப்பதுபோலத் தோன்றிய கப்பல்கள். தூரத்திலே, அன்னங்கள் மிதப்பதுபோல மிதந்த இன்பப் படகுகள். மேலே சந்திரன்; வெள்ளிமேகங்கள்; இம்மேகங்களிலே சில வலைகள் பரப்பியிருப்பது போலத் தோன்றும்; சில அலைகளடிப்பதுபோலிருக்கும். ஒன்று பூச் சிதறியதுபோலத் தோன்றும். கீழே மிதக்கும் படகுகளுக்கு வானக்கண்ணாடியிலே தோன்றும் சாயைகள் போலச் சில மிதந்து செல்லும். இனி, நட்சத்திரங்கள் ! வானக்கடலிலே வெடித்தெழுந்த வயிரங்கள்! சிதறுண்ட இன்பங்கள் ! வானப் பொய்கையிலே மனமெனும் சிறிய வண்டு போய் ஒளித்தேன் குடிப்பதற் கமைந்த எண்ணிலாத மலர்கள். திசையென்ற அனந்த வஸ்துவுடன், ஈசனறிவு என்ற அனந்தவஸ்து தாக்கியபோது பொறித்தெழுந்த சுடர்ப் பொறிகள்.

படகுகளிலே இணையிணையாகக் கந்தர்வ இளைஞர்களும் பெண்களும் சிலர் பாட்டிலும் சிலர் ஆட்டத்திலும் சிலர் வாத்தியங்கள் வாசிப்பதிலும் களிப்பவராகி, அலைமுழக்கமாகிய பிராகிருதப் பேரிகைக்கு இவர்கள் பல விதங்களிலே அனுமோதஞ் செய்வாராயினர். சந்திர கிரணங்களும் இவற்றிடையே மாறாப் புதுமைகொண்ட பொன்வண்டொலி யிசைத்துக்கொண் டிருந்தன. கடற்காற்றோ பர்வத குமாரியின் நெற்றி மீதுள்ள குழற் சுருள்களுடன் விளையாடிக்கொண்டிருந்தது.

ஆ! உருவம் காந்தர்வமாக மாறிவிட்ட போதிலும் எனது ஜீவன் மானிட ஜீவனாதலால் இத்தனை இன்ப மிகுதியை என்னால் பொறுக்க முடியவில்லை. புலங்கள் திகைத்துப் போய்விட்டன. அறிவு மயங்கி விட்டது. இன்பமாகிய கடலின் அலைகளிலே எனதுயிர் சிறிய நுரைபோல எற்றுண்பதாயிற்று. இன்பமாகிய புயற்காற்றிலே எனதுயிர் சிறு துரும்பு போலச் சுழல்வதாயிற்று. என்ன சுகந்தம்! என்ன இசை! என்ன காட்சி! பர்வத குமாரி

யுடன் நான் ஏதேதோ தொடர்பற்ற மொழிகள் பேசுவே னாயினேன். இன்பக் கொடுங் கள் அறிவினை அமிழ்த்தி விடவே, நா, தனது கடிவாளமிழந்த காட்டுக் குதிரை போலக் கண்ட கண்ட இடங்களில் சஞ்சரிப்பதாயிற்று. இன்பம் தெவிட்டிப் போய்விட்டதென்று நான் சொல்ல வில்லை. நான் அனுவிப்பவனாக இருந்ததுபோய், அது அனுபவிப்பதாகி என்னை விழுங்கித் தீர்த்துவிட்டது. பேசிக்கொண்டிருந்தபடியே கண்ணயர்ந்து விட்டேன்.

சில பொழுது கழிந்ததின் பிறகு,விழிப்படைந்தேன். சூரியோதய காலம். கடலும் வானும் கூடித்தழுவிய இடத்தில், அவற்றின் கூட்டத்திலே தோன்றிய ஜோதிக் குழந்தை போலப் பரிதி வட்டம் பிறந்தது. கிழக்குத்திசை யில் வானமெங்கும் நெருப்புக்குழம்பு பறந்திருந்தது. தீப் பட்டெரியும் தீவுகள் போல மேகங்கள் காணப்பட்டன. மேகங்களுக்கு மனித புத்தியுண்டென்று நினைக்கிறேன். தமது இருளியற்கையை மாற்றித் தம்மை ஒளியுடையன வாகச் செய்யும் சூரியனை இவைகள் அமுக்கிக் கொன்று விடப் போகின்றன. எனக்கு அந்த மேகங்களைப் பார்க்கும் போது பாரிசேயர்கள் முதலிய யூத குருக்களின் நினைப்பு வந்தது.

க்ஷணப்பொழுது பின்பு அந்த ஜோதிக்கோளம் மேலெழுவதாயிற்று. வச்சிராயுதங்கள் போலத் தோன் றிய தனது கிரணங்களால் அம் மேகங்களை உடைத்துச் சிதறி, எற்றி, அசைத்துக் குழப்பி, புறட்டி யோட்டித் தொலைத்துவிட்டுப் பால சூரியன் மிகுந்த வெற்றிக் கோலத் துடன் கிரணங்களை உலக முழுவதிலும் பரப்பி, விடுதலை பெற்ற ஓர் பேருண்மை போல ஒளி வீசுவானாயினன். உல கம் மகிழ்ச்சி பெற்றது.

பயிற்சி

[கவி பாரதியார், கடற்கரைக் காட்சியின் அழகைச் சொல் ஓவி யம்போல் கவின்பெற வருணித்திருப்பது சுவைத்தறியத் தக்கது. இவரது கற்பனை சக்தியும் அறியற்பாலது.]

கட்டுரை :—கடற்கரையில் சந்திரோதயத்தை வருணித்து ஒரு பக்கம் எழுதுக.

---

10. திருவிழா

திரு. ந. மு. வேங்கடசாமி நாட்டார்

விழவு என்பது கொண்டாட்டம் அல்லது களியாட்டத்தைக் குறிக்கும் தமிழ்ச்சொல். இதுசாறு என்னும்பெயராலும் வழங்கும். நக்கீரர் பாடிய திருமுருகாற்றுப் படையில் 'ஊரூர்கொண்ட சீர்கெழு விழவினும்' என்றும், 'சாறயர் களத்துவீறு பெறத்தோன்றி' என்றும் இரு சொல்லும் பயின்றிருத்தல் காண்க. மக்கள் யாவரும் இன்பத்தையே விரும்புகின்றனரென்பது கண் கூடாயஉண்மை. இவ்வுலகிலே மக்கள் இன்ப நுகர்ச்சியின் பொருட்டுச் செய்யும் கொண்டாட்டமெல்லாம் விழவு என்னும் பெயரால் வழங்குதற் குரியனவே. யாற்றிலே புதுப்புனல்வந்துழி ஆடவரும் மகளிரும் சென்று நீராடி இன்பந் துய்க்கும் விளையாட்டுக்கள் புதுப்புனல் விழவு எனக் கூறப்படும். இங்ஙனமே கடற்கரைக்கானல் விளையாட்டு, உண்டாட்டு ஆய விழாக்கள் மிக்கிருந்தவென்பது பழைய தமிழ்நூல்களினுள் அறியப்படுகின்றது. முன்பு காட்டிய 'ஊரூர்கொண்ட சீர்கெழு விழவினும்' என்னும் தொடரே அக்காலத்து ஒவ்வொரு ஊரிலும் விழாக் கொண்டாடப்பெற்று வந்ததென்பதற்குச் சான்றாகும். அகப்பொருளிலே ஊர்துஞ்சாமையென்பதோர் துறையுளது. ஊரிலுள்ளாரெல்லாம் விழாக் கொண்டாடுதலால் இரவில் துயிலாதிருப்பர் என்பது அதனாற் பெறப்படுகின்றது. இங்ஙனம் நகரங்களிலும், ஊர்களிலும் விழாச்செய்தல் மிக்கிருந்த செய்தியானது அக்காலத்து மக்கள் செல்வத்திலும் இன்பத்திலும் சிறந்திருந்தன ரென்பதைப் புலப்படுத்தா நிற்கும். செல்வமும், இன்பமும் நாட்டினை அழகு செய்வன என்பது.

"பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற் கிவ்வைந்து".

என்று தெய்வப் புலவராலும் கூறப் பெற்றுளது. பழைய புலவர்கள் 'விழவு மலி மூதூர்', 'விழவு மேம்பட்ட பழ விறல் மூதூர்' என்று இங்ஙனம் அக்காலத்துப் பதிகளைச் சிறப்பித்துக் கூறியிருப்பது விழா ஒன்றிலிருந்தே செல்வப் பெருக்கு முதலியவற்றை அறிந்துகொள்ளலாகும் என்பதனைக் காட்டுகின்றது.

இனி, தெய்வங்கட்குச் செய்யப்படும் இத்திருவிழாக்கள் தாமும், குறிஞ்சி, முல்லை முதலிய வெவ்வேறு நிலத்து மக்களால் வேறுவேறு பெயரினையுடைய கடவுளரைக்குறித்து வெவ்வேறு முறைமையாகச் செய்யப்படுவனவாகும். அவை யெல்லாம் ஈண்டு விரித்தற்கு இடனின்று. இரண்டொரு திருவிழாக்கள் பண்டு நடந்த முறைமையை அறிந்துகொள்ளுதல், அதனோடு இப்பொழுது திருவிழா நிகழும் இயல்பினை ஒப்பிட்டுப் பார்த்தற்கும், சீர்திருத்தம் செய்வதற்கும் உதவியாயிருக்குமாதலின், அதுவே இங்குக் கூறக் கருதியதாகும்.

இறையனாரகப் பொருளுக்கு நக்கீரர் இயற்றிய உரையில் 'மதுரை ஆவணி யவிட்டம், உறையூர்ப் பங்குனி யுத்திரம், கருவூர் உள்ளி விழா'—என மூன்று பெரிய திருவிழாக்கள் கூறப் பெற்றுள்ளன. அகநானூறுமுதலியவற்றிலும் இத் திருவிழாக்கள் குறிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவை இவ்விவ்வாறு நடந்தனவென்று நன்கு அறிந்துகொள்வதற்கு ஆதரவுகள் கிடைக்கவில்லை. கார்த்திகைத் திங்களிலே திருக்கார்த்திகை நாளில் இரவிலே தெருக்களில் விளக்குகளை நிரை நிரையாக வைத்து, மாலைகளால் அணிவித்துப் பலருங்கூடி மகிழ்வுடன் விழாவயர்வர் என்ற செய்தி அகநானூற்றிலுள்ள நக்கீரர் பாட்டு ஒன்றினால் வெளியாகிறது. இவ்வாற்றால் ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பே தமிழகத்தில் இத்தகையதிருவிழாக்கள் நடைபெற்றுவந்தன என்பது நாம் பெரிதும் பாராட்டுதற்கும் மகிழ்ச்சி யடைதற்கும் உரிய செய்தியன்றோ?

இனிப் பழைய நாளிலே காவிரிப்பூம் பட்டினத்தில் இந்திரனுக்கு விழாச்செய்த வரலாறு சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் இருபெருங் காப்பியத்தும் விளக்கமாகக் கூறப்பெற்றுள்ளது. மணிமேகலை விழாவறை காதையால் அறியப்படும் செய்தி பின் வருவது:

காவிரிப்பூம் பட்டினத்திலிருந்த பலசமயவாதிகளும், சோதிடரும், அமைச்சர் முதலிய ஐம்பெருங் குழுக்களும், எண்பேராயத்தாரும், பிறரும் ஒருங்கு கூடியிருந்து, பண்டு அகத்தியமுனிவர் கட்டளையால் தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்னும் சோழமன்னனால் இந்திரனது உடன்பாடு பெற்றுப் புகார் நகரிலே இருபத்தெட்டு நாள் நடத்தியதும், பின்னர் ஆண்டுதோறும் அங்ஙனமே நடத்தப் பெற்று வருவதுமாகிய இந்திர விழாவை நடத்தத் தவறினால் நிகழக்கூடிய தீமைகளையெல்லாம் நன்கு சூழ்ந்து விழாவினை நடத்துவதென்று உறுதி செய்துகொண்டு, அதனை நகரத்தாருக்கு அறிவிக்கும்படி முரசறைவோனுக்குச் சொல்லினர். முரசடிக்கும் முதுகுடியிற் பிறந்தோனாகிய அவன், வச்சிரக் கோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த முரசினை யானையின் பிடரிலேற்றி, முதற்கண் ஊரினை வாழ்த்தி, 'வானம் திங்கடோறும் மும்மழை பொழிக; மன்னவன் கோட்கள் நிலைதிரியாமைக்குக் காரணமாகியசெங்கோலினன் ஆகுக; அறிஞர்களே! இந்திரவிழா நடக்கும் காலத்தில் எல்லாத் தேவரும் இங்கே எழுந்தருளுவர் என்பது பெரியாரின் துணிபாதலின், வீதிமுதலியவற்றில் நிறைகுடங்களும், பொற் பாலிகைகளும், பாவை விளக்குகளும் ஆகிய இவற்றைப் பரப்புங்கள்; குலைக் கமுகும், குலை வாழையும், வஞ்சியும், பூங்கொடியும், கரும்பும் ஆகிய இவற்றைக் கட்டுங்கள்; திண்ணைகளின்மேல் தூண்களில் முத்து மாலைகளைத் தொங்கக் கட்டுங்கள்; வீதிகளிலும் மன்றங்களிலும் பழமணலை மாற்றிப் புதுமணலைப் பரப்புங்கள்; பல வகையான துகிற் கொடிகளையும் மாடங்

களிலும் வாயில்களிலும் கட்டுங்கள்; கண்ணுதற் பெருமான் முதலாகச் சதுக்கப் பூதம் இறுதியாகவுள்ள தெய்வங்கள் உறையும் கோயில்களில் அவ்வத் தெய்வங்கட்கு ஏற்ப வெவ்வேறாகச் செய்யப்படும் கடன்களை அறிந்தோர் செய்யுங்கள்; அறவுரைகள் புரிதற்குரிய அறிஞர்களே! பந்தரிலும் அம்பலங்களிலும் சென்று விரிவுரைகள் புரியுங்கள்; சமயவாதிகளே! பட்டி மண்டபத்தையடைந்து முறைப்படி வாதம் புரியுங்கள்; யாவரும் யாரிடத்தும் பகைமையும் வெகுளியும் கொள்ளாதிருங்கள்' என்று கூறி முரசறைந்து 'பசியும் பிணியும் பகையும் நீங்கி, வசியும் வளனும் சுரக்க' என வாழ்த்தி இங்ஙனம் விழாவினைத் தெரிவித்தனன்.

இதிலிருந்து அவ்விழாவின் நோக்கம் எவ்வளவு உயர்ந்ததாகக் காணப்படுகின்றது, பாருங்கள்! ஓர் பெரிய திருவிழாச் செய்வதென்றால் நகரத்திலுள்ள பலவகை மாந்தர்களும் ஒருங்குகூடியிருந்து ஆராய்ந்து முடிவுசெய்வதென்ற வழக்கம் அக்காலத்து மக்களின் ஒற்றுமையையும் ஆளுந்திறத்தையும் நன்கு விளக்குகின்றதன்றோ? திருவிழா நடக்கும் ஒவ்வொரு நாளிலும் நகரத்தின் பல பக்கங்களிலும் அறவுரைக் கட்டுரைகளும், சமயவரலாற்று ஆராய்ச்சிகளும் நிகழுமென்பது திருவிழாவின் பயனை எவ்வளவு மிகுதிப் படுத்திக் காட்டுகின்றது! கல்வியும் சமய அறிவும் குறைந்துள்ள இக்காலத்தில், திருவிழாக்கள் நடைபெறும் பொழுது இத்தகைய செயல்கள் நிகழுமேல் எவ்வளவு பெரும் பயனுண்டாகும்! இக்காலத்தில் திருவிழாக்களை நடத்திவைக்கும் அற நிலையத் தலைவர்களும், அறப்புரவலர்களும், பிறரும் இரண்டாயிரம் ஆண்டுகளின் முன்பு நம் முன்னோர் செய்துகாட்டிய வழிகளை இனியேனும் பின்பற்றி யொழுகுமாறு பெருமான் திருவருள் பாலிப்பானாக!

பயிற்சி

1. திருவிழா—சொற் பொருள் கூறுக.
2. பண்டைக் காலத்துத் திருவிழாக்களில் 6 வகை கூறுக.

3. விழா நிகழ்ச்சியிலிருந்து பண்டைத் தமிழ் மக்களது நிலைமை எவ்வாறு அறியலாகும்?

4. இந்திர விழாவை வருணித்து ஒரு கட்டுரை எழுதுக. அதில் பின்வரும் சொற்றொடர்கள் அமைந்திருக்கவேண்டும். பெருங்காப்பியம், சமயவாதிகள், பாவைவிளக்கு, பட்டி மண்டபம், முதுகுடி, வச்சிரக் கோட்டம், கோட்கள், மன்றம், துகிற்கொடி, அம்பலம்.

5. நாட்டிற்கு அழகாவன 5 எவை?

---

11. சந்தி விக்கிரகம்: அடுத்துக் கெடுத்தல்

வித்துவான் தாண்டவராய முதலியார்

"முன்னே பகையாளிகளா யிருந்தவர்களுடைய விசுவாசத்தில் நம்பிக்கை வைக்கலாகாது. நம்பினால், எப்படிக் காகம் கோட்டான்களின் குகையைக் கொளுத்தி நாசம் பண்ணினதோ அப்படி நேரிடும்" எனச் சோமசன்மா சொல்ல, இராஜ குமாரர்கள் "அஃது எப்படி?" என, அவன் சொல்லுவான்.

தென் தேசத்தில் மயிலை நகரத்தின் சமீபத்தில் ஒரு பெரிய ஆலமரத்தில் மேகவர்ண னென்னுங் காகராஜன் தன்கூட்டங்களோடுகூட விருக்கையில், அங்கே அரிமர்த்தன னென்னும் ராஜகோட்டான் கூட்டத்தோடும் மலைக் குகையிலிருந்து வந்து ஆலமரத்தை வளைத்துக்கொண்டு இராத்திரியில் அகப்பட்ட காகத்தை யெல்லாங் கொன்று விட்டு நாடோறும் போய்க்கொண்டிருந்தது. அதனால் அவ் விடத்தை விட்டுவிடும்படி காக்கைகட்கு நேரிட்டது. ஆகையால், மேகவர்ணன் தன் மந்திரிகளை யழைத்து, 'நம் பகைவர் நாடோறும் இங்கு இராத்திரி வந்து காக்கைகளைக் கொல்லுகிறார்கள்; நமக்கோ இரவிற்கண் தெரிகிறதில்லை; மேலும் அவர்களிருப்பிடமும் அறியோம்; அறிந்தால்

அங்கே போய் அவர்களைக் கொல்லலாம்; பகைவரை அசட்டை பண்ணினால் அது நோய்போற் பெருகிப் பொல்லாங்கு விளைக்கும்; ஆதலால் இப்போழ்து சந்திவிக்கிரகம், பேதம், கலக மென்னு மிவற்றுள் தக்கது இது வென்று சொல்லுவீர்கள்' என, இதைக்கேட்டு மந்திரிகள், 'அரசன்கேட்பதற்குமுன்னே தானேபிரதானிகள்இதஞ் சொல்ல வேண்டும்; இல்லாவிடிற் கேட்ட பிறகாயினும், விரைவாகச் சொல்ல வேண்டும். அப்படிச் செய்யாமற் சும்மா இச்சகம் பேசுகிறவனை அரசனுக்குச் சத்துரு வென்று நினைக்க வேண்டும்' என்றிவ்வாறு சொல்லி, பின்பு மந்திரிகள்ஐந்தும் என்னசெய்வோமென்று ஒன்றுக்கொன்று ஆலோசித்தன. பின்பு, முதல்மந்திரியாகிய

உத்தம ஜீவி: (அரசனை நோக்கி) மகாராஜாவே! வலியவர்களுடனே பகை பண்ணலாகாது. சமாதானமே தகுந்தது; ஏனெனில், பகைவர்களை வணங்கிக் காலம் பார்த்து மோசம் பண்ணுகிறவர்கள் சுகமடைகிறார்கள். ஆற்றில் தண்ணீர் நிரம்பிப் பெருகி வருகையில் வணங்கிய செடி நாசமடையாமற் பின்பு முன்போல் நிமிர்ந்திருக்கிறதே. நெருக்கமான காலத்தில் துஷ்டர்களுடனே சமாதானம் பண்ணி உயிரைக் காப்பாற்றினால் பின்பு எல்லாச் செல்வமும் சம்பாதிக்கலாம். மேலும், தனக்குப் பலபேர் பகைவர்களிருந்தால் அவர்களில் ஒருவனோடு உறவு கொண்டு எல்லாரையுங் கெடுக்கவேண்டும். நிலமும் நட்பும் பொருளுமாகியஇவற்றின் இருப்பைத் தன்னிடத்திலும்மாற்றாரிடத்திலும் இவ்வளவென்று ஆராய்ந்துகொண்டு கூடுமானால் அவருடன் எதிர்க்க வேண்டும். இல்லாவிடிற் கூர்ம விருத்தியை அநுசரித்துப் பின்பு தனக்குப் பலமுள்ள காலத்தில் கிருஷ்ண சர்ப்பத்தின் வியாபாரத்தையநுசரிக்கவேண்டும். ஏனெனில், மாற்றாருடைய வலியும் வலியின்மையும் பார்த்து எது செய்யத்தக்கதோ அது செய்யவேண்டும். அச்சமயத்திற் கொக்குபோல் உறங்கி யிருந்து சமயத்தில் அதன்

குத்தைப்போலிருக்க வென்று பெரியோருஞ் சொல்லி யிருக்கிறார்களே.

இப்படி அதன் வாக்கியத்தைக்கேட்டு ராஜன் இரண்டாம் பிரதானியைப் பார்த்து, 'உன் கருத் தென்ன? சொல்' என,

இரண்டாம் மந்திரி:—அவன் சொன்னவற்றிற் சிறிதும் நன்மையில்லை. பெரிய சங்கடம் நேரிட்டபோது பகைவருடனே சந்தி பண்ணலாகாது. நெருப்பினாற் காய்ச்சின நீர் அந்த நெருப்பை யவியாதா? நம்மைக் கோட்டான்கள் வருத்துகின்றன வென்று அவர்களோடு சந்தி பண்ணினால், அவர்கள் நம்மைக் கொல்லுதல் நிச்சயம்; விஷசுரம் அப்பியங்கனத்தால் வளர்வது போலும், நெய்யினால் நெருப்பு விருத்தியாவது போலும் பொல்லாங்கு சம்பவிக்கும். சத்துரு வலியவன், நாம் எளியோ மென்பீரானால் அதற்குச் சிந்தையில்லை; யானை பெரிதா யிருந்தாலும் அதைச் சிங்கக்குட்டி கொல்லா நிற்கும். ஆதலால், மனோ பலத்தோடு பகைவரைக் கொல்ல வேண்டும். அரசனுடைய கொடுந் தண்டத்தைப் பார்த்து வைரிகள் இயல்பாய்ப் பயமடைகிறார்கள்; எங்கும் பெயர் பரவியிருக்கிற பராக்கிரமசாலியாயும், எல்லாராலும் அறியப்பட்டவனாயு மிருக்கிறவன் எவனோ அவனே பாக்கியவான்; ஆதலால் பராக்கிரமத்தால் உயிர்த்திருப்பவனே உயிருள்ளவன்; மற்றவர்கள் பிணத்துக்கு ஒப்பானவர்கள்.

இப்படிச் சொன்னவற்றை யெல்லாம் அரசன் கேட்டு, மூன்றாம் பிரதானியைப் பார்த்து, 'உன் கருத்தைச் சொல்வாய்' என,

மூன்றாம் மந்திரி:—அரசனே கேள். பகைவன் தன்னினும் வலியவனாயிருந்தால் அவனோடு பொருந்தலாவது பொருதலாவது ஒன்றுஞ்செய்யாமல், தன்னிடத்தைவிட்டு வேறிடத்திற்குப் போகவேண்டும். இதுவே நல்லது. ஏனென்றால், இவ்வேளை சண்டை செய்யலாகாதென்று

வையின் பலத்தைப் பார்த்து எவன் தேசத்தைத் துறந்து போகிறானோ அவன் பாண்டவர்களைப்போற் சுகமடைகிறான்; இதைவிட்டு எவன் செருக்குடனே யுத்தஞ் செய்கிறானோ அவன் குலமுதலறக் கெடுகிறான்.

இதைக்கேட்டு அரசன் நாலாம் மந்திரியைக் கேட்க,

நாலாம் மந்திரி: தன் இடம் விட்டுப் பெயர்தல் தகுதியாகக் காணவில்லை. முதலை தன்னிடத்தி லிருந்தால் மலையொத்த யானையையும் இழுத்துக் கொண்டு போகிறது; அதுவே தன்னிடம் விட்டுப் பெயர்ந்தால், அதை நாய்களும் இழுத்துக்கொண்டு போகின்றன. ஆகையால், தன் இடத்தில் இருந்து நட்புள்ளவர்களை உதவிக்காக அழைப்பித்துக் கொண்டு பகைவர்களைக் கெடுக்க வேண்டும். எவன் சத்துரு வருகிறானென்று பயந்து தன்னிடம் விட்டுப் போகிறானோ அவன் மறுபடி அவ்விடத்திற்கு வருகிறதில்லை பற்பிடுங்கின பாம்பும், மதமில்லாத யானையும், இடம் விட்டுப் பெயர்ந்த அரசும் எல்லாராலும் அவமானமடைகின்றன. மேலும், தன்னிடத்தில் இருந்தால் ஒருவனே நூறு பெயருடன் யுத்தம் பண்ணுகிறான். ஆதலால் துர்க்கத்தையும் மதிலையும் ஏற்படுத்திக்கொண்டு அவற்றின் சார்பாற் பகைவருடனே யுத்தம் பண்ணவேண்டும்; அதனால் வெற்றி பெற்றால் லக்ஷ்மியைப் பெறலாம்; செத்தாற் சொர்க்கம் பெறலாம். ஆகையால், அவ்விரண்டையுந் துறக்கலாகாது. நிலத்திற் சிக்கென ஊன்றிய வேரையுடைய மரம் காற்றினால் விழாது; அந்த மரமே தன் இடத்திலிராவிட்டால், வாயு அதைத் தள்ளுகிறது. ஆகையால், ஏதொன்று செய்யத் தக்கதோ அதை இங்கேயிருந்துகொண்டே செய்யவேண்டும்.

காக ராஜன் அதன் கருத்தை அறிந்துகொண்டு, ஐந்தாம் மந்திரியை 'உன் அபிப்பிராயமெப்படி?' என,

ஐந்தாம் மந்திரி: சுவாமி! என் ஆலோசனையும் இப்படியே இருக்கிறது. சார்பைவிட்டாற் சமர்த்தர்களும்

பராக்கிரமக் குறைவடைகிருர்கள் ; ஆதலால் யாரையாயி னும் உதவிக்குச் சேகரித்துக்கொள்ளவேண்டும். அதுவும் இருப்பிடத்திலிருந்தே சம்பாதிக்கவேண்டும். உறைவிடம் விட்டுப் பிரிந்தவனுக்கு யாரும் வாய்ப்பேச்சினுற்கூடச் சகாயம் பண்ணுர்கள். எப்போது அக்னிக்குப் புல் சருகு முதலியவற்றின் சேர்க்கையாற் காட்டைக் கொளுத்த வலி யுண்டாகிறதோ, அப்போது வாயு மித்திரத்தனமா யுதவி பண்ணுகிறது; அந்நெருப்பே விளக்கு வடிவாய் அந்தர மாக நிற்கும்போது காற்றே அதை அவிக்கிறது. மேலும் வலியர்களுடைய சார்பிருந்தால் எல்லோர்க்கும் பெரு மை யுண்டாகிறது; தாமரையிலையைச் சார்ந்த நீர்த்துளி முத்தினெளியை அடைகிறது. சார்பில்லாமல் யாதொரு காரியமு மாகிறதில்லை. ஆகையால், மற்ருருவனை அனு சரிக்க வேண்டும். இதுவே என் கருத்து.

பிறகு மேகவர்ணராஜன், பிதாவின் மந்திரியாகிய சிரஞ்சீவியைப் பார்த்துக் கும்பிட்டு, 'உம்முடைய சந்நிதி யில் எல்லோரையுங் கேட்டு, அவர்கள் சொன்ன உத்தரங் களையும் உம்மைக் கேட்பித்தேன் ; இவற்றில் எது தக் கதோ அதை நீர் சொல்லும்' என,

கிழ மந்திரி: இப்படி ராஜா சொன்னதைக் கேட்டு, எல் லோரும் நூற்சார்பாலேயே சொன்னமையால் யோக்கிய மாகவே இருக்கின்றன. ஆனல், சத்துரு பலவானயிருந் தாலும், அவனுக்கு விசுவாசங் காண்பித்து அவனைக் கெடுக்கவேண்டும்; இல்லாவிட்டால் துர்க்க முதலியவற்றி லிருந்து தனக்குஞ் சத்துருவுக்கு மிருக்கிற பலாபலன்களை யறிந்து, எது செய்யத் தக்கதோ அதைச் செய்யவேண்டும். இது விகிதமாம். ஏனென்ருல், முகநட்புள்ளவர்கள், பகை வர்கள், சூதாடுகிறவர்கள், இவர்களிடங்களிலே மெய் முன் னுக்கு வாராது; தெய்வம், குரு இவர்களிடத்தில் மெய்யா கவே நடக்கவேண்டும்.

பயிற்சி

[இந்த வசன நடையின் குணுதிசயங்களை அறிக.]

இக்கதையில் வந்துள்ள நீதிகளையும், அவைகளை விளக்க வந்துள்ள உவமானங்களையும் உணர்க.

12. கைத்தொழில்*

(ஜந விநோதிநி)

கைத்தொழில்கள் மனிதனுக்கு அத்தியாவசியமானவை. உலகத்தில் அதிக மிலேச்சத்தன்மைபெற்றவர்களுக்கும், நாகரிகம் அடைந்தவர்களுக்கும் அத் தொழில்கள் இன்றியமையாதன. ஒருவன் எவ்வகைப்பட்டசம்பத்துடையவனு யிருக்கினும், கல்விமானுயிருக்கினும், அவனைப் பசி தாகம் குளிர்முதலியவை பீடிக்காமல்விட்டகலா. இவற்றை நிவர்த்தித்துக்கொள்ள மனிதனுக்குக் கைத்தொழில்கள் அத்தியாவசியமானவை. சகல ஜீவராசிகளிலும் மனிதன் இயற்கையில் ஆதரவற்றவன் என்பதுயாவருக்கும்தெரிந்த விஷயம். பிற உயிர்கள்தம்மை வருத்தும்போது தமக்குப் பாதுகாப்பாயிருக்கும்படி கொம்பு முதலிய கருவிகளையும், குளிர் வெய்யில் மழை முதலியவற்ருல் சங்கடம் நேரிடாதபடி சருமம் உரோமம் இறகு முதலியவைகளையும் விலங்காதிகளுக்குக் கடவுள் அமைத்திருப்பது போல் மனிதனுக்கு அவர் யாதொன்றும் அமைத்து வைக்கவில்லை. ஆகவே, புறத்துறுப்பின் லட்சணத்தை ஆராய்ந்துபார்க்கையில் எல்லாப் பிராணிகளிலும் மனிதன் மிகவும் ஆதரவற்றவன் என்று தெரிய வருகிறது. ஆகையால், மனிதன் தன்னுடைய பாதுகாப்புக்காகவேண்டிய சகல அம்சங்களையும் தன்னுடைய விவேகத்தைக்கொண்டு கரசரணுதி அவயவங்களைத் தக்கபடி உபயோகித்துக்கொள்ள வேண்டியதென்பதே கடவுளின் கருத்தென்பதற்கு ஐயமில்லை. ஏனைய பிரயாணிகளுக்குப் பகுத்தறிவு என்னும் அருங்குணத்தைக் கடவுள் அமைத்து வைத்திலராதலின், அவை

* சென்னை, கல்வி இலாகா டிரெக்டரின் அநுமதி பெற்றுப் பதிப்பிக்கப்பட்டது.

தம் பாதுகாப்புக்காகவேண்டியன இன்னின்ன என்பதை உணரச்சக்தியற்றிருக்கிறபடியினாலே அவைகளுக்குஇயற்கையில் அத்தகைய கருவிகளை ஈசுவரன் அமைத்துவைப்பது நியாயந்தானே? தனக்குவேண்டியவற்றைஉணர்த்தி அவற்றைச் சவதரித்துக் கொள்வதற்கான வகையைக் காட்டத்தக்க பகுத்தறிவைக் கொடுக்கப்பெற்ற மனிதனுக்கு அப்படிப்பட்ட கருவிகளை இயற்கையில் கடவுள் அமைத்து வைப்பது அனாவசியந்தானே? மேற்காட்டப்பட்ட நியாயங்களினால் மனிதன் தன் பகுத்தறிவைக் கொண்டு கரசரணாதி அவயவங்களினாலே வேலைசெய்வது எவ்வளவும் அவனுடைய கவுரவத்துக்கு ஆனியைத் தரத்தக்கதல்ல என்பதை எவரும் ஒப்புக்கொள்ள வேண்டிவரும். இவ்வுண்மையை உணரப்பெறாத சிலர் மெய் வருந்தி வேலை செய்யும் உழவர்கள் முதலிய தொழிலாளிகளை அலட்சியம் பண்ணுகிறார்கள். மெய் வருந்தி உழைத்து வேலை செய்வதினால் அல்லவா கரம்பானகாடுகளெல்லாம் சிங்காரத் தோட்டங்களாகத் திருந்தி அழகாக விளங்குகின்றன? உழவுத் தொழிலினாலல்லவா நமக்குப் பிராணாதாரமாயிருக்கும் நெல், கோதுமை முதலிய சகல தானியங்களும் விளைந்து களஞ்சியத்தில் வந்து சேருகின்றன. உழைப்பினாலல்லவா காட்டிலுள்ள பஞ்சும், ஆட்டின் மீதுள்ள உரோமமும், பட்டுப்பூச்சிகள் தரும்பட்டும், திவ்வியமான ஆடைகளாகவும் கம்பளங்களாகவும் மெத்தைகளாகவும் அரசன் முதல் யாவருக்கும் உபயோகமாகி வருகின்றன? பொடிப் பொடியாய் உதவி யற்றிருக்கும் அற்பப் புழுதிகள் திண்ணிய செங்கற்களாவதும், அரசன் கொலுவீற்றிருக்கத் தக்க மாடமாளிகை கூடகோபுரங்களாக அமைவதும் உழைப்பினாலல்லவா? புழுதி மயமாயிருக்கத்தக்க பஞ்ச லோகங்களும் வெளிப்பட்டுத் தம் நிஜமான சொரூபத்தோடு பற்பல எந்திரங்களாவதும், நாணயங்களாவதும் ஒளி வீசும் ஆபரணங்களாவதும் உழைப்பி

ணல் அல்லவா? ஆரணியங்களிலுள்ள விருட்சங்கள், நாம் கடலின் வழியாய் உலகெங்கும் உலவுவதற்கான நாவாய்க ளாய் அமைதற்கு உழைப்பல்லவா காரணம்? மனிதன் மெய் வருந்தி வேலை செய்வதினல் ஆகாத காரியமும் உண் டோ? மகா விருட்சங்களையும் பட்டணங்களையும் அழித் துக்கொண்டு வரும் மகத்தாகிய நதிகளைப் பாலங்கள் மூல மாய் மனிதன் கடக்கக் கூடியவனுயிருப்பதற்கும், காற்றும் நுழைவதற்கிடமிராத பர்வதங்களை அவன் ஊடுருவிக் கடப் பதற்கும் காரணமா யுள்ளது எது? உழைப்பன்றோ? பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்னும் ஐந்து பூதங்களும் மனிதனுக்கு ஆட்பட்டு அவனுடைய குற்றே வல்களைச் செய்து வருகின்றன அல்லவா? பிராணுதாரத் துக்கு அத்தியாவசியமாய் வேண்டிய காற்று நுழைவதற் கிடமிராத பூமியின் அடிப்புறத்தில் சென்று உலோகங் களிருக்கும் கனிகளைச் சோதிப்பதும், பெரு நதி, சமுத்தி ரம் இவற்றிற்கும் அடிப்புறமாகப் பிராண ஹானியின்றி ஜனங்கள் புகைவண்டித் தொடரில் ஏறி ஒரு நொடியிற் போவதும், சமுத்திரத்தின் அடிப்புறத்திலுள்ள முத்துமுத லிய நவரத்தினங்களையும் வாரிக் கொண்டுவந்து குவிப்ப தும், பர்வதாகாரமான புகைவண்டிமுதலிய இயந்திரங்களை நீராவி இயக்குவதும், ககனமார்க்கமாய் ஒரு கண்டத்தி லிருந்து மற்றொரு கண்டத்திற்குப் புகைக்கூடு மூலமாய்ப் போவதும் எதனல்? எல்லாம் உழைப்பினல்தானே. பிரா ணனுக்குப் பெருந்தீங்கு விளைக்கத்தக்க கொடிய விஷம் அப்பிராணனைக் காப்பதற்கான சஞ்சீவிபோன்றஔஷத மானது எதனல்? உலகத்தில் உதவியற்றதாகத் தோன்று கிற புல், பூண்டு, சருகு, சாக்கடை ஜலம் முதலிய யாவும் மனிதனுடைய ஜீவாதாரத்துக்கு ஏற்ற வஸ்துக்களாக்கப் படுவது எதனல்? உழைப்பினல்தானே. பஞ்ச பூதங்களி னிடத்தும், சர்வ ஜீவ தயாபரன் ஆன்மாக்களின்உபயோ கத்துக்காக அமைத்து வைத்திருக்கும் அளவிறந்த பயன்

களுக்குள் சின்னட்பல்பிணிச் சிற்றறிவினனுகிய மானிடன் இப்போது அடைந்துவரும் பயன்கள் மிகச் சொற்பமான வைகளே. இன்னும் நாம் அறிந்து அனுபவிக்க வேண்டிய பயன்கள் யாவற்றையும் நமக்குச் சித்திபெறச் செய்வதற்கு உழைப்பு என்னுங் கருவியேயன்றி வேறு சாதகம் திரிகாலத்தும் கிடையாது.

விவேக விளக்கமில்லாத சாதாரண ஜனங்கள் மெய் வருந்தி வேலே செய்வதைக் காட்டிலும், கல்வித் தேர்ச்சியினுல் அறிவு விளக்கம் பெற்றவர்கள் அந்தப்படி வேலே செய்யத் தலேப்படுவார்களாகில், அவர்களுக்கும் அவர்கள் தேசத்தாருக்கும் பெருத்த நன்மை விளேயும் என்பதற்கு ஐயமில்லே. கல்வி பயின்ற ஒவ்வொருவரும் நியாயவாதி, நியாயாதிபதி முதலிய உத்தியோகங்களேயே நாடித் திரிவாராகில் பிராணுதாரத்துக்கும் தேகாரோக்கியத்துக்கும் இன்றியமையாதனவாகிய கைத்தொழில்வேலேகள் முதலியவை போம் வழி யாது? அந்தப்படி கல்விமான்கள் கைத்தொழில் முதலிய வேலேகளில் பயின்று வராததற்குக் காரணம் அவர்கள் அவற்றின் அருமைப்பாட்டை உணராது அலட்சியம் பண்ணுவதேயாம். உலகத்திலுள்ள பற்பல தேச சரித்திரங்களேயும் நாம் வாசித்துப் பார்க்கையில், எந்தத் தேசத்தவர்கள் கைத்தொழில் வேலேகளில் அயர்விலா ஊக்கத்துடன் பாடுபட்டு வருகின்றூர்களோ அவர்கள், அவ்வப்பியாசம் அமையப் பெருத தேசத்தவர்களேத் தமக்கு நாளடைவில் ஆளாக்கி அரசாண்டு வருகிறூர்களென்று நிதரிசனமாகத் தெரியவருகிறது. நமது இந்து தேசத்தையும் இங்கிலாந்து தேசத்தையும் பிரஸ்தாப விஷயத்துக்காக உதாரணங்களாய் எடுத்துக் கொண்டு, அவ்விரண்டு தேசங்களேயும் ஒத்திட்டுப் பார்ப்போமாக.

அநேக நூற்றூண்டுகளுக்கு முன்னர் உலகத்திலுள்ள ஏனைய எல்லா நாடுகளும் ஒளி மழுங்கி அங்குள்ள ஜனங்கள் நாகரிகம் அற்றவர்களா யிருந்தபோது, இந்துக்கள்

நெய்தற்றொழில், சிற்பவேலை, விவசாயம் முதலியவற்றில் சிறந்திருந்ததாகவும், அதனல் நமது தேசம் குன்றிலிட்ட சுடர்விளக்கைப்போல் நாற்புறமும் ஒளி வீசியதாகவும், அது காரணமாகப் புறத்தேசத்தவர்கள் இத்தேசத்தி லுள்ள அளவிறந்த செல்வத்தைக் கவரும் நிமித்தம் அடிக் கடி படை யெடுத்து வந்ததாகவும் சரித்திர பூர்வமாய் நாம் அறிகிறோம். ஒரு காலத்தில் உலக முழுவதும் தனியரசு புரிந்துவந்தவர்கள் உரோமர்களென்றும், அவர்களுடைய ராஜதானி உரோமாபுரி யென்றும், அவர்களுக்குச்சக்கர வர்த்தியாயிருந்தவர் ஜூலியஸ் சீஸர் என்றும், அவர் கொலுவீற்றிருக்கையில் தம்முடைய தேகம் அணிபெறத் தரித்துக்கொண்ட அங்கிக்கு அழகு தந்தது நமது இந்து தேசத்துச் சரிகையே என்றும், புராதான உரோமசரித் திர கிரந்தகர்த்தர் ஒருவர் வியந்து கூறுகின்றார். இவ் வளவு பெருமையுடன் விளங்கிய இந்து தேசம் இப்போது ஒளிமழுங்கி நிற்பது யாது காரணத்தினல்? கல்வி கற்கப் புகுந்தவர்கள், மெய்வருந்தி வேலை செய்யவேண்டிய உழவு முதலிய தொழில்களை அவமானமானவைகளென்று திரஸ் காரம் பண்ணி, உத்தியோக மென்னும் சேவகத்தையே பெரும் பொருளாக வியந்து வருவதே அதற்குக் காரணம்.

பன்னிரண்டாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில்ஒன்றுக் கும் உதவாததாய், கேவலம் ஏழ்மையான ஸ்திதியிலிருந்த இங்கிலாந்து தேசம் இளம்பிறைபோல் நாளொரு மேனி யும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து சோடச கலை களுடன் இப்போது எங்கும் ஒளி வீசி நிற்கிறதல்லவா? நாமும் நமது தேசமும் அபிவிருத்திக்காக அச்சீர்மையின் தண்ணளியை யன்றோ எதிர்பார்க்கின்றோம்? இந்த நிலை மைக்கு அந்தத் தேசம் வந்தது, வர்த்தகம், கைத்தொழில் முதலியவற்றில் சிறந்ததினலல்லவா? அறுநூறு வருஷத் திற்குள் அந்தத் தேசம் அடைந்த அபிவிருத்தி ஒன்றே, கைத்தொழிலினல் ஒரு தேசத்துக்கு விளையும் நன்மையின்

பெருக்கத்துக்குச் சாட்சி பகரத்தக்கதா யிருக்கின்றது. இந்துதேச வாசிகளாகிய நாம் இப்போது உடுக்கும் உடைகளுக்காகவும், எழுதும் காகிதங்களுக்காகவும், உபயோகிக்கும் மற்றும் பற்பல பொருள்களுக்காகவும் வேண்டிய சகல மூல வஸ்துக்களும் நமது தேசத்தில் நாற்புறமும் வீழ்ந்து கிடக்க, அவற்றை எடுத்து உபயோகிக்கத்தெரியாமையினலும், உபயோகிப்பது அகௌரவமென்றும் நம்முள் சிலர் நினைக்கின்றபடியினலும் அவற்றிற்கெல்லாம் புயல் என்னும் வாரிவளத்தை ஏக்கத்தோடு பார்த்திருக்கும் பைங்கூழ்போல, நமது தேசம் ஐரோப்பாவின் வள்ளன்மையை எதிர் பார்த்து வாடி நிற்கின்றது. இவ்வுண்மையை யறிந்து துயரப்படாத விவேகியும் உண்டா?

இந்தியாவில் இப்போது சர்வகலாசாலைகளிலும், ஏனைய வித்தியா சாலைகளிலும் கல்வி பயின்று வரும் சிறுவர்கள், ஆகாயத்தில் ஊனக்கண்ணுக்குப்புலப்படாத நட்சத்திரங்களின் இயக்கத்தைப் பற்றிக் கணக்கிடவும், மானத பதார்த்த சொரூபலட்சண சாஸ்திரங்களின் உண்மைகளை எளிதில் அறியவும் வல்ல மகா பண்டிதோத்தமர்களாயிருந்தும், ஒருவனிடத்தில் சேவகம் செய்தல் என்னும் உத்தியோகம் ஒன்றைப் பெறுதலே அரிய பேறென்று நினைத்து மதிமயங்கி, தங்களுடைய ஸ்வயேச்சைக்கும் தேசத்தின் க்ஷேமத்துக்கும் ஏற்றதான விவசாயம், கைத்தொழில் முதலிய வேலைகளை அலட்சியம் செய்து வருகிறார்கள். புருஷ லட்சணத்துக்குரிய வேறு எந்த வேலைக்கும் உதவாதவன்தான் சேவகமென்னும் உத்தியோகத்தை நாடுகிறவன் என்றும், ஏனைய வர்த்தகம், விவசாயம், கைத்தொழில் முதலியவற்றைக் கையாண்டு வருபவனே புருஷ லட்சணம் உடையவனென்றும், ஆங்கிலேயர்கள் அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள்; நம்மவர்களோ அதற்கு நேர் மாறான அபிப்பிராயங் கொள்ளுகிறார்கள். இதுதான் இங்கிலாந்துக்கும் இந்தியாவுக்கும் உள்ள பெருத்த வித்தி

யாசம். கூடிய வரையில் வங்காளத்தவர்கள் ஸ்வயேச்சை யான வாழ்க்கையையே விரும்புகிறார்கள். இங்கிலாந்தின் பெருமையையும் இந்தியாவின் சிறுமையையும் தற்காலத் தில் பிரத்தியட்சமாய்க் காண்பவர்களுக்கு மேலைய இரண்டு அபிப்பிராயங்களுக்குள் சரியானது இன்ன தென்பது தானே தெளிவாய் விளங்கும். 'இந்தியாவுக்குத் தேவையானவை' என்னும் தலைப்பெயர் சூட்டிய தமது புத்தகத்தில், டாக்டர் மர்டாக் என்னும் துரை எழுதுகிற தாவது :

'இந்தியாவில் கைத்தொழில் வேலை திரஸ்காரம் செய் யப்பட்டு வருகின்றது. இறகையும் மையையும் கொண்டு எழுதிச் சேவிப்பதென்னும் உல்லாசமான உத்தியோகத் தில் அமர்ந்திருப்பதே புருஷலட்சணத்துக்கு உரித்தான தும் மனிதன் அவாவுதற்கு ஏற்றதுமான தொழிலென்று சிறுவர்கள் நினைக்கிறார்கள். கிளாட்ஸ்டன் என்னுஞ்சீமா னும் இப்படியே அபிப்பிராயங் கொள்ளுகிறார். போஜனத் துக்கு வேண்டிய பண்டங்கள், உடுப்பதற்காக வேண்டிய ஆடை முதலியவைகள், வெய்யில் மழை முதலியவற்றால் தேகத்துக்கு உபாதை உண்டாகாதபடி பாதுகாப்பா யிருப்பதற்குத் தக்க வீடு முதலியவைகள் ஆகிய இவற்றின் விஷயமாய் இந்துதேசத்தில் பெரும்பாலும் கல்விமான் களுடைய நிலைமை எப்படியிருக்கிறது என்றால், அவற்றை வேறே எவராவது சேகரித்துக் கொடுத்தால் தாங்கள் நோவாமல் அனுபவிக்கத் தக்கவர்களாக மாத்திரம் இருக் கிறார்களே யொழிய, தாங்களே மெய்வருந்தி அவற்றை உற்பத்தி செய்யத்தக்கவர்களாயில்லை. ஆங்கிலேய பாஷை யில் நன்றாய்க் கல்வி பயின்று அநேகர் சோம்பேறிகளாய் நமக்குப் பிழைப்பு எப்படி என்று ஏக்கங்கொண்டிருப்ப தைக் காண அதிக வியசனகரமாயிருக்கிறது. கைத்தொ ழில், விவசாயம், வர்த்தகம் முதலியவற்றில் ஆங்கிலேயர்கள் பெரும்பாலும் பழகி வருகிறபடியினாற்றான் இங்கிலாந்து தேசம் அபிவிருத்தியடைந்து சீர்மை என்னும் பெயர்பெற்

றது. இந்துக்கள் அவற்றை அறவே கைவிட்டதே அவர்களுடைய க்ஷீணத்துக்கு முக்கிய காரணம்.

ஆகையால், இந்து தேசத்தில் கல்விமான்களாயிருக்கும் கனவான்களும் ஏனையோரும் தேசாபிமானம் பெற்றிருப்பது வாஸ்தவமாயிருந்தாலும், தங்கள் தேசம் எவ்விதத்திலும் முன்னிருந்த நிலைமைக்கு வரவேண்டுமென்னும் எண்ணங் கொண்டிருந்தாலும், பிறருடைய தயவை எதிர்பாராமல் தாமே தமக்கு வேண்டிய சாதகங்களைச் சேகரித்துக்கொண்டு ஸ்வயேச்சையாய் உயிர் வாழ்வதே புருஷ லட்சணமும் மானிட தருமமும் என்பதை வாஸ்தவத்திலுணர்ந்தவர்களாயிருந்தாலும், கைத்தொழில் முதலியவற்றையும், கிருஷிகன், சிற்பி, தச்சன், கம்மாளன், தட்டான் முதலிய தொழிலாளிகளையும் இழிவுபடுத்தாமல் இருப்பாராக.

13. ராஸலிண்டும் ஸிலியாவும்

பிரான்சு தேசம் பல நாடுகளாகப் பிரிக்கப் பட்டிருந்த முன்னொரு கால், அந்நாடுகளில் ஒன்றினைச் செங்கோல் மன்னன் ஒருவன் ஆட்சி புரிந்து வந்தனன். அவன்பால் அழுக்காறு கொண்ட அவனது பின்னவன் பிரடெரிக் என்பான் அவ்வேந்தனைத் தனது நாட்டினின்று துரத்தி விட்டு, அரசுரிமையை அநீதியாகக் கைப்பற்றி அரியணை யேறிக் கொடுங்கோல் நடாத்தி வந்தான்.

நாட்டினின்று விரட்டப்பெற்ற அரசன் 'ஆர்டன்' என்னும் கானகம் புகலாயினன். 'கொட்டியும் ஆம்பலும்' போன்ற அவனது நன்றி மறவா நண்பர் சிலர், 'கொடுங்கோன் மன்னர் வாழும் நாட்டிற் கடும்புலி வாழுங் காடு நன்றே' என்று இளவரசன் செய்கை பொருது, தாங்களும் காடு சென்று காவலனோடு கரந்துறைவாராயினர். இவர்கள் வறுமையிற் செம்மை பூண்டு, நல்குரவின் இடுக்கண்களைப் பொருட்படுத்தாது, அதனிடை காணும்

இன்பங்களையே பாராட்டி வந்தனர். தெள்ளிய அருவி நீரை யருந்தியும், காய்கனி கிழங்குகளைப் புசித்தும், வன விலங்குகளுடன் உறவாடியும், இயற்கைக் காட்சிகளைக் கண்டு களித்தும், மழை, பனி, குளிர் இவைகளின் கொடுமைகளைப் பொறுமையுடன் சகித்தும், வாணளை உல்லாசமாகக் கழித்து வந்தார்கள்.

துரத்தப்பட்ட அரசனுக்கு **ராஸலிண்டு** என்றோர் அருமைப் புதல்வி இருந்தனள். இப் பெண்மணியைத் தந்தையுடன் ஆரணியத்துக்கு அனுப்பாமல் கொடுங்கோல் மன்னன் பிரடெரிக் தனது அரும்பெறல் மகளான **ஸீலியா** என்பவளுக்குத் தோழியாக அமர்த்தி, அரண்மனையிலேயே அவளை நிறுத்திக் கொண்டான். பேரழகும் பெருந்தன்மையும் ஒருங்கே வாய்ந்த இவ்விரு இளம்பெண்களும் ஒருவர்பாலொருவர் உள்ளன்பு பூண்டு இணைபிரியா நட்பினராய் விளங்கினர். ஸீலியா, தனது தந்தையானவன் ராஸலிண்டின் தந்தைக்கிழைத்த கொடுமைக்கு வருந்தினவளாய்த் தன் தமக்கை பிதாவை நினைந்து கண் கலங்கும் பொழுதெல்லாம் அவட்கு ஆறுதல் கூறித் தேறுதல் செய்துவருவாள்.

ஒரு நாள் அரண்மனையின்கண் பிரடெரிக் வேந்தன் மூன்னுக மல்யுத்தம் ஒன்று நிகழ்த்த ஏற்படாயிற்று. அரசனது உத்தரவின்படி ராஸலிண்டும் ஸீலியாவும் வேடிக்கை காணும் பொருட்டு அவண் போந்தனர். கூற்றமும் அஞ்சும்படி பெருவடிவுடைய வீரனெருவனை யெதிர்க்க எழில் மிக்க இளைஞன் ஒருவன் மல்லரங்கத்தின் நடுவண் நிற்பதைக் கண்ணுற்ற இருமங்கையர்களும் திகிலடைந்தனர். அதுபொழுது பிரடெரிக் மன்னன் அக்கன்னிகைகளை நோக்கி, “ இந்தப் பெயர் பெற்ற வீரனெங்கே, இவ் வாலிபன் எங்கே? நாங்கள் கூறிய இதவுரைகளையும் புறக்கணித்து இவன் போர்புரியப் பிடிவாதமாக முனைந்து நிற்கின்றான். நீங்களாவது சென்று நன்மொழி நவின்று, அவமான மடையாவாறு அவனைத் திருப்புங்கள்” என்றனன்.

அம்மெல்லியலார் இருவரும் அவ்விளைஞனை நண்ணி அவ்வீரனோடு மற்போர் தொடங்குவதை விட்டுவிடும்படி பலவாறாக வேண்டிக்கொண்டனர். "நங்கைமீர்! தேவகன்னிகைகள் போல் உருவும் திருவும் பெற்றுத் திகழும் தாங்கள் என்பால் அன்பாற் காட்டும் பரிவைப் பெரிதும் பாராட்டுகின்றேன். இதுபொழுது தங்களது இதவுரையை மீறி நடக்க வேண்டி யிருப்பதற்கு மன்னிப்பு வேண்டுகிறேன். முன்வைத்த காலைப் பின் வாங்குவது உண்மை வீரனுக்கு அழகாகுமா? இந்த மற்போரில் தங்களது நல்லுரை எனக்கு நல்லாசியாக நின்று என்னைக் காக்கக் கடவது. மேலும், நான் ஒரு அஃதை; என்னைப்பற்றித் துயருறும் உறவினர், நண்பர் ஒருவருமில்லை. நான் உயிர் துறக்க நேரிடின் அதனால் பூபாரமேனும் சிறிது குறையுமன்றோ" என்று பணிவுடன் வெகு விநயமாக அவ்வாலிபன் மறுமொழி பகர்ந்தான்.

இவனது இரக்கமான சொற்கள் ராஸலிண்டு மனதை மிகவும் இளக்கி, தன்னைப்போல இவனும் ஒரு அகதியானவன்என்று எண்ணச் செய்தது. தன்னையறியாமலே அவன்பால் ஓரன்பும் நேசமும் அவள் உள்ளத்தில் உதித்தன. இருபெண்களும் அவ்வாலிபன் எவ்விதக் காயமும் படாமல் வெற்றிகொள்ள வேண்டுமென்று தம்மனத்தில் இறைவனை யிறைஞ்சி நின்றனர்.

மற்போர் தொடங்கியது. இராஜகுமாரிகளின் அன்பானது அவ்வாலிபனுக்குப் புதிய சக்தியையும் ஊக்கத்தையும் அளித்ததால், ஆவேசம் கொண்டவன்போல் மும்முரமாக அமர் புரிந்து அப் பெரிய பொர்வீரனைக் கீழே தள்ளி, மீறி எழ முடியாதபடி அவனை அமுக்கிப் பிடித்துத் தோற்கடித்தனன். எதிர்பாரா வண்ணம் இளைஞன் அடைந்த முழுவெற்றியைக் கண்குளிரக் கண்ட பிரடெரிக் மன்னனும் அவையினரும் பெருமகிழ்ச்சியுற்று இளைஞனை

வியந்தனர். இராஜகுமாரிகளிருவரும் உவகையால் உளம் பூரித்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கினர்.

வெற்றிபெற்ற இவ்வீரன் யாவன்? நாடு, நகர், அரசுரிமை அனைத்தும் இழந்து காட்டில் வசித்துவரும் அரசனின் ஆருயிர் நண்பனுக்கு மகன் இவன். இவன் தந்தை காலஞ் சென்ற **ஸர் ரோலண்டு டி பாய்ஸ்** என்பவர்.

தன் விரோதியான தமையனது நண்பன் மகன் இவன் என்று பிரடெரிக் அறிந்ததும், அக்கணமே அவன் **ஆர்லண்டோ**வினிடம் வெறுப்புக்கொண்டு விரோதம் பாராட்டலானான். ஆனால் ஆர்லண்டோ தனது தந்தைக்கு ஆப்த நண்பரின் குமாரனென்றும், ஓர் உயரிய குடியிற் தோன்றியவனென்றும் தெரிய வந்ததும், ராஸலிண்டு அகமகிழ்வுற்று, அவன்பால் ஆராமை மிக்கு முன்னையினும் பன்மடங்கு அன்புடையவளானாள். இவ்விரு நங்கையரும் அவ்வாலிபனிடஞ் சென்று, அவனது போர்த்திறமையைப் பாராட்டிய பிறகு ராஸலிண்டு, தான் கழுத்திலணிந்திருந்த ஓர் தங்கச் சங்கிலியைக் கழற்றி, 'ஐய! இற்றை வெற்றியின் அறிகுறியாக நான் தங்கட்கு வழங்கும் இதனை என்பொருட்டு, அன்புடன் ஏற்று அணிந்து கொள்க' என்று இனியவை கூறி, அதை அவனது கழுத்திலிட்டனள். ஆர்லண்டோவின் உள்ளத்திலும் அவள்பால் புதியதோர் அன்பு உதிக்கலாயிற்று. பிறகு அரண்மனை சென்ற அப்பெண்மணிகள் ஆர்லண்டோவின் குணாதிசயங்களைப் பற்றியே உரையாடிக்கொண்டிருந்தனர்.

ராஸலிண்டின் இச்செய்கையைப் பிரடெரிக் பொறுதவனாய் அவளிடம் சென்று கடுங்கோபத்துடன், "இனி நீ அரண்மனையில் தங்குதல் கூடாது. உன் தந்தை வசிக்கும் வனத்திற்கே புறப்பட்டுப்போ" என்று வற்புறுத்தி வன்சொல் வழங்கினான். அது தருணம் ஸீலியா தன் பிதாவின் முன், முழங்காற்படியிட்டு ராஸலிண்டை அவ்விதம் காட்டுக்கு அனுப்புவது தகாது என்றும், தனது

ஆருயிர்த் தோழியாகிய அவளை விட்டுப் பிரிவது தனக்கு இயலாதென்றும் விண்மாரி போல் கண்மாரி சொரிந்து மன்றாடினாள். ராஸலிண்டின் நற்குணங்களுக்காக ஜனங்கள் அவளைப் புகழ்ந்து பேசுவதாகவும், அவளிருக்கும் வரை தன்னரும்பெறற்பாவையாகிய ஸீலியாவின் குணாதிசயங்கள் கொஞ்சமேனும் பிரகாசிக்க மாட்டாவென்றும் தனக்குள் எண்ணி, அவள் காட்டுக்கேகத் தான் வேண்டுமென்று கடுமொழி கழறினான் பிரடெரிக்.

தான் மென்மொழியாற் கூறிய நன்மொழியைச் சற்றும் ஏற்காத தந்தையோடு நாட்டில் வாழ்தலினும், தன்னன்புக்குரிய தோழி ராஸலிண்டோடு காட்டில் வாழ்வதே மேம்பட்டதென்று ஸீலியா கருதி, யாவரும் அறியா வண்ணம் அன்றிரவே தனது தமக்கையாருடன் கானகம் செல்லக் கருத்தொருமித்தனள். ராஸலிண்டு ஆணுடை தரித்து காநிமீட் என்னும் பெயர் பூண்டு ஓர் ஆயர்குல வாலிபனாகவும், ஸீலியா எளிய உடை உடுத்து அலீநா என்னும் பெயர் தாங்கி அவனது உடன் பிறந்தவள் போலவும் உருமாறி, புனை பெயர் தரித்து, ஆர்டன் அரணியத்தை நோக்கிப் புறப்பட்டனர். தங்களிடமிருந்த பணத்தையும் நகைகளையும் வழிச் செலவுக்காக எடுத்துக் கொண்டு சென்றார்கள்.

பல நாழிகை வழிநடந்து முடிவில் அவ் விருவரும் ஆர்டன் வனத்தை யடைந்தார்கள். அப்பெரிய காட்டில்வெகு தொலை அலைந்து திரிந்தும் தந்தையைக் கண்டாரில்லை வழி நடந்த களைப்பினாலும், அன்ன ஆகார மின்மையாலும் பல்வகை இன்னல்களுக்கும் ஆளானார்கள். கடைசியாகக் கால் நொந்து மேலே எடுத்தடிவைக்க முடியாமல் ஸீலியா துவண்டு தரையில் விழுந்து அழுதனள். தனது ஆண் வேடத்திற் கேற்ப, ராஸலிண்டு சிறிது தைரியங் கொண்டு தங்கைக்கு ஆறுதல் கூறித் தேறுதல்

செய்தனள். இரவு நெருங்கிற்று. இருவரும் உயிரை யிழக்க நேரிடுமோவென்று அஞ்சி நடுநடுங்கினர்.

தெய்வச் செயலாய் அத் தருணத்தில் அந்த வழியாக ஒரு மேய்ப்பன் செல்லக்கண்டு கானிமீட் தனது தங்கையின் பரிதாப நிலைமையை அவனுக்கு விளக்கி, சிறிது உணவு வாங்கிவந்தால் பணந் தருவதாகக் கூறினன். அந்த ஆயன் அவர்களைத்தனது எசமானனின் குடிசைக்கு மெல்ல அழைத்துச் சென்றனன். அங்குச் சிறிது ஆகாரம் பெற்று அவர்கள் அவ்விரவைக் கழித்தனர். மறுநாள் ஏழைமைப்பட்டிருந்த அத் தலைவனது குடிசையையே விலைக்கு வாங்கி, கானிமீடும் அலீனவும் ஆயர்குலத்துச் சகோதரர்போல வதிந்து வந்தனர்.

நிற்க. ஆர்லண்டோவின் தந்தையாகிய ஸர் ரோலண்டு டி பாய்ஸ் என்பவர் தமது மரணத் தறுவாயில் அவ் விளைஞனுக்குக் கல்வி பயிற்றுவித்து முன்னுக்குக் கொண்டு வரும் பொறுப்பைத் தமது மூத்த மகனாகிய ஆலிவரிடம் ஒப்புவித்திருந்தார். ஆனால் தந்தை காலஞ்சென்றதும் ஆலிவர் பிதுர் வாக்கியத்தைப் பரிபாலனஞ் செய்யாமல், தனது தம்பியிடம் பொறாமைகொண்டு அவனுக்கு விரோதமாகச் சதியாலோசனைகள் செய்யலானன். ஆர்லண்டோ தனது சுய முயற்சியால் பல கலைகளையும் பயின்று திறமை பெற்றான். மேலும் அவனது நற்குணங்களைப் பாராட்டிப் பலரும் புகழ்ந்து வந்தனர். ஆர்லண்டோ மேன்மை பெறுவதைச் சகியாதவனாய், அவனை எப்படியும் ஒழித்துவிட எண்ணங் கொண்டே ஆலிவர் தனது தம்பியை மற்போருக் கனுப்பினான். பின்னவன், போரில் இறக்காமல் வெற்றிபெற்றுத் திரும்பினனென்றறிந்ததும், அவன் கொண்ட அழுக்காறுக் களவேயில்லை.

"அழுக்காறு எனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும்".

என்பது பொய்யா மொழியன்றோ? ஆதலால் ஆர்லண்டோ உறங்கு மறையில் தீயிட்டு அவனைக்கொல்ல ஆலிவர் பின்பு ஏற்பாடு செய்தான். ஆலிவரின் தீய கருத்தை அறிந்து ஆதம் என்ற ஒரு உண்மைப் பணியாளன் ஆர்லண்டோ வீடு திரும்பியதும், தனியா யழைத்து, அவனது அண்ணன் அவனைத் தீக்கிரையாக்க எண்ணி யிருப்பதை இரகசியமாக விரித்துரைத்தான். அவ்வேலை யாளன் சேமித்து வைத்திருந்த பணத்தை ஆர்லண்டோ வுக்கு உதவித் தானும் துணையாக உடன் வர இசைந்தான். உயிர் பிழைக்கும் பொருட்டு இருவரும் அன்றிரவே ஆர்டன் காட்டிற்குத் தப்பியோடப் புறப்பட்டார்கள்.

கானகம் புக்கு வெகுதூர மலைந்தும் மக்கள் குடி யிருக்குமிடம் ஒன்றுமே அவர்களுக்குத் தென்படவில்லை. முடிவில் ஆதம் பசியினால் களைத்து மெய்ம்மறந்து மேதினி மேற் சோர்ந்து விழுந்தான். உணவளித்து அவனை உயிர்ப் பிக்க நினைத்த ஆர்லண்டோ அங்குமிங்கும் ஓடுகையில் சிங்காதனம்போன்ற ஒரு புல்மேட்டில் தனது நண்பர்கள் புடைசூழ உட்கார்ந்து கந்த மூலங்களைப் புசித்துக்கொண் டிருந்த ஒருவனைக் கண்டான். இவன்தான் பிரடெரிக்கின் அண்ணனாகிய அரசன். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்றபடி தனது பசியின் கொடுமையால் உருவின வாளும் கையுமாக அவன் முன் தீடீரெனச் சென்று, "உணவைத் தொடாதே" என்று கத்தியைக் காட்டி ஒரு கையால் ஆகாரத்தைக் கைப்பற்றினான். அரசன் திடுக்கிட்டு "நீ இவ்வாறு செய்வது உன் பசியின் கொடுமையா அல்லது நீ ஒரு கள்வனா?" என்று வினவினான். ஆர்லண்டோ "பெருமை பொருந்திய ஐய! என்னை மன்னியுங்கள். எனக்காக இவ்வாறு செய்யவில்லை. என்னுடன் வந்துள்ள வயோதிகனான வேலைக்காரனொரு வன் வழி நடந்து களைத்து, உண்ண உணவின்றி மூர்ச்சை யற்றுக் கிடக்கின்றான். இவ்வுணவினால் அவனை உயிர்ப்

பிக்க அனுமதி அருளுங்கள்'' என்று வேண்டினன். மன்னன், "நாங்கள் மிருகங்களைப்போல இவ்வனத்தில் இப்பொழுது வசிக்க நேரிடினும், வாழ்க்கையின் சுக துக்கங்களை நன்கு அனுபவித்துள்ளோம். நீ முதலாவது இவ்வுணவில் சிறிது சாப்பிடு'' என்ருன். "எனது வேலையாளன் பசி தீர்கிற வரையில் நான் ஒரு பருக்கைகூட அருந்த மாட்டே'' னென்று ஆர்லண்டோ பிடிவாதமாகக் கூறினன். வேந்தன், "நீ சென்று அவனுக்கு உணவளித்து அவனை அழைத்து வருகிற வரையில் நாங்களும் உணவைத்தொடோம்'' என்று நவின்ருன். ஆர்லண்டோ திரும்பிச் சென்று ஆதமைத் தனது கையில் தூக்கியெடுத்துக் கொண்டு அரசனிடம் வந்து சேர்ந்தான். பிறகு எல்லோரும் உணவருந்திக் களைப்புத் தீர்ந்தனர். பிறகு விருந்தினராய் வந்தவர்களின் வரலாற்றை அரசன் கேட்டறிந்தான். தனது பழைய நண்பனது மகன் ஆர்லண்டோ என்றும், பழைய வேலைக் காரனே ஆதம் என்றும் தெரியவரவே, அவர்களைத் தன்னிடமே தங்கி வசிக்கச் செய்தான்.

ஆர்லண்டோ தனது வனவாசத்திலும் ராஸலிண்டின்மீது தான் கொண்ட காதலை மறக்கவில்லை. தான் உலாவச் செல்லும்பொழுதெல்லாம் அவளைப் பற்றியே நினைத்து, "ராஸலிண்டு'' என்னும் பெயரை மரப்பட்டைகளில் செதுக்கியும், அவளைப்பற்றிக் காதல் பாட்டுக்களை மரத்தழைகளில் எழுதியும் காலம் போக்குவது வழக்கம். ஒரு நாள் கானிமீட், அலீன இருவரும் அக்கானகத்தில் உலாவிக் கொண்டிருக்கையில் ராஸலிண்டு என்னும் பெயர் மரங்களில் பொறிக்கப்பட்டிருப்பதைக் கண்டார்கள். நிர்மானுஷ்யமான அவ்வனத்தில் தங்களில் ஒருவரது பெயர் எழுதியிருப்பதைக் கண்ணுற்றதும்

அவர்கள் திகைத்தனர். அவ்விதம் வரைந்தவரை நேரிற் காணப் பேரவாக்கொண்டனர் என்றால் இதில் வியப் பொன்றுமில்லை.

தற்செயலாய் ஆர்லண்டோவும் அவண் வரநேர்ந்தது. எதிரிற் தோன்றிய இருவரும் தான் முன்னமே கண்டிருந்த இராஜகுமாரிகள்தாம் என்று அவனுக்குப் புலப் படவேயில்லை. ஆர்லண்டோ அவர்களிடம் சென்று உரை யாடத் தொடங்கினன். ஆண்வேடம் பூண்ட ராஸலிண்டு விசடமாகவும் சாதுரியமாகவும் பேசுவதில் சிறப்புற்றவள். அவள் ஆர்லண்டோவை நோக்கி, "யாரோ ஒருவன் இம் மரங்களிலெல்லாம் ராஸலிண்டின் பெயரை எழுதியிருக் கின்றான். அப்பெயர் அவன் காதலிக்கும் பெண்ணின் பெயர்போலும். அவனை நேரிற் கண்டால் அவனுக்கு நற் புத்தி கற்பிக்கக்கூடும்' என்று மொழிந்தாள். "அப்பெயர் குறித்தவன் நானே!" என்று ஆர்லண்டோ கூறி, தான் ராஸலிண்டு என்னும் மாதின்மீது கொண்டுள்ள அளப்ப ரிய அன்பையும் தெரிவித்து, அவளைத் தான் மணம்புரியப் பேரவாக் கொண்டிருப்பதாகவும் கூறினன். கானிமீடும் அலீனவும் எதிர் தோன்றிய வாலிபன் யாரென்றறிந் தாரெனினும், தங்களது உண்மைப் பெயரையும் உருவை யும் தெரிவிக்கவில்லை. என்றாலும், ஆர்லண்டோவின் உண்மைக்காதலை உணர்ந்த கானிமீட் அகமகிழ்வுற்றான். தமையனும் தங்கையும் ஆர்லண்டோவைத் தங்கள் குடி சைக்கு அழைத்துச்சென்று, தாங்கள் காட்டில் வசிக்கும் ஆயர்குலத்தினரென்று அவனிடம் கூறினர். கானிமீட் ஆர்லண்டோவைப் பார்த்து, "நீர் அடிக்கடி இங்கு வந்து செல்லுக. நும்மால் விரும்பப்பட்ட ராஸலிண்டாகப் பாவித்து என்பால் அன்பு செலுத்துக. நான் நுமது எண்ணம் நிறைவேறுதற்கான உபாயம் கூறவல்லேன்" என்றனன். ஆர்லண்டோவும் கானிமீடை ஆணகவே

நினைத்து அக்குடிசைக்கு ஒவ்வொரு நாளும் வந்து தன் காதலியைப்பற்றி நெடுநேரம் பேசியிருந்து போவான்.

ஒருநாள் ஆர்லண்டோ, கானிமீடைக் காண ஏகுங்கால் இடைவழியில் ஒரு மனிதன் புற்றரையில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருப்பதைக் கண்டான். அம்மனிதனது கழுத்தண்டையில் ஊர்ந்துகொண்டிருந்த ஒரு அரவம் இவன் வரும் அரவம் கேட்டதும் சரசர என்று ஓடிவிட்டது. அதனுல் திடுக்கிட்ட ஆர்லண்டோ அவனருகிற் சென்று உற்று நோக்குகையில் கண் துயிலுபவன் தனது தமையன் ஆலிவர் என்றறிந்தான். அவன் விழித்தெழுந்ததும் பாய்ந்து கொல்லுவதற்கு ஒரு பெண் சிங்கம் சிறிது தூரத்தில் ஒரு புதர் மறைவிற் பதுங்கிக்கொண்டிருந்தது. அதையும் பார்த்தான் ஆர்லண்டோ. உறங்குகின்றவரைச் சிங்கம் கொல்லுகின்றதில்லையாம். தன்னைக் கொல்ல முயன்ற தமையனைச் சிங்கத்திற்கு இரையாக்கலாமாவென்றும் அரைக்கணம் சிந்தை செய்தான்.

> "இன்னுசெய்தாரை யொறுத்தல் அவர் நாண
> நன்னயம் செய்துவிடல்".

என்பதைக் கடைப்பிடித்துத் தனக்கு இன்னு இயற்றியவனுக்கும் நன்மையே புரிதல் கடனெனை ஓர்ந்தான். அக்கணமே வாளையுருவிக்கொண்டு புதரின் பின்புறமாகச் சென்று சிங்கத்தை எதிர்த்து, வெட்டி வீழ்த்தினுன். சிங்கத்துடன் நிகழ்த்திய போரில் அதன் நகங்கள் கீறி ஆர்லண்டோவின் உடலில் காயங்கள் உண்டாயின. இதனிடையே, உறங்கிய ஆலிவர் விழித்தெழுந்து உற்றதை உணர்ந்தான். தான் கொல்ல முயன்ற தன் தம்பியே மகத்தான ஆபத்தினின்றும் தன்னைக் காப்பாற்றி உயிர் தப்பச் செய்தானென்று கண்டு, ஆலிவர் வெட்கித் தலை குனிந்து அவனது இரு தாள்களையும் பிடித்துக்கொண்டு

பிழை பொறுக்குமாறு கெஞ்சினன். பெருந்தகையான ஆர்லண்டோ உடனே அத்தீமைகளை மறந்து, தமையனை வணங்கித் தழுவினன். உண்மையில் ஆலிவர் தனது தம்பியைக் கொல்லும் பொருட்டுக் காட்டுக்கு வந்தவன். இவ்வாறு இவர்கள் ஒன்று சேர்ந்து நட்புக்கொண்டது தெய்வச் செயலேயன்றே!

ஆர்லண்டோ உடலிற்பட்ட காயத்தில் இரத்த வெள்ளம் பெருகியதனல் அவன் கானிமீடின் குடிசைக் குச் செல்லுவது அன்று தடைபட்டது. அவர்கள் வசிக்குமிடத்தைச் சுட்டிக் காட்டி, தான் வரமுடியாத காரணத்தைச் சொல்லி வரும்படி தன் தமையனை யனுப் பினன். ஆலிவரும் அவ்வாறே சென்று, செய்தியைத் தெரிவித்து, தான் செய்த அபகாரத்திற்குப் பிரதியாக ஆர்லண்டோ புரிந்த உபகாரத்தையும் எடுத்துரைத்து அளவளாவியிருந்தான். ஆர்லண்டோ காயம்பட்டதைக் கேட்ட கானிமீட் துயருற்று அயர்ந்தான். பின்னர் அலீனவும் ஆலிவரும் ஒருவர்மேலொருவர் ஆசைகொண்டு நேசிக்கலானர்கள்.

ஆலிவர் ஆர்லண்டோவிடம் திரும்பிவந்து அலீன வைத் தான் மணம்புரிந்து கொண்டு அவள் குடிசையில் வாழ்ந்துவர அனுமதி வேண்டினன். அதற்கு ஆர்லண் டோவும் உடன்பட்டு, "அலீன முழுச் சம்மதம் அளித் தால் காலம் தாழ்த்தாது நாளைய தினமே அரசன் முத லியவர்கள் முன்னிலையில் திருமணம் நிகழ்த்திவிடலாம். அதோ கானிமீட் வருகிறன். இப்பொழுது அவள் தனிமையாய் இருப்பாளாதலால் உடனே சென்று கருத் தின் உண்மையை அறிந்து வா" என்று நவின்றன். உடனே ஆலிவரும் அலீனவிடம் சென்றன்.

ஆர்லண்டோவின் காயத்தைக் கண்டு ஆறுதல்கூற கானிமீட் தனிமையாக ஆர்லண்டோ இருக்குமிடம் நாடி

வந்தான். அன்று நிகழ்ந்தவைகளைப் பற்றிச் சிறிதுநேரம் பேசிய பிறகு, ஆலிவர் அலீனவை மறுதினமே மணந்து கொள்ளச் சித்தமாக இருப்பதைத் தெரிவித்து, "ஆஹா! இத்தருணத்தில் ராஸலிண்டு மட்டும் இங்கிருப்பாளாகில் எனது திருமணமும் இனிது நடைபெறலாமே" என்று பெருமூச்செறிந்தான்.

உடனே கானிமீட் ஆர்லண்டோவைப் பார்த்து "சில மாய வித்தைகளை நானறிவேன். மந்திரபலத்தால் நாளைய தினமே ராஸலிண்டை இங்குவரச் செய்யக்கூடும். நீங்கள் முழுமனதோடு அவளை நேசிப்பது உண்மையாகில் உங்கள் திருமணத்தையும் நான் நிறைவேற்றிவைப்பேன்" என்றனன். அவனது வார்த்தையை ஆர்லண்டோ ஒருவாறு நம்பினன்.

பின்பு இருவரும் அரசன் உறையுமிடம் சென்று அவனையும் அவனது நண்பர்களையும் திருமணக் கோலங் காண அழைத்தார்கள். அப்பொழுது அந்த இடைக்குல வாலிபன் வேந்தனைப் பார்த்து, "நான் தங்கள் பெண் ராஸலிண்டை மந்திர சக்தியால் வரவழைத்தால் அவளை ஆர்லண்டோவுக்குக் கலியாணம் செய்து கொடுக்கத் தாங்கள் சம்மதிப்பீர்களா?" என்று வினவினன். அதற்கு மன்னன் "தடையேயில்லை. நிச்சயமாகச் சம்மதிக்கிறேன். ஆனல் சீதனம் வழங்க எவ்விதப் பொருளும் என்னிடமில்லையே" என்ருன். பிறகு கானிமீட் ஆர்லண்டோவைப் பார்த்து, "உமக்கும் சம்மதந்தானே?" என்று கேட்க அவனும் "முழுச்சம்மதமே. நான் செல்வமில்லாதவனென்று அவள் ஒருவேளை சம்மதிக்காமல் இருப்பளோ?" என்ருன். மறுதினம் குறித்ததோர் நல்லோரையில் பெண்களை யிட்டுக்கொண்டு வருவதாகவும், திருமணம் நிகழ்த்தத் தயாராயிருக்குமாறும் அனைவருக்கும் தெரிவித்து கானிமீட் வீடு திரும்பினன்.

திருமணவிழாக் காணக் கதிரவனும் காட்சிக்கினிய பொலிவோடு குணதிசையிற் றோன்றினன். மறுதினம் மரங்களின் இலைச்செறிவே மண மண்டபமாகவும், பசும் புற்றரையே இரத்தின கம்பளமாகவும் திகழ்ந்தன. பட்சி ஜாலங்களின் இனிய குரல்களே வாத்தியங்களாக முழங்கின. காய், கனி, கிழங்குகளே விருந்துணவாக அமைந்தன. குறித்த நல்வேளையும் நெருங்கிற்று. எல்லோரும் மணப் பெண்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர். கானிமீடும் அலீனாவும் தங்களது உடைகளைக் கழற்றிவிட்டு இராஜ குமாரிகளின் உடுப்புக்களைத் தரித்து, முறையே ராஸலிண்டு, ஸீலியா என்னும் உண்மை யுருவில் தோன்றினார்கள். அனைவரும் பிரமித்தனர். ராஸலிண்டு தன் தந்தையாகிய அரசன் திருவடிகளை வணங்கி, தான் இடைச் சிறுவன் வேடம் பூண்ட காரணத்தையும் எஞ்சிய வரலாற்றையும் தெரிவித்து ஆர்லண்டோவுக்குத் தன்னை விவாகம் செய்து கொடுக்க வேண்டினள். அவ்வாறே ஸீலியாவின் முகக் குறிப்பும் தன்னை ஆலிவருக்கு மணவாட்டியாக்குவிக்கக் கூறுமற் கூறினவற்றை யெல்லாம் அறிந்த அரசன், ஆனந்த பரவசனாகி அக் கணமே தனது புதல்வி ராஸலிண்டை ஆர்லண்டோவுக்கும், ஸீலியாவை ஆலிவருக்கும் திருமணம் நிறைவேற்றி வைத்தான். அனைவரும் இன்பக்கடலில் மூழ்கினர்.

அது தருணம் ஒரு தூதன் ஓடிவந்து அரசனுக்குத் தன்னாடு கிடைத்ததாக மற்றொரு நற்செய்தியையும் விளம்பினான். இரு நங்கையரும் வனத்திற் கோடியதை யறிந்த பிரடெரிக் என்னும் கொடுங்கோன் மன்னன் மிகச் சீற்றங் கொண்டு மன்னனையும் அவன் நண்பர்களையும் பிடித்துக் கொல்லும் எண்ணத்துடன் ஆர்டன் காட்டை நோக்கிப் புறப்பட்டு வந்தான். நடுவழியில், ஒருதுறவியின் அருளால் நல்லுபதேசம் பெற்று, தான் செய்த

அடாத செயல்களுக்குக் கழிவிரக்கம் கொண்டு, கழுவாயாற்றுமாறு துறவி வேடம் பூண்டு இறைவன் பணியில் ஈடுபட்டான்.

உண்மை வேந்தனும், நண்பர்களும், ஆர்லண்டோ, ராஸலிண்டு, ஆலிவர், ஸீலியா ஆகிய மணமக்களும் நகர் திரும்பி நாடாண்டு இன்புற்று வாழ்ந்தனர்.

'அஞ்ச வருதீவினையின் ஆரமுதும் நஞ்சாம்
நஞ்சம் அமுதாமுரிய நல்வினையின் மாதோ.'

பயிற்சி

[இவ்வினிய கதை, ஆங்கிலத்தில் மகா கவி ஷேக்ஸ்பியர் இயற்றியுள்ள 'நீங்கள் விரும்புவது போலவே' (As you like it) என்னும் நாடகத்தைத் தழுவி எழுதியது]

1. 'ஸீலியாவைவிட ராஸலிண்டு அதிகத் திறமையும், துணிவும் உள்ளவள்' - இதைக் கதையினின்று விளக்குக.

2. ஆர்லண்டோவின் குணாதிசயங்களை ஒரு பத்தியில் எழுதுக.

3. இக் கதையில் 'படர் கொடி'யைப் போன்றவர் எவரெவர்?

---

14. நட்சத்திரசாலை

திரு ஈ. த. இராஜேசுவரி யம்மையார், எம். ஏ., எல். டி.

மாக்களும், மக்களும் :—வானசாஸ்திரத் துறையில் ஈடுபட்டவர்களை மக்கள் எனவும் மாக்கள் எனவும், இரண்டு பிரிவாக வகுத்தார்கள், பழந்தமிழர்கள். நமது கல்லூரிகளில் கடிகாரத்தைப் பார்த்து 'ஒன்று', 'இரண்டு', என்று மணியடிக்கும் வேலையாளும் இருக்கின்றான்; அண்டங்களின் அமைப்பையே கடிகாரமாகக் கொண்டு காணும் பேராசிரியரும் வீற்றிருக்கின்றார். வேலையாள் போன்றாரை, நாழிகைக் கணக்கர் என்றும், பேராசிரியர் போன்

ரூரைக் காலக் கணிதர் என்றும் வேறு பிரிக்கின்றார் இளங்கோவடிகள். நாழிகைக் கணக்கர்கள், மணியடிப் பார் போலவும், கிளிப்பிள்ளை போலப் பஞ்சாங்கம் ஓதுவாரைப் போலவும்,

"பூமென் கணையும் பொருசிலையுங் கைக்கொண்டு
காமன் திரியுங் கருவூர!—யாமங்கள்
ஒன்றுபோய் ஒன்றுபோய் ஒன்றுபோய் நாழிகையுள்
ஒன்றுபோய் ஒன்றுபோ யொன்று"

என்று நாழிகை யறிவிப்பார்கள் என்று விளக்குகின்றார் அடியார்க்கு நல்லார். இவர்கள் வான சாஸ்திரிகள் அல்லர். இவர்களை மாக்கள் என்றே, நப்பூதனார் இழித்துரைக்கின்றார்.

"பொழுதளந் தறியும் பொய்யா மாக்கள்
தொழுது காண்கையர் தோன்ற வாழ்த்தி
எறிநீர் வையகம் வெலீஇய செல்வோய்
குறுநீர்க் கன்னல் இனைத்தென் றிசைப்போர்"

என முல்லைப்பாட்டில் வருவது காண்க. நாழிகைக் கணக்கர்க்கும் காலக் கணிதருக்கும் உள்ள இவ்வேறுபாட்டை விளக்காது, இவ்வடிகளில் வருவோரைக் காலக் கணிதராகவே கொண்டு, "மாக்கள் பொழுதளந்தறியும் பொய்யாக் காண்கையர்" எனக் கொண்டுகூட்டி, வாராத தலை நோயை வரச் செய்கின்றார் நச்சினார்க்கினியர். இவர்கள் மாக்களே யாய்க்கிடக்க, மக்களாவார், சூரியன் முதலிய வற்றை நேரே சென்று கண்டுவந்தாற்போல, உண்மையை எடுத்துக்கூறி விளக்கும் ஆராய்ச்சியாளரேயாம். அந்நாளைய அரசரோடுவீற்றிருக்கும் ஐம்பெருங்குழுவில், காலக் கணிதராம் பெருங் கணியும் ஒருவர். இவரை,

ஆறிரு மதியினும் காருக வடிப்பயின்
றைந்து கேள்வியும் அமைந்தோன். *

---

* ஆறிருமதி - 12 இராசி; காருகவடி - கிரகநிலை; ஐந்து கேள்வி - கிரக உச்ச நீச ஆட்சி நட்புப் பகை.

எனப் பாடுகின்றார் இளங்கோவடிகள். கோங்குவேள் கூறுவதுபோல, இம்மங்கலக் கணிகள் மாதிரநோக்கி, ஆராய்ச்சி செய்கின்றவர்கள். இவர்களது புகழைக் "கணி வன் முல்லை" என்ற துறையாக அந்த நாளைய புலவர்கள் பாடி வந்தனர் எனப் புறப்பொருள் வெண்பா மாலையின் நின்றும் அறிகின்றோம். ஒவ்வொருவரும், ஒவ்வொரு துறையிலே சிறப்படைந்தால், அவர்கள் வாகைமாலை சூடி வெற்றி பெற்றவர்களே என்று தமிழர்கள் கருதிவந்தனர். பொருது வந்த மேம்பாட்டை வாகை என்றும், இயல்பாக விளங்கும் மேம்பாட்டை முல்லை என்றும் வழங்குவது அந் நாளைய மரபு. வாகைத் திணையிலே ஒரு துறையாகும் இக் கணிவன் முல்லை என்பது. இத்துறை, இப்பெயரோடு தொல்காப்பியத்திலே இல்லை. "அறிவன் வாகை" என்ப தொரு துறை வருகின்றது. ஈதே கணிவன் முல்லை எனக் கூறும் இளம்பூரணர், இக்கணிகள், அறிவிற் சிறந்த மக்க ளாய் ஆராய்ச்சி செய்துவந்த திறத்தைப் பரக்கப் பேசு கின்றார்.

"மறுவில் செய்தி மூவகைக் காலமும், நெறியின் ஆற் றிய அறிவன் தேயமும்" என்பது-மழையும் பனியும் வெயிலும் ஆகிய குற்றச் செயலுடைய மூவகைக் காலத் தினையும் நெறியினாற் பொறித்த அறிவன் பக்கமும் என்ற வாறு. அறிவன் என்றது கணிவனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றல் ஆவது, பகலும் இரவும் இடைவிடா மல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும், மின்னும், ஊர் கோளும், தூமமும், மின் வீழ்வும், கோணி லையும், மழை நிலையும், பிறவும்பார்த்துக் கூறல்என்பதாம். அங்ஙனம் வேண்டுதலின், ஆற்றிய அறிவன் என்றார். இவ்வாறு இவ்வாராய்ச்சியாளர்கள் ஓரிடத்தே இருந்து, இடை விடாது பார்த்து வந்தார்களாயின் அவ்விடமே நட்சத்திர சாலையாகும். எனவே நட்சத்திர சாலையே

இவர்களை மாக்களாக்காது மக்கள் ஆக்கியது எனலாம். பகலிலே நட்சத்திரங்கள் தோன்றாமையாலே, மிகமிக ஆழமாக இருக்கும் கிணற்றினுள் சென்று, அங்குச் சென்றதும், நட்சத்திரங்கள் தோன்றுவது கண்டு இவர்கள் ஆராய்ந்துவந்தனர் என்பது கர்ண பரம்பரைக் கதை.

நட்சத்திர சாலைகள்:—ஊனக்கண் கொண்டு காணமுடியாத நட்சத்திரங்களையும் கிரகங்களையும் கண்டு, அவற்றின் நிலையையும், இயல்பையும், உணரக்கூடிய இடமே நட்சத்திரசாலையாம். நோக்கரிய திருமேனியுடைய சூரியனை நோவாமே நோக்கருள வல்லானைக் கண்டு களிக்கும் இடமே ஈதென்பதாயிற்று. நட்சத்திரசாலை என்பது அரசாங்கத்தார் ஆங்காங்குக் கட்டிவைத்திருக்கும் பெரிய கட்டடங்கள் மட்டும் அல்ல. வேண்டுமானால், நமது வீட்டு மேல்மாடியையும் நட்சத்திரசாலையாக அமைத்துவிடலாம். நமது வீட்டிலேயே நமக்கு வேண்டிய வசதிகளைச் செய்தமைத்துக்கொள்வது, எக்காலத்திலும் நமக்குச் சௌகரியமாகும். ஒவ்வொருவரும் தத்தம் சக்திக்குத் தக்கவாறு, தங்கள் தங்கள் இல்லத்தின் மேன்மாடியிலேயே ஒவ்வொர் நட்சத்திர சாலையை அமைத்துக்கொண்டு, பல இடங்களிலிருந்தும் வெளிவரும் ககோள ஆராய்ச்சியுண்மைகளை நேரே கண்டறிந்து களிப்பது, தற்காலக் கல்விக்கும் தற்கால நாகரிகத்துக்கும் தக்கதேயாகும்; இக்காலத்திற்கு இன்றியமையாதது என்றும் கூறலாம்.

பழைய சாலைகள்:—ககோள ஆராய்ச்சிக்கென்றே ஒரு தனியிடத்தை அமைத்துக்கொண்டு, அங்கே அரிய ஆராய்ச்சிகளைச் செய்துவருவது, தொன்று தொட்டு வரும் ஒரு சிறந்த பழக்கமாகும். சீனதேசத்தரசனான 'யாஓ' என்பவன் இற்றைக்குச் சுமார் 4200 வருடங்களுக்கு முன்னரே, கி. மு. 2300-ல் சூரியன் பூமிக்குமேல் எவ்வளவு உயரத்திலே இருக்கின்றான் என்று கணக்கெடுப்பதற்காகக் கட்டடம் அமைத்து, அங்கே ஆராய்ச்சி

செய்து வந்ததாக, அக்காலத்திய சீனதேசத்துச் சாசனங்கள் உணர்த்துகின்றன. ஹிப்பார்கஸ் என்றய வன நாட்டறிஞரே, நட்சத்திரசாலை என்று சிறப்பித்துக் கூறத்தக்கதொன்றை முதல் முதலாக ஏற்படுத்தியவர் ஆவர். கி. மு. 140-ல், ரோட்ஸ் என்ற தீவிலே அதனை அமைத்த அப்பெரியார், அங்கே செய்த ஆராய்ச்சியின் பயனாக ஒரு நட்சத்திர அகராதியையும் எழுதி வைத்துள்ளார். இதன் பின்னர், சுமார் 1000 வருஷங்களுக்கு முன்னர், கி. பி. 1000-ல் காலீப் ஹகீம் என்ற இஸ்லாமிய சக்கரவர்த்தி, டமாஸ்கஸிலும், பாக்டாடிலும், மொக்கட்டாவிலும் நட்சத்திரசாலைகள் அமைத்துச் சில ஆராய்ச்சிகளை மிக்க ஊக்கத்துடன் செய்து வந்தனர்.

புதிய நட்சத்திரசாலைகள்:—தற்கால ஐரோப்பிய நாகரிகக் கல்வி முறையின்படி அமைந்த நட்சத்திரசாலைகளில் முதன் முதலாகத் தோன்றியது, யுரேனி நகர் என்பதாகும். ஈது, கெப்ளர் என்ற பேர் அறிஞருடன் ஒத்துழைத்து வந்த டேனிய வான சாஸ்திரியாகிய டைகோ பிராகே என்பவர் ஹூவின் என்னும் டேனியர் தீவிலே கி. பி. 1676-ம் ஆண்டு, ஆகஸ்டு மாதம், எட்டாம் தேதியில் நிறுவியதொன்றாகும். இக் கட்டடத்திற்குக் கடைகால் போடும் போதே இதற்கு யுரேனி நகர் என்ற பெயர் வந்தது. குடும்பம் வாழும் மாளிகையாகவே இதனைக் கட்ட எண்ணினர் என்பது, நகர் என்ற பெயரால் விளங்குகிறது. கிரீக்கர்கள் கொண்டாடிய கந்தருவ மாதான யுரேனியாவின் பெயரை இம்மாளிகைக்கு இட்டமையால், இம்மாளிகை நட்சத்திரசாலையாகவே நிலைபெற்று விளங்கவேண்டுமெனக் கால்கோள் விழாக் கொண்டாடும்போதே பிரார்த்தித்தார்கள் என்பது வெளியாகிறது. இதிலே இருபத்தொரு வருடம் வரையில் (1576—1597) சீருஞ் சிறப்புமாகப் பல அரிய பெரிய ஆராய்ச்சிகள் நடந்தேறி வந்தனவாம்.

இந்திய நட்சத்திர சாலைகள் :—இந்தியாவிலும் கி. மு. முதல் நூற்றாண்டில் விக்ரமாதித்தன் அரசுபுரிந்த காலத்தில் தன்னுடைய தலைநகராகிய உச்சினி நகரில் ஒரு நட்சத்திரசாலையை அழகுபெற அமைத்தான். அவனுக்குப் பின்னர், இற்றைக்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர், ராஜா ஜேய் சிங் என்பார் அதனைப் புதுப்பித்தனர். இவ்வரசர் பெருமான் கி. பி. 1705-ம் ஆண்டிலே ஐந்து நட்சத்திர சாலைகளை முறையே டெல்லியிலும், காசியிலும், வடமதுரையிலும், உச்சினியிலும், ஜெய்ப்பூரிலும் கட்டிவைத்தார். உச்சினி நகரத்து நட்சத்திரசாலை அழிந்து போகாதபடி, அரசாங்கத்தார்கள் வேண்டிய ஏற்பாடுகள் செய்து காத்து வருகிறார்கள். அப்பழைய இடத்திலே இப்போதும் வானசாஸ்திர ஆராய்ச்சி நிகழ்கின்றது. தற்காலத்துடன் முற்காலத்தை ஒப்பிட்டுப் பார்க்கையில், அக்காலத்தவர் களுக்கிருந்த வசதிகள் மிகவும் குறைவு என்பது வெளியாகிறது. அப்படியிருந்தும், நமது நாட்டிலே இருந்தவர்கள் ககோள சாஸ்திரத்திலும் கணிதத்திலும் தலைசிறந்து விளங்கினார்கள் என்பதற்கு நமது பஞ்சாங்கமே நல்லதொரு சான்றாகும். அவர்கள் எழுதி வைத்துப் போயுள்ள குறிப்புக்கள் இன்னும் பல்லாயிர வருஷங்களுக்குப் பயன்படும். பஞ்சாங்கத்தில் குறித்திருக்கும் கிரஹண காலம், ஸ்பரிச சமயம், மோட்ச சமயம் இன்னோரன்ன பல அரியகுறிப்புக்களை நாம் உற்று நோக்குந்தோறும் அவர்களுடைய கணித சாமர்த்தியமும், அறிவின் ஆழமும், ஆராய்ச்சியிலே அவர்கள் கொண்ட ஊக்கமும், நமக்குப் புத்துயிர் கொடுத்து நம்மைத் தலை நிமிர்ந்து நடக்கச் செய்கின்றன.

இந்நாளைய சாலைகள் :—தற்காலத்தில் நட்சத்திரசாலைகளை எல்லா நாட்டிலும் காணலாம். அமெரிக்காவில்

உள்ளவற்றில் அருமைப் பாடமைந்த பல வானசாஸ்திர ஆராய்ச்சி யந்திரங்கள் மிகமிகப் பெரியனவாய் நின்று கண்டோரைத் திகைக்கச் செய்கின்றன. இவை தலை சிறந்தனவாக இருப்பதற் கேற்ப விலையுயர்ந்தனவாக வும் விளங்குகின்றன. சிகாகோவில் உள்ள தூரதிருஷ் டிக் கண்ணாடி வழியே, அண்டகோளங்கள் ஒவ்வொன் றையும் எத்துணையோ பன்மடங்கு பெரிய உருவம் உடை யனவாகப் பெருக்கிக் காணலாம். நமது நாட்டிலும் சென்னை, புனா, டேராடூன், கோடைக்கானல், திருவனந்த புரம் முதலிய இடங்களில் நட்சத்திரசாலைகள் அமைக்கப் பட்டுள்ளன. நமது நாட்டிலுள்ள நட்சத்திரசாலைக் கருவி களுக்கும், மேனாட்டிலுள்ள கருவிகளுக்குமுள்ள வேற்று மையை நோக்குவோமாயின், இவைகளைச் சாதாரணமான மசூதிக்கும், அவைகளைத் தாஜ் மஹாலுக்கும் ஒப்பிட லாம். ஆயினும், பொது இயல்பில் இவை இரண்டும் ஒரு தன்மையனவே.

தூரதிருஷ்டிக் கண்ணாடியின் சரித்திரம்:—நட்சத்திரக் காட் சிக்கென ஏற்பட்டுள்ள கருவிகள் பலப்பல. அவற்றுள் முதன்மையானது தூரதிருஷ்டிக் கண்ணாடியே யாகும். இதன் பெயரே கூறுவதுபோல இக்கருவியானது தூரத்திலுள்ள பொருள்களை எளிதில் தெளிவாகக் காணு வதற்கென ஏற்பட்ட ஒருவகைத் திருஷ்டிக்கருவியாகும். இக்கருவிக்கு இப்பெயரை முதல் முதல் கொடுத்தவர் இத்தாலிய தேசத்துக் கணித நிபுணரும் வான சாஸ்திரியு மான கலிலியோ என்பவரே யாவர். கி. பி. 1612-ம் வரு ஷத்திலிருந்து இந்தப் பெயர் வழங்கி வருகிறது. கலி லியோ, தான் கண்டுபிடித்த இக்கருவியைக் கொண்டு அதி அற்புதக் காட்சிகளைக் கண்ணாரக் கண்டு களித்தார். வியாழத்தைச் சுற்றியோடும் உபக்கிரகங்களைக் கண்டார். பின்னர், சூரிய மண்டலத்திலுள்ள கரும் புள்ளிகளைக் கண் டார்; சுக்கிரனும் சந்திரனைப் போலவே தேய்வதையும்

வளர்வதையும் கண்டார். இவையே அல்லாமல், நமக்குமிக அருகாமையில் இருக்கும் சந்திர மண்டலத்திலுள்ள மலை, பள்ளத்தாக்கு முதலியவைகளையும் கண்டு களித்தனர்.

அற்பத்தில் எழுந்த அற்புதம்:—சரித்திர முறையே ஆராயுங்காலையில், இவருக்கு முன்னர் கி. பி. 1608-ம் வருஷத்திலேயே உலாந்தா தேசத்திலே மூவர் இக்கருவியைக் கண்டுபிடித்த செய்தி, அரியதொரு கதையாக வழங்கி வருகிறது. உலாந்தா நாட்டு வானசாஸ்திரியார் ஒருவர், தமது வீட்டு மேல் மாடியிலே, காற்றுவாங்கிக் கொண்டே உல்லாசமாக உலாவிக் கொண்டிருக்கும் சமயத்தில், தாம் உபயோகிக்கும் மூக்குக் கண்ணாடியை எடுத்து அதிலுள்ள தூசைத் துடைத்தார். அக்கண்ணாடி வில்லைகள் ஒன்றின் மேல் ஒன்று பொருந்துமாறு மடிக்கக்கூடியவை; வெவ்வேறு இயல்புடையன. அவற்றைத் துடைத்தெடுத்துச் சுத்தமாக இருக்கின்றனவா என்று வெளிச்சத்தில் தூக்கிப் பிடித்து ஒன்றின்பின் ஒன்ருகப் பார்த்தார். அவ்வாறு பார்க்கும்போது அதி தூரத்திலிருந்த கோபுரம் ஒன்று அருகே வந்து தோன்றியது. அக்கோபுரத்திலுள்ள ஒவ்வொரு சிறு சிறுபகுதியும் மிக நுட்பமாகவும் விளக்கமாகவும் அருகே வந்து தோன்றியது. இதனுல் கண்ணாடி வட்ட வில்லைகளைக் குழித்ததொரு முறையில் அடுக்கிப்பார்ப் போமாளுல், வெகு தூரத்திலுள்ள பொருள்களும் அவற்றின் நுட்பமான உறுப்புக்களும் வெகு சமீபத்தில் உள்ளன போலத் திருஷ்டி கோசரமாகும் என்ற உண்மை வெளியாயிற்று. இவ் வில்லைகளை ஒரு குழலில் வைத்தால், தூர திருஷ்டிக்குப் பயன்படும் என்று கண்டதும், அவ்வாறே அவற்றை உபயோகிக்கலாயினர். இவ்வாறு கண்ணாடி துடைத்து நின்றவர் தூரதிருஷ்டிக் கண்ணாடியை எதிரே கண்டார். நம்முடைய பொருளுலகில்போல, அறிவுலகிலும் இவ்வாறு எதிர்பாராதபடி புதையல்கள் கிடைக்கின்றன.

"கண்ணிலான் மாங்காய் விழவெறிந்த மாத்திரைக் கோலொக்குமே ஆங்காலமாகும் அவர்க்கு." தண்ணீரைக் கொதிக்க வைத்திருந்த ஓரறிஞர், அந்நீராவி பொங்கி எழுந்து தண்ணீர்ப் பானையின் மேல்மூடியை மேலே தூக்கித் தள்ளக் கண்டதும், நீராவியால் ஓடும் புகைவண்டியைத் தன் கண்ணெதிரே கண்டாராம். இவ்வாறு அற்பக் காரியங்களிலிருந்து அற்புதங்கள் பல வெளியாகின்றன.

ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன் வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல்.

பயிற்சி

[அறிவியற் கலைகளில் ஒன்றாகும் வானநூல் பற்றியது இக்கட்டுரை. இதனுள் காணும் கலைச்சொற்களை யறிக.]

1. வானநூல் துறையில் மக்கள் யாவர்? மாக்கள் யாவர்?

2. பொருள் தெரிக: ஐம்பெருங் குழு, கன்னல், கணிகன் முல்லை; வாகைத்திணை, ஊர் கோள், கோணிலை.

3. இளங்கோவடிகள், அப்பூதனார், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், இளம்பூரணர், கெப்ளர்,—இவர்கள் யாவர்?

4. தூரதிருஷ்டிக் கண்ணாடி கண்டுபிடிக்கப்பட்ட வரலாற்றை 6 வாக்கியங்களில் எழுதுக.

நட்சத்திர சாலை - Observatory;
யாஒ - Yao; ஹிப்பார்கஸ் - Hipparchus;
ரோட்ஸ் - Rhodes; பாக்டாட் - Bagdad;
மொக்கட்டா - Mokatta; யுரேனி நகர் - Uranibourg;
டேனிய - Danish; டைகோ பிராகே - Tycho Brache;
காலிப் ஹகீம் - Kaliph Hakim; உலாந்தா - Holland.

15. பூதப்பாண்டியன் தேவியார்

மகா வித்வான் ரா. இராகவையங்கார்

இருவேறு நல்வினைகளின் பயன்களாயுள்ள அரிய கல்வியும் பெரிய செல்வமும் ஒருங்கெய்தி, அங்ஙனம் எய்தியமைக்கேற்ற பேரறிவும் பெருங் கொடையும் உடையராய் இவ்வுலகில் என்றைக்கும் நீங்காத நல்லிசையினை நிறுத்தின முடியுடைத் தமிழரசர் மூவருள்ளும், பாண்டியரே, கல்விபற்றி மற்றை யிருவரினும் சிறப்பித்துப் போற்றப்படுவோராவர். இவரே செந்தமிழ் நாடாளும் உரிமையுடையர். இவரே மூக்காலும் செந்தமிழ்ச் சங்கம் சிறப்புற இரீஇயினோர். இவரே கவியரங்கேறினோர். இவரே அரும் பெறற் புலவர்க்குப் பெரும் பொற்கிழி யளித்தோர். இவரது அவைக்களமே தொல்காப்பியம், திருவள்ளுவர் முதலிய பெருநூல்கள் அரங்கேறப் பெற்றது. இவர் நாடு தான் நல்ல தமிழுடையது. இவர் பதி தான் தமிழ் நிலைபெற்ற தெனப்படுவது. இவர் பதியைக் கூறுமிடமெல்லாம் கல்வி பற்றியே சிறப்பித்துரைப்பர். இவர் பதிகளில் வாழ்வார் தாம் வாழ்வார் எனப் படுவாரென்ப. பல சொல்லி யென்? மூவேந்தருள்ளும் பாண்டியர் தாம் தமிழுடையார் என்று சிறப்பிக்கப்படுவாரென்க.

* *

இத்தகைக் கல்விச் சிறப்புடைச் செல்வப் பாண்டியருள் ஒல்லையூர்தந்த பூதப் பாண்டியன் என்னும் அரசர் பெருந்தகைக்கு ஆருயுர்த்துணைவியராய்ச் சிறந்தார் தாம் யாம் ஈண்டெடுத்தோதப் புக்க நல்லிசைப் புலமை மெல்லியற் றேவியார் என அறிக. இத்தேவியாரது இன்னுயிர்க் கொழுநனாகிய பூதப் பாண்டியன், புலவனும் வீரனுமாய்ச் சிறந்து விளங்கினோன். அகநானூற்றினும் புறநானூற்றினுங் காணப்படும் அவனது பாடல்களானும், ஒல்லையூர்

தந்த' என்னும் அடைச் சிறப்பானும் அவனது புலமை யும் வீரமும் உணரத்தக்கன.

இத்தகை அறிவுடை வீரனை முடியுடை வேந்தனை 'அவர்ப்புறங்காணேனாயிற் சிறந்த, பேரமருண்கணிவளி னும் பிரிக' என்று சொல்வித்தது, இப்பெருங்கோப் பெண்டினது அறிவுருவொடு கூடிய அருந்திறற் கற்பே யென்பதூஉந் தெள்ளிது. நல்லிசைப் புலமையிலும் தன்னே டொத்த இம் மெல்லியற் றேவியாரைத் தனது உயிர்க் காதலியாகப் பெற்ற பாண்டியன்றான் இவரைப் பிரித லாற்றுவனே? ஒரு சிறிதும் ஆற்றான்! ஈண்டு இத்தேவி யார் தம்மோடொத்த நல்லிசைப் புலமைச் செல்வப் பாண்டியன் பால் வைத்த அன்பின் பெருக்கை இனைத் தென்றுணர்த்தலாவதோ! அன்று. மேல், இப்பெருந் தேவியார் நிகழ்த்தும் அரும்பெருஞ் செயலானும், அவ்வமையம் ஆண்டு உடனிருந்த மதுரைப் பேரால வாயார் என்னும் புலவர், இவரது அன்புடைமையை வியந்து, 'சிறு நனி தமியளாயினு, மின்னுயிர் நடுக்குந் தனிஎமை புறங்கொடுத்தே' எனப் பாடியதனாலும் அதனை ஒருவா றுணர்க. குறைவற்ற செல்வமும் நிறைவுற்ற கல்வியு முடைய இப்பெருமக்கள் காதலனுங் காதலியுமாக அன்பு பட்டியைந்த இவ்வரிய பெரிய இல்வாழ்க்கை யாண்டுங் காண்டற்கரிய தொன்றே. * *இத்தகையாளரே ஒத்த கிழவனும் கிழத்தியு மாவர். உருவ முதலியவற்றான் எத்தனையும் ஒத்து அறிவான் வேற்றுமைப் படின் அக் காதலனும் காதலியும் ஒருகாலும் தம்முள் ஒத்தா ரா கார். 'உறுப் பொத்தன் மக்களொப் பன்றால்' என்ற ஆன்றோர் திருவாக்கினையும் ஈண்டைக்கு நோக்கிக் கொள்க.

இங்ஙனம் பெரிதும் அருமையாய்க் காண்டற்குரிய இவ்வறி வொப்பின்கட் பெருமகிழ் கூர்ந்து பூதப் பாண்டியனும் அவனுக்குச் சிறந்த பெருந் தேவியாரும்

இனிது வாழ்கின்ற நாளில், இவ்வகை அறிவுடைச் சேர்க்கைக்கண் அழுக்காறு கொண்ட அறிவில் கொடுங் கூற்றம் பூதப்பாண்டியன் இன்னுயிரைக் கவர்ந்தது. அந்நிலையில் அறிவுடைப் பெருந்தேவியாரின் துன்ப வெள்ளம் கடையடங்குவதோ? இவரது கேண்மை பேதையார் கேண்மையில்லையே; அறிவு வீற்றிருந்த செறிவுடை நெஞ்சினரிருவர் ஒருயிராக் கலந்ததன்றோ? ‘மக்களிழந்த இடும்பையினும் மனையாளிழந்த இடும்பையினும், மிக்கஇடும்பை ஓவாத விதவை இடும்பை’ என்பரே! தந்தை தாய் முதலாயினோரை இழந்தார்க்குத் துயராற்றுவதற்கு அம்முறை சொல்லிப் பிறரைக் காட்டுவதுண்டு; கணவனையிழந்தார்க்கு அங்ஙனஞ் சொல்லிக் காட்டுதலுமாகாதே. இவையெல்லாம் நன்குணர்ந்த இவரது கற்றறி நெஞ்சம் என் பாடு படும்! அதனை எம்மாலெளிதி லறிந்துரைக்கத் தக்கதன்று. பெருந்தேவி இவ்வாது துயருழவா நிற்கையில் அரசனுக்கு உரிமைச் சுற்றத்தினர் பிறர் பூதப் பாண்டியனது திருவும் வீரமும் பொலிகின்ற திருமேனியை அவனது பெருமைக்குத் தக்க பெருஞ் சிறப்புடன் இடுகாட்டுய்த்து ஈமத்தேற்றித் தீக்கொளுவு வாராயினர். உயிர்க் காதலனது திருமேனியையுங் காணப் பெறாத இந்நிலையிற் பெருந் தேவியாரது துயரம் கடலாய்ப் பொங்கித் தலைக்கொண்டது. அப்போது தேவியாற் றாற்றாணாதவராய்ப் ‘பசைந்தாரைத் தீர்தலிற்றீப்புகுத னன்று’ என்ற சான்றோர் திருவாக்கின்படி தமதாருயிர்க் காதலனுடன் அவ்வீமத்தீயிற் பாய்ந்து மாய்தலே தம்மாற் செய்யத் தகுவதென்று தேர்ந்து அவ்வாறு செய்ய ஒருப்பட்டனர். அவ்வமயம் ஆண்டுக் குழீஇ யிருந்த மதுரைப் பேராலவாயார் முதலிய புலவர் சான்றோர்கள் தம்மோடொத்த அறிவுடையரசியையும் இழக்கலாகுமோ என்று தேவியாரைத் தீப்புகாமல் விரைந்து தடுப்பாராயினர். அதுகண்டு பெருந்தேவியார் ஈமத்தீப்புறத்து நின்றுகொண்டு அச்சான்றோரை நோக்கி,

பல்சான் றீரே பல்சான் றீரே
செல்கெனச் சொல்லா தொழிகென விலக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான் றீரே
யணில்வரிக் கொடுங்காய் வாள்போழ்ந் திட்ட
காழ்போ னல்விளர் நறுநெய் தீண்டா
தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள்ளெட் சாந்தொடு புளிப்பெய் தட்ட
வேளை வெந்தை வல்சி யாகப்
பரற்பெய் பள்ளிப் பாயின்று வதியு
முயவற் பெண்டிரே மல்லே மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட்டீமம்
நுமக்கரி தாகுக தில்ல வெமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென வரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையுந் தீயுமோ ரற்றே.

என்னும் பாடலைக் கூறித் தீயிற் பாய்ந்து மாய்ந்தனர். தம் ஆருயிர்க் கொழுநனை நீங்கிய இவ்வுலக வாழ்க்கையே இப்பெருந் தேவியார்க்குச் சுடுதீ யாயிற்று; அக்கணவனுட னிறத்தற்குக் காரணமான சுடுதீயோ அரும்பற மலர்ந்த தாமரைக் குளிர்நீர்ப் பொய்கையாயிற்று. இங்ஙனம் இயற்கையையும் மாற்றுகின்ற அன்பென்பதொன்றின் றன்மை அமரரும் அறிந்த தன்று.

இத்துணையுங் கூறியவாற்றான் இமிழ்கடல் வரைப்பிற்றமிழுடையாரெனும், பாண்டியர் குடிக்குக் காண்டகு திலகமாய்க் கற்பினுக் கணியாய்ப் பொற்பினுக் கிடனாய், நல்லிசைப் புலமைச் செல்வ மகளா யீண்டிய பூதப்பாண்டியன் றேவியாரின் வரலாறு ஒருவாறுணர்க.

பயிற்சி

1. முதற் பத்தியால் அறியத் தகும் பாண்டியன் பெருமைகள் யாவை?

2. பூதப் பாண்டியனும் அவன் தேவியாரும் எவ்விதத்தில் ஒத்த காதலராய் விளங்கினர்?

3. பூதப்பாண்டியன் தேவியார் பாட்டிலிருந்து கைம்மை நோன்பின் இயல்பையும், அவர் கணவனுடன் மாய்தலை எங்ஙனம் விரும்பினரென்பதையும் எடுத்தெழுதுக.

4. சொற்றொடர் விளக்குக:—இரு வேறு நல்வினைப் பயன் கள், இரீஇயினோர், நூல் அரங்கேற்றுதல், மெல்லியலார், சிறு நனி தமியள், உறப் பொத்தன் மக்களொப்பன்றால், துயருழவா நிற்கை யில், உரிமைச் சுற்றத்தினர். பசைந்தாரை........நன்று, இமிழ் கடல் வரைப்பு.

5. கடைசிப் பத்தியைக் கடின சந்தி நீக்கி எளிய தமிழ் நடையில் எழுதுக.

16. சென்னையிலிருந்து இங்கிலாந்துக்கு ஒரு பிரயாணம்

ரேவரேண்டு ஏ. சி. க்லேடன்-திரு. பெ. ந. அப்புஸ்வாமி B A., B.L.

* * * *

நாங்கள் முதலில் பம்பாய் போய்ச் சேர்ந்தோம். அங்கே 'பிரிட்டிஷ் இந்தியா ஸ்டீமர்' ஒன்றில் ஏறிக் கொண்டோம். கராச்சி மார்க்கமாகவும், பாஸ்ரா மார்க்கமாகவும் போக வேண்டிய தபால்களை யெல்லாம் அந்தக் கப்பல்தான் எடுத்துக்கொண்டு போகிறது. ஆத லால் இந்தியாவிலிருந்து பம்பாய் வழியாக வரும் தபால் களும், பம்பாய்க்குப் 'பெனின்சுலர் அண்டு ஓரியண்டல்' கப்பல்கள் மூலமாக வந்து சேரும் தபால்களும் நாங்கள் ஏறிய கப்பலில் வந்து குவிந்தன. அவற்றை எல்லாம் ஏற்றிக்கொண்டு எங்கள் கப்பல் பம்பாயை விட்டுப் புறப் பட்டது.

எங்கள் கப்பல் அவசரப்படாமல் சாவகாசமாகப் பாஸ்ராவுக்கு வந்து சேர்ந்தது. அப்பொழுது வெயிலின் சூடு அதிகமில்லை; குளிர்ச்சியாகத்தான் இருந்தது. கடலி லும் அலைகள் அதிகம் இல்லை; கொந்தளிப் பின்றி அது

அமரிக்கையாகவே இருந்தது. எங்களுக்குப் பாஸ்ரா வந்து சேர ஒரு வாரத்துக்கு மேலாயிற்று. * *

நாங்கள் பாஸ்ராவுக்குப் போனது எங்களுக்கு மறக்கவே மறக்காது. ஏனென்றால், அங்கே உள்ள பெரிய பிரபு ஒருவர் தம்முடைய அரண்மனையிலே எங்களுக்கு ஒரு சிறப்பான விருந்தளித்தார், அதுவுமின்றி நாங்கள் ஒரு வேளை யூபிரட்டிஸ் நதியில் படகேறிச்சென்று அங்கே சிற்றுண்டி யருந்தினோம். அங்கே குளிர் நடுக்கி யெடுத்து விட்டது. ஆதலால் நாங்கள் கம்பளி மேல்சட்டைகளைக் கூடப் போட்டுக்கொள்ளவேண்டியிருந்தது. பிறகு ஒரு நாள் இரவு பத்து மணிக்கு 'உர்' நகரத்திற்குப் போவதற்காக 'மக்கிலி'ல் ரயிலேறி இரவெல்லாம் பிரயாணம் செய்தோம்.

[உர் நகரம்]

அருணோதயமாகிப் பலபலவென்று விடிந்து கொஞ்ச நேரத்துக் கெல்லாம் உர் ஸ்டேஷனுக்கு ரயில் வந்து சேருகிறது. காலை நேரம்; சூரியோதய வேளை; இளஞ் சூரியனது கிரணமானது பொன்னிறமான மங்கல் ஒளியை வீசத் தொடங்குகிறது. அத்தருவாயில் ஆபிரகாம் பிறந்த அந்தப் புண்ணிய க்ஷேத்திரம் மணற்காட்டுக்கு அப்பால் தோன்றுகிறது. முதல் முதலில்எங்கள் கண்களுக்குக் காட்சி யளித்தது அந்நகரத்தில் மேலாக உயர்ந்து உன்னதமாக நிற்கும் கோயில் மேடு. அது படிப்படியாக உயர்ந்து எழுந்து தோன்றுகிறது. அதை 'ஸிக்குரத்' என்று சொல்லுகிறார்கள்.

ரயிலை விட்டு இறங்கினதும், ரயில்வே விடுதியில் அதிகாலையிலேயே அவசர அவசரமாக தேப் பானம் செய்து, ஸ்டேஷனை விட்டு உர் நகரத்தைப் பார்த்து நடந்தோம்.

சந்திர பகவானுக்குக் கட்டிய மா பெருங் கோயிலின் பாழ் நடுவே போய் நின்றோம். அதன் விசாலமான அகன்ற படிக்கட்டு வரிசைகளை ஆபிரகாம் நேரே கண்ணால் கண்டிருப்பானென்று நினைத்துக்கொண்டோம். ஆபிரகாம் நடந்த வீதிகளின் வழியே நாங்களும் நடந்து சென்றோம். அங்கே எத்தனை ஜபக் கோயில்கள்! எத்தனை தஸ்தாவேஜு அறைகள்! மழை நீர்த் தொட்டிகள் எத்தனை! தெருக் கோடிகளின் மூலைகள் வளைவாகக் கட்டப்பட்டிருந்தன. பழைய நாளிலே சுமைகளையும் மூட்டைகளையும் தூக்கிக் கொண்டு போகும் கழுதைகள் கஷ்டமின்றிச் சுலபமாகத் திரும்பும்பொருட்டு இவ்வாறு செய்திருந்தார்கள் என்பதை அறிந்து கொண்டோம். ஐம்பத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் உர் நகரத்தில் அரசாட்சி செய்து வந்த அரசர்களுடைய கல்லறைகளுக்குள்ளும், அவர்களின் தேவிமார்களுடைய கல்லறைகளுக்குள்ளும் சென்று பார்த்தோம். * * *

[பாபிலோனும் பாக்தாதும்]

மறுநாள் காலையில் நாங்கள் 'உர்'ரைவிட்டு ஹில்லாவுக்கு ரயில் மார்க்கமாகப் புறப்பட்டோம். மத்தியானத்துக்குமேல், முன் மாலைப்பொழுதிலேயே ஹில்லாவுக்கு வந்துசேர்ந்தோம். அங்கே ஒரு மோட்டார் வண்டியை வாடகைக்குப் பேசிக்கொண்டு ஆறுமைலுக்கு அப்பாலுள்ள பாபிலோனை நோக்கிப் புறப்பட்டோம்.

அந்தப் பிரதேசத்திலே தோண்டும் வேலையை வெகு காலமாக டாக்டர் கோல்டெவே என்ற ஒரு நிபுணர் செய்து வந்தார். அவரிடம் பல வருஷகாலமாக மேஸ்திரி வேலை பார்த்துவந்த அராபி ஒருவனை எங்களுக்கு அந்த இடத்தைக் காட்டும்படியாக ஏற்பாடுசெய்துகொண்டோம். பழைய காலத்திலே தேய்வங்கள் ஊர்வலமாகச் சென்று

வந்த வீதிகளையும், மெஸொபொடேமியாவிலுள்ள மிகப் பரந்த சமவெளிகளைத் திரும்பத் திரும்பப் பார்த்துச் சலித்துப்போன அந்நாட்டு அரசியின் கண்கள் களிப்பதன் பொருட்டு, உப்பரிகை மேல் உப்பரிகையாகக் கட்டப்பட்ட 'தொங்கு தோட்டங்'களின் சிதைவுகளையும், முன்னொரு காலத்தில் பலவகை அழகு பொருந்தியனவாயிருந்த போதிலும் இப்பொழுது பாழாய்ப் போய்க்கிடந்த அரசமாளிகைகளையும் பார்த்தோம். இவற்றுக்கு எல்லாம் நடுவே பிரமாண்டமான கல்லினாலாகிய சிங்கப் பதுமை ஒன்று இவற்றைக் காவல் காப்பதுபோல் நின்றுகொண்டிருக்கிறது. ஹிட்டைட் ஜாதியாரை முறியடித்த பாபிலோனிய அரசன் ஒருவன் கவர்ந்து கொண்டுவந்தது இந்தப் பதுமை.

பாபிலோனியா தேசத்துப் பிச்சைக்காரர்கள் மகா சல்லியக்காரர்கள்; இலகுவில் போகமாட்டார்கள்; பயமுறுத்திப் பிச்சை கேட்பார்கள். சமயம் வாய்த்தால் கொள்ளைக்காரர்கள் ஆவதற்கும் அவர்கள் தயார்தான். அவர்களால் நாங்கள் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல.

பாபிலோனியா நகரமானது மைல் கணக்கான விஸ்தீர்ணமுடையதாக இருந்திருக்கவேண்டும். இப்பொழுது பாழடைந்து கிடக்கும் இடங்களை மைல் கணக்காகக்காணலாம். நாங்கள் அவற்றை முழுவதையும் பார்க்க முடியவில்லை. மறுநாள் காலையில் நாங்கள் அங்கிருந்து ரயிலேறினோம். பாக்தாதுக்குப் போகிற வழியெல்லாம் ஒரே மணல் காடு.

* * *

பாக்தாது நகரத்திலுள்ள காட்சிகள் அனைத்தினும் சிறந்து மிகவும் அழகுடன் விளங்குவது ஒரு பொன் ஆரம். அது நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பு, கால்டி தேசத்தின் தலைநகராகிய உர் நகரில் வாழ்ந்து உயிர் துறந்த ஓர் அரசியின் சமாதியிலிருந்து கண்டெடுக்கப் பட்டது. அது மிகவும் அற்புதமும் அருமையுமுள்ள

வேலைப்பாடு நிறைந்தது. அதிலே பொன்னினால் இலைகளும் நாடாக்களும் அமைக்கப்பெற்றுள்ளன. அந்த ஆரத்தில் அமைக்கப்பட்டுள்ள வேலைப்பாடு எங்கள் மனத்தைக் கவர்ந்தது.

[பாலஸ்தீனத்துக்குப் பறந்து செல்லல்]

தற்காலத்திலே பாக்தாது நகரத்திலுள்ளோர் தம் நாட்டுப் பண்டை அரசரின் தேவியர்களைப்பற்றி நினைப்பதைவிட ஆகாயவிமானக் கப்பல்கள் தங்குவதற்கென்று அந்நகரில் நிருமாணிக்கப் பட்டிருக்கும் 'ஏரோட்ரோ'மைப்பற்றியே நினைத்து வருகிறார்கள். ஐரோப்பாவிலிருந்து இந்தியாவுக்கும் பாரசீகத்துக்கும் கீழ் நாடுகளுக்கும் ஆகாயக் கப்பல்கள் போக்கு வரத்துக்காக இருக்கும் வழியிலுள்ள முக்கியமான ஓர் ஆகாயக் கப்பல் துறைமுகமாக அது இப்போது இருந்து வருகிறது. இந்தக் காரணம் ஒன்றை வைத்துத்தான் சிலர் பாக்தாது நகரத்தை மதிப்பாக எண்ணி வருகிறார்கள்.

நாங்கள் பாக்தாது நகரத்திலிருந்து பாலஸ்தீனத்துக்குப் பறந்து சென்றோம். ஆதலால்தான் அந்த விமான நிலயத்தைப்பற்றி அவ்வளவு சிரத்தை எங்களுக்கு உண்டாயிற்று.

நாங்கள் ஏறிச்சென்ற ஆகாய விமானத்துக்கு 'ஹானிபல்' என்று பெயர். முந்தின நாள் தான் அது கராச்சியிலிருந்து அங்கே வந்து சேர்ந்தது. அதிலே கப்பலோட்டிகளும் மாலுமிகளுமாக ஐந்து பேர்களும், பிரயாணிகளாகப் பதினேழு பேர்களும் இருந்தார்கள். பாக்தாதிலிருந்து புறப்பட்டு, அராபிப் பாலைவனத்தைத் தாண்டி ருத்பா வெல்ஸ் என்னும் இடத்திற்குச் சென்றோம். அவ்விடம் பாக்தாதிலிருந்து சுமார் 300 மைலிருக்கும். அது பாக்தாதுக்கும் கலிலேயாவுக்கும் சரி நடுவில் உள்ளது. அன்று காலை சற்றுப் பனி பெய்து, மஞ்சு

மூடியிருந்தபடியினாலே ஹானிபல் உயரப் பறக்க ஆரம்பித்து ஐயாயிரம் அடி உயரம் வரை ஏறிற்று. மேக மண்டலமானது எங்களுக்குக் கீழே பறந்து விரிந்து கிடந்தது. அதன் மேலே வெயில் அடித்துக் கொண்டிருந்தது. ஹானிபலின் நிழலானது அம் மேகமண்டலத்தின் மீது விழுந்து கொண்டே வந்தது. தரையில் பனி மூடியிருக்கும் போது அதன் மேலே ஆகாயத்தில் பறந்து செல்லும் பட்சியின் நிழலானது பட்டு ஓடிக்கொண்டே யிருப்பதைப் போல் அது தோன்றிற்று. சிறிது நேரம் சென்றவுடன் வெயில் ஏற ஏறப் பனி மறைந்து போயிற்று. அப்பொழுது கீழேயுள்ள பூமியானது எங்களுக்குத் தோன்றத் தொடங்கிற்று. வனாந்தரத்தின் வழியாக டமாஸ்கஸ் நகரத்துக்கு மணலின் மேல் செல்லும் ஆறு சக்கரங்கள் கொண்ட 'நேர்ன்' மோட்டார் பஸ்ஸுகளின் தடங்கள் எங்கள் கண்களுக்குத் தெரியத் தொடங்கின. நடுப்பகல் வேளையில் நாங்கள் ருத்பா வெல்சுக்கு வந்து சேர்ந்தோம். எங்களுடைய ஆகாயவிமானம் மிகவும் ஜோராகக் கீழே இறங்கிப் பூமியை அடைந்தபடியால், எங்கள் கண்களுக்கு நேர் எதிரே கோட்டை வாயில்களைக் கண்ட போது தான், 'நாம் பூமியைத் தொட்டுவிட்டோம்' என்பதை உணர்ந்தோமே தவிர, அதற்கு முன்னால் உணர்ந்தோமில்லை. நாங்கள் அன்று இராத்திரி ருத்பாவில் தங்கினோம்.

* * *

இந்த இடத்திலே இராத்திரிப் பிரயாணம் கிடையாது. ஆனால் காலையில் மூன்று மணிக்கு விமான அதிகாரி எங்களை எழுப்பி விட்டான். அருணோதயமாகிக் கிழக்கு வெளுக்கும் நேரத்தில் அவ்வூரை விட்டு 'ஹானிபல்' கிளம்பிற்று. சிறிது நேரத்திற்கெல்லாம் வடபுறத்தில் ஹெர்மன் சிகரத்தின்மீது பனிக்கட்டி படிந்திருப்பதைக் கண்டோம். லெபனன் மலைத்தொடர் கண்ணுக்

குத் தெரிந்தது. தென் பக்கத்திலே மோவாப் பர்வதங்கள் தோன்றின. பாலைவனத்தைத் தாண்டிவந்து விட்டோம். பசுமை நிறம் பொருந்திய வயல்களும், விருட்சங்கள், அடர்ந்த காடுகளும், ரஸ்தாக்களும், வீடுகளும், நகரங்களும் நாங்கள் ஆகாயத்தில் பறக்கும்போது ஒரு பெரிய சித்திரப்படம் கீழே வரைந்து கிடப்பது போலவும், அதைப் பார்த்துக்கொண்டே மேலே பறப்பது போலவும் தோன்றின.

பிறகு சிறிது தூரம் கழித்துக் கலிலீ ஏரியின் ஒரு சிறு பகுதி எங்கள் கண்களுக்குத் தென்பட்டது. பிறகு இக்கரை முதல் அக்கரை வரையிலும் முழு ஏரியையும் ஒரு மிக்கப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. அந்த அழகிய தோற்றத்தை நாங்கள் ஒருகாலும் மறக்க முடியாது. அதன் பிறகு ஏரியின் தென் முனையிலே உள்ள ஸெமாக் விமான நிலையப் பக்கமாக இறங்கினோம்.

நாங்கள் கைரோவை வந்தடைந்த சமயத்தில் 'நான்காவது பிரமிட்' என்று சொல்லப்பட்ட பழங் காலக் கட்டடத்திலிருந்த பிரமை யெல்லாம் ஒருவாறு ஓய்ந்திருந்தது. அது ஒன்றுக்கும் பிரயோசனமில்லை என்று சொல்லிக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள். 'துதாங்கமானு'டைய கல்லறையிலிருந்து எடுக்கப்பட்டு மிகவும் ஜாக்கிரதையாய்ப் பாதுகாக்கப்பட்டு வந்த தட்டுமுட்டுச் சாமான்களை ஜனங்கள் மறுபடியும் கருத்துடன் கவனிக்கலானார்கள். நாங்கள் இரண்டையும் கவனித்தோம்; இவற்றைத் தவிர இன்னும் வேறு எத்தனையோ விஷயங்களையும் கவனித்தோம். நாங்கள் 'போர்ட் செய்திலிருந்தாவது 'அலெக் சாந்திரியா' விலிருந்தாவது கப்பலேறிப் போயிருக்கலாம். ஆனால் நேரத்தை மிச்சம் பிடிக்கலாமென்று எண்ணி, மறுபடியும் ஆகாயவிமானம் ஏறிச் சென்றோம். நாங்கள் ஏறிய விமானத்திற்குப் பெயர் 'ஸ்கிபீயோ' என்பது. அது ஒரு 'ஸீப்ளேன்.' அலெக்சாந்திரியாத் துறைமுகத்திலிருந்து புறப்பட்டு ஆதென்ஸை

நோக்கிச் சென்றோம். அன்று காற்றென்பது ஒரு லவ லேசம்கூட வீசவில்லை. கீழே கடலானது ஒரு பெரிய இந்திர நீலக் கல்லைப்போல் அசைவற்றுக் கிடந்தது. அதன் அழகைக் கண்டு அனுபவித்துக்கொண்டே பறந்து போனோம். கிரீட் தீவிலுள்ள பனிக்கிரீடம் அணிந்த மலைகள் எங்களுக்குத் தோன்றலாயின. நேராக அவற்றைப் பார்த்துப் பறந்து சென்றோம். அவற்றை நெருங்க நெருங்க மேன்மேலும் உயரமாகப் பறந்துகொண்டே போனோம். அம்மலைத் தொடரிலுள்ள இரு பெரும் சிகரங்களுக்கும் இடையே பறந்தோம். அதன்பிறகு கப்பற் கொள்ளைக்காரர்களான நோஸ்ஸாஸ் அரசர்களின் பழைய துறைமுகங்களுக்கு மேலாகப் பறந்து சென்றோம். அதற்கப்புறம் நூல் பிடித்தமாதரி நேராக ஆதென்ஸ் நகரை நோக்கிப் பறந்தோம். நாங்கள் பறந்துவந்த 600 மைல் பிரயாணம் முடியும் சமயம்; சாயங்காலம்; அஸ்தமிக்கும் வேளை; அக்ராபொலிஸ்ஸுக்குப் பின்புறத்திலே சூரியன் மலைவாயில்விழும் காட்சியைக் கண்டோம். மாலை நேரப் பொன்னிற வெயிலிலே பார்தினன்மலை மிகவும் தெளிவாகத் தெரிந்தது. அந்தக் காட்சியின் அழகுக்குத் தான் ஒரு நிகரும் உண்டோ?

'இம்பீரியல் ஏர்வேஸ்' அதிகாரிகள்தாம் அன்றிரவும் எங்கள் ஜாகைக்கு ஏற்பாடு செய்திருந்தனர். ஆதென்ஸிலுள்ள பெரிய சாப்பாடு விடுதி ஒன்றில் எங்களுக்கு இரவில் தங்குவதற்கு வேண்டிய வசதிகளை அமைத்துக் கொடுத்திருந்தனர். மறுநாட் காலையில் ஆறுமணிக்கே நாங்கள் ஆதென்ஸ் துறைமுகத்துக்கு வந்து விட்டோம். அங்கே ஸ்கிபியோ தயாராக இருந்தது. அதில் ஏறிக்கொண்டு பார்னஸஸ் பர்வதத்தையும், டெல்பி நகரத்தையும், காரிந்து நகரத்தையும் கடந்து மலைகளினிடையே ஆழமாகக் குடைந்து கிடக்கும் காரிந்து கால்வாய்க்கு மேலே உயரப் பறந்து சென்றோம். பிறகு அட்ரியாடிக் கடலைத் தாண்டிச் சென்று இத்தலி தேசத்திலுள்ள

17. நமது தாய் மொழி

பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார்

ஒருமைக்கட் பயிற்சியால் எழுமைக் கண்ணும் தொட ரும் இயல்பினதாகிய கல்வியே மக்களை மக்கட்டன்மையு டையராக்குமென்பது பெரியார் துணிபு. எந்நிலத்தில் எக் குடிக்கட் பிறந்தாராயினும் கல்வியுடையாரையே உலகம் போற்றும் என்பது கண்கூடாக அறியப்பட்டதொன்று. இத்தகைய விழுப்பஞ்சான்ற கல்வியை, எந்நிலத்தில் எம் மொழி வழங்கப்படுகின்றதோ அந்நிலத்தில் வாழும் மக் கள் அம்மொழி மூலமாகவே முதற்கட் பயில வேண்டும். **அதுவே அந்நிலத்து மக்கட்குத் தாய் மொழியாகும்.** ஒரு குழந்தை பிறந்து மொழி பயிலுங்கால் அதன் தாயால் முதற்கட் பயிற்றப்படும் மொழி யாதோ அதுவே தாய்மொழி யென்று கோடல் பொருந்தும். அன்னை வாயிலாகக் கேட்டு மழலை மொழிந்து தேறிய பின்னரே அக்குழந்தை அப்பனாலும் ஆசிரியனாலும் வரிவடிவிற் பயிற்றப்பட்டு அறிவு விரிவெய் தப்பெறும். ஒருவன் இறைவனை யடைந்து பேரின்ப நுகர்ச்சியில் தலைப்பட விழையுங்கால் அங்கும் அருளுருவாகிய தாயே முதற்கண் இவனைப் பண் படுத்தி அப்பனாகிய இறைவனை யறிவித்து அவன்பால் உய்ப்பவளாவள். இதனை "மெய்யருளாம், தாயுடன் சென்று பின் தாதையைக் கூடிப் பின் தாயை மறந் தேயுமதே நிட்டை" என்னும் முற்றத் துறந்த முனிவர் பெருமானாகிய பட்டிணத்தடிகள் அருண் மொழியாலு முணர்க. தாய் வழியாகத் தந்தைக்கு ஆளா தலை யுணர்ந்தே, முதற்கண் தாயை குறிப்பிட்டு மணிவாச கப் பெருந்தகையாரும், "அம்மையே அப்பா வொப்பிலா மணியே" என்று திருவாய் மலர்ந்தருளினர். இத்தமிழ் நிலத்து மக்களாகிய நம்மனோர்க்கு நம் அன்னையரால்

பிரிண்டிஸி என்னும் துறைமுகத்தை அடைந்து அங்கே இறங்கினேம். அங்கே சிறு மோட்டார் படகு ஒன்று வந்து ஸ்கிபியோவிலுள்ள பிரயாணிகள் இருபத்தைந்து பேர்களை ஏற்றிக் கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்த்தது. அங்கிருந்து நாங்கள் புறப்பட்டு ரயிலேறி மாமூல்படி இத்தலி தேசத்தின் மேற்குக் கரை ஓரத்திலுள்ள நேபில்ஸ் நகரத்தை யடைந்தோம். அங்கிருந்து ரோமாபுரிக்குச் சென்றேம். பிறகு மிலான் நகருக்குப் போனேம். அங்கிருந்து ஸெண்ட் கோதார்டு கணவாய் வழியாக ஸ்விட்ஸர்லாந்து நாட்டை அடைந்தோம். கணவாயிலிருந்து வெளியே வந்தபோது கடுங்காற்று அடித்துக் கொண்டிருந்தது. பனியும் பலமாகப் பெய்து கொண்டிருந்தது. பிறகு அந்நாட்டைக் கடந்து பாரிஸ் நகரத்தை யடைந்தோம். அதன் பின்னர் ரயிலில் பாதியும், கப்பலில் பாதியுமாகப் பிராயாணஞ் செய்து லண்டன் மா நகருக்கு வந்து சேர்ந்தோம்.

குறிப்பு: 'ஆகாய விமானத்தில் பிரயாணம் செய்தது எப்படியிருந்தது? சௌக்கியமாயிருந்ததா? தலை சுற்றிற்றே?' என்று என்னைச் சிலர் கேட்டார்கள். நாங்கள் பறந்த போது எங்களுக்கு யாதொரு விதமான அசௌகரியங்களும் உண்டாகவில்லை. புயல் காற்று ஒன்றும் அடிக்கவில்லை. ஆதலால் நான் உறுதியாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை. ஆனாலும் விமானம் உயர இருந்து கீழே இறங்கும்போது ஆடுகிற மாதரியைப் பார்த்தால் கப்பல் பிரயாணத்திலே கஷ்டப்படுபவர்களுக்கு ஆகாய விமானமும் அவ்வளவு சுகமாகத்தான் இராது என்று நினைக்கும்படியாக இருக்கிறது.

முதற்கட் பாலொடு குழைத்து அன்போடளாவி ஊட்டிய அருமை மொழி அந்த மிலின்பம் ஆர்தரப் புரியும் செந் தமிழ் மொழியே யாமன்றே! அன்னையார் அருளொடு சுரக்கும் இனிய பாலையுண்ணும் குழவிப் பருவத்தில், அவராற் பயிற்றப்பட்டுப் பயிலும் சிறப்புப்பற்றியன்றே இம்மொழி "பால்வாய்ப் பசுந்தமிழ்" என்று பாராட்டப் படுகின்றது. மழவிளம் பருவத்திற் பயிற்றப்படுதல் குறித் தே இதனைப் பசுந்தமிழ் என்றார் போலும். இயற்கையும் அன்னதே. இதனால் நம் உடல் பாலுண்டுவரும் பருவம் தொட்டே உடற்கண் உறையும் உயிர், தன் குணமாகிய அறிவைச் செந்தமிழ்த் தெய்வமொழிப் பயிற்சி வாயிலாக வளர்த்துத் திகழும் உண்மை நமக்குப் புலனாகின்றது. அறியாப் பருவத்தினும் நம் உயிர்க்கு உறுந்துணையாக நின்று அறிவுச் செல்வத்தை வளர்வித்து உதவிவரும் தமிழ் மொழியின் பழமையையும் சிறப்பையும் என் னென்று கூறுவேன்!

இனி, இங்ஙனம் தொன்மையான மாண்பு மிக்க இம் மொழியின் சிறப்பைப்பற்றிச் சிறிது ஆராய்வாம். ஒரு மொழிக்குச் சிறப்பு அதன்கண் அமைந்துள்ள சிறந்த இலக்கியம், இலக்கணம், சமயம் முதலியவை பற்றிய நூற் பரப்புகளானும், பிறிதொன்றன் சார்பு வேண்டாது புல வர் கருதும் எத்தகைய அரும்பொருள்களையும் வழங்குதற் குரிய சொற்களுடைமையானும், பிறவற்றானுமாம். இன் னோரன்ன சிறப்புக்களில் நம் தமிழ்மொழி யாதுங் குறை யுடையதன்று. இது மற்றொரு மொழியினின்றும் தோன் றிய தென்றுதல், பிறிதொன்றன் சார்பின்றி நடைபெறா தென்றுதல் கூறுவார் உண்மை யாராய்ச்சியிலராவர்.

* * * * *

இனி நம் அருந்தமிழ் நன்னிலைப்படுதற்குச் செயற் பால காரியங்களைச் சுருக்கிக் கூறுவேன். உலகத்து வழங் கும் பல மொழிகளிலும் உள்ள அரிய பல கலைகளெல்லாம் தமிழ் மொழியில் வரல்வேண்டும். ஆங்கிலமொழியிலும்

வடமொழியிலுமிருந்து மொழிபெயர்க்க வேண்டிய சிறந்த நூல்கள் பலவுள்ளன. உயிர்த்தொகுதிகளைப் பற்றின வும் மற்றை நிலையியற் பொருள்களைப் பற்றினவுமாகிய நூல்களும், இரசாயனம் முதலிய செயற்குப் பயன்படும் நூல்களும் ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்படல் வேண்டும். மேலைத் தேயத்துப் பண்டிதர்கள் தம் பேரு ழைப்பாற் புதிய முறையிற் கண்ட சிறந்த ஆராய்ச்சி நூல்களெல்லாம் ஒவ்வொன்ருகத் தமிழில் வெளிப்படல் வேண்டும். இதற்கு ஆங்கிலமும் தமிழும் உடன் கற்ற புலவர்கள் துணைபுரிய வேண்டும். வடமொழியினின்று மொழிபெயர்க்க வேண்டிய மூலநூல்கள் பலவுள்ளன.

* * *

மொழி பெயர்த்தல், செய்யுணூல்யாத்தல், பண்டை நூல்களுக்கு விளக்கவுரை யெழுதல் ஆராய்ச்சியுரை வரைதலாகிய இன்னோரன்ன துறைகளெல்லாம் நம் தண்டமிழ் வளர்ச்சியுறுதற்கு ஏற்றனவாம்.

இதுகாறுங் கூறியவாற்ருல் பெறப்படுவன, கல்வி மக்களுக்கு இன்றியமையாத தென்பதூஉம், அதனைத் தாய் மொழியாகிய தமிழ் மூலம் பயிலல்வேண்டும் என்பதூ உம், தமிழின் தொன்மையும் சிறப்புக்களும் தொல்காப் பிய முதலிய இலக்கண நூல்களானும் பலவகை இலக்கிய நூல்களானும் சமய நூல்களானும் விளங்குமென்பதூஉம், தமிழ் பிறிதொன்றினின்றும் தோன்ருத் தனிமொழி யென்பதூஉம்,..........வளர்த்தற்குரிய வழிகள் மொழி பெயர்ப்பு, ஆராய்ச்சி, செய்யுணூல், உரை நூல் வரை தன் முதலியன வென்பதூஉம்,...............பிறவுமாம்.

பயிற்சி

1. இப்பாடத்தின் 1-வது பத்தியைக் கடின சந்தி நீக்கி, எளிய தமிழ் நடையில் எழுதுக.
2. தமிழ் ஓர் தனிமொழி என்பது எதனுல் பெறப்படுகிறது?
3. தாய் மொழியை வளத்தர்குரிய வழிகள் விளக்குக.

18. கல்லாக் கலை

திரு. பி. ஸ்ரீ. ஆசாரியா

நமது முன்னோர், கலைகளை அறுபத்து நாலாகப் பிரித்திருந்தார்கள். தற்காலத்திலோ இத்தனை கலைகள் என்று கணக்கிட முடியாதபடி அவை பெருகி வளர்ந்து வருகின்றன.

கலைகள் அறுபத்து நாலாக இருந்த காலத்தில் கூட கல்விக்குக் கரையில்லை என்ற அபிப்பிராயம் இருந்தது. இவ்வபிப்பிராயம் இக்காலத்திலுள்ள எண்ணிறந்த கலைகளைக் குறித்து எவ்வளவு உண்மையாகும் என்பதைச் சொல்லவேண்டியதில்லை.

இந்தக் கலையைக் கற்கவேண்டும், அந்தக் கலையைக் கற்கவேண்டும், இன்ன கலையால் இன்ன பயனுண்டு என்று இவ்விதமாகப் பலவேறு கலைவாணர்களும் நமக்கு இடை விடாது உபதேசஞ் செய்து வருகிறார்கள். இதைக் குறித்து எனது இளமையில் நடந்த ஒரு விஷயம் இப்பொழுது ஞாபகம் வருகிறது :

"நமது உடலைக் குறித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டாமா? உடலைக் கொண்டல்லவா வாழ்க்கை நடைபெறவேண்டியிருக்கிறது? சுவரை வைத்தல்லவா சித்திரம் எழுதவேண்டும்? எனவே, உடல் நூல் கற்கவேண்டியது அவசியமாகும்" என்று என்னுடன் படித்த நண்பன் ஒருவனிடம் வாதம் செய்தேன். அவன் உடனே பூமி சாஸ்திரத்தின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினான். "உடலைக் காட்டிலும் அவசியமானது பூமியல்லவா? பூமியை வைத்தல்லவா உடல் நிற்கவேண்டும்? பூமி இல்லாவிட்டால் உடல் எவ்வாறு அதன்மேல் தாங்கி நிற்கும்? எனவே உடல் நூலைக் காட்டிலும் பூமி சாஸ்திரம் அவ

சியமாகக் கற்கத்தக்கது'' என்று சொல்மாரி பொழிந் தான். இது இளைஞர் வாதமேயாகும். எனினும் இது போன்ற பல காரணங்களைத்தான் கலைஞர்களும் தத்தம் கலைகளின் அவசியத்தைவற்புறுத்துவதற்காகச் சொல்லி வருகிறார்கள்.

ஒரு காலத்தில் ஒரு மரக்கலத்திலே மூன்று சாஸ்திர நிபுணர்கள் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தார்கள். மரக்கலம் கரையை நெருங்கி வந்து கொண்டிருந்தது. அப்பொழுது சாஸ்திரிகளில் ஒருவனான கணித சாஸ்திரி, மரக்கலத்திலிருந்து மாலுமிகளை நோக்கி, 'உங்களுக்குத் **கணித சாஸ்திரம்** தெரியுமா?' என்று செருக்கோடு கேட் டான். 'தெரியாது' என்று மாலுமிகள் ஒப்புக்கொண் டார்கள். 'அப்படியானால் உங்கள் **வாழ்க்கையில் கால் பங்கு வீணாகிவிட்டது**' என்று சாஸ்திரி சொன்னான்.

இரண்டாவது சாஸ்திரி வேதாந்தி. அவன் அவர் களைப் பார்த்து, 'உங்களுக்கு **வேதாந்தம்** தெரியுமா?' என்று கேட்டான். அவர்கள் 'தெரியாது' என்றார்கள். 'அப்படியானால் உங்கள் **வாழ்க்கையில் பாதி வீணாகிவிட்டது**' என்று வேதாந்தி இறுமாப்போடு சொன்னான்.

மூன்றாவது சாஸ்திரி வான சாஸ்திரி. அவன் மாலு மிகளைப் பார்த்து, 'கப்பலோட்டிகளே! உங்களுக்கு **வான சாஸ்திரம்** தெரியுமா?' என்று மிடுக்காகக் கேட்டான். 'தெரியாது' என்று அவர்கள் பதில் சொன்னார்கள். 'அப் படியானால் உங்கள் **வாழ்க்கையில் முக்கால் பங்கு வீணாகிவிட்டது**' என்று அவன் சொன்னான்.

இவ்வாறு இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில், கடுங்காற்றும் மழையும் திடீரென்று தோன்றின. காற்று விரைவில் புயல் காற்றாக முதிர்ந்தது. அலைகள் மலைக ளைப்போல் கிளம்பின. கடலின் கொந்தளிப்பு அதி பயங் கரமாக இருந்தது. மரக்கலம் சில நிமிஷங்களில் அமிழ்ந்து விடும் என்பது தெளிவாயிற்று. அப்பொழுது கப்ப

லோட்டிகள் மேலே குறித்த மூன்று சாஸ்திரிகளையும் பார்த்து, 'ஓ, சாஸ்திரிகளே! உங்களுக்கு நீச்சல் கலை தெரியுமா?' என்று கேட்டார்கள். சாஸ்திரிகள் 'தெரியாது' என்று கையை விரித்தார்கள். 'அப்படியானால், உங்கள் வாழ்க்கை முழுமையும் வீணாகி விட்டது' என்று கப்பலோட்டிகள் சாஸ்திரிகளை நோக்கிச் சொன்னார்கள்.

கணித சாஸ்திரமும், வேதாந்த சாஸ்திரமும், வான சாஸ்திரமும் அறிந்திருந்த சாஸ்திரிமாருக்கு நீச்சல் சாஸ்திரம் தெரியாததால் அவர்கள் உயிரை இழந்து விட்டார்கள். கணிதக் கலை முதலிய கலைகளை யறியாத கப்பலோட்டிகளுக்கு நீச்சல் கலை தெரிந்திருந்ததால், அவர்கள் தப்பிப் பிழைத்தார்கள். நாம் தற்காலக் கல்விச்சாலைகளில் பலவேறு கலைகளைக் கற்று வருகிறோம். அவற்றின் அவசியத்தையும் பெருமையையும் அறிந்து வருகிறோம். வாழ்க்கைக் கலை ஒன்று தான் நாம் அறியாதது!

வாழ்க்கை ஒரு கலை என்பதையே அறிந்துகொள்ளவில்லை. எனினும் நாம் இன்னும் கற்க வேண்டிய கலைகள் வேறு பல இருக்கின்றன என்று நமது ஆசிரியர்கள் பயமுறுத்திக் கொண்டே யிருக்கிறார்கள்.

இனி நாம் கற்க வேண்டிய எத்தனையோ கலைகளுக்கிடையே, கல்லாத கலை ஒன்றாவது இருந்தால், அது எவ்வளவு சௌகரியமாக இருக்கும்!

[இருவகைக் கலைகள்]

தோண்டித் தோண்டி ஆராய்ச்சி செய்வதன் பயனாக நமக்குக் கிடைத்திருக்கும் குல தனமே கலைகளாகும். கலைகளைப் பொதுவாக அறிவுக் கலைகளென்றும், அழகுக் கலைகளென்றும் இருபெரும் பிரிவுகளாகப் பிரித்தல் கூடும். அறிவுக் கலைகள் நமது அறிவைக் கூர்மை செய்து பண்படுத்துகின்றன. அழகுக் கலைகள் நமது உள்ளத்தை—உணர்வை—வசமாக்கி மலரச் செய்கின்றன.

தற்காலத்தில் அறிவுக் கலைகளை நாம் 'ஸயன்ஸ்' அல்லது 'விஞ்ஞான நூல்' என்று அழைக்கிறோம். அழகுக் கலைகளை 'ஆர்ட்' என்று ஆங்கில அறிஞர் கூறுவதுண்டு. கூத்து (நடனம்), இசை (சங்கீதம்), ஓவியம் (சித்திரம்), சிற்பம், கவிதை முதலியன அழகுக் கலைகள். அழகுக் கலைகளில் தலை சிறந்து விளங்குவது கவிதையே யாகும்.

இத்தகைய கலைகளை 'இருள்தீர் கலைகள்' என்று ஒளவையார் கூறுவர். இக்கலைகளால் மனிதன் அறிவுப் பயிற்சி பெறுவதோடு, தன் இதயத்தையும் ஒரு பேரின்பப் பூங்கோயிலாகச் செய்துகொள்ளுகிறான். இங்ஙனம் மூளையும் இதயமும் ஒருங்கே பண்படுவது தான் 'கல்சர்' அல்லது கேள்விச் செல்வத்தின் தனிப்பெரும் பயன். எனவே அறிவுக் கலையையும் அழகுக் கலையையும் கலைமகளின் இரண்டு கண்கள் என்று சொல்லலாம்.

அழகுக் கலைகளின் இடையே தலைமைபெற்று விளங்கும் கல்வியை நாம் **கல்லாக் கலை** என்று கருதுதல் கூடும். காரணம் என்ன? அறிவுக் கலைகள் பகுத்தறிவின் பயனாகப் பிறக்கின்றன. கவிதையோ அவ்விதமாகப் பிறப்பதில்லை.

மக்கள் மனம் இருவகைப்படும்: ஒன்று பகுத்தறிவைத் தூண்டும் புறமனமாம்; மற்றது **உள் மனம்** என்பது. இவ்வுள் மனத்தைக் குறித்து நவீன மன நூலார் இன்னும் ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இவ்வுள் மனத்தின் முக்கிய அம்சங்கள் மனோதர்மம, கற்பனைத் திறம் உள்ளொளி முதலியன. பகுத்தறிவைப் படைத்துணையாகக் கொண்டு வாழ்க்கைப் போரில் முற்பட்டு நிற்கும் புறமனத்தினின்று அறிவுக்கலைகள் பிறக்கின்றன. மனோதர்மம் முதலிய அம் சங்களைத் தன்னகத்தே கொண்ட உள் மனத்தினின்றும் போங்குகின்றன கவிதை முதலிய அழகுக் கலைகள்.

கடலில் ஒரு பனிக்கண்டம் மிதந்து வருகிறது என்று வைத்துக்கொள்வோம். வட கடலில் யாத்திரை

செய்வோர் இப்பனிக்கண்டங்களைக் குறித்துச் சொல்லும் விஷயங்களை நீங்கள் கேள்வியுற்றிருக்கலாம். இப்பனிக் கண்டங்களின் ஒரு சிறு பகுதிதான் கடல் நீரின் பரப்பிற்கு மேலே காணப்படுகிறது. பனிக்கண்டத்தின் பெரும் பகுதியும் நீருக்குள் மூழ்கி வருவதுண்டு. அவ்வண்ணமே நமது மனோசக்தியின் பெரும் பகுதியும் உள்மனத்துள் மூழ்கிக் கிடக்கிறது. ஒரு சிறு பகுதியே புறமனமாகப் புலனாகிறது. பெரும் பகுதியும் மனோசக்திகளை மக்கள் உபயோகிப்பதில்லை என்று ஆசிரியர் ஜேம்ஸ் முதலிய மனநூல் நிபுணர்கள் சொல்லுகிறார்கள். கவிஞன் எப்படியோ இச் சக்திகளை ஒருவாறு உபயோகித்துக் கொள்ளுகிறான். இவ்விஷயத்தை வேறொரு திருஷ்டாந்தத்தாலும் விளக்கலாம்.

ஒரு வீட்டிற்குள் பெருவள்ளலாகிய எஜமானன் வீற்றிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். அவன் முன் பின் யோசனை செய்யாது நாம் கேட்பதை யெல்லாம் அள்ளி வழங்குகிறான். ஆனால் புறவாசல் காப்போன் அதிஜாக்கிரதையாக இருந்து ஒருவரையும் உள்ளே விடுவதில்லை. இக்காவலாளனை எப்படியாவது வசீகரித்து விட்டால், நாம் வீட்டிற்குட் சென்று எஜமானனது இன்னருள் பெறுதல் கூடும். புறவாசல் காப்போனே புறமனம்; உள்ளிருக்கும் எஜமானன்தான் உள் மனம். காவலாளியை எவ்வாறு கடந்து செல்வது? இவ்வாராய்ச்சியை நாம் இங்கே செய்ய விரும்பவில்லை. ஆனால் ஒரு விஷயத்தைமட்டும் இங்கு வற்புறுத்துவோம்.

கவிஞன் எவ்விதமாகவோ காவலாளியாகிய புறமனத்தைக் கடந்து சென்று உள்மனமாகிய எஜமானனை யடைகிறான். அந்த எஜமானனிடமிருந்து தனக்கு வேண்டிய மனோ தர்மம், உள்ளொளி முதலியவற்றை அள்ளிக் கொள்ளுகிறான். இதனால் பகுத்தறிவின் பயனாகிய

அறிவுப் பயிற்சியால் அடையப் பெருத ஞானத்தையும் கவிஞன் அடைந்து விடுகிருன்.

அத்தகைய ஞானம் இவ்வுலகில் உண்டோ என்று பலரும் ஐயுறுதல் கூடும். ஒரு சிறுவன் கணித சாஸ்திரத்தில் நிபுணர்களும் பிரமிக்குமாறு மனக்கணக்காகப் பெருங் கணக்குகளையும் செய்து முடிப்பதை நாம் அபூர்வமாகப் பார்க்கிருேம். இவ்வாறே சங்கீதத்திலும் வேறு சில அருங்கலைத் துறைகளிலும் பயிற்சி பெருது தேர்ச்சி பெற்றுள்ள இளைஞர் இவ்வுலகின் சில பகுதிகளில் சிற்சில சமய விசேஷங்களில் காணப்படுவதுண்டு. இவர்களெல்லாம் நமக்குள் புதை பொருளாக இருக்கும் உள் மனத்தின் உள்ளொளிக்கே சான்று தருகிருர்கள். உண்மைக் கவிதையில் உள் மனத்தின் உள்ளொளியினைப் பெரிதும் காண்கிருேம்.

"உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின்
வாக்கினிலே ஒளி உண்டாகும்"

என்று பாரதி கூறுகிருர். இயற்கையில் ஒவ்வொரு மனிதனுக்கும் உள் மனத்தின் உண்மை யொளி உண்டென்பது சில பேரறிஞர் கருத்து. ஆனல் இவ்வுண்மை யொளி பலரிடத்தும் மறை பொருளாகவே அடங்கிக் கிடக்கிறது. இது பொங்கி வெளிப்படும் பொழுது தான், ஒருவனது வாக்கு அல்லது வார்த்தையும் ஒளி பெறுகின்றது. இவ்வாறு ஒளி பெறும் வாக்கே கவிஞன் வாக்கு. கவிஞனது நாவிலே அறிவுத் தெய்வமாகிய கலைமகள் நர்த்தனம் செய்கிருள் என்று புராண பாஷையில் கூறுவதும் இக் கருத்தையே வேருெரு வகையில் வெளியிடுவதாகும். [இவ்வித உள்ளொளியால் இயற்கை யிலெழும் கவிதா சக்தியே கல்லாக் கலையாம்.]

பயிற்சி

1. மரக்கலப் பிரயாணிகள் கதையினின்று அறியத்தகும் நீதி யாது?

2. இருவகைக் கலைகள் யாவை? கல்லாக்கலை யென்பது யாது?

3. மனத்தின் இரு கூறுகள் எவை?

4. ஆர்ட் - Art ; - கல்சர் - Culture ; உள்மனம் - Subconscious mind ; மனோதர்மம் - Imagination ; உள்ளொளி - Intuition ; பனிக்கண்டம் - Iceberg.

---

19. பாரதியார் தமிழ்ப் புலமை

திரு. எஸ். சோமசுந்தர பாரதி, எம். ஏ., பி. எல்.

1. சமீபத்தில் காலஞ்சென்ற சி. சுப்பிரமணிய பாரதியார் தன்னிகரில்லாத் தமிழ்ப் புலவர். நமக்கு நெருங்கிய காலத்தவராகவே, அவர் கவிநலத்தின் உயர்வை உள்ளபடி அளந்தறிவது அருமையாகும். வெறுப்பவரும் நயப்பவரும் நடு நிலையின்றி இவர் இயல்புகளைக் கடையிறந்து காண்பாராவர். நம் கால நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு நவீன ஆதர்சத்தால் ஆகர்ஷிக்கப்பட்டு, நம்மிடையே பாடும் நம் காலப் புலவர் ஒருவரின் கவிகளை மிதமிஞ்சிப் புகழ்வாரும் வெறுத்து மிகப் பழிப்பவரும் பலராவர்; ஆனால் இத்தகைய புலவரின் கவிகளை, கவிநலம் அறிவதன்றி வேறு நோக்கங் கொள்ளாது, தம் உணர்வைக் கவரவிடாது படிப்பதும், படித்து அவற்றின் இயல்பை அளந்தறிவதும் மிகச்சிலர்க்கே யாவதாகும். நடுமை நல்லறிவாளர், பாரதியாரது கவித்திறம் அறிந்து கூறும் நய உரைகள் காணும்வரை, மற்றவர் இப்புலவர் கவிதை நலம் காண முயல்வது தவறென்பது தகாதன்றோ? ஆனவரை இத்தமிழ்ப் புலவர் கவி நலத்தை ஆராய்வோம்.

2. முதலில் தற்காலத் தமிழ்ப் புலவர் சங்கேதங்களுக்குப் பாரதியார் பெரும்பாலும் இணங்காதவர். நாகபந்தங்களும், ஏகத்தாள் இதழ் அகல் யமக அந்தாதிகளும், புலமைத் தலைக்கோலாக் கருதும் பாவலரிடையில், சித்திரகவி சத்துருவான பாரதியார் பாக்கள் மதிக்கப்படுவது அருமையேயாகும். மனோபாவ அருமையோடு பொருளும் வறண்ட தற்காலத்திலே, புலமை வனம், அழகொடு மணம் செயுமலர்களேனும், கொழுவிய தண்சுவைக் கனிகளேனும் தர மாட்டாது; அடர்ந்திருண்டு காழ்த்து மலிந்த இலைச் செடிகளாலும் புதர்களாலுமே நிறைந்து தோன்றுவது இயல்பாகும். தற்காலம் தழைகளே தழைவதாகவே, மணமற்ற தழை மாலைகளே பெரும்பாலும் தொடுக்கப் படுகின்றன. அழகு மணம் முதலிய இயற்கை நலம் இல்லாதாகவே, தழைகளை வினைத்திறம் மலியப் பலவாறு தொடுத்து, அடுக்காலும் தொடையாலும் பல்வேறுபட்ட இலைமாலைகளையே பலரும் முடைகின்றனர். இவ்வனத்திடையே தளரா ஊக்கம் உடையான் ஒரு புலவன், வெறுஞ் செடி களைந்து, நிலம் திருத்தி, உணர்வு நீர் வார்த்து, உரன் கதிர் ஊட்டி வளர்த்த நல்ல தமிழ்ப் பூந்தோட்டத்தில், நறுமலரும் சுவைக்கனியும் காணப்பெற்றால், அஃது அந்த வனத்தின் இயல்புக்குப் பொருத்தமற்ற அபூத விளைவாகவே தோன்றும். பாரதியார் பாக்கள் இப்படிப்பட்ட இலை வனத்திடை எழுந்த கனி மலர்த் தோப்பாம்.

3. இவர் பாக்கள், கருத்துக்களை வருத்தமின்றி விளக்கும் பண்டைப் பாவலர் பளிங்கு நடை பயின்று, இளகி ஒளிரும் வெண்பொன் ஒழுக்கும், இனிய ஓசையும், திட்பமும், சுவையும் உடையன. இப்புலவரது நூல்களைப் படிப்பவருக்கு, நிகண்டு அகராதிகள் வேண்டா; கள்ளமற்ற உள்ளமும், ஊன்றிய கவனமும், தமிழில் ஆர்வமும் உடையாருக்கு இப்புலவர் இதயம் வெள்ளிடை மலையாம்.

எளிய இனிய இவர் கவிநடை நீரொழுக்கு உடைய தேனும், வயிரத்தின் திண்மையும் ஒளியும் பெற்று நிற்கும்.

(1) "நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவஞ்செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு."

(2) "மாலைப் பொழுதிலொரு மேடை மிசையே
வானையும் கடலையும் நோக்கி இருந்தேன்.
மூலைக் கடலினை அவ்வான வளையம்
முத்தமிட்டே தழுவி முகிழ்த்தல் கண்டேன்"

இனைய உருகுபொன் ஒழுக்குடைய ஒப்பற்ற இனிய அடிகளைப் படிக்குந் தொறும் நாவும், கேட்குந்தொறும் செவியும் இனிக்கும்.

4. அலங்காரங்களுக் கெல்லாம் தாயான உவமையைக் கையாளுவதில் இப்புலவர் பண்டைப் பாவலர் பலர்க்கும் இளையாதவர்; இக்காலத்தில் இணையற்றவர். வருந்தித் தேடிப் பொருந்தச் செய்யும் புலவர் பெருமுயற்சியை நன்றி மறவாது சுமந்து காட்டும் பல புலவர் அணிகளைப் போலன்றி, பாரதியாரின் உவமைகள், இயற்கையினின்று இவர் வாக்கைத் தேடி வந்தடையும். கருத்துக்குப் பொருத்தம் உடைமையோடு, கேட்போர் மனத்தில் பதிந்து மறையாது உறையும் செவ்வி உடையவாம் இவர் உவமை அனைத்தும். இயற்கையினின்று எளிதிலெடுத்து, தன் கவிதை அமுதருத்தி, இவராளும் உவமைகள், இப்புலவர் கற்பனைத் திறனையும், ஒப்புணர் தேர்ச்சியையும், கவிவனை கைவினை முதிர்ச்சியையும், அநாயாச ஆட்சியையும் இனிது காட்டும். பழம் பாட்டுக்களைத் துருவி, பண்டை உவமைகளை உருவி, தம்புலமை நிறுவக் கருவியாக்கும் இழி செயலை அறவே வெறுத்தவர் இப்புலவர்.

"தேனை மறந்திருக்கும் வண்டும்,—ஒளிச்
சிறப்பை மறந்து விட்ட பூவும்,
வானை மறந்திருக்கும் பயிரும்—இந்த
வையம் முழுது மில்லை தோழி"
"கண்ணன் முக மறந்து போனால்—இந்தக்
கண்கள் இருந்து பயன் உண்டோ?"

என வருவன பல உவமைகளையுங் காண்க. உவமான உவமேய இயைபுகளும், அவைகளின் அழகும், கவிகளில் இவற்றின் அமைப்பும் விசதமாக எடுத்து விரிப்பதானால், இவற்றிற்கே பல வியாசங்கள் வேண்டும். கேவலம் பண்புகளையும் மனோபாவ எண்ணங்களையுமே உருவகப்படுத்தி, அவற்றின் உதவி கொண்டு, தம் கோள் நிறுவுதலில் இவர் கைவந்த சமர்த்தர்.

5. இவரைக் குற்றமற்ற மதுரகவி என்னலாம். இவர் சித்திர கவிக்கு மித்திரரில்லை. பண்டை முறைப்படி விஸ்தாரப் படுத்தி யாதொரு நூலுஞ் செய்ய இவர் விரும்பினதாய்த் தெரியவில்லை. வெளிவந்த "பாஞ்சாலி சபதம்" ஒத்த சில சிறு காவியங்களையும், அச்சேறாத "சேற்றூர் உலா" அன்ன சில ஒரு துறைக்காதற் பனுவல்களையும் இவர் செய்ததுண்டு. இவர் இயற்றிய ஒரு பொருள் நுதலிய பல துறைக்கோவைகளில், "கண்ணன் பாட்டும்," "சுதேச கீதங்களுமே" தலை நின்ற சிறப்புடையனவாம். கவிதொறுங் கனியும் தேனும், அறுதொறுங் கமழுங் கண்டும் திகட்டாத சுவை தருவதாம்.

6. பண்டு தொட்டுப் பாவலர் நால் வகைப் பாவிலும் இயற்றியுள்ள பனுவல்கள் ஆயிரக் கணக்கானவை. திருத்தக்க தேவரும், கம்பரும் விருத்தப்பாவை வீறு பெறச் செய்தது முதல், பிந்திய புலவரெல்லாம் பாக்களின் பண்பையும் பயனையும் அறவே மறந்து, விருத்தப்பா இனத்

திற்கே அரசுரிமை தந்துவைத்தார். விருத்தமல்லாப் பல துறைப் பாவினங் கொண்டெழுந்து, விழுமிய தனிப்பனுவலாகப் புலவர் போற்றுவது, தற்கால உலகில் **கலிங்கத்துப் பரணி** ஒன்றே. இந்நிலையில் தமிழகத்தெழுந்த நம் புலவர், தனிப் பாசுரங்களால் தலைநின்ற தம் கவித்திறத்தை எவ்வகைப் பாவினுங் காட்ட வல்லராயினும், தாம் தொகுத்த பனுவல்கள் பலவும் இசையோடு பாடத்தகும் பாவினப் பாட்டுக்களைக் கொண்டே செய்து அமைத்து வைத்தார். நமது கவியின் புதுக் கருத்துக்களுக்கும், நாடு மொழி மதங்களோடு குறுகாமல் மக்கள் நலத்தோடு விரிந்த விசால நோக்கத்துக்கும், உலக முழுதும் பரந்து வந்து நமது நாட்டையும் இயக்கும் புதுக்கிளர்ச்சிக்கும் மிக்க பொருத்தம் உடையதாக, தம் கவி உள்ளம் கனிந்துருகி அலைத்தெழும் உணர்வு வெள்ளத்தை வழிப்படுத்தி, தமிழ்ப் பெருமக்களை ஊக்கி, அவர்க்கு ஆக்கம் தருவதற்கு இசை இனிக்கப் பாடுவதே கடன் என்றறிந்த புலவர், அக்கருத்து மேற்கொண்டும், இவர் இப் புதுவழிப் புகுந்து, தமிழருக்குப் புதிய உணர்ச்சியும் தமிழுக்குப் புதுப் புத்தணிகளும் தேடித் தந்துளார்.

7. எதுகை மோனைகளைத் தேடிப் பொருளிழந்து திண்டாடும் பாக்களால் புண்பட்ட தமிழ் மகள், தொட்டதெல்லாம் பொன்னுக்கும் இவர் பாவன்மை வேது பெற்று, ஆறுதலும் மகிழ்வும் அடைவாள். பாப்பாப் பாட்டு, முரசுக் கவிகளால் மிழன்று, பள்ளும் கிளிப் பாட்டும், பயின்று, விடுதலை, தாய் நாடு பாடி, பாஞ்சாலி சபதம் கூறி, கண்ணன் பாட்டு ஜீவன் முக்திகளில் வீறிய இவர் கவிதை நலம், பண்ணேறி விண்ணுயர்ந்து உலவுவதாகும். சமையம், ஆசாரம், சமுதாய ஒழுக்கம் ஆகியவற்றுள் சம திருஷ்டியும், சர்வாபி அனுதாப நிறைவும் இவர் பாத்தொறும் பரவி விரவும். எனைத்தானும் தற்காலத் தமிழுலகில் இவரொத்தாரை காண்பதரிது: மிக்கார் இலராவர்.

20. கதிரி கண்ட காரிகை

திரு. காழி. சிவ. கண்ணுசாமி, பி. ஏ.

கதிரி யியக்கம்

இந்நாளில், [1]அறிவியலறிஞர் [2]"ரேடியோ ஆக்டி விட்டி", என்று குறிப்பது, வேறு எப் பொருளின் தொடர்பும் உதவியுமின்றித் தானகவே ஒளிவிடும் ஓராற்றலாகிய கதிரி இயக்கத்தையே.

கதிரி

மண்ணிடைப் பட்ட [3]கனிகளிலிருந்து வெட்டி யெடுக் கப்படும் பொருள்களுள், மேற்குறித்த வாறு ஒளிக்கதிர் விடும் ஆற்றல் வாய்ந்தனவாக ஆராய்ந் தறிந்து நிறுவப்பட்டவை [4]"ரேடியம்," [5]"தோரியம்" என்ற இரண்டு பொருள்களுமேயாம். இவ்விரண்டனுள்ளும் பின்னதில் முன்னதே சிறப் புடைத்து. ஒளிதருங் கதிர்களை ஓயாது வீசிக்கொண்டிருப் பதால் அப்பொருள் கதிரி என்றே தமிழில் அழைக்கப் படும். ஒப்பற்ற அப்பொருளினுதவியால் பொழுது காட் டுங் கடிகாரம் போன்ற கருவிகள் இருட்டிலும் பயன் படுகின்றன; முடக்கு வாயு, பிளவை போன்ற அழிநோய் கள் பல தீர்வுறுகின்றன. விரைவில் முதுமையெய்த விரும்பாது இளமை பொலிய வாழ விரும்புவோர்க்கு உறு துணையாய பொருள்களில் கதிரியே இற்றை நாளிற் சிறந்த தொன்ருகக் கருதப்படும். "சந்ததமும் இளமை யோடிருக்கலாம்" என்றுரைத்த தாயுமானர் வாக்குக் குப் பற்றுக்கோடாகத் திகழ்வது கதிரியே.

கதிரியின் அருமை

இச் சிறப்பு வாய்ந்த பொருள்தானும் இதுகாறும் உலகமுழுவதிலுமே சற்றேறக்குறைய காற்சேரளவிற்குத் தான் பிரித்து எடுக்கப்பட்டுள்ளது; அதன் விலேயோ, ஒரு தோலாவாகிய ஒரு ரூபா வெடை ஏறக்குறைய ரூ. 20,00,000

1. Scientists. 2. Radio-activity. 3. Mines. 4. Radium. 5. Thorium.

ஆகும். ஆகவே, இவற்றால் அப்பொருளின் அருமை ஒருவாறு எளிதில் ஊகிக்கப்படும்.

இனி, இத்தகைய விழுப்பொருளொன்று இயற்கைக் கருவூலத்தில் காணக்கிடக்கின்றது என்பதைக் குறிப்பாயுணர்ந்து உரைத்த பேரறிஞர், [1]பாரீஸ் நகரப் [2]பேராசிரியரான [3]ஹென்றி பெக்கெரல் என்பாரே யாவர். அப்பெரியாருரைத்த குறிப்பைப்பற்றித் தொடர்ந்து ஆராய்ந்து, பஃறலைய கனிப் பொருட் கலவையிலிருந்து கதிரியைப் பிரித்தெடுத்து அஃது உலகினர்க்குப் பயன்படுமாறு செய்த பெருமை [4]போலந்து நாட்டைச் சேர்ந்த [5]மேரி கியூரி அம்மையாருக்கே உரியதாகும்.

ஹென்றி பெக்கெரல்

இந்த அம்மையார் 1867-ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 7-ஆம் நாளிற், போலந்து நாட்டின் அணிநகராகிய [6]உவார்சா என்னும் நகரில் டாக்டர் ஸ்கலோடோஸ்கா என்னும் அறிவியற் பேராசிரியரொருவர்க்கு மகளாய்ப் பிறந்தார். இவரது கன்னிப் பெயர் மேரி ஸ்கலோ டோஸ்கா. இளமையிலேயே இவர் தம் தந்தையின் [7] ஆய்வுகளத்திலுள்ள புட்டில்களையும் வட்டில்களையும் மாசு நீக்கித் துப்புரவு செய்வதும், தந்தையாரின் ஆராய்ச்சிக்குரிய பொருள்களைச் சேகரித்து வைப்பதுமே தம்முடைய பொழுது போக்காகக் கொண்டிருந்தார். இதைக் கண்ட தந்தையார் தாங் கண்ட அறிவிய லுண்மைகள், நுணுக்கங்கள் ஆகியவற்றை இளமை தொட்டே அவருக்கு விளக்கிக்கூறி வந்தார். இவ்வாறிருக்குங்கால், போலந்தில் அஞ்சத்தக்க உண்ணாட்டுக் கலகங்களும், அரசியற் குழப்பங்களும் திடுமென உண்டாயின. அவற்றினிடையிருந்து அறிவியற்று

இளமையும் கல்வியும்

1. Paris. 2. Professor. 3, Henri Bequerel. 4. Poland 5. Madam Maria Curie. 6. Warsaw. 7. Laboratory.

றைப் பயிற்சி பெறுவதரிது என்பதை அறிந்த தந்தை யார் தம் மகளாரைப் பாரீஸ் நகரத்திலுள்ள [1]ஸோர்போன் பல்கலைக் கழகத்திற்கு அனுப்பி வைத்தார். ஆங்கடைந்து சில்லாண்டுகள் பயின்றபின் [2]எகோல் நார்மேல் என்ற மக ளிர் கல்லூரியில் கியூரி யம்மையார் விரிவுரையாளராக அமர்ந்தார். அம்மையாரின் அறிவியற்பற்றையும் ஆராய்ச்சி யவாவையும் அறிந்த ஆசிரியர் லிப்மான் என் பவர் அவரை அக்காலே பாரீஸில் மிக்க புகழுடன் திகழ்ந்து வந்த பேராசிரியர் [3]பியரி கியூரி என்பாருக்கு அறிமுகஞ் செய்வித்து, அவருக்கு உதவியாளராக அமர்த்தினர்.

பியரி கியூரி

பியரி கியூரி என்ற அப்பெரியார் 1859-ஆம் ஆண்டிற் பிறந்தவர். அறிவியற்றுறையில் அவருக்கு நல்ல தேர்ச் சியும் பற்றும் உண்டு. எண்ணளவையில் நுணுகிய ஆராய்ச்சி செய்திருந்தவர் அப் பெரியார். 1878-ஆம் ஆண்டில் அவர் அறிவியற்றுறை யிற் தேர்ச்சியுற்றுப் பல்கலைக் கழகப் பட்டம் பெற்று, 1882-ம் ஆண்டிற் கல்லூரித் தலைமை யாசிரியராக வேலையி லமர்ந்தார். தாம் மேற்கொண்டுள்ள ஆராய்ச்சித் துறை யில் உடனிருந்து உதவவல்ல நன்மக ளொருத்தியை மனைவியாகப் பெறவேண்டுமென்பதே அவர் முதலி லிருந்து கொண்டிருந்த நோக்கமாகும். ஆகவே, அத் துறையிலேயே இளமையிலிருந்து ஈடுபட்டு வந்திருந்த மேரி கியூரி அம்மையார் தம்மிடம் உதவியாளராக அமர்ந் தமை அவரது நோக்கம் நிறைவேறுதற் கெளிதாயிற்று. கருத்தொருமித்த அவ்விருவரும் இயல்பாகவே ஒருவர் மீதொருவர் காதல் கொள்வாராயினர். 1895-ஆம் ஆண் டில் இருவருக்கும் நன்மணம் நிறைவேறியது.

நன்மணம் நிறைவேறிய மறு ஆண்டாகிய 1896-ஆம் ஆண்டில்தான், ஹென்ரி பெக்கெரல், "போட்டோகிரா

---

1. Sorbonne University. 2. Ecole Normale. 3. Pierre Curie

கதிரி கண்டது

பிக் பிளேட்ஸ்'' என்று சொல்லப்படும் நிழற் படம் பற்றுந் தகடுகளைக் கொண்டு செய்த சில ஆராய்ச்சிகளின் பயனாய்க் கதிரி இயக்க உண்மையைக் குறிப்பாயுணர்ந்து அறிவித்ததாகும். அக்குறிப்பை யொட்டி, அல்லும் பகலுமாக, ஈராண்டுகள் தம் கணவர் உடனிருந்துதவிபுரிய, மேரி கியூரி அம்மையார் பற்பல புதுப்புது ஆராய்ச்சிகளைச் செய்து முடிவில் கதிரி என்ற பொருளைப் பிரித்தறிவாரானார்; கதிரி யியக்கத்தை எல்லையற்ற அளவிற்குத் தன்னுட்கொண்டு மிளிரும் கதிரி என்பது கனிகளிற் கிடைக்கும் ஒரு மண் பொருளே எனக் கண்டார்.

ஆராய்ச்சி அல்லல்கள்

இம்முடிபைக் காண்பதற்கு அம்மையார் எடுத்த பேருழைப்பையும் அதனாலெய்திய பல அல்லல்களையும் எடுத்துரைக்க முடியாது. காதற் செல்வம் நிறைந்திருந்த அம்மையாருக்கு அவ்வழி முடிந்த மணத்தினால் பொருட் செல்வம் எய்தவில்லை. மணமான சில ஆண்டுகளுக்குள் குழந்தைகளிருவர் பிறந்தனர். எனவே, பொருட் குறைவு ஒரு புறம் வருத்த, சிறு குழந்தைகளின் பராமரிப்பு மறுபுறம் வாட்ட அம்மையார் பெருந் தொல்லையுட் பட்டுத் தம்முடைய ஆராய்ச்சிகளை விடாது தொடர்ந்து துணிவுடன் நடத்தி வரவேண்டியவரானார். இதற்கிடையில், முன் பின் தெரியாத புதுப் பொருளாகிய கதிரியை ஆராய்ச்சித் துறையிற் பயன் படுத்தி வருவதற் குதவிய கணவர் பியரியின் கைகளிரண்டும் கதிரித் தாக்கலாற் செயலற்றுப் போயின. தம் மனைவியான அம்மையார் இத்தகைய தொரு கையறு நிலையெய்தாது, தாம் எய்த நேர்ந்தமை அறிவியற்றுறையின் தவப்பேறு என்றே பியரி நம்பி உளந் தேறினார்.

Photographic Plates.

இவ்வாறு அல்லற்பட்டுழைத்த பேருழைப்பு அம்மை யாருக்கு முதற்பயனளித்தது 1903-ஆம் ஆண்டிலாகும்.

உழைப்பின் முதற்பலன்

அவ்வாண்டில், இலண்டனிலிருந்த [1]கேல்வின் பிரபு அம்மையாரையும் அவர் தம் கணவரையும் இங்கிலாந்திற்கு அழைத்தார். அவரழைப்பிற் கிணங்கி இலண்டன் சேர்ந்த அம்மையார் ஆங்குள்ள [2]அறிவியலரசவையினரால் டேவி மெடல் என்ற பொற் பதக்கம் அளிக்கப் பெற்றார். அதன் பின், உலகப் பேரறிஞர்கள் ஒருவருடனொருவர் போட்டியிட்டுப் பெறத் தவங்கிடப்ப தாய [3]நோபெல் பரிசை 1904-ஆம் ஆண்டில் அறிவியற்றுறையைப் பொறுத்த மட்டில் தமக்கும் ஹென்ரி பெக்கெரலுக்குமாகப் பகிர்ந்தளிக்கப் பெற்றார்.

இவ்வாறு பட்ட உழைப்புப் பலனளிக்கத் தொடங்கிய தருவாயில், 1906-ஆம் ஆண்டில், நண்பர்கள் நடத்தி

பியரி மறைவு

வைத்த உண்டாட் டொன்றிற்குச் சென்று வீடு திரும்பிய அம்மையாரின் கணவரான பியரி வழியில் வண்டியேறி இறந்தார்.

எதிர் பாராத வகையில் இவ்வாறு துணைவரை யிழந்து கலக்கமுற்ற அம்மையார், தொட்ட வேலையை முற்ற முடிப்பதே இறந்த கணவர்க்கியற்றுந் தொண்

நூல் வெளியீடு

டெனத் தேர்ந்து தம் ஆராய்ச்சியை விடாது தொடர்ந்து நடத்தி, 1910-ஆம் ஆண்டில் கதிரியைத் தனிப்பொருளாகப் பிரித்தறிந்து, அதன் திட்பநுட்பங்களை விளக்கி நூலொன்றெழுதி வெளியிட்டார்.

அடுத்த ஆண்டாகிய 1911-ல் அம்மையாருக்கு இரண்டாம் முறையாக அறிவியற்றுறை நோபெல் பரிசு வழங்கப் பட்டது. அம்மையார் குறித்துக்கொண்ட கதிரியியக்க

நோபெல் பரிசு: கதிரி நிலையம்

ஆராய்ச்சி மேலும் மேலும் நடந்தேறுமாறு செல்வர் பலர் அம்மையாருக்குப் பெருந்தொகைகளை நன் கொடையாக

1. Lord Kelvin. 2. Royal Society of Science. 3. Nobel Prize.

அளிப்பாராயினர். அவற்றைக் கொண்டு அம்மையார் பாரீஸ் நகரில் [1]கதிரி (யியக்க)க் கழகம் என்ற ஓர் ஆராய்ச்சி நிலையத்தை நிறுவி அதன்கண் தம்மாராய்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார். இக்கழகம் நிறுவப்பட்டதை யும், அக்கழக ஆராய்ச்சி ஓங்கவேண்டுமாயின் கதிரி மிகுதி யாக வேண்டும் என்பதையும் உணர்ந்த அமெரிக்க நாட் டுச் செல்வ மங்கையர் பலர் ஒன்றுகூடி 20,000 பவுன்கள் திரட்டி, அத்தொகையைக் கொண்டு ஒரு [2]கிராம் எடை யுள்ள கதிரியை விலைக்கு வாங்கி அம்மையாருக்குப் பரி சாக அனுப்பிவைத்தார்கள்.

பியரி மறைந்தது முதலே தம் வலக்கையை இழந்தது போற்கருதி உள்ளம் மாழ்கிவந்த கியூரியம்மையார் வரவர உடல்நலங்குறைந்துவருவாராயினர். நற்காலமாக அவர்தம் அருமை மகளாரான [3]ஐரீனியும் மருமகனுன ஜோலியட்டும் அம்மையாரின் அடிச் சுவடையே பற்றி ஆராய்ச்சித் துறையில் இறங்கி உழைத்து வந்தமையால் அம்மையார் ஒரு சிறிது ஆறுதலடைந்திருந்தார். தமது 66-ஆம் அகவையில், அதாவது 1934-ஆம் ஆண்டு சூலைத்திங்கள் 4-ஆம் நாளில், பிரான்சு நாட்டைச் சேர்ந்த [4]ஸல்லாஞ்சஸ் என்னும் நகரத்தில் அம்மையார் தம் இன்னுயிர் நீத்தார். கதிரிகண்ட காரிகையை இழந்து கலைக்கடல் குமுறிற்று; கொந்தளித்தது. அக் கலைக் கடலின் அறிவியலா ராய்ச்சித் துறையில் ஐரீனியும் ஜோலியட்டும் நின்று அழுதரற்றுவாராயினர்.

இறுதிக் காலம்

பயிற்சி

[மேனுட்டு அறிவியலறிஞர் ஒருவரது வாணுள் வரலாற்றுக் கட்டுரையாகிய இது பெரும்பாலும் தனித் தமிழ் நடையில் இயன்றி ருப்பது அறியத்தகும்.]

1. கதிரியின் தன்மை யாது? அதன் உபயோகங்கள் யாவை?

2. இப்பாடத்தில் வரும் கலைச் சொற்களை எடுத்தெழுதிப் பொருள் தெளிக.

3. இது வரையிலான உனது வாழ்க்கை வரலாற்றைச் சுய சரிதமாக 2 பக்கங்கள் எழுதுக.

---

1. Radium Institute. 2. Gramme.
3. Irene. 4. Sallanches.

21. கல்வி

திரு. வே. நாராயணையர், எம். ஏ., எம். எல்.

கல்வி இன்பம் பயக்கும்; பூஷணமாகும்; சாமர்த்தியத்தைக் கொடுக்கும். கல்வி விசேஷ இன்பம் பயப்பது, தனித்து ஒதுங்கி யிருக்கும்போது; பூஷணமாவது ஜனங்களுடன் பழகிப் பேசும்போது; சக்தி கொடுப்பது காரியங்களில் முயன்று பிரவர்த்திக்கும் போதும் தீர்மானங்கள் செய்யும் போதும். பழகிக் கைதேர்ந்தவர் காரியங்களைச் செய்து முடிப்பாரேனும், சிறு பாகங்களில் தீர்மானங்கள் செய்வாரேனும், பொதுவான தீர்மானங்கள் செய்து முடிவுக்கு வருவதும் காரியங்களை ஒருமித்துப் பாகுபடுத்தி முடிப்பதும் கற்றவருக்கே நன்கு அமைவன. படிப்பில் அதிகக் காலம் போக்குவது சோம்பேறித் தனம்; கல்வியை அதிகம் அலங்கார நிமித்தமாகப் பேணுவது வீண் டம்பத்தனம்; கல்வியின் வழியே மட்டும் தீர்மானிப்பது கற்றோரின் தவறிய போக்கு. கல்வி இயற்கை யறிவை நிறைவித்து, அநுபவத்தால் சம்பூர்ணமாகும். இயற்கைச் சக்திகள் செடி கொடிகள் போல்வன; கல்விப் பயிற்சியால் அவற்றைத் திருத்த வேண்டும். ஆயின், கல்வியும் வரம்பின்றிப் பல வழியில் படருமாதலால், அநுபவத்தைக் கொண்டு வளைத்து வேலியிடவேண்டும். தந்திரசாலிகள் படிப்பை அவமதிப்பார்; அறிவிலிகள் அதை மெச்சி யிருப்பர்; அறிவாளிகள் அதைப் பயன்படுத்துவர். ஏனெனில், கல்வியால் மட்டும் அதன் உபயோகம் விளங்காது; கல்வியின் புறம்பாக, அதற்கு மேம்பட்டதான, அறிவொன்று உண்டு; அஃது அநுபவத்தால் சித்திப்பது.

பிறர் கூற்றை மறுத்து மருட்டுவதற்காக வாசிப்பது சரியன்று; வாசிப்பதை யெல்லாம் வேதவாக்காக நம்புமாறு வாசிப்பதும் நன்றன்று; பிறருடன் பேசி வாதித்

துப் பொழுதுபோக்க வாசிப்பதும் பயனன்று; வாசிப்பதைச் சீர்தூக்கிப் பரியாலோசனை செய்யவேண்டும்.

சில புத்தகங்களை ருசிபார்க்க வேண்டும்; வேறுசில வற்றை விழுங்கி விடவேண்டும்; ஒரு சிலமட்டுமே கரைத்துக் குடிக்கத்தகுந்தவை. அதாவது, சில புத்தகங்களிற் சிற் சில பாகங்கள் மட்டுமே படிக்கத்தக்கவை; வேறு சில வற்றில் ஆழ்ந்து கவனம் செலுத்தாமல் நுனிப்புல் மேயலாம்; ஒருசில மட்டுமே கவனத்துடனும் உற்சாகத்துடனும் முழுதும் கசடறக் கற்கவேண்டியன. இன்னும் சில புத்தகங்களைப் பிறரைக்கொண்டு படித்தறிந்தால் போதும்; பிறர் அவற்றைச் சுருங்கச் சொல்லக் கேட்டாற் போதும். ஆனால், முக்கியமில்லா விஷயங்களையும் மட்டமான புத்தகங்களையுமே இவ்வாறு கற்கலாகும். அன்றேல், சுருங்கச் சொல்லும் இப்புத்தகங்கள், காய்ச்சிய நீர் போல் ருசியற்றிருப்பன.

கல்வி ஒருவனுக்கு முதிர்ச்சி கொடுக்கும்; சங்கம் ஞானம்தரும்; எழுத்து துல்லியம் அளிக்கும்; ஆதலால் பிறருக்கு உண்மை தெரியாமலிருக்க வேண்டு மாயின் சிறிதே எழுதுவோன் அதிக ஞாபகமுடையோனாய் இருத்தல் வேண்டும்; சிறிதே பிறருடன் ஆலோசிப்பவன் சமயோசிதமான புத்தியுடன் கூடிய வனாயிருத்தல் வேண்டும்; சிறிதே வாசிப்பவன் அதிகப் படிப்பாளிபோல் தோன்றும் தந்திரத்தைக் கையாள வேண்டும். சரித்திர ஞானம் மனிதரைப் புத்திசாலிகளாக்குகிறது; கவிதை மனிதரைச் சொல்லாள ராக்குகிறது; கணிதம் மனிதரை நுட்ப தரிசிகளாக்குகிறது. இயற்கை யறிவு ஆழ்ந்தபுத்தியைக் கொடுக்கிறது; நீதி சாஸ்திரம் கௌரவம் கொடுக்கிறது; தருக்கமும் வியாகரண அலங்கார ஞானமும் வாதத்தில் பயன் படுகின்றன.

இவ்வாறு கல்வியின் பல துறைகள் பலவாறு பயன் தருவன. உண்மையில், அறிவுக்கு இடையூறான தடங்கலாயுள்ள எதையும், தேகத்து நோய்களை வெவ்

வேறு தேகப்பயிற்சி மார்க்கங்களால் நீக்கிக்கொள்வதைப் போல், தகுந்த கல்வித்துறைகளில் பயின்று விலக்கக் கூடும். பந்தாடுதல் 'கல் நோய்'க்கு நன் மருந்து; தனுர் வித்தை சுவாசப் பைக்கும் மார்பிற்கும் பலத்தைக் கொடுப்பது; மெல்ல நடப்பது வயிற்றுக்கு நல்லது; குதிரை யேறுவது தலைக்கு நல்லது; இவ்வாறே மற்றும் ஒருவன் எண்ணங்கள் சிதறுண்டு கட்டுண்ணுமல் திரியு மாயின், அவன் கணிதம் கற்கட்டும்; ஏனெனில் கணக் குப் போட்டுத் தீர்மானங்களை விளக்கக் காட்டுங்கால் கவ னம் சற்றேனும் விலகிச் செல்லுமாயின், மறுபடி அடி முதல் ஆரம்பிக்கவேண்டிவரும். வித்தியாசங்களைக் கண் டுணரும் சக்தியில்லாதவன் பண்டிதர்களின் புத்தகங்களைப் படிக்கட்டும்; பண்டிதர்கள் உரோமத்தையுமே கூறு செய்து வேறுகாண்பவர்; விஷயங்களை ஒன்றி லொன்று புகுத்தி ஒன்றிற்கு ஒன்று உதாரணமாகவும் ருசுவாகவும் கொள்ளும் திறன் வேண்டுவோன் சட்டவாதிகளின் தர்க் கங்களைக் கற்கட்டும்; இம்முறையே அறிவின் ஒவ்வொரு குறைவிற்கும் ஏற்ற ஒரு மருந்து சொல்லல் கூடும்.

[பிரான்ஸிஸ் பேகன் என்பார் ஆங்கிலத்தில் எழுதியுள்ள கட்டுரை யின் நேர் மொழி பெயர்ப்பு.]

---

22. அரிதாசர்

திரு. ச. சோமசுந்திர தேசிகர்

'தொண்டை நன்னாடு சான்றோருடைத்து' என்று சிறப்பித்துக் கூறப்படும் தொண்டை மண்டலம், கதிரவன் குலத்திலுதித்த சோழனொருவனாகிய தொக்கதார்த் தொண்டைமான் காத்ததாலேயே அப்பெயர் எய்தியது. அது இருபத்து நான்கு கோட்டங்களாகவும், எழுபத் தொன்பது நாடுகளாகவும் முற்காலத்தில் பிரிக்கப்பட் டிருந்தது. அவ்வாறான இருபத்து நான்கு கோட்டங் களுக்குள்ளே குன்றபத்திரக் கோட்டம் என்றொரு

கோட்டமுண்டு. அதனைக் குன்றவர்த்தனக் கோட்ட மெனக் கூறுவதுமுண்டு.

சோழராதிக்கம் தலைதடுமாறி நாடு பலர் கையிலுஞ் சிக்கி முடிவில் விஜயநகரத் தரசர்கள் கையில் வந்த போதுங்கூட இந்தக் கோட்டங்களும் நாடுகளும் பெயர் மாற்றங்கூட அடையவில்லை.

விஜயநகரத்து அரசர்களுள்ளே மிக்க கீர்த்தியோடு வாழ்ந்தவர் கிருஷ்ணதேவராயராவார். அவர் காலத்தி லுங்கூட இந்த நாடு இருந்தது. இந்தக் குன்றவர்த்த னக் கோட்டத்திலே அரிவாஸபுரம் என்றோர் ஊருண்டு. அதனை அரிகண்டபுரம் என்றுங் கூறுவர். அரிதை யென்றுஞ் சுருக்கமாகக் கூறப்படும். இந்த ஊர் வேத நதி என்ற ஆற்றின் கரையிலுள்ளது. இச்செய்தி கல் வெட்டொன்றில் வெகு அழகாகக் காணப்படுகிறது. 'சந்திரகிரி ராஜ்ஜியத்து வேதகிரி தேசத்து வேதநதி தீரத்து நாராயணபுரப்பற்று குன்றவர்த்தனக் கோட் டத்து ஹரிவாஸபுரமான நாகலாதேவி அம்மன் புறம் என்று அக்கல்வெட்டு கூறும்.

இவ்வாறு நிலவளம் நீர்வளமுடையதான இவ்வரி வாசபுரம் பல சான்றோர்களையுடையது. முன்னம் கரி காற் பெருவளத்தான் காடு கெடுத்து நாடாக்கி நற்குடி நாற்பத்தொண்ணாயிரவரைக் கொண்டு வந்து ஏற்றிய குடிகளுள்ளே 'ஆவணி களப்பாளர்,' குடியென்றொரு குடியுண்டு. அக்குடியிலே திருவேங்கடமுடையார் என் றொருவர் இருந்தார். அவர் திருமால் பத்தியில் மிகச் சிறந்தவர். தம் குலத்திற்கேற்ப மற்றொரு உயர்குடி யிலே வந்த 'பெருமாள் முதலிச்சியார்' என்பாரை மணந்து இல்லறம் நடாத்திவந்தார். அவருக்கு அவரு டைய முன் செய்த நல்வினைப் பயனாலும் முன்னோர் செய்த புண்ணியத்தாலும் மூவர் ஆண் மக்கள் பிறந் தனர். அவர்களுள் ஒருவர் வடமலை என்றும் மற் றொருவர் தெய்வங்கள் பெருமாள் என்றும் மூன்றாமவர்

திருமலையப்பர் என்றும் பெயரிடப் பட்டனர். இவர்கள் எல்லோரும் கல்வி கேள்வி நிரம்பிய பெரியோராவர்.

அந்த நாளிலே அரசன் தன் நாட்டிலே உயர்குடியிற் பிறந்து கல்வி ஒழுக்கம் முதலாய உயர்குணங்களை யுடையவர்களைத் தன் நன்மதி யமைச்சராய் அமைத்துக் கொள்வது மரபு. அந்த வழக்கப்படியே வடமலை யென்பார் கிருஷ்ண தேவராயருக்கு நன்மதி யமைச்சராய், 'வடமலை அண்ணகளையன்' என்ற சிறப்புப் பெயரோடு தமிழ்நாடு முழுவதும் ஆணை செலுத்தி வந்தார். இவருடைய ஆணை தஞ்சாவூர்ச் சீமை வரையிலும் இருந்தது என்பது அந்நாட்டிற் காணப்படும் கல்வெட்டுக்களாலும், திருவாரூரிலிருந்த தத்துவப் பிரகாசர் என்பார் 'அரிய வடமலையார் ஆணை' என்று கூறுவதாலும் விளங்கும்.

இளவலான திருமலையப்பன் என்பார் முன்னே பிறந்த காதை விடப் பின்னே பிறந்த வால் வலிமை யுடையது என்பதுபோலத் தமையனிலுஞ் சிறந்தவரானார். வடமலையார் எவ்வாறு அரசியலிற் சிறப்புற்றாரோ அதுபோல் இவரும் திருமால் பத்தியில் தலைசிறந்து விளங்கினார். இவருடைய கனவிலே திருமால் தோன்றித் தன்னைப் பிரதிட்டிக்க வேண்டினதாகக் கனவுகண்டார். அவ்வாறே அந்த அரிதை யென்ற அரிகண்ட புரத்திலே விஷ்ணுவாலயம் ஒன்று கண்டு அதனில் கருமாணிக்கவண்ணனையும் வேதவல்லி நாச்சியாரையும் தாபித்து நித்திய நைமித்திக ஆராதனத்துக்கு வேண்டிய பொருள்களையும் வைத்தார். அதனாலே அவர் அரிதாசர் என்ற பெயர் பெற்றார்.

விஜயநகர ராஜ்ஜியத்திலே சக்கரவர்த்தியாக விருந்த கிருஷ்ணதேவராயர் திக்குவிஜயமாகப் புறப்பட்டு வருகையிலே அவரைத் தம்மூருக்கு வந்து கருமாணிக்க வண்ணனைச் சேவித்துச் செல்லும்படிவேண்ட, அவர், ஒட்டிரனன கஜபதியை வென்று, கொண்டபல்லி

முதலான துர்க்கங்களை அழித்தன்றி வாரேனென்று சொன்னார். அப்பொழுது இவர் வேதகிரிப் பெருமாளைச் சேவித்தால் எண்ணியதெல்லாம் கிட்டுமென்று சொல்லி அவரை அழைத்து வந்து சேவைசெய்வித்து அனுப்பினார். கிருஷ்ணதேவராயர் உத்தரவு பெற்றுத்தான் போலும், அரிகண்டபுரம் அவருடைய தாயான நாகலா தேவி பேரால் நாகலாபுரம் எனப் பேரிடப்பட்டது.

அரிதாசர் பல நாடுகளுக்கும் சபைகளுக்கும் தலைவராக நியமனஞ் செய்யப்பட்டார். அதனோடு பல கோயில்களின் விசாரணையும் இவரிடம் ஒப்பிக்கப்பட்டது. இவர் முப்பத்திரண்டறங்களையும் செய்ய அனுமதிபெற்றார்.

இஃதன்றி இவர் பெயர் என்றென்றும் நிலைத்திருக்குமாறு **இருசமய விளக்கம்** என்ற நூலைச் செய்தார். **இருசமய விளக்கம்** என்ற நூல் சைவசமயம் வைணவசமயம் இரண்டினையும் சீர்தூக்கி, வைணவ சமயத்தினுடைய பெருமையை ஆற்றுக்கு நீராடச் சென்ற இரு பெண்மணிகள் தம்முள் பேசிக்கொள்வதாகக் கூறும். இந்நூல் நான்கு காண்டங்களையும் இருபத்தாறு படலங்களையும் நூற்றுமுப்பது பரிச்சேதங்களோடு 2119 திருவிருத்தங்களையுமுடையது. இந்நூலைச் செய்து கருமாமணிவண்ணன் சந்நிதியிலே அரங்கேற்றியதோடு, அவருடைய சந்நிதானத்திலே 'வயங்கு பெருந்தீ வளர்த்து அதனில் தீரம் பொங்கிந் நூல் பகலறவிட்டு எடுக்கத் தீயா' திருந்தது. ஆதலினாலே மிகும் இந் நூல்போலத் தெய்விகம் விளைந்த நூல்கள் வேறில்லை; இதனை யறிந்தார் 'தாமே நிகரின்றிப் பூதலமீது நீடுஞ் சருவக்ஞராவார்'. இது 'அரிதைப் பதிவாழ் அரிதாதன் அருமாமறையைத் தமிழ் செய்து விரிவற்றுரைத்த '**இருசமய விளக்க**' மாகும் என்று ஆசிரியர் நூலின் இறுதியிலே கூறியுள்ளார்.

இவருடைய காலம் கிருஷ்ணதேவராயருடைய காலமேயாகுமென்பது மேலே கூறிய செய்திகளால் இனிது

பெறப்படும். இதனை இருசமய விளக்கத்திலும் இவர் கடவுள் வாழ்த்துப் புறமாக வைத்துக் கூறிய பாக்கள் நன்கு விளங்கும்.

விரிதா தணியும் தொடைமேவிய வேந்த ஞனை
அரிதாத னினைத்த வெலாம்முடித் தாண்ட கோவை
தெரிதா தரவேத கிரித்தடச் செங்கண் மாலை
பெரிதா தரிப்பார்க் கரிதோ பிறவாத பேறே.

பயிற்சி

1. அரிதாசர் எழுதிய நூல் யாது? அவரது காலம் யாது? (16-ம் நூற்றாண்டு.)

2. இவர் எச்சமயத்தினர்? எதனால் புலப்படுகிறது?

Printed at The Royal Printing Works, Mount Road, Madras.